# ஜனநாயகத்திற்கு அப்பால்

பாப் அவேக்கியான்



SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# ஜனநாயகத்திற்கு அப்பால்

பாப் அவேக்கியான்

முற்போக்கு கலைமையம்
33/9 இராணி அண்ணாநகர்
சென்னை-78.

ஜனநாயகத்திற்கு அப்பால்

பாப் அவேக்கியான் ©

| | | |
|---|---|---|
| மொழியாக்கம் | : | கலைச்செல்வன் |
| வெளியீடு | : | முற்போக்கு கலை மையம்<br>33/9 இராணி அண்ணா நகர்<br>சென்னை-600 078 |
| முதல் பதிப்பு | : | ஜூலை 1993 |
| அச்சு | : | தமிழோசை அச்சகம்<br>84, அபிபுல்லா சாலை<br>தியாகராயர் நகர், சென்னை-17. |
| விலை | : | 17.00 |
| விற்பனை உரிமை | : | தாமரைச் செல்வி பதிப்பகம்<br>16-4வது தெரு<br>டாக்டர் சுப்பராயன் நகர்<br>கோடம்பாக்கம், சென்னை-24. |

| | | |
|---|---|---|
| **Original Title** | : | "Democracy : More than ever we can and must do better then that"<br>(Bob Avakian refutes K.Venu) |
| **Author** | : | Bob Avakian |
| **Tamil Translation** | : | Kalaiselvan |
| **First Edition** | : | July 1993 |
| **Publication** | : | Progressive Art Centre<br>33/9 Rani Anna nagar,<br>Madras-78. |
| **Price** | : | 17.00 |
| **Courtesy** | : | A world to win |

## மொழி பெயர்ப்பாளர் முன்னுரை

கலை, இலக்கியம் மூலமாக மார்க்சீயச் சிந்தனைகளைப் பரந்துபட்ட மக்களிடம் எடுத்துச் செல்வதையே நோக்கமாகக் கொண்ட "முற்போக்கு கலை மையம்" சித்தாந்தப் போராட்டத்திற்கான ஒரு (மொழி பெயர்ப்பு) நூலை வெளியிட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. மூட நம்பிக்கை; பார்ப்பனீயம், புராண . இதிகாசக் குப்பைகளை அம்பலப்படுத்த தந்தை பெரியார் எழுந்தபொழுது அவற்றைத் தான் முன்னெடுப்பதற்குக் காரணம் வேறு எவரும் அவற்றை முன்னெடுக்காததே என்று குறிப்பிட்டார். எமது நிலையும் அதுவே.

புரட்சிகர சர்வதேச இயக்கத்தின் 'வெல்வதற்கோர் உலகம்' என்ற ஆங்கில ஏட்டில் புரட்சிகர அமெரிக்க கம்யூனிசக் கட்சியின் தலைவரும் தோழர் கான்சாலா விடுதலைக்கான அவசரக் குழுவின் முன்னணிச் செயல் வீரருமான மார்க்சீய அறிஞர் தோழர் பாப் அவேக்கியான் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழ் மொழி பெயர்ப்பே இந்நூலாகும்.

முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சி ஏற்பட்டதை ஆய்வு செய்து தோழர் வேணுவின் தலைமையிலான மையச் சீரமைப்புக் குழு இந்திய பொதுவுடைமைக் கட்சி (மா-லெ) வெளியிட்ட நகல் ஆவணத்தின் மீதான திறனாய்வே பாப் அவேக்கியானின் கட்டுரையாகும்.

மையச் சீரமைப்புக் குழு ஆவணத்தின் சாரம் இது தான்.

முதலாளித்துவ மீட்சி ஏற்படுவதற்குக் காரணம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே.

இதற்குத் தீர்வு முதலாளித்துவ ஜனநாயக முறையிலான தேர்தல் முறையே. அதாவது புரட்சியை முன்னெடுத்துச் சென்று முதலாளித்துவ ஆட்சியைத் தகர்க்கும்வரைதான் பொது உடைமைக் கட்சி தலைமைப் பங்காற்றும். பிறகு பொதுத் தேர்தலை அறிவித்துவிட்டு அதிகாரத்திலிருந்து விலகிவிட வேண்டும்.

இந்த ஆவணத்தின் தமிழாக்கம் 'பாட்டாளிகளும் மக்களாட்சியும்' என்ற பெயரில் 'எழில்' என்ற அமைப்பால் வெளியிடப்பட்டுள்ளது. இத்தமிழாக்கத்தின் முன்னுரையில் நம்மைக் கவரும் பல அம்சங்கள் உள்ளன. முதலாவதாக, இந்த வரிகளைக் கவனியுங்கள்: "முன்னாள் சமூக உடைமை முகாமை'ச் சேர்ந்த மக்கள் வெளிப்படையாகவே வல்லரசியத்தின் முகவர்களை வரவேற்கின்றனர்." இதில் மக்கள் என்று பொதுமையாகக் குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. மேற்கத்திய மூலதன ஊடுருவல்களை ஆதரிப்பவர்கள், எதிர்ப்பவர்கள், வெறும் பார்வையாளராகக் குழப்பத்தில் இருப்பவர்கள் என்று அங்கே மக்கள் பல்வேறு பிரிவினராக உள்ளனர். கம்யூனிசப் போர்வையில் கொள்ளையடித்துப் பெரும்பணம் சேர்த்தவர்கள். அப்பணத்தை மூலதனமாக்க வாய்ப்புத் தேடுபவர்கள் மட்டுமே வல்லரசியத்தின் முகவர்களை வரவேற்கின்றனர்.

இவ்வாறு முதலாளித்துவ அரசியல்வாதிகளைப் போல் சமுதாயத்தின் வர்க்க வேறுபாடுகளை மூடி

மறைத்து ஒட்டு மொத்தமாக 'மக்கள்' என்ற அடிப் படையில் சிந்தனைகளையும், விவாதங்களையும் தொடங்கும் போக்கே முன்னுரையிலும், நகல் ஆவ ணத்திலும் காணப்படுகிறது.

அடுத்து, இந்த வரிகளைக் கவனியுங்கள். "முதல் உலகப் புரட்சியாளர்களால் படைத்தளிக்கப்படும் கருத்துக்கள் கருத்து முதலியமாகவும், மெய்மைக்குப் புறம்பாகவும் நின்று விடுகின்றன. மூன்றாம் உலக நாடுகளின் சூழலுக்குச் சற்றும் பொருந்தாவண்ணம் உள்ளது." இது மிகவும் ஆபத்தான கருத்தோட்ட மாகும். இவ்வாறு பொத்தாம் பொதுவாக ஒருவரின் சிந்தனையை, அவரது நாட்டை வைத்து எடைபோடத் தொடங்கினால் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், மாவோ, ஸ்டாலின், லெனின் என நமது பேராசான்கள் அனை வரையுமே அந்நியராக்கி விடலாம். அப்படிப் பார்த் தால் ரஷியாவைப்பற்றி ஆய்வு செய்ய முதல் உலகைச் சேர்ந்த பாப் அவோக்கியானுக்கே தகுதி உண்டு. மூன் றாம் உலகைச் சேர்ந்த நமக்குத்தான் தகுதியில்லாமல் போய்விடும்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் மரணம் அமெரிக்க தொலைக்காட்சிகளில் அன்று பிற் பகலே காட்டப்படுகிறது. அக்கொலை நடந்த சிறீபெரும்புதூர் சுற்று வட்டார மக்களுக்குக் கூடச் செய்தி மறுநாள்தான் தெரிய வந்தது. சென்னை நகரின் குடிநீர்ப் பஞ்சம் விழுப்புரத்து மக்களுக்குக் கூடச் சரியாகத் தெரியாது. ஆனால் லண்டன் நகர மக்களுக்குத் தெரிகிறது. அத்தனை ஏன்; தமிழின் தொன்மை பற்றியும், செம்மை பற்றியும் ஜெர்மானியப் பாதிரியார்கள் அல்லவா தமிழர்களுக்கே சொல்லித் தர வேண்டியிருந்தது.

உண்மையில் இந்த ஆவணம்தான் கருத்து முதல் வாதத்தில் மூழ்கி மூன்றாம் உலக நாடுகளுக்குச் சற்றும்

பொருந்தாத மேலை நாட்டு போலி ஜனநாயக முறையைத் தீர்வாக வைக்கிறது.

இரண்டாம் உலகப் போரிலிருந்தே தொடர்ந்து (மஃபியா) கடத்தல், திருட்டுக் கும்பல்களின் தலைவர்களை மட்டுமே ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்க முடிந்த இத்தாலி, ஊழல் பேர்வழிகளை மட்டுமே தேர்ந்தெடுக்க முடிந்த ஜப்பான் ஆகியவை இவர்கள் கண்ணில் படாமல் போனால் பரவாயில்லை. எந்த மதத்தோடு கூட்டுச் சேர்ந்து, எந்த சாதிக்காரனை நிறுத்தினால், எதிரிகளின் எந்தக் கூட்டணியை உடைத்தால் எத்தனை விழுக்காடு ஒட்டு நமக்குக் கிடைக்கும் என்று கணக்குப் போட்டு, தேர்தலையே ஒரு கணக்குப் பாடமாக்கிவிட்ட இந்தியாவின் நிலைமையைப் பார்த்த பிறகுமா தேர்தல் முறையைத் தீர்வாக வைக்கிறார்கள். இவர்கள் வாழ்வது எந்த உலகம். உடலளவில் மூன்றாவது உலகத்திலும் மனதளவில் முதல் உலகத்திலும் வாழ்கிறார்களா? அல்லது மூவுலகையும் தாண்டி ஏதோ ஓர் கற்பனை உலகில் வாழ்கிறார்களா?

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாத மார்க்சியம் தோட்டா இல்லாத துப்பாக்கி என்பதே எமது கருத்தாகும்.

இந்நூலை வெளிக்கொணருமாறு ஊக்குவித்து அச்சிடலை மேற்பார்வை செய்த தோழர்கள் திருநாவுக்கரசு, குமரன், கான் ஆகியோருக்கும், பணத்தட்டுப்பாட்டால் பட்டுப்போக இருந்த முயற்சிக்கு உடுக்கை இழந்தவன் கை போல் வந்து தோள் கொடுத்த தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் முற்போக்கு கலைமையத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கலைச் செல்வன்
முற்போக்கு கலைமையம்

ஜனநாயகம்
நாம் அதைவிடச் சிறப்பாகச்
செயல்பட்டாக வேண்டும்;
செயல் பட முடியும்!

---

● ஆசிரியரின் நூலாக்கக் குறிப்பு

"போலி கம்யூனிசம் இறந்து போனது; வாழ்க! உண்மை கம்யூனிசம்!" என்ற 1991-ஆம் ஆண்டு இறுதியில் எழுதிய புத்தகத்தின் ஒரு பகுதியாகவே "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றி" என்ற ஆவணத்தின் மீதான இந்தத் திறனாய்வுகள் எழுதப்பட்டன. இப்புத்தகத்தை வெளியிடுவதற்கான முயற்சிகள் இறுதியடையும் நேரத்தில் ஒரு தகவல் கிடைத்தது. சி.பி.ஐ.-எம்.எல் – சி.ஆர்.சியின் அறிக்கையின்படி அதன் அகில இந்திய கூட்டமைப்பைக் கலைத்துவிடுவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவிற்கு முக்கிய காரணமானவர்கள், "பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பற்றி" என்ற நூலின் ஆசிரியரும் சி.ஆர்.சியின் (முன்னாள்) செயலாளருமான கே.வேணுதான் என்பது அறிக்கையிலிருந்தே தெரிகிறது.

இவ்வாறு சி.ஆர்.சியின் அமைப்பை அழித்தொழிப்பு செய்தது, மேலும் ஒரு பின்னோக்கிய பாய்ச்சல் என்பது தெளிவாவதுடன், "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றி" என்ற ஆவணத்தில் எடுத்துள்ள அரசியல் மற்றும் தத்துவார்த்த நிலையின் விரிவாக்கமே என்பதும் புலனா

கிறது. இவ்வாறு சி.ஆர்.சியின் அனைத்திந்திய அமைப்பு முறையை அழித்தொழிக்கும் முயற்சியும், அதை நியாயப் படுத்தச் சொல்லப்படும் காரணங்களும், கே.வேணுவின் தலைமையில் இயங்கும் சி.ஆர்.சி தலைமையின் சந்தர்ப்ப வாதப் பார்வைகளையும் போக்குகளையும் பற்றிய முழுமையான விமரிசனங்களை மேலும் ஆழப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

---

மேற்கூறிய காரணங்களால், "பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பற்றி" என்ற சி.ஆர்.சி ஆவணத்துடன் இந்தக் கட்டுரையையும் "வெல்வதற்கோர் உலகம்" (World to win) பத்திரிகையில் வெளியிடுவதென சி.ஆர்.சி முன்பு அங்கம் வகித்த சர்வதேச புரட்சிகர இயக்கத்தின் (ரிம்-RIM) மையக் குழுவுடன் இணைந்து முடிவெடுக்கப்பட்டது. ஏற்கனவே நாம் கூறியபடி இதனை வெளியிடுவதன் நோக்கம், சி.ஆர்.சிக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து போராடும் தோழர் களுக்கு உதவிகரமாக இருப்பதாகும். இப்போராட்டத் தின் மூலம் சி.ஆர்.சி தனது தவறான பாதையை, "பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பற்றி"யில் எடுத்துள்ள நிலையை மறுத்து சரியான பாதைக்குத் திரும்பும், இந்திய மார்க்சிய-லெனினிய-மாவோயிச இயக்கத்தின் மாபெரும் பாரம்பரியத்தை மீண்டும் உயர்த்தும், இந் திய மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி நிறுவப்பட அடிப்படையாக இருந்த புரட்சிகர கொள்கைகளை மேலும் வளர்த்தெடுக்கும் என்றும் உறுதியாக நம்பு கிறோம். துரதிருஷ்டவசமாக சி.ஆர்.சி. தலைமை தவறான பாதையில் சென்று, சந்தர்ப்பவாதத்தில் மேலும் புதையுண்ட போதிலும், இதன் மூலம் சி.ஆர். சியின் அணிகளுக்குள் நடந்து வந்த போராட்டத்தை வெளியே தெரியச் செய்துள்ளது.

உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இந்திய புரட்சியின் முக்கியத்துவத்தையும், மற்ற பல காரணங்களையும் கணக்கில் கொண்டு பார்க்கும்பொழுது சி.ஆர்.சியை நெருக்கடிக்குக் கொண்டு வந்த சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு எதிராக போராட்டம் வெடித்துள்ளது என்ற செய்தி மேலும் ஊக்கமூட்டுவதாக உள்ளது. இந்தப் போராட்டம் மிகச் சிக்கலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, "பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பற்றி முறைப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள திரிபுவாத அரசியல் வழியையும், இவ்வழிக்கு அடிப்படையாக உள்ள பார்வைகளையும், வழிமுறைகளையும் ஊன்றி நோக்கி இதன் ஆசிரியர்களால் சொல்லப்பட்டுள்ள மற்ற கருத்துகளுடன் உள்ள தொடர்பை முழுமையாக வெளிக்கொணருவதும், அதைப்பற்றிய ஆழ்ந்த, முழுமையான திறனாய்வை வெளியிடுவதும் தலையாய, தீர்மானகரமான முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்த விளைவுகளுக்கு எமது பங்களிப்பே "பாட்டாளி வர்க்க ஜனநாயகம்பற்றி' நூலிற்கான விமரிசனமாகும். அதே சமயம், தொடக்கத்திலேயே கூறியது போல் மார்க்சிய-லெனினிய-மாவோயிச சித்தாந்தங்களின் அடிப்படையில் ஒன்றிணைந்து, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தவறுகளை ஆழ்ந்து ஆய்ந்து நீக்கி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவங்களையும், அதன் மாபெரும் சாதனைகளையும் உயர்த்திப் பிடிப்பதுமான சர்வதேச புரட்சிகர இயக்கத்தின் (RIM) நோக்கத்தை மேலும் பலப்படுத்துவதும் அந்த அடிப்படையில் முன்னேறிச் செல்வதும் எமது நோக்கமாகும்.

பாப். அவேக்கியான்
டிசம்பர் - *1991.*

## ஆசிரியரின் முன்னுரை

ஜனநாயகம் பற்றி, அதன் சமுதாய, வர்க்க அடிப்படைகள், வரலாற்றில் அதன் பங்கு, பாட்டாளி வர்க்கப் புரட்சியோடு உள்ள உறவு மற்றும் கம்யூனிசத்தின் இலக்குபற்றிய எனது முந்தைய நூலின் பெயரையே வேண்டுமென்றே இக்கட்டுரையின் தலைப்பாகச் சூட்டியுள்ளேன். அப்புத்தகம் வெளிவந்த சில ஆண்டுகளுக்குள் உலகில் நடந்துள்ள மாபெரும் மாற்றங்கள், குறிப்பாக-சோவியத் யூனியனிலும் முன்பு அதன் கட்டுப்பாட்டில் இருந்த சோவியத் தொகுப்பு நாடுகளிலும் நிலவிய முதலாளிந்துவ ஆட்சிகளில் ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றங்கள், சீனாவில் டியானென்மென் சதுக்கத்தில் நடந்த நிகழ்ச்சிகள்—ஆகியவை அப்புத்தகத்தின் மையக் கருத்தை, அதாவது நாம் முன்னெப்பொழுதையும்விடச் சிறப்பாகச் செயல்பட வேண்டியதன் அவசியத்தையும், சாத்தியத்தையும், மேலும் அவசியமானதாகவும், அவசரமானதாகவும் நிறுவியுள்ளன.

"ஜனநாயகத்தைப் பற்றிப் பேச முடிகின்ற கட்டங்களில் அது எவ்வகையான ஜனநாயகமாயினும், வர்க்க வேறுபாடுகள், ஏதாவது ஒரு வகையான சமுதாய முரண்பாடுகள், சர்வாதிகாரம் ஆகியவை உள்ளடங்கி நிலவுவது, உண்மையில் சமுதாயத்தின் அடிப்படைப் பண்பாக இருப்பதை எடுத்துக் காட்டுகின்றன". என்ற அப்புத்தகத்தின் முடிவை அண்மைக்கால நிகழ்ச்சிகள் மேலும் உறுதி செய்கின்றன. "எப்பொழுது அந்த நிலைமைகள் இல்லாமல் போகின்றனவோ அப்பொழுது

ஜனநாயகத்தைப்பற்றி பேசுவதும் இயலாததாக, தேவையற்றதாகி விடுகிறது" (பாப் அவேக்கியானின் –ஜனநாயகம், நாம் அதனைவிடச் சிறப்பாகச் செய்ய முடியாதா?–பேனர் அச்சகம், சிகாகோ 1986–பக்கம் 261).

கம்யூனிச நாடுகளாக பொதுவாகக் கருதப்பட்டு வந்த நாடுகளில் நிகழ்ந்த, உலகைக் குலுக்கிய, இம் மாபெரும் மாற்றங்கள் பொதுமக்களை மட்டும் அல்லாது புரட்சிகர சக்திகளையும், அதுவும் மாவோவின் சித்தாந் தங்களையும், மார்க்சிய–லெனினிய–மாவோயிசத்துடன் அடையாளம் காணப்படும் சர்வதேச கம்யூனிச இயக் கத்தின் வரலாற்றையும் வழியாக ஏற்றுக் கொண்டு தங்களைப் புரட்சிகர கம்யூனிஸ்டுகளாகக் கருதிக் கொண்டிருந்தவர்களையும் கூடக் கடுமையாகப் பாதித் திருக்கின்றன. இதற்குச் சரியான எடுத்துக்காட்டே சர்வதேச புரட்சிகர இயக்கத்தின் (RIM) அங்கமாயிருந்த சி.ஆர்.சி. வெளியிட்டுள்ள ஒரு ஆவணம். "பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பற்றி" என்ற சி.ஆர்.சி.யின் இந்த ஆவணம் 'ரிம்'மின் கொள்கைகளை மட்டுமல்லாது, கொள்கை அறிக்கையின் அடிப்படை தத்துவங் களையே–சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் மொத்த அனுபவம், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை பயன் படுத்துவதிலும், சமுதாயத்தில் சோசலிச மாற்றத்தைக் கொண்டுவருவதிலும் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பங்கு ஆகியவற்றையே அடிப்படையில் தவறென்று கூறுகிறது.[1]

சுருங்கக் கூறின், 1871–ஆம் ஆண்டு தோன்றிய பாரிஸ் கம்யூன் மட்டுமே பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை முறையாகப் பயன்படுத்தியதாக இந்த ஆவணம் ஏற்றுக்கொள்கிறது. சோசலிச சமுதாயத்தில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவத்தை ஆய்வ தில், 1971–ஆம் ஆண்டு அக்டோபர் சோவியத் புரட்சியி

லிருந்து தொடங்கி இன்றளவுமுள்ள மொத்த வரலாற்று அனுபவத்திற்கும் எதிராக பாரிஸ் கம்யூனின் வரம்புக் குட்பட்ட, மிகக் குறுகிய கால அனுபவத்தை முன் னிறுத்துகிறது.[2]

சி.ஆர்.சி. ஆவணத்தின் அடிப்படைக் கருத்துகள் பின்வருமாறு: "அக்டோபர் புரட்சிக்குச் சில மாதங்கள் முன்னரே லெனினால் எழுதப்பட்ட 'அரசும் புரட்சியும்' என்ற நூலில் கண்டுள்ளபடி பாட்டாளிவர்க்க சர்வாதி காரத்திற்கு முன்மாதிரியாக பாரிஸ் கம்யூனையே லெனின் ஏற்றுக்கொண்டாலும், போல்ஷிவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றியதும், உழைக்கும் மக்கள் திரள் அரசியல் அதிகாரத்தைத் தாங்களே கையில் எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக கம்யூனிஸ்ட் கட்சி யின் சர்வாதிகாரத்தைத் திணிக்கும் போக்கையே நடை முறைப்படுத்தினார். அதன் விளைவுகளே இன்றைய வரலாறு ஆயின.

இந்தக் கட்சியின் சர்வாதிகாரத்தை ஸ்டாலின் மேலும் கடுமையாக்கி அதன் உச்சநிலைக்குக் கொண்டு சென்றார். மாசேதுங்கும், மாபெரும் பாட்டாளிவர்க்கப் பண்பாட்டுப் புரட்சியும்கூட இந்த அரசியல் முறையை தவிர்க்கவில்லை எனவே அரசியல் அதிகாரத்தைக் கட்சியின் ஏகபோகமாக்கும் இந்த வரலாற்று அனுபவங் கள் முற்றாக தவறென்று ஏற்றுக்கொண்டு, எதிர்கால சோசலிசப் புரட்சிகள் பாரிஸ் கம்யூனின் முன் மாதிரியை இம்மிபிசகாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

நீண்ட காலமாகவே லெனினிச எதிர்ப்பாளர்களும் பொதுவாக இன்றைய கம்யூனிச எதிர்ப்பாளர்களும் கூறி வரும் பல கருத்துக்கள் இந்த ஆவணத்தில் இடம் பெற்றிருப்பதை சுலபமாக இனம் காண முடிகிறது. எனவே, வெளிப்படையாக, தெளிவாக, வன்மையாக

இந்த ஆவணத்திற்குப் பதில் சொல்வது அவசியமாகிறது. கம்யூனிசத்திற்கும், பாட்டாளிவர்க்கப் புரட்சிக்கும் எதிரான பண்டைய சோசலிச-ஜனநாயகவாதிகளின் நிலைக்கு இந்த ஆவணம் முற்றாகத் தாழ்ந்து சீரழிந்துள்ளது. இது கடுமையான விமர்சனமாகத் தோன்றலாம் ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அனுபவம் முற்றிலும் தவறு.சோவியத் யூனியனிலும் சரி சீனாவிலும் சரி, லெனின், ஸ்டாலின், மாசேதுங் அனைவரது வழிகாட்டுதலின் கீழும் நடந்த அனைத்துமே அடிப்படையில் தவறானவை. இவை அனைத்தையும் நாம் தூக்கி எறிய வேண்டும், தவறுகளை நீக்கி ஒரு பாடமாகவே - எதிர்மறை அனுபவங்களாகவே இவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த ஆவணம் கூறுவதைவிட எனது விமரிசனங்கள் கடுமையானவை அல்ல.

இந்த வளர்ச்சிப் போக்கு மிகவும் வேதனை தருவதற்கு வேறு ஒரு காரணமும் உள்ளது. மார்க்சில் தொடங்கி லெனின், மாவோ வரையிலான சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் மிக முக்கியமான, மிக உயர்ந்த புரட்சிகர வரலாற்று அனுபவங்களையும், வழி காட்டுதல்களையும். இந்தியாவில் 1960 களின் பிற்பகுதியிலும், 1970 களின் முற்பகுதியிலும் நடைபெற்ற புரட்சிகர கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான விவசாயிகளின் ஆயுதப் போராட்ட வரலாற்றுகளையும் (1967-ஆம் ஆண்டு வசந்த காலத்தில் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த நக்சல் பாரி கிராமத்தில் இது ஆயுதப் போராட்டமாக வெடித்து 'வசந்தத்தின் இடிமுழக்கம்' என்று அழைக்கப்படுகிறது.) உயர்த்திப் பிடிப்பதும், அந்த வரலாற்று அனுபவங்களிலிருந்து மிகவும் உபயோகமான, முக்கியமான புரட்சிகர வரலாற்றை வளர்த்தெடுப்பதுமே சி.ஆர்.சி. தன் கடமையாகக் கொண்டிருந்தது. இந்த வசந்தத்தின் இடிமுழக்கமும், அதன் புரட்சி

கரப் பாதையும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் அன்று மிக முக்கிய வளர்ச்சிப் போக்காகப் புகழப் பட்டது. அந்தப் போராட்டத்தில் தவறுகளும் குறைபாடு களும் இருந்தாலும்கூட இந்தியாவிற்கு மட்டுமல்லாது உலக முழுமைக்கும் சக்தி வாய்ந்த, புரட்சிகர அனுபவ மாகத் திகழ்வது மறுக்க முடியாத உண்மையாகும்.

இக்காரணங்களாலேயே, இந்த ஆவணத்திற்குப் பதில் சொல்லும்பொழுது நமது அணுகுமுறை மாவோ கூறியதுபோல், "நோயைக் குணமாக்கி, நோயாளியைக் காப்பாற்று" என்ற பாங்கில் அமையவேண்டும். ஆனால், அதே தொடரில், தங்களது நோயின் முற்றிய தன்மையை அறிந்து, சிகிச்சை பெறவேண்டியதின் அவசியத்தை உணர்த்துவதற்காகச் சிலருக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் மாவோ வலியுறுத்துகிறார். சி.ஆர்.சியின் இந்த ஆவணம் 'டிராப்ட்' (முன்மாதிரி) என்றுதான் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே. சி.ஆர்.சியின் உள்ளும், புறமும் இருந்து தோழர்கள் நடத்தும் கூர்மையான போராட்டங் களின் விளைவாக இந்த ஆவணத்தின் போக்குகள் முழுமையாக மறுத்து ஒதுக்கப்படும்; சி.ஆர்.சி தோழர்கள் மீண்டும் புரட்சிகரப் பாதையில் நடைபோடுவார்கள். சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் லட்சியங்களை, நமது தவறுகளை ஆழ்ந்து ஆய்ந்து ஒதுக்குதல், நமது மாபெரும் சாதனைகளையும், பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் வரலாற்று அனுபவங்களையும் உயர்த்திப் பிடித்து முன்னேறுதல், மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனைகளின் அடிப்படையில் ஒன்றிணைதல் ஆகியவை மேலும் வலுவடையும் என நம்புகிறோம். இத்தகைய அணுகுமுறையுடன், நோக்கங்களுடன் சி.ஆர்.சி. ஆவணத்தை பற்றிய இந்த விமர்சனம் வெளியிடப்படுகிறது.

சி.ஆர்.சி. ஆவணத்தை ஊன்றிப் படித்தால் முதலில் கீழ்கண்ட பொதுப் பண்புகள் புலனாகும்.

1. இந்த ஆவணத்தில் பொருள் முதல்வாதம் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது, மிகவும் அதிர்ச்சியூட்டுகிறது. அடிப்படை முரண்பாடுகள், குறிப்பாக பொருளியல் அடிக்கட்டுமானத்திற்கும் சோசலிச சமுதாயத்தை இடைக்கட்டமானதாக விளக்கும் மேற்கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் ஆகியவை பற்றிய புரிதல்கள் இல்லை. இந்தக் கேள்விகளைத்தான் மாவோவும், அவரது புரட்சிகரத் தலைமையகமும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை உயர்த்திப்பிடிக்க மட்டுமல்லாது, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் தலைமையில் புரட்சியை முன்னெடுத்துச் செல்லவும் திரிபுவாதத்தைத் தோற்கடிக்கவும், முதலாளித்துவ சக்திகள் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதைத் தடுக்கவும் தேவையான தீர்மானகரமானதாகக் கருதினர். ஆனால் இவை அனைத்தும் சி.ஆர்.சி ஆவணத்தில் அடிப்படைக்கேள்விகளுடன் தொடர்பற்றவையாக அலட்சியப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளன.

இன்னும் குறிப்பாகச் சொன்னால், சோசலிச சமுதாயத்தில் 'மக்கள்' என்ற பொதுப்பகுப்பிற்குள் வெவ்வேறு வர்க்கங்கள் (மேலும் முன்னோடிகள், இடைநிலை, பின்தங்கிய பிரிவுகள்) இருப்பதே உணரப்படவில்லை. மிகச்சரியாகச் சொல்வதானால், மார்ச்சிய வர்க்க ஆய்வுகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற தன்மை உள்ளது. வர்க்க ஆய்வுகளை "வர்க்க குறுக்கல் வாதம்" என்று முத்திரைகுத்தி ஒதுக்கிவிட்டனர்.

இத்துடன் ஏகாதிபத்திய சக்திகளே இன்று உலக அளவில் மேலாண்மை வகிக்கின்ற சூழலையும், சோசலிச

நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளால் சுற்றி வளைக்கப் பட்டுள்ள சூழ்நிலையில் சோசலிச நாடுகள் எதிர் கொண்டுள்ள மிகக் கடுமையான பிரச்சினைகளையும் குறிப்பாகக் கவனத்தில் எடுத்துக்கொள்வதும், அதற் குரிய முக்கியத்துவம் தருவதும் தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த உண்மைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஜனநாயகம் பற்றியும், சர்வாதிகாரம் பற்றியும் விவாதிக்க முயல்வது அவர்களது அக்கறை யின்மையையே தெளிவாக்குகிறது, குறிப்பாகச் சொன்னால், சோசலிச ஜனநாயகவாதிகளின் வர்க்கச் சார்பையும், (விழித்திரையின்) குருட்டு இடத்தையும் இவர்களும் கொண்டிருப்பது புலனாகிறது. சோசலிச ஜனநாயகவாதிகள் தான் ஜனநாயகத்தை ஒரு 'தூய' 'வர்க்கங்களற்ற' நிலையில், அதன் உண்மையான சாரத்தையும், வரலாற்று, சமுதாயப் பின்னணிகளையும், நீக்கிய ஒரு வெற்றுச் சிந்தனையாகக் காண முயற் சித்தனர்.

2. இந்த சி.ஆர்.சி ஆவணத்தின், கட்சியின் பங்கு பற்றி அவர்கள் மொழியில் சொல்வதானால், சோசலிச சமுதாயத்தில் நிறுவனமாக்கப்பட்ட முன்னோடி பொறுப்பு கட்சிக்கு இல்லாமலிருப்பது பற்றிய விவாதம் உண்மையில் "அமைதியான மாற்றம்" என்ற கருத்தில் போய் முடிவடைகிறது. ஆம். இந்த வாதங்களின் திசையில் சென்றால் வன்முறையாக ஆட்சியைத் தூக்கி எறிவது என்பதே மக்கள் திரளை (குறைந்தது ஆயுதப் போராட்டத்தில் பங்கு பெறாத பிரிவினரை) 'கட்டாயப் படுத்துதல்' ஆகும். 'மேட்டிமைத்தனமானது' ஆகும். எனவே அடிப்படையில் தவறானது ஆகும் என்ற தத்துவார்த்த முடிவையே அடைகிறோம்.

இந்த முடிவு இத்த ஆவணத்தில் எங்கும் சொல்லப் படவில்லை. உண்மையில் பூர்ஷ்வா ஆட்சியை வன் முறையாகத் தூக்கி எறிவது அவசியமானது என்றே

கூறுகிறது. ஆனால் அதற்குக் காரணம் அது தனது வாதத்தின் திசையில் முழுமையாகச் செல்லாததுதான். அந்த வகையில் பார்த்தால், இது சோசலிச-ஜனநாயக வாதிகள், அராஜகவாதிகள், போர் எதிர்ப்பாளர்கள், முதலியோரைவிட மிகப் பின்தங்கியது ஆகும். அவர்களது வரலாற்றுப் பூர்வ கூற்றுப்படி போர் என்பதே அது புரட்சிகரப் போராயிருந்தாலும்கூட, மேட்டிமைத்தனத்தை உருவாக்குகிறது. புரட்சிகர ஆயுதப் படையின் கருவாக உள்ள, ஆயுதப் போரை வழி நடத்தும் கட்சியின் கையில் அதாவது ஒரு கருவி யின் கையில் அதிகாரத்தைக் குவிக்கிறது. அதன் மூலம் புதிய அதிகார அமைப்பின் கருவாக கட்சி மாறி விடுகிறது. பெரும்பாலும் அவர்கள் இவ்வகை யான வாதங்களை லெனினது அடிப்படை திசைவழிக்கு எதிராக, குறிப்பாக அவரது "இனி என்ன செய்ய வேண்டும்" என்ற நூலில் மக்கள் திரளிடம் கட்சி கொண்டிருக்க வேண்டிய முன்னோடி, தலைமை உறவு கள் பற்றிய கருத்துக்களை எதிர்ப்பதற்குப் பயன்படுத்து கின்றனர். மேலும் இங்குதான் 'கட்சியின் சர்வாதிகாரம்' 'தோற்றம்' அடைந்ததாய் வாதிடுகிறார்கள். சி.ஆர் சி ஆவணமோ 'கட்சியின் சர்வாதிகாரம்' என்ற திரிக்கப் பட்ட கருத்தை அவர்களிடமிருந்து எடுத்துக் கொள் கிறது. ஆனால் இக்கருத்தின் 'தோற்றம்' "இனி என்ன செய்ய வேண்டும்" என்ற நூலில் இருப்பதை 'கண்டு பிடிக்க'வில்லை (இங்கும்-இந்த ஆவணம் பின்தங்கி விட்டது.)

'கட்சியின் சர்வாதிகாரம்' என்ற கூக்குரல் "அவர் கள் ஆயுதமேந்தியிருக்கக் கூடாது" என்ற கூக்குர லுடன் தப்பிக்க முடியாமல் பிணைந்துள்ளது. இது பாரிஸ் கம்யூனை எதிர்த்த எதிர்ப் புரட்சியாளர்களின் கூக்குரல், ரஷ்யப் புரட்சியை எதிர்த்தவர்களின் கூக்

குரல் என்று லெனின் சுட்டிக் காட்டினார். பொதுவாக அனைத்து உண்மையான புரட்சிகளையும், குறிப்பாகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை, எதிர்ப்பவர்களின் கூக்குரலாகும். இங்கே ஒன்றை நாம் மறக்காமல் குறிப்பிட வேண்டும். பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய அனைத்து ஆயுதப் புரட்சிகளும் இன்று வரையிலும் மக்கள் தொகையில் ஒரு சிறு பிரிவினராலேயே தொடங்கப்பட்டன. இனி வரும் காலங்களிலும் அவ்வாறே தொடங்கப்படும். மூன்றாம் உலக நாடுகளில் நடக்கும் நீண்டகால மக்கள் போராயினும் சரி, ஏகாதிபத்திய நாட்டில் நடைபெறும் நகர்ப்புற எழுச்சியாயினும் சரி, இந்த உண்மை பொதுவானதே. இவ்வகையான ஆயுதப் போராட்டங்கள், பெரும்பான்மை மக்களின் ஆதரவை, ஆயுதப் போராட்டம் தொடங்கி விட்ட பகுதிகளின் சுற்று வட்டத்தில் கூட, பெறுவதற்கு முன்னரே தொடங்கப்படுகின்றன. இவ்வகையான ஆயுதப் போராட்டங்கள், எத்தனை தான் அடிப்படையில் மக்களைச் சார்ந்து இருந்தாலும் அவற்றில் கட்டாயப்படுத்தலின் கூறுகள் ஓரளவு இருக்கவே செய்கின்றன. எதிரிகள் மீது மட்டுமல்ல அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் திரள் மீதும் கூட கட்டாயப் படுத்தல் உள்ளது. சரியாக நோக்கினால் அவை மக்களை, குறிப்பாக அதுவரை போராட்டத்தில் கலந்து கொள்ளாத மக்களை, தங்களைப் பற்றி ஏதாவது ஒரு முடிவிற்கு வருமாறு கட்டாயப் படுத்துகின்றன.

போல்ஷிவிக்குகள் தலைமையில் நடந்த 1917–ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியில் இந்த நிலை இருந்தது உண்மையாகும். இந்த நேரத்தில் நாடு முழுவதையும் கணக்கில் கொண்டால் சோவியத்துக்குள்ளிருந்த தொழிலாளர்களில் பெரும்பான்மையோர்கூட ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கு ஆதரவாக வென்றெடுத்திருக்கப்படவில்லை என்று தைரியமாக ஊகிக்கலாம்.

கிராமப்புற முழுவதும் உள்ள விவசாயிகள் விஷயத்திலோ இவ்வுண்மை மேலும் உறுதியாகிறது. முக்கிய நகரங்களிலும்கூட!குறிப்பாக பெட்ரோகிரேடு, மாஸ்கோ போன்ற ஆயுத எழுச்சிகள் முதன் முதலில் தொடங்கிய நகரங்களிலும்கூட, போல்ஷிவிக்குகளின் ஆயுதப் போராட்டங்களை ஆலைத் தொழிலாளர்கள் அல்லாத பிற தொழிலாளர்கள் விருப்போடு ஆதரிக்கவில்லை. ஆனாலும் இந்த ஆலைத் தொழிலில் இல்லாத தொழிலாளர்களையும், மக்கள் திரளின் ஒரு பிரிவாகவே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனவே சி.ஆர்.சியின் ஆவணத்தின்படி "அவர்கள் ஆயுத மேந்தியிருக்கக் கூடாது" என்ற முடிவிற்கே வர இயலும். முன்னோடி ஆட்சியிலிருக்கும் பொழுது தன்னுடைய முடிவை மக்களின் மீது திணிக்கக் கூடாது. ஆனால் ஆட்சிக்கு வருவதற்கு அவ்வாறு திணிக்கலாம் என்று தர்க்க ரீதியாக நிறுவ இயலாது. இங்கே எழுந்துள்ள முரண்பாடுகளை பொருள் முதல்வாத இயங்கியலைப் பயன்படுத்தியே தீர்வு காண முடியும். முதலாளித்துவ வாதங்களைப் பயன்படுத்தி (சி.ஆர்.சி. ஆவணம் முயல்வது போல்) தீர்வு காண இயலாது.

போல்ஷிவிக்குகள் தொடங்கிய ஆயுதப் போராட்டங்கள் மக்கள் திரளின் பெரும்பான்மையினரின் நலனுக்காகவே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இது வெறுமே பொதுவான, நீண்டகால வரலாற்று நோக்கிலான உண்மையல்ல. மக்கள் திரளின் அரசியல் நோக்கங்களுடனும், மிக உடனடித் தேவைகளுடனும் ஒத்திசைந்த நடவடிக்கை ஆகும். ஆனால் இங்கே கவனிக்க வேண்டியது அது மட்டுமல்ல. இது போன்ற அடிப்படைகளைத்தான் இப்பொழுது சி.ஆர்.சி ஆவணம் தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தை தர்க்கங்களாலும் (முதலாளித்துவ) ஜனநாயக வடிவங்களாலும் நிரப்ப முயற்சிக்கிறது. அதாவது சமுதாய, வர்க்க உள்ளடக்கங்

களைப் பற்றிக் கவலைப்படாமல், ஜனநாயகத்தின் உருவத்திற்கு மட்டுமே முழு அர்த்தம் கொடுத்து, உருவத்தை உள்ளடக்கத்திற்கு மேலே உயர்த்திப் பிடிக்கின்றது.

3. இதே வாதத்தின் அடிப்படையில் சென்றால் 'பாட்டாளி வர்க்க சர்வாதிகார'த்தையும் ஜனநாயகமற்ற அரசியல் முறையாகக் கருதி கைவிட வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலும் அரசு 'கட்டாயப் படுத்தலி'ன் கூறுகள் உள்ளன. அதுவும் எதிரி வர்க்கங் களின் மேல் மட்டுமல்ல, பொதுமக்கள் என்ற பெரும் பிரிவில் உள்ளடங்கிய தனிமனிதர்களின் மேலும் கூட கட்டாயப்படுத்துதல் உள்ளது வேறுபட்ட ஊதிய விகிதங்களிலிருந்து, கோடிக்கணக்கான இளைஞர்களை விவசாயிகளுடன் இரண்டறக் கலக்குமாறு கிராமப் புறங்களுக்கு அனுப்புவது வரையிலான அத்தனை அடிப்படைக்கொள்கை முடிவுகளிலும் 'கட்டாயப் படுத்தல்' அடங்கியுள்ளது. மக்கள் திரளுடன் ஆன உறவில் கட்டாயப்படுத்தலையே நம்பியிருக்க முடியாது. கல்வி அறிவையும், கம்யூனிச தத்துவ, அரசியல் நிலை பாடுகளின் அடிப்படையிலான போராட்டங்களையுமே சார்ந்து இருக்கவேண்டும். ஆனாலும்கூட 'கட்டாயப் படுத்துதல்' முற்றாக நீக்கப்படுவதில்லை. இதன் வேர்கள் நிலவிவரும் சமுதாயத்தில் முந்தைய சமுதாயம் விட்டுச் சென்ற ஏற்றத்தாழ்வுகளின் மிகச் சொச்சங்களில் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் தொழிலாளர் களுக்கும் விவசாயிகளுக்கும் மூளை உழைப்புக்கும் உடல் உழைப்புக்கும் இடையே அடங்கியுள்ளன. இம் முரண்பாடுகள் நிலவுவதால் (உற்பத்திச் சாதனங்கள் முழுமையாக பொதுச் சொத்துக்களாகிவிட்ட பின்பும்) சோசலிச சமுதாயத்தில் அரசு தேவைப்படுவதை லெனின் கூறியுள்ளார்.

"இந்த முரண்பாடுகளை கம்யூனிச வளர்ச்சிக்கு இசைவாகக் கையாளுவதற்காக இந்த அரசு தேவைப் படுகிறது" என்று கூறியதுடன் "அதே சமயம் முதலாளித்துவ உரிமைகளை (முந்தைய சமுதாய எச்சங்களால் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கிய உறவுகளை வெளிப்படுத்தும் சட்டங்களையும் கொள்கைகளையும் நிறுவுவதற்கும்கூட இந்த அரசு அதிகாரம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தேவைப் படுகிறது" என்றும் லெனின் கூறினார். தனது கருத்தை ஆணித்தரமாகச் சொல்வதற்காக லெனின் இன்னும் சவால்விடும் வகையில் தனது அரசை "முதலாளிகள் இல்லாத முதலாளித்துவ அரசு" என்று கூடக் குறிப்பிடுகிறார்.

(அரசும் புரட்சியும்-பக்கம் 476)

சி.ஆர்.சி. ஆவணத்தை வழிநடத்திச் செல்லும் கோட்பாட்டினால், அதே (முதலாளித்துவ) கோட்பாடு எழுப்பும் வினாவிற்கு விடையளிக்க இயலாது. கேள்வி இதுதான். "சோசலிசம் உண்மையிலேயே பெரும் பான்மை மக்களின் நலனுக்கானது என்றால், மக்கள் திரளைச் சார்ந்து இருப்பது உண்மையானால், அவர்களின் நலன்களுடன் ஒத்திசைவு உடையது என்றால் சோசலிசத்தை எதிர்த்து முதலாளித்துவத்தை மீட்டெடுப்பது மிகச்சிறுபான்மையினரான சுரண்டலாளர் களுக்கு மட்டுமே லாபகரமானது என்றால், பின் சர்வாதிகாரம் ஏன் அவசியமாகிறது?"

நான் இதைப்பற்றி, "ஜனநாயகம் - அதைவிடச் சிறப்பாக நம்மால் செய்ய இயலாதா?" என்ற புத்தகத்தில் (குறிப்பாக) ஏழாவது அத்தியாயத்தில் இதைப்பற்றி விரிவாகக் கூறியுள்ளேன். இந்தக் கேள்வியை மிக ஆழமாக லெனின் விவாதித்துள்ள 'பாட்டாளி வர்க்கப் புரட்சியும், துரோகி காவுட்ஸ்கியும்' என்ற நூலிலிருந்து

விரிவாக எடுத்தாண்டுள்ளேன். முதலாளித்துவத்தின் உள்நாட்டு அடிப்படை, வெளிநாட்டுத் தொடர்புகள் ஆகியவை அதற்குச் சாதகமான வாய்ப்புக்களைத் தருவதையும், புதிதாக அதிகாரத்திற்கு வந்துள்ள பாட்டாளி வர்க்கம், அதிகாரம் செலுத்துவதில் வரலாற்று முன்னுதாரணம் இல்லாததால் பாதகமான நிலையில் இருப்பதையும் அங்கே லெனின் குறிப்பிடுகிறார்.

இது போன்ற காரணங்களால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நீண்ட காலம் தேவைப்படுவதையும் விளக்குகிறார். சோவியத் குடியரசின் ஆரம்ப காலங்களில் லெனின் இக்கேள்வியை மீண்டும் மீண்டும் எதிர்கொள்கிறார். எனவே இக்காலக்கட்டத்தில் எழுந்த அவரது படைப்புகள் தொடக்க நிலையிலான ஆனால் மிக விரிவான ஆய்வுகளின் மூலம் ஏன் முதலாளித்துவத்திலிருந்து சமுதாயத்தின் உயர் மட்ட நிலையை வந்தடையும் வரை, மாற்றம் நிகழ்கின்ற கால கட்டம் முழுமைக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தேவையாயிருக்கிறது என்பதை விளக்குகின்றன. இந்த ஆய்வுகளை மாவோ விரிவுபடுத்தி, முறைப்படுத்தியுள்ளது நாம் அனைவரும் அறிந்ததே. மாவோவின் கூற்றுப்படி, சோசலிசம் என்பது முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுகின்ற நீண்ட வரலாறு நிறைந்த கால கட்டமாகும். இக்காலம் முழுமையிலும் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் நிலவும். முதலாளித்துவ மீட்சியை எதிர்த்துப் போராடுவது அவசியமாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தலைமையில் புரட்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும்.

ஆனால் சி.ஆர்.சி ஆவணம் இவை அனைத்தையும் காண மறந்துவிட்டது. சோசலிச காலகட்டம் முழுமையும் ஏன் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

இன்றியமையாததாகிறது என்பதையோ, சோலிசமும், கம்யூனிசத்தை நோக்கிய வளர்ச்சியும் ஒரு சில சுரண்டு லாளர்களுக்கு எதிரானதும், பரந்துபட்ட மக்கள் திரளின் அடிப்படை நலன்களுக்கு இசைவானதாகவும் இருப்பதையோ பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எவ்வாறு இத்தன்மைக்கு எதிராக அல்லது இசைவாக இருக்கின்றது என்பதற்கோ பொருள் முதல்வாத அடிப்படையிலான விளக்கம் எதுவும் சி.ஆர்.சி ஆவணத்தின் அடிப்படைக் கோட்பாடுகளால் கூற இயலாது.

சி.ஆர்.சி ஆவணத்திலிருந்து பெறப்பட்ட பொதுவான முடிவுகளின் மீது விவாதத்தைத் தொடர்வதற்குப் பதிலாக ஆவணத்திலுள்ள பல குறிப்பான விவாதங்களை ஆய்வு செய்வது இனிமேல் பயனுள்ளதாயிருக்கும். இதுவரை வந்தடைந்துள்ள அடிப்படை முடிவுகளை மாசு நீக்கி, விரிவாக்கவும், ஆழமாக்கவும் இது உதவும்.

## முந்தைய சோவியத் தொகுப்பு நாடுகளிலும் சீனாவிலும் நடந்த அண்மைக்கால நிகழ்ச்சிகள் பற்றி :

குட்டி முதலாளித்துவ ஜனநாயக மாயத் தோற்றங்களுக்கும், முதலாளித்துவ-ஜனநாயக கருத்தாக்கங்களுக்கும்வால்பிடிக்கும் தன்மை இந்த ஆவணத்தில் தொடக்கத்திலிருந்தே இருப்பதை கருத்துக்கள் சொல்லப்படும் முறையிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அதன் முதல் வரியே, "முன்னாள் சோசலிச நாடுகளான சீனா, சோவியத் யூனியன், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின்" கடந்த சில வருடங்களில் நடந்த நிகழ்ச்சிகள், "ஜனநாயக எழுச்சிகள்" என்று குறிப்பிடுகின்றன. (சி.ஆர்.சி ஆவணம் முதல் பக்கம்)

முதலாவதாக, இந்த நாடுகளில் நடந்த மக்கள் திரள் எழுச்சிகள் உட்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் பல்வேறு வர்க்க சக்திகளை உள்ளடக்கிய, பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட மக்கள் திரள் என்றாலும் அடிப்படையில் முதலாளித்துவ சித்தாந்தங்களையும், அரசியலையும் தலைமையாக ஏற்றுக்கொண்டவை ஆகும். இதனை வெறுமே "ஜனநாயக எழுச்சி" என்று விவரிப்பது ஆழ்ந்த வர்க்க ஆய்வுகளை செய்யத் தவறுவதும், ஜனநாயகத்தை முதலாளித்துவமாக விவரிப்பது போல், ஒரு அனைத்திற்கும் பொதுவான, வர்க்க வேறுபாடுகளற்ற வரலாற்று நிகழ்வாகக் காட்டும் முயற்சியுமே ஆகும். இது குட்டி முதலாளித்துவத் தன்னெழுச்சிக்கு வால் பிடிப்பது மட்டுமல்ல; மறைமுகமாகவாவது இந்த "ஜனநாயக எழுச்சிகளுக்கு' தலைமை வகித்த முதலாளித்துவ சக்திகளையும் கண்ணோட்டங்களையும், திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வதாகும்.

எவ்வாறு எம். எல். இயக்கங்கள் (மக்களை 'முதலாளித்துவ ஜனநாயகமோ, வெளிப்படையான முதலாளித்துவமோ தீர்வல்ல'' என்று எச்சரித்தன என்பது போன்ற பல விஷயங்கள் இந்த ஆவணத்தில் கூறப்பட்டிருந்தாலும் கூட நாம் மேலே கூறிய உண்மைகள் பொய்யாகிவிடுவதில்லை. எனவே மீண்டும் வலியுறுத்துகிறோம். இந்த எழுச்சிகளை வெறுமே "ஜனநாயகம்" என்று விவரிப்பது அதன் முதலாளித்துவ ஜனநாயக சாராம்சத்தை மூடி மறைப்பதற்கான முயற்சியே ஆகும். மாவோ குறிப்பிட்டது போல் ஒரு பொருளின் சாராம்சம் அதன் முதன்மைப் பண்பால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விஷயத்தில், சாராம்சமாக இருப்பது இந்த ஜனநாயக எழுச்சிகளை "முதலாளித்துவ சக்திகளும், கண்ணோட்டங்களும் மேலாண்மை செலுத்தியதே ஆகும்.''

அடுத்து. சற்று மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது ஒரு சிறிய சொற்குற்றம் போல் தோன்றும் ஒரு தவறை நாம் மிகக் கவனமாகப் பார்க்கவேண்டும். இரண்டாவது பத்தியின் தொடக்கத்தில் முந்தைய சோசலிச நாட்டு ஆளும் கும்பல்களை "சமூக பாசிஸ்டுகள்" என்று குறிப்பிடுவதைக் காணலாம். இது முதலில் மாவோவினாலும் பின்பு மாவோயிஸ்டுகளாலும் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும். (நமது ஆட்சியும்கூட சில சமயங்களில் இச்சொல்லைப் பயன்படுத்தியிருந்தாலும் பிறகு சோவியத் யூனியனின் குருஷ்சேவ், பிரஸ்னேவ் போன்றோரின் தலைமையில் நடந்த முதலாளித்துவ ஆட்சிமுறையை திரிபுவாத ஜனநாயகம் என்று அழைக்கத் தொடங்கினோம்) இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இந்தத் திரிபுவாத ஆட்சியின் வர்க்கத் தன்மையை, அதன் முதலாளித்துவ சாராம்சத்தை மாவோயிஸ்டுகள் எப்போழுதுமே வலியுறுத்தி வந்தனர். பொதுமக்களிடையே' தன்னெழுச்சியாகத் தோன்றும் கருத்தாக்கத்திலும் சரி, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வரலாற்றிலும் சரி, 'பாசிசம்' என்பது முற்றாக வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டதாக, சாதாரண முதலாளித்துவ சர்வாதிகாரத்தைவிட மோசமானதாக கருதப்படுகிறது. அதனால் போராட்டங்களைப் பாசிசத்திற்கும், முதலாளித்துவ ஜனநாயகத்திற்கும் இடையிலான போராட்டமாகக் குறுக்குவது நியாயப்படுத்தப்படுகிறது. சி.ஆர்.சி ஆவணத்திலும் இந்தத் தந்திரமே கையாளப்படுகிறது. ஆவணம் முழுவதிலும் திரிபுவாத ஆளும் கும்பல்களைக் குறிப்பிட "சமூக பாசிஸ்டுகள்" என்ற சொல்லே மீண்டும், மீண்டும் கவனமாக, தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகிறது. இப்பொழுது இதன் எதிரே 'ஜனநாயக எழுச்சிகள்' என்ற சொல்லையும் பயன்படுத்தும் பொழுது மறைமுகமாக ஒரு கருத்து வலியுறுத்தப்படுகிறது.

"சமூக பாசிசத்தைவிட, பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் உள்ளிட்ட வெளிப்படையான எந்த சர்வாதி காரத்தையும்விட, ஜனநாயகமே (சாராம்சத்தில் இது முதலாளித்துவ ஜனநாயகமாகும்) சிறந்தது" என்பதே இங்கு சொல்லாமல் சொல்லப்படும் கருத்தாகும். இதைப் பற்றி விரிவாகப் பின்பு காண இருக்கிறோம்.

ஆனால் நாம் இவ்வாறு மறைபொருளாக உள்ள கருத்துக்களைத் தேடி அலைந்துகொண்டிருக்க வேண்டியதில்லை. விரைவிலேயே இந்த ஆவணம் சோவியத் புரட்சியிலிருந்து தொடங்கி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவங்கள் அனைத்தை தையும் வெளிப்படையாகவே தவறென்று மறுத்து ஒதுக்கிவிட்ட—அதற்கு எதிராக மெல்லிய முக்காடிட்ட முதலாளித்துவ ஜனநாயகத்தை முன் நிறுத்துகிறது. முதல் பத்தியிலேயே இந்த ஆவணம் இவ்வாறு கூறு கிறது "இந்த மாற்றங்களின் பின் விளைவுகளுக்கு பதில் சொல்லும் முகமாக (முந்தைய சோசலிச நாடுகளில் அண்மைக் காலத்தில் தோன்றிய ஜனநாய எழுச்சி அலைகள்) கம்யூனிஸ்டுகள் இந்தப் பிரச்சினைகளின் ஆழத்தைக் கண்டறிந்து பொருத்தமான விடைகளைக் காணவேண்டும்' அதாவது இதுவரை மார்க்சிய-லெனி னிய மாவோயிசம் கொடுத்துள்ள அடிப்படையான பதில்கள் குறையுடையன அல்லது தவறானவை; அடிப்படையான மறுமதிப்பீடு அவசியம் என்ற அடிப் படையிலேயே இந்த ஆவணம் எழுதப்பட்டுள்ளது தெளிவாகிறது. விரைவிலேயே இந்த ஆவணம் "முந்தைய சோசலிச நாடுகளில் முதலாளித்துவ மீட்சி பற்றிய மரபு சார்ந்த மார்க்சிய விளக்கங்களை" தூக்கி யெறிகிறது (பத்தி 1.3)

கொஞ்ச நேரத்திலேயே இது மேலும் வெளிப்படை யாகவும் விரிவாகவும் விவரிக்கப்படுகிறது. "இந்தச் சூழ்

நிலையில், திரும்பிப் பார்த்து, கம்யூனிச இயக்கம் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளின் வேர்களைக் கண்டறிவது உண்மையான கம்யூனிஸ்டுகளின் கடமை யாகும். நம் முன் எழுந்துள்ள இந்த அடிப்படைக் கேள்விகளுக்கு விடைகாணாமல் எந்த கம்யூனிச அமைப்பும் தங்களது பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது. இந்த அடிப்படைக் கேள்விகள் நீண்டகாலம் பதில் சொல்லாமல் விடப்பட்டால் அணிகள் சோர்வடைந்து அமைப்பு பலவீனமாகும். எனவே இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது, குறைந்த பட்சம், தீர்க்கும் முயற்சியிலாவது ஈடுபடுவது உடனடி அரசியல் கடமையாக மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த அடிப்படையில்தான், கம்யூனிச இயக்கத்தின் மொத்த வரலாற்றையும் இதுவரை நாம் உயர்த்திப் பிடித்து வந்த அடிப்படைக் கருத்துக்களையும் மீளாய்வு செய்யுமாறு உண்மையான கம்யூனிஸ்டு கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். அந்த ஆய்வின் மூலமே இதுவரை கண்டுபிடித்து வந்த பாட் டாளிவர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடியும் (பத்தி 1.9)

எனவே நாமும் அந்த 'மீளாய்வை' நோக்குவோம். முதலில் இந்த ஆவணத்தில் வரும் வேறொரு மேற் கோளிலிருந்து தொடங்குவோம். "முதலாளித்துவ மீட்சியைப் பற்றிய மரபு வழி மார்க்சிய-லெனினிய விளக்கம்" பற்றி இந்த ஆவணம் கூறுகின்றது. "முதலாளித்துவ மீட்சியைப் பற்றிய பொருளாதாரம் சார்ந்த காரணங்கள் இந்த விளக்கத்தில் சரியாகவே உள்ளன. ஆனால், இந்நாட்டு மக்கள் திரள் எழுப்பிய அரசியல் கேள்விகளுக்கு இந்த விளக்கங்கள் போது மானதாக இல்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் மேலாண் மையை உறுதி செய்யும் அரசியல் கூட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்பதே அவர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது (பத்தி 1.3)

முதலாவதாக அரசியலையும் பொருளியலையும் தனியாகப் பிரிக்க முயற்சிப்பது இயக்க மறுப்பியல் வாதமாகும். பொருளியல் ரீதியில் சரியானதும் அதே சமயம், அரசியல் ரீதியில் அடிப்படையில் தவறானதும் அல்லது குறைவு பட்டதுமான ஒரு விளக்கம் இருக்க முடியாது. மேலும், சி.ஆர்.சி. ஆவணத்தில் ''மக்கள் திரள்'' ''அவர்களது முக்கிய கோரிக்கை'' போன்ற சொற்றொடர்கள் ஒரு உண்மையை மறைக்கின்றன. நிலவிவரும் அரசியல் அமைப்பை ''தகர்த்தெறியும்'' கோரிக்கைக்கு பெருமளவு மக்கள் திரளின் ஆதரவும், எதிர்ப்புணர்வும் இருந்திருக்கலாமென்றாலும் எல்லா வற்றிற்கும் மேலாக இவை சில முதலாளித்துவ சக்தி களின் கோரிக்கை ஆகும். ஏனெனில் அவர்கள்தான் இந்த உணர்வு வளர்வதற்கு உந்து சக்தியாக இருந்தவர் கள். மேலும் இது (மாற்றம்) அவர்களுடைய குறிப்பிட்ட நலன்களை நிறைவு செய்வதுடன் அவர்களது இன்றைய தேவைகளுடன் இசைவுள்ளதாகயிருக்கிறது.

அந்த ஆவணம் மேலும் கூறுகிறது, ''மக்கள் திரளைப் பொறுத்தவரை இந்த சமூக பாசிச அரசியல் அமைப்பிற்கும், முன்பு சோசலிசம் நிலவிய காலத்தில் இருந்த அரசியல் அமைப்பிற்கும் சாராம்சத்தில் எந்த வேறுபாடும் இல்லை'' (பத்தி 1.3) இக்கருத்தை இந்த ஆவணம் ஏற்றுக் கொள்வதும் தெளிவாகிறது, ''பண் பாட்டுப் புரட்சியால் புதிய அரசியல் நிலைமைகள் உருவான சீனாவிலும் கூட 'தெங்'கின் கீழ் உள்ள அரசியல் அமைப்பிற்கும் அதற்கு முந்தைய அரசியல் அமைப்பிற்கும் இடையே சாராம்சத்தில் எந்த வேறு பாடும் இல்லை.''

எத்தனை அதிர்ச்சியூட்டும் வார்த்தைகள்! வேறு பாடே இல்லை?! மக்கள் திரளில் மிகப் பின்தங்கிய பிரிவினருக்கும் நீண்ட நாட்களாகவே இத்தகைய

நிலையை எடுத்து வரும் முதலாளித்துவவாதிகளுக்கும் வால் பிடிக்கும் செயலே இது. இந்தக் கூற்றை சோவியத் ரஷ்யாவிற்குப் பொருத்துவது கேலிக்கூத்தாகும். லெனின் தலைமையிலான தொடக்க காலங்களுக்கும் சரி, பின்பு ஸ்டாலின் தலைமையிலான நீண்ட கால கட்டத்திற்கும் சரி, இது பொருந்தாது. சில எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

சோவியத் குடியரசின் தொடக்க ஆண்டுகளில் எதிர்புரட்சியாளர்களையும், ஏகாதிபத்திய அத்து மீறல் களையும் எதிர்த்து நடத்திய போர்கள், (கட்சிக்குள் இருந்த பல்வேறு முறையான குழுக்கள் சட்டத்திற்குப் புறம்பானவையாக அறிவிக்கப்பட்ட போதிலும் கூட) இருபதாம் ஆண்டுகள் முழுமையும் கட்சிக்குள் நடந்த உயிரோட்டமான உட்கட்சிப் போராட்டங்கள்; வர்க்க உணர்வுள்ள முன்னோடிப்படைகள் திரட்டப்பட்டதும், மக்கள் எழுச்சிகளும் இணைந்து 1930 ஆம் ஆண்டு முன்பகுதியில் கூட்டுப் பண்ணைகளை உருவாக்குதல் (சில தவறான போக்குகளை உள்ளடக்கி இருந்த போதிலும் கூட) சோசலிச தொழில் மயமாக்குதலுக்கு மக்கள் திரளை திரட்டுதல்-இவையும், இவை போன்ற இன்னும் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளாலும் சோவியத் யூனியன் சோசலிச நாடாக இருந்த காலகட்டத்திற்கும், திரிபுவாதிகள் ஆட்சியைப் கைப்பற்றி முதலாளித்துவ மீட்சியைக் கொண்டு வந்துவிட்ட காலகட்டத்திற்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் இருப்பதை உணரலாம். பொருளாதாரத்தில் முக்கிய மாற்றங்களை யெல்லாம் நடைமுறைப்படுத்திய பின்பு, குறிப்பாக 1930 ஆம் ஆண்டுகளில் நடுப்பகுதியில், சோவியத் கட்சிக்கும், அதன் தலைமைப் பொறுப்பில் இருந்த ஸ்டாலினுக்கும் மேலும் மேலும் நிர்வாக நடவடிக்கைகள், வல்லுனர்கள் ஆகியவற்றையே சார்ந்திருக்கும் போக்கு தோன்றியது உண்மையே. தவறான இப்போக்குகளைப் பற்றியும்

அவை உருவானதற்கான அடிப்படைக் காரணங்களைப் பற்றியும் விரிவான ஆய்வுகள் செய்யப்படவேண்டும், உண்மையில் மாவோயிஸ்டுகளால் செய்யப்பட்டன· ஆனால் இவை மார்க்சிய-லெனினிய-மாவோயிச தத்துவங்களின் அடிப்படையில்தான் சரியாகச் செய்யப் பட முடியுமேயொழிய, முதலாளித்துவத் தத்துவங்களின் அடிப்படையில் அன்று. எ-கா, கீழே தரப்பட்டுள்ள மாவோவின் வார்த்தைகள்தான், (லெனின் மற்றும்) ஸ்டாலின் காலத்தில் நிர்வாக யந்திரத்தின் பயங் கரங்களைப் பற்றிய சரியான புரிதலை உருவாக்கினவே யன்றி ட்ராட்ஸ்கியர்கள், மென்ஷிவிக்குகள், காவுட்ஸ் கியர்கள், முதலாளித்துவ ஜனநாயகவாதிகள், ஆகியோரின் ஊளைகள் அல்ல.

"அந்த நேரத்தில் ஸ்டாலின் மக்களை மட்டுமே சார்ந்திருக்க முடிந்தது எனவே அவர் கட்சியிடமிருந்தும், மக்களின் பேரளவிலான அணி திரட்டலை வற்புறுத்தினார். (இங்கே மாவோ 1920-இன் பிற்பகுதி களையும் 1930-இன் முற்பகுதிகளையும் குறிப்பிடு கின்றார்.) இவ்வழியில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டதும் அவர்கள் மக்களைச் சார்ந்து இருத்தல் குறையத் தொடங்கியது. '(மாவோவின் - சோவியத் பொருளாதாரம் பற்றிய ஒரு விமரிசனம்'. நியூயார்க், மாதமறுபார்வை அச்சகம், 1977, பக் 119) ஆனால் மாவோவைப் போலவே நாமும் ஒரு உண்மையை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் திறனைக் குறைவாகச் சார்ந்து இருப்பதால் தவறான, சிலசமயம் மிகமிகத் தவறான வழியில் செல்லும் மார்க்சிஸ்டுகளுக்கும் மக்கள் திறனை ஒடுக்கியும், சுரண்டியும் ஆட்சி நடத்தும் திரிபுவாதிகளுக்கும் இடையே பெருத்த வேறுபாடு உள்ளது என்பதே அந்த உண்மை.

சமுதாயத்தில் உண்மையில் என்ன நடந்தது? எந்த அடிப்படையில் அவ்வாறு நடக்கிறது? இந்நிகழ்வுகளுடன் மக்களுக்குள்ள உறவு, விருப்பம் ஆகியவற்றிற்கிடையே அடிப்படை வேறுபாடுகள், சமுதாய அமைப்புகளின் எல்லா வடிவங்களிலும், எல்லாக் காலங்களிலும் நிலவி வந்துள்ளன. இல்லையென மறுப்பது இயக்க மறுப்பியல் வாதமாகும், கருத்து முதல் வாதமாகும்.

இவர்களின் வாதம் வெற்றுச் சம்பிரதாயம் ஆகும். இவர்கள் சொல்வது என்னவென்றால் "அரசியல் மற்றும் பொருளியல் வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் நிறுவனமாக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அளித்தது. இந்தத் தலைமை பிரதிநிதித்துவப்படுத்துவது சோசலிசத்தையா அல்லது முதலாளித்துவ வழியையா என்பது ஒரு அடிப்படை வேறுபாடு அல்ல. சோசலிச அமைப்பிற்கும் முதலாளித்துவ அமைப்பிற்கும் அடிப்படையான தன்மைகளில் உள்ள வேறுபாட்டை உணரமுடியாத "வர்க்கங்களற்ற" மக்கள் திரள் இருப்பதாகக் காட்டி இவர்களது வெற்று வாதத்தை நியாயப்படுத்த முயற்சிப்பது முதலாளித்துவக் கருத்தோட்டங்களுக்கு மிகவும் அடிமையாகியுள்ள சிந்தனைகளுக்கும், மக்கள் பிரிவினருக்கும் வால்பிடிக்கின்ற செயலாகும்.

இந்த முறையை அவர்கள் சீனாவிற்கும் பயன்படுத்த முயற்சிக்கும் பொழுது மேலும் கேலிக்கூத்தாகிறது. நாடெங்கிலும் அதிகாரங்கள் கைப்பற்றப்பட்டவுடனும், பின்பு மேலும் விரிவாக பண்பாட்டுப் புரட்சியின் மூலமாகவும் சீன சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும், ஏற்படுத்தப்பட்ட மாபெரும் மாற்றங்களை சி.ஆர்.சி. ஆவணத்தின் ஆசிரியர்கள் "மறந்து" விட்டனரா? ஆனால் 1976-இல் மாவோ இறந்தவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிய திரிபுவாதிகள் சோசலிச நிறு

வனங்களைத் திட்டமிட்டு அழித்ததை இவர்கள் நிச்சய மாக மறந்து விட்டனர். அரசையும், மக்கள் திரளை யும் நிர்வாகத்தையும் ஒன்றிணைத்த, கீழ் மட்டங் களிலிருந்து உருவாக்கப்பட்ட "புரட்சிகர குழுக்கள்" சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் மக்கள்திரள், கட்சி உறுப்பினர்கள், நிபுணர்கள் ஆகியோரை ஒருங் கிணைத்த 1-இல் 3 ஆன பல்வேறு அமைப்புகள், தொழி லாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறுவதும், நிர்வாகி களும், உயர்மட்ட அதிகாரிகளும் உற்பத்தி உழைப்பில் பங்கு பெறுவதும் அரசாங்க கொள்கையாகக் கடைப் பிடிக்கப்படல், "மே ஏழு கட்சி உறுப்பினர் பாடத் திட்டத்தின்"படி கட்சி உறுப்பினர்களும், அரசு ஊழி யர்களும், கிராமப்புறங்களுக்குச் சென்று உற்பத்தி உழைப்பிலும், படிப்பிலும், கருத்தியல் மற்றும் அர சியல் போராட்டங்களிலும் பங்கு பெற்றது. தத்துவ அறிவையும், அனுபவ அறிவையும் ஒன்றிணைத்தல், நிபுணர்களையும் மக்கள் திரளையும் ஒன்றிணைத்தல், மக்கள் திரளை அணிதிரட்டி அவர்களைச் சார்ந்து இருத்தல் ஆகிய நோக்கங்களுக்காக 'கல்வி மற்றும் அறிவியலில் திறந்த வெளி முறை" மக்கள் திரளின் குறிப்பாக கிராமப்புற மக்களின் தேவைகளை நிறை வேற்றுவதற்கான மருத்துவ, சுகாதாரக் கொள்கைகள், மருத்துவ நிபுணர்களை மட்டுமே சார்ந்திராமல் கிராமப் புறங்களெங்கும் "நடந்து செல்லும் மருத்துவர்"களை (Barefoot Doctors) அனுப்பியது ஆகிய அனைத்தையும் மறந்துதான் போனார்கள்.

மேலும், மக்கள் விடுதலைப் படையிலும் பல தீர் மானகரமான அடிப்படை மாற்றங்களைத் திரிபுவாதி கள் கொண்டு வந்துள்ளனர். பரந்துபட்ட மக்களின் ஆதரவையும், போர்வீரர்களின் உணர்வு பூர்வமான, உற்சாகமான பங்களிப்பையும் சார்ந்திருக்கும் தன்மை யையே மாற்றி விட்டு முதலாளித்துவக் கூலிப்படை

யாக ஆக்கியுள்ளனர். இப்புதிய மக்கள் விடுதலைப் படைதான் 1989-இல் தியனாமேன் சதுக்கத்தில் மக்கள் படுகொலையை நிறைவேற்றியது. நிலையான இராணுவத்தை ஒழிப்பதற்கு இன்னும் சில காலமாகும் (இதற்கான காரணங்கள் பின்பு விவாதிக்கப்படும்) என்ற நிலையிலும் கூட முன்பு இருந்த புரட்சிகரத் தலைமையின் கீழ் இராணுவத்தை பாட்டாளி வர்க்கப் பாதையில் வழிநடத்தப்படுகின்ற தாங்களே ஆயுதம் ஏந்தியிருக்கின்ற தன்மையாக மாற்றுவதற்கு நடந்த முயற்சிகள் அனைத்தும் திரிபுவாதிகளால் தலைகீழாக மாற்றப் பட்டுவிட்டன.[3]

இந்த உண்மைகளை அறிந்த எவராவது இவை சமுதாய அமைப்பில் உண்மையான அடிப்படை மாற்றங்கள் இல்லை என்று ஏற்றுக்கொள்வார்கள் என்றோ மக்கள் திரளுக்கு, குறிப்பாக தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இந்த வேறுபாடுகள் தெரியாதென்றோ, அல்லது அதன் முக்கியத்துவத்தை உணராதவர்கள் என்றோ, சி. ஆர். சி. ஆவணத்தை எழுதியவர்கள் உண்மையிலேயே எதிர்பார்க்கிறார்களா? அன்று சோசலிச சீனத்தில், பாட்டாளி வர்க்கத்தத்துவங்கள் அடிப்படை அமைப்பு முறைகளை நிர்ணயித்ததால் சாங்காய் துறைமுகத் தொழிலாளர்கள், 'சுமைகளின் அடிமைகளாகாதீர், சுமை மேடைகளின் சொந்தக்காரர் ஆகுங்கள்'' என்று முழக்கமிட்டார்களே! தொழிற்சாலையில் தொழிலாளர்கள் அலுவலக அறைக்குள் அணிவகுத்துச் சென்று நிர்வாக அதிகாரிகளிடம் ''உங்களது சம்மட்டிகள் எங்கே", "உற்பத்தி உழைப்பில் தொழிலாளர்களுடன் உங்களது பங்களிப்பு எங்கே'' என்று ஆர்த்தெழவில்லையா?

இவையெல்லாம் இன்றைய சீன நிலைமையிலிருந்து சாராம்சத்தில், அடிப்படையில் வேறுபட்டிருக்க

வில்லையா? பரந்துபட்ட தொழிலாளர்களுக்கு இவ் வேறுபாடுகள்தான் தெரியாமல் போய்விடுமா? கிராமப் புறங்களில் கூட்டுப்பண்ணைகள் உடைக்கப்பட்டு பணக்கார விவசாயிகள் ஊக்கு விக்கப்பட்டதும், நாட்டின் பொருளாதாரத் திட்டங்களில் விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டு வந்து முன்னுரிமை பறிக்கப்பட்டதும் "மக்கள் தொண்டே மகத்தானது" என்பதை மாற்றி "பணக்காரன் ஆதலே பாராட்டுக்குரியது" என்பது வழிகாட்டும் தத்துவமாக முன்வைக்கப்பட்டது, இவையெல்லாம் பின்னோக்கிச் செல்கின்ற சாராம்சமான மாற்றங்கள் இல்லையா? உழைக்கும் வர்க்க மக்கள் திறள் இவற்றைப் புரிந்து கொள்ளாமல் தான் இருக்க இயலுமா? இந்த சி. ஆர். சி. ஆவணத்தில் 'மக்கள்' என்று குறிப்பிடும் போதெல்லாம் அவர்கள் மிகவும் பின்தங்கிய, பண்டைய முதலாளித்துவ ஜனநாயக கருத்துக்களாலும் முதலாளித்துவ தத்துவங்களாலும் பெரிதும் கவரப்பட்டுள்ள அறிவுஜீவிகள், மற்ற சலுகை பெற்ற அடுக்கினரையே மனதில் நினைத்துக் கொண்டுள்ளனர் என்பதை மீண்டும் கூற விரும்புகிறோம்.

## பாரிஸ் கம்யூனைப் பற்றிய ஒரு நுண்ணோக்கு :

**போல்ஸ்விக் புரட்சியும், சீனப்புரட்சியும் அதன் தொடர்ச்சியும், விரிவாக்கமுமே!**

அடுத்ததாக, மார்க்சின் வரலாற்றுப் புகழ்மிக்க "பிரான்சில் உள்நாட்டுப் போர்" என்ற நூலில், நிலையான இராணுவத்தை தடை செய்துவிட்டு அங்கு மக்களே ஆயுதமேந்திய படையாகச் செயல்படுதல், கம்யூனின் அதிகாரிகள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப் படுதல், தேர்தல் மூலமே திருப்பி அழைக்கப்படுதல் ஆகியன பற்றிக் குறிப்பிட்டுள்ளதை சி.ஆர்சி. ஆவணம்

எவ்வாறு விமரிசனம் செய்கிறது என்று கவனிப்போம். ஆவணத்தில் இந்தப் பகுதி லெனினைப்பற்றி அவரது "அரசும் புரட்சியும்" நூலிலும் அக்டோபர் புரட்சிக்கு முன்பாகவும், சிறிது காலம் புரட்சிக்குப் பின்னும் கூட எழுதிய நூல்களிலும் கம்யூனின் மேற்கூறிய பண்புகளை உயர்த்திப் பிடிப்பதாகவும், ஆனால் பின்பு அவரே அதிலிருந்து விலகிச் செல்லத் தொடங்கினார் என்றும் குறிப்பிடுகிறது. (பார்க்க : பக் 2.1–66)

முதலாவதாக, இங்கே வரலாற்றைப்பற்றிய ஒரு முழுமையான பார்வை தேவைப்படுகிறது. பாரிஸ் கம்யூனால் நடைமுறைப்படுத்தப்பட்ட, மார்க்ஸால் மிகத் தீர்மானகரமானவை என்று கருதப்பட்ட சில கொள்கைகளை சோவியத்ரஷ்யாவிலும் (பொதுவாக அனைத்து சோசலிச நாடுகளிலும்) நடைமுறைப்படுத்த இயலவில்லை என்று வரலாறு காட்டுகிறது. அதிலும் குறிப்பாக சோவியத் குடியரசின் தொடக்க காலங்களில் இந்த இயலாமை மிக அதிகமாக இருந்தது. இதற்கு நாம் முன்பே கூறியது போல் இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக மார்க்சும் ஏங்கல்சும் முன்னறிவித்தபடி சோசலிசப் புரட்சி தொழிற்துறையில் முன்னேறிய முதலாளித்துவ நாட்டில் அதாவது மக்கள் தொகையில் பாட்டாளி வர்க்கத்தின் பெரும்பான்மையாக உள்ள அல்லது குறைத்தபட்சம் மற்ற வர்க்கங்களை விடப் பெரும்பான்மையாக உள்ள நாடுகளில் ஏற்பட வில்லை, மாறாக தொழில்துறையில் பின்தங்கிய, பாட்டாளிவர்க்கம் சிறுபான்மையாகவும், விவசாயிகளின் எண்ணிக்கை பேரளவிலும் உள்ள நாடுகளில் புரட்சி வெடித்தது.

இரண்டாவதாக, புரட்சிகள் பலநாடுகளில் ஒரே சமயத்தில் வெடித்தெழவில்லை. ஒவ்வொரு நாடாக தனித்தனியாக உருவாயின, மேலும் உலகம் முழுவதும்

ஏகாதிபத்தியம் மேலாண்மை வகிக்கின்ற சூழ்நிலையில் தான் சோசலிச நாடுகள் வாழ்ந்தன. (இரண்டாம் உலகப் போரின் பின் விளைவாக கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களை நாம் இங்கே கணக்கில் கொள்ளவில்லை. ஏனென்றால் அந்த நாடுகளில் சமுதாய உறவுகளில் மட்டுமே லேசான மாற்றம் ஏற்பட்டது; சோசலிசத்தை நோக்கிய முழுமையான மாற்றம் சமுதாயத்தில் உண்மையில் ஏற்படவே இல்லை.)

நிலையான ஆயுதப்படைக்குப் பதிலாக ஆயுத மேந்திய மக்கள் படையை உருவாக்குவது ஏன் இது வரையிலும் இயலவில்லை? எதிர்காலத்தில் கூட இன்னும் சிறிது காலத்திற்கு இது ஏன் இயலாமற்போகும்? ஏனென்றால், இதைச் செய்வதற்கு முதலாவதாக உற்பத்தி உறவிலும், பொதுவாக சமுதாய உறவுகளிலும் இன்னும் வளர்ச்சியடைந்த கட்டத்தை அடைய வேண்டும்; ஒரு சிறு பகுதியை மட்டும் அல்லாது அணைத்து மக்களையும் திரட்டுவது சாத்தியமாய் இருக்க வேண்டும். அவர்களை உள்நாட்டு எதிர்ப் புரட்சியாளர்களை மட்டுமல்லாது அதையும் தாண்டி மிஞ்சி இருக்கும் ஏகாதிபத்திய சக்திகளையும் பிற்போக்கு நாடுகளின் ஆயுதப் படைகளையும் சமாளிக்கின்ற தரத்திற்கு பயிற்சிகள் இயலுகின்ற சூழ்நிலை இருக்க வேண்டும். அந்நிலையை அடைந்த பின் மக்கள்திரளில் ஒரு பகுதியினரை, ஆயுதமேந்திய இராணுவ நடவடிக்கைகளையே முதன்மையாகக் கொண்ட சிறப்புப் பிரிவினராக ஆக்க வேண்டிய தேவை இல்லாமற்போகும். அப்பொழுதுதான் நிலையான ஆயுதப்படையை ஒழித்து ஆயுதமேந்திய மக்கள் படையை உருவாக்க முடியும். ஆனால் இதுவரை எந்த சோசலிச நாடும் இந்த நிலைக்கு அருகிலே வருமளவிற்குக்கூட வளர்ச்சியடையவில்லை.

பாரிஸ் கம்யூனைப்பற்றி எழுதும்பொழுது மார்க்சிற்கோ, அக்டோபர் புரட்சிக்கு சற்று முன்னதாக 'அரசும் புரட்சியும்' எழுதிக் கொண்டிருந்த லெனினுக்கோ தொகுத்து ஆய்வு செய்ய இந்த வரலாற்று அனுபவங்கள் இல்லை. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைப்பற்றி இந்நூற்கள் கூறும் அடிப்படைக் கருத்துக்களை உயர்த்திப் பிடிக்கின்ற அதே நேரத்தில், அவை குறிப்பான விஷயங்களைப் பற்றிய பல ஆய்வுகளில், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் ஒரு நாட்டிலே, அல்லது சில நாடுகளிலோ நிறுவப்பட்ட பின் சமுதாயத்தையும், உலகையும் கம்யூனிசத்தை நோக்கிய மாற்றத்திற்கு இட்டுச் செல்வதற்கான போராட்டத்தின் ஆழம், சிக்கல், (நீண்ட) காலம் ஆகியவற்றைப் போதுமான அளவு புரிந்து கொள்ளவில்லை. பாரீஸ் கம்யூன் இரண்டு மாதங்களே உயிர் வாழ்ந்தது. அதுவும் பிரெஞ்சு நாடு முழுமையிலும் அல்ல, சில முக்கிய பகுதிகளில் மட்டுமே இருந்தது. பாரிஸ் கம்யூனின் வரலாற்று ரீதியான எல்லையை, இன்னும் அழுத்தமாகச் சொல்வதனால் நான் எனது "ஜனநாயகம்-அதைவிடச் சிறப்பாக நம்மால் செய்ய முடியாதா" என்ற நூலில் எழுதியதையே திரும்பவும் குறிப்பிடலாம்.

1871-ஆம் ஆண்டில் நடந்த பாரிஸ் கம்யூன் பற்றிய மார்க்சின் ஆய்வுகளை விமரிசனம் செய்த ஜேம்ஸ் மில்லர் கூறியது கவனிக்கத் தக்கது.

"1871-ஆம் ஆண்டு எழுச்சியில் பங்கு பெற்றோருக்கும், 1792, 1830, 1848-ஆம் ஆண்டுகளில் எழுச்சி செய்தோருக்கும் வியப்படையுமளவில் ஒரு ஒற்றுமை உள்ளது. அனைத்திலும் பெருமளவு பங்கு பெற்றவர்கள் கை வினைஞர்கள், பட்டறை உதவியாளர்கள், பயிற்சி மாணவர்கள், சிறுவீத உற்பத்தியாளர்கள், வல்லுனர்கள் (மருத்துவர், பொறியாளர்) ஆகியோரே.

தொழிலாளர்கள் புதிய தொழிற்சாலைகளிலிருந்து வந்த வெகு சிலரே. மூன்று தலைமுறைகளுக்கு முன்னால் ரூசோவின் உதவியால் வரையறை செய்யப்பட்ட பிரெஞ்சு நாட்டு மக்கள் திரளின் அரசியல் பண்பாட்டின் கடைசிச் சுடராக 1871–ஆம் ஆண்டைய பாரிஸ் கம்யூன் திகழ்ந்ததாலும், நவீன வரலாற்று ஆய்வு முறைகளைக் கொண்டு அலசிப்பார்த்தால் அதனை சர்வதேசிய பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முன்னோடியாக ஏற்றுக் கொள்ள இயலாது. (மில்லர் எழுதிய 'ரூசோ'–பக்-260–61)

மில்லரின் முதலாளித்துவ சார்புத் தன்மையில் சர்வ தேசப் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் முன்னோடிப் பண்புகளை அவரால் 1871-ஆம் ஆண்டு பாரிஸ் கம்யூனில் காண இயலவில்லை. அவரது சில கூற்றுகள் ஒருதலைச் சார்புடையன, குறிப்பாக கடைசி வரிகள் தவறானவை. இருப்பினும் கூட அவரது சில கூற்றுகளில் உண்மையில்லாமல் போய்விடவில்லை. இந்த பாரிஸ் கம்யூனில்கூட பழைய முதலாளித்துவ புரட்சியின் கூறுகளும் புதிய பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கூறு களும் அடங்கியிருப்பதை இவரது கூற்று தெளிவாக்கு கிறது.

எனவே, முழுவளர்ச்சியடைந்த ஒரு பாட்டாளி வர்க்க அரசிற்கும் அதிலும் குறிப்பாக பெரும் பலம் வாய்ந்த ஏகாதிபத்தியங்களால் சூழப்பட்டுள்ள, சர்வ தேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஆரம்பக் கட்டத் தில் உள்ள ஒரு அரசிற்கு இது ஒரு முழுமையான மாதிரி யாகச் செயல்பட இயலாது. (அவேக்கியான் எழுதிய 'ஜனநாயகம்' பக் 38–39-அடிக்குறிப்பு 63)

மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாயினும், மிகக் குறுகிய கால அனுபவமான பாரிஸ் கம்யூனின், அடிப் படையில் மார்க்சும் (லெனினும் கூட, குறிப்பாக

அக்டோபர் புரட்சிக்கு முன்பு) முன்னறிவித்த கருத்துக்களுடன் அப்படியே ஒத்திருக்க வேண்டும் என்று நினைத்தாலும் இஷ்டத்திற்கு உண்மை நிலையை வளைக்க முயல்வது இயக்க மறுப்பியல் அணுகுமுறையாகும். அவ்வாறு செய்ய முயற்சித்தோமானால், அடுத்து பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்திலிருந்து ஒரே பாய்ச்சலில் நேரடியாக முழு வளர்ச்சியடைந்த கம்யூனிசத்திற்குத் தாவி விடவேண்டும். அதன் மூலம் சோஷலிசத்திற்கு மாறுகின்ற கட்டத்திலும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தினாலும் ஏற்படுகின்ற தொல்லைகளையெல்லாம் தவிர்த்து விடலாம் என்றும்கூடக் கூறத் தொடங்கிவிடுவோம். நாம் அழுத்தம் திருத்தமாகச் செய்ய வேண்டியதோ வேறொன்று ஆகும். புரட்சி நடந்த நாடுகளின் அரசுகள் பின் பற்றும் கொள்கைகளும், நடைமுறைகளும் பாரிஸ் கம்யூனின் அடிப்படையில் மார்க்ஸ் தொகுத்தளித்த அடிப்படைக் கருத்துக்களுடனும் திசை வழியுடனும் ஒத்திருக்கின்றனவா என்பதை அலசி ஆராய வேண்டும். இந்த சமுதாயத்தின் சாராம்சமான கருத்துக்கள், திசை வழிகள், கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் அனைத்தும் வர்க்கங்களற்ற சமுதாயத்தை உருவாக்குகின்ற அதன் மூலம் அரசையும் (கட்சியையும்) தேவையற்றதாக்குகின்ற ஒரு பொது வழிக்கு இட்டுச் செல்கின்றனவா என்ற முழுமையான பார்வை வேண்டும்-இந்த அடிப்படையில், "லெனின், ஸ்டாலின் தலைமைகளின் கீழ் சோவியத் ஒன்றியமும், மாவோவின் தலைமையின் கீழ் சீனமும் பாரிஸ் கம்யூனின் தொடர்ச்சியாகவே நிகழ்ந்தன என்ற மார்க்சிய-லெனினிய-மாவோயிச விளக்கத்தை நாங்கள் உறுதியாக உயர்த்திப் பிடிக்கின்றோம்.

லெனின் எதிர்பார்த்தவாறு பாட்டாளிவர்க்கப் புரட்சியின் வளர்ச்சி அமையவில்லை. இது ஏன் என்பதையும் கவனிக்க வேண்டும். அக்டோபர் புரட்சி நடந்து

ஓராண்டிற்குப்பின் லெனின் இவ்வாறு கூறினார்: "கடந்த புரட்சியின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், கடுமையான சூழ்நிலைகளிலும் மக்களை உறுதி குலையாமல் காப்பாற்றிய, பிரிவினை சக்திகளை ஈவிரக்கமின்றி ஒடுக்குவதற்கான சக்தியை அளித்த மக்களின் ஆர்வம் நீண்டகாலம் நிலைத்திருக்கவில்லை. இவ்வாறு மக்களின் புரட்சிகர ஆர்வம் உறுதியற்ற தன்மை கொண்டிருப்பதற்கு சமூக(வர்க்க) ரீதியான காரணம் பாட்டாளி வர்க்கத்தின் பலவீனமே. பாட்டாளி வர்க்கத்தால், (அது பெருந்திரளாக, வர்க்க உணர்வும் கட்டுப்பாடும் உள்ளதாக இருக்கும்பொழுது) மட்டுமே மக்களில் சுரண்டப்படுகின்ற, தொழிலாளர் பிரிவினரில் (எளிமையாகச் சொன்னால் ஏழைகளில்) பெரும்பான்மையினரைத் தம்பக்கம் வென்றெடுக்க முடியும். பிரிவினை சக்திகளையும், சுரண்டலாளர்கள் அனைவரையும் முழுமையாக ஒடுக்கும்வரை, நீண்ட காலத்திற்கு, அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

அனைத்துப் புரட்சிகளும் உணர்த்தும் இந்த வரலாற்று அனுபவத்தை, உலக-வரலாற்று – பொருளாதார-அரசியல்–பாடத்தின் சாரத்தைத்தான் மார்க்ஸ் சுருக்கமாக, தெளிவாக, நறுக்குத் தெறித்தாற் போல "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்" என்ற சூத்திரத்தில் அடக்கியுள்ளார். (சோவியத் அரசின் உடனடிக் கடமைகள், லெனின் தொகுப்பு நூல்கள், தொகுதி 27, பக் 264-65) இங்கே லெனின், பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட்ட புரட்சியுடன், பாட்டாளி வர்க்கம் தலைமையைக் கைப்பற்ற முடியாமல், முதலாளித்துவத்தைத் தூக்கி எறிய இயலாமல் போன முந்தைய புரட்சிகளை ஒப்பிடுகிறார். ஆனால் சில முக்கிய பண்புகளில், மக்களின் புரட்சிகரஆர்வத்தைத் தக்கவைத்துக்கொள்வதில் உள்ள கஷ்டங்களைப் பற்றிக் குறிப்பிடுவன, 'ஓரளவு

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குமேகூடப் பொருந்து கின்றன.

இன்றுவரை நடந்தேறியுள்ள பாட்டாளிவர்க்க புரட்சிகளின் உண்மையான வரலாற்றில் இதன் காரணங்களைக் கண்டறியலாம். 1920-இல் தனது வாழ்வின் இறுதி ஆண்டுகளில் சோவியத் புரட்சி கொஞ்ச காலத்திற்கு, தனியாகவே பயணம் செய்ய வேண்டியிருக்கும் என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டார். மார்க்சும், ஏங்கெல்சும் மட்டுமல்ல அக்டோபர் புரட்சிக்கு முன்பாக (சிறிது காலம் புரட்சிக்குப் பின்பும்கூட) லெனினும் முன்னறிவித்ததை விட, முதலாளித்துவத்திலிருந்து, கம்யூனிசத்திற்கான மாற்றம் மிக நீண்ட காலம் பிடிப்பதாயும், சிக்கல்களும் வேதனைகளும் நிறைந்ததாயும் உள்ளது.

இவை அனைத்திற்கும் அடிப்படையாய் இருப்பது சோசலிசத்தின் கீழ் நடக்கும் வர்க்கப்போராட்டம் (குறிப்பாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பாதுகாப்பதற்கும், அந்த சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும்) அலைகளின் தன்மையைப் பெற்றிருப்பதே.

மக்கள் திரளின் புரட்சிகர சக்தியையும் உற்சாகத்தையும் தக்க வைத்துக் கொள்வது பற்றிய லெனினின் கூற்றைக் கீழ்கண்டவாறு காணலாம்: வரலாறு காட்டுவது என்ன? சோசலிசத்திற்கு மாறுகின்ற காலமும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் எதிர்பார்த்ததைவிட, நீண்டகாலம் நீடிக்கின்றன. முதலில் வெடித்த சோசலிசப் புரட்சியைத் தொடர்ந்து தொழில் நுட்பத்தில் முன்னேறிய நாடுகளில் உடனடியாகப் புரட்சிகள் தோன்றவில்லை. சோசலிச நாடுகளோ ஏகாதிபத்தியத்தால் சூழப்பட்டுள்ள நிலையிலேயே இருக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் மக்கள் திரள் புரட்சிகர ஆர்வத்தையும், சக்தியையும் மிக உயர்ந்த துடிப்பான நிலையில் தொடர்ந்து வைத்திருக்க இயலும் என எதிர்பார்ப்பது இயற்கைக்கு மாறானதாகும். உண்மை நிலையும் அவ்வாறு இல்லை. அவ்வாறு வைத்திருக்க இயலும் என்ற எதிர்பார்ப்பு உண்மை அனுபவத்தோடும் இயக்க இயலோடும்கூட முரண்பட்டுள்ளது.

உலகம் முழுவதும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு நடைபெறும் மாற்றம் இவ்வாறு முரண்பாடுகளை உள்ளடக்கி இருப்பதால் சோசலிசத்தின் கீழ் சமுதாயத்தின் ஆட்சியாளர்களாகவும், உற்பத்திச் சாதனங்களின் உரிமையாளர்களாகவும் மக்கள் திரள் ஆற்றும் பங்கு உண்மையானது. ஆனால் அறுதியானதல்ல. அது ஒப்பீட்டளவிலானது, கூர்மையான முரண்பாடுகளை உடையது. சமுதாயத்தின் அனைத்துத் துறைகளிலும். தலையிடுவதன் மூலம் நேரடியாகவும், நிறுவனங்களின் மூலமாக குறிப்பாக அரசு, முன்னோடியாக-வளரும் கட்சி, ஆகியவற்றின் மூலமாக மறைமுகமாகவும் வெளிப்படுகிறது.

வெறும் சம்பிரதாய அணுகுமுறையோ, சம்பிரதாய ஜனநாயகமே இவ்விஷயத்தின் சாராம்சம் என்ற பிடிவாதமோ இந்த முரண்பாடுகளைத் தீர்க்கவோ, ஏன் புரிந்து கொள்ளவோகூட உதவாது. அவ்வாறான ஒரு அணுகுமுறையை வலியுறுத்துவது உண்மையில் முதலாளித்துவ ஜனநாயகக் கோட்பாடுகளின்படி நடந்து கொள்வதாகும். சம்பிரதாய ஜனநாயகக் கோட்பாடுகளுடன், அனைத்து முக்கிய அம்சங்களிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒத்திருக்கவில்லை என்பதால் இது யாருடைய நலனுக்காக நடத்தப்படுகிறதோ அவர்களுக்கே எதிரானதாகும் என்று வாதிட்டு, பாட்

டாளிவர்க்க சர்வாதிகாரத்தைக் குழிதோண்டிப் புதைக்க முயலும். முதலாளித்துவவாதிகளின் நலனுக்காகச் செயல்படுவதாகும்.

இதன் முக்கிய அம்சங்களை விரிவாக ஆய்வோம். இந்த ஆவணம் கூறுகிறது, "அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் 1917ஆம் ஆண்டு அக்டோபர் 25-26 தேதிகளில் நடந்த அனைத்து ரசிய தொழிலாளர் மற்றும் சோவியத்துக்கள் படைவீரர் பிரதிநிதிகளின் இரண்டாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது" (பத்தி 5-2).

ஆனால் நாம் இங்கே முக்கியமாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். போல்ஷிவிக்குகள் இந்த மாநாட் டின் தீர்மானத்திற்காகக் காத்துக் கொண்டிருக்க வில்லை. அதற்கு முன்பாகவே அதிகாரத்தைப் பிடிப் பதற்கான ஆயுதப்போராட்டத்தைத் தொடங்கி விட்ட னர். தலைநகரான பெட்ரோகிரேடில் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்தது. பெட்ரோகிரேட்சோவியத் முழு வெற்றியடைந்து அதிகாரத்தையும் கைப்பற்றி விட்ட பிறகு இந்த அனைத்து - ரசிய மாநாடு கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் அறிவிக்கப்பட்ட பின்பே ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையெடுத்து ட்ராட்ஸ்கி போன்றோர் இதை எதிர்த்த னர். இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து நோக்கி னால் நாம் முன்பே கூறியபடி, சி.ஆர்.சி. ஆவணம் வலியுறுத்தும் சம்பிரதாய ஜனநாயகம் தர்க்க ரீதியாக இறுதியில் போல்ஷிவிக் தலைமையில் நடந்த ஆயுதப் போராட்டமே ஜனநாயகத்திற்கு முரணானது ஏனென் றால் அது அதிகாரத்தைப் பிடிப்பதற்கான போராட்டத் திற்கு மக்களை அதாவது மக்களின் பிரதிநிதித்துவ நிறுவனங்களைச் சார்ந்து இருக்கவில்லை என்ற முடி விற்கே இட்டுச் செல்லும் - அந்த நேரத்தில் டிராட்ஸ்கி

கூறிய கருத்துக்களுடன் இது மிக இசைவாக உள்ளது. இந்தக் கருத்துக்களை அன்று ஏற்றுக் கொண்டிருந் தால் நிச்சயமாக ஆயுதப்போராட்டம் தோல்வி அடைந்திருக்கும் .பிறகு அக்டோபர் புரட்சியும் நிகழ்ந் திருக்காது. அதைப்பற்றி வாதிட வேண்டிய அவசிய மும் நேர்ந்திருக்காது.

புரட்சியின் மூலம் சோவியத்துக்களிடம் குவிந்த அதிகாரங்கள் உண்மையில் பெரும்பான்மை மக்களின் அரசியல் விருப்பங்களையே பிரதிநிதித்துவப்படுத்தின என்பதால் சட்டமன்றத்திலிருந்து போல்ஷிவிக்குகள் விலக முடிவு செய்தது நியாயமானதே என்று சி.ஆர்.சி. ஆவணம் ஏற்றுக் கொள்கிறது. போல்ஷிவிக்குகளின் முன்முயற்சியால், அனைத்து ரசிய சோவியத்துக்களின் மையக்குழுவின் தீர்மானத்தின் மூலமாக அன்று சட்ட மன்றம் கலைக்கப்பட்டதையும் சி.ஆர்.சி. ஆவணம் ஏற்றுக்கொள்வதைக் காண முடிகிறது (பத்தி 5.4.)

கவனமாகப் பாருங்கள், "உண்மையில் பெரும் பான்மை மக்களின் அரசியல் விருப்பங்களையே பிரதி நிதித்துவப் படுத்தின" இது சரியானதே. மேலும், நாம் முன்பே வலியுறுத்தியது போல், இந்தக் கருத்து ஆயுதப் போராட்டத்திற்கும் அது அனைத்து ரசிய சோவியத் தினால் முறைப்படி அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றாலும், பெரும்பான்மை மக்களின் ஒப்புதலை அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்களின் மூலமாக முறைப்படி பெற்றிருக்கவில்லை என்றாலும் கூடப் பொருந்துகின்றன.

உண்மையில் எந்த ஒன்றும் மக்கள் திரளின் நலனுக்கு உகந்ததா என்று மட்டும் பாராமல், அவர் களின் அரசியல் விருப்பத்தையும் அது பிரதிபலிக் கின்றதா என்பதையும் கணக்கில் எடுத்துக் கொள்வதே

சாராம்சமான விஷயமாகும். இதுவே சம்பிரதாய ஜன நாயகத்தை விடத் தீர்மானகரமானதாகும். ஆனால், குறிப்பாக இந்த வரையறையைத்தான் சி.ஆர்.சி ஆவணம் மறந்து விடுகிறது. கம்யூனிச இயக்கத்தின் முழுவரலாற்றையும், இதுவரை நாம் உயர்த்திப் பிடித்து வந்த அடிப்படைக் கண்ணோட்டங்களையும் ஒட்டு மொத்தமாக ஆராய்வதற்குப் பதில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தை மட்டும் தனியே பிரித்து ஆராய்கிறது. அந்த ஆய்வும், நாம் மேலே கூறிய வரையறையை உதறி எறிந்துவிட்டு அதற்குப் பதிலாக சம்பிரதாய ஜனநாயகத்தின் வரை யறைகளை அடிப்படையாய்க் கொண்டுள்ளது.

அந்த ஆவணம் கூறுகிறது, "அங்கே நடந்து கொண்டிருந்தது என்னவென்றால்?...புதிய அரசியல் அமைப்பு படிப்படியாக கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப் பாட்டின் கீழ் வந்துகொண்டிருந்தது" (பத்தி 5). இங்கு தான் 'கட்சி சர்வாதிகாரம்' பற்றிய வாதங்கள் முழு வளர்ச்சியடைகின்றன. மேலும் அது இவ்வாறு குறிப்பிடுகிறது. "கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கை லெனின் இவ்வாறு தெளிவாகக் குறிப்பிடுகிறார்." இரண் டரை ஆண்டு சோவியத் அதிகாரத்திற்குப் பின் நாங்கள் கம்யூனிஸ்ட் அகிலத்தின் முன்பாக வந்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமாகவே இயங்க முடியும் என்று அறிவித்தோம். "இப்போது வட்டம் முழுமை அடைகிறது." அனைத்து அதிகாரங் களும் சோவியத்துக்களுக்கே என்ற கவர்ச்சிகரமான முழக்கத்துடன் தொடங்கிய பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை நிறுவுவதற்கான செயல் திட்டம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் கம்யூனிஸ்ட் கட்சியின் மூலமாக செயல்படுகின்ற உண்மை நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. சோவியத்துக்களோ, இந்த எந்திரத்தின் வெறும் பற்சக்கரங்கள் ஆகிவிட்டன.

உண்மையான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட பண்புரீதியான மாறுபட்ட, புதிய அரசியல் அமைப்பு தோன்றி வரலாற்று உண்மையாகாத இன்றைய உலகச் சூழ்நிலையில், உண்மையில் ஆட்சி செய்வது வர்க்கங்களல்ல, அவற்றின் கட்சிகளே. காவுட்ஸ்கியின் திறனாய்வுகள் முதலாளித்துவப் பாராளுமன்ற வாதங்களின் திசையிலிருந்து வந்தாலும்கூட உண்மை அதுவே. (பத்தி 5.8)

இங்கே ஏராளமான முடிவுகளும் சிதைவுகளும் செய்யப்பட்டுள்ளன. இவை அடிப்படையான வினாக்களைத் தொடுப்பதால் ஆழமான ஆய்வு செய்வது அவசியமாகிறது. முதலாவதாக, பார்ப்பதற்கு சாதுவாகத் தோற்றமளிக்கும் "காவுட்ஸ்கியின் திறனாய்வுகள் முதலாளித்துவப் பாராளுமன்ற வாதங்களின் திசையிலிருந்து வந்தாலும் கூட" என்பதே இங்கு மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. லெனின் காலத்திலிருந்து போல்ஷ்விக் தலைமையில் செயல்படுத்தப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்க்கும் காவுட்ஸ்கியின் கருத்துக்கள் அனைத்திற்கும் முதலாளித்துவப் பாராளுமன்ற வாதமே அடிப்படையாக இருந்தது. இது போன்ற பாராளுமன்ற வாதங்களே காவுட்ஸ்கி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் திரிப்பதற்கும், எதிர்ப்பதற்கும் காரணங்களாயிருந்தன. அவையே இன்று இந்த ஆவணம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் ஒட்டுமொத்த வரலாற்றையும், தவறாகப் புரிந்து கொள்வதற்கும், திரிப்பதற்கும் இறுதியாக உதறித் தள்ளுவதற்கும் அடிப்படைக் காரணங்களாயுள்ளன. உண்மையில் இந்த ஆவணம் வெளிப்படையாக முழுமையாக காவுட்ஸ்கியை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், ஆவணம் முழுவதும் காவுட்ஸ்கிய சிந்தனைகளே பிரதிபலிக்கின்றன.

இந்தப் போக்கை, சி.ஆர்.சி ஆவணத்தின் இந்தப் பகுதியில் லெனின், ஸ்டாலின், ஆகியோரது மேற்கோள் களைச் சிதைத்து, குறுக்கிப் பயன்படுத்துவதிலிருந்தே தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். முதலாவதாக கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடிப் பங்கு இல்லாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இயங்காது என்ற லெனினது வெளிப்படையான முக்கியமான அறிவிப்பை இந்த ஆவணம் எவ்வாறு கையாண்டுள்ளது என்பதைக் காணலாம்.

இந்த ஆவணம் எடுத்தாண்டுள்ள லெனினது மேற்கோள் கொடுக்கப்பட்டுள்ள அதே புத்தகத்தின் அதே பக்கத்தில் லெனின் வேறொன்றையும் தெளிவு படுத்துகிறார். "அதற்காக பாட்டாளி வர்க்கத்திற்குப் பதிலாக கட்சி,சர்வாதிகாரத்தைச் செலுத்துகிறதென்றோ, சர்வாதிகாரத்தைச் செலுத்துவதில் கட்சி, பாட்டாளி வர்க்கத்திடமிருந்து விலகி நிற்கிறதென்றோ பொருளல்ல" அவர் மேலும், பாட்டாளி வர்க்கம்தான் சர்வாதி காரத்தைச் செலுத்துகிறது. ஆனால் கட்சியின் தலைமை இல்லாமல் அதனால் செயல்படுத்த இயலாது என்பதையும் தெளிவுபடுத்துகிறார். (பார்க்க ; 1921, மார்ச் மாத பத்தாவது கட்சி மாநாட்டில் லெனினது சொற் பொழிவுகள் தொகுப்பு நூல்-தொகுதி-32, பக்கம் 199.) இந்நூலின் அதே பக்கத்திலும், பின்பு நூல் முழுமை யிலும் லெனின் கீழ்வரும் கருத்துக்களை வலியுறுத்து கிறார். கட்சித் தலைமைக்கும், பாட்டாளி வர்க்க மக்கள் திரள் சர்வாதிகாரம் செலுத்துவதற்கும் இடையே நிலவும் ஒற்றுமையைத் காண மறுப்பது அராஜகப் போக்காகும். நீண்ட உள்நாட்டுப் போரின் விளை வாகப் பல தொழிலாளர்களின் வர்க்க நிலையும், கண்ணோட்டமும் சிதைவடைந்தன; கூட்டம் கூட்ட மாக விவசாயிகள் நாசமடைந்தனர்; தொழிலாளர்களுக் கும் விவசாயிகளுக்கும், நகரங்களுக்கும் கிராமப்புறங்

களுக்குமான பொருளாதார உறவு அன்று புதுப்பிக்கப்பட்டு உறுதியான புதிய வழிகளில் நிறுவப்பட்டிருக்கவில்லை. பொருளாதாரம் பேரளவில் சிதைவுற்று, நலிவுற்று இருந்தது. இத்தகைய சூழ்நிலையால், சிந்தனையில் குட்டி முதலாளித்துவக் கருத்துக்கள் தோன்றின. இந்த அடிப்படையிலேயே, சரியாகச் சொன்னால் அதனால் தங்களது சிந்தனைகளும் பெரும் அளவில் பாதிக்கப்பட்டதாலேயே, கட்சி சர்வாதிகாரம் பற்றிய கண்டனங்கள் எழுந்தன. அன்று லெனின் தனது விமர்சகர்களுக்குக் கூறிய இந்தப்பதில், இன்று சுமார் 70 ஆண்டுகளுக்குப் பிறகு சி.ஆர்.சி. ஆவணத்தின் ஆசிரியர்களுக்கு மிகச்சரியான பதிலாக நிற்கிறது!!

"சோவியத்துக்களோ இந்த எந்திரத்தின் வெறும் பற்சக்கரங்கள் ஆகிவிட்டன" என்ற வரிகளை எடுத்துக்கொண்டால் "வெறும்" என்ற சொல்லை இங்கே சேர்த்துவிட்டதன் மூலம் ஏதோ மிக ஆழமான கருத்தைக் கூறிவிட்டதாக சி.ஆர்.சி ஆவண ஆசிரியர்கள் நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் இதில் "வெறும்" எதுவும் இல்லை என்று லெனின் விளக்குகிறார். "ஒரு புறம் பாட்டாளி வர்க்கத்தில் உள்ள முன்னோடிகளைக் கட்சி ஈர்த்துக் கொள்கிறது, இந்த முன்னோடிகளே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துகின்றனர். 'அதே சமயம்' அரசின் கடமைகள் சிறப்பு நிறுவனங்களின் மூலமாகவே நிறைவேற்றப்பட இயலும். இந்தச் சிறப்புத்திறன் வாய்ந்த, புதுமாதிரியான நிறுவனங்களே சோவியத்துக்கள்" (தொழிற்சங்கங்கள் இன்றைய சூழ்நிலை மற்றும் ட்ராட்ஸ்கியின் தவறுகள் - லெனின் தொகுப்பு நூல்கள், தொகுதி 32, பக்கம்–20) இந்த ஆவணத்தின் ஆசிரியர்கள் லெனினது இந்த மேற்கோளைக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால்அதன் முக்கியத்துவத்தைதான் புரிந்து கொள்ள தவறிவிட்டனர். பாவம் தங்களது பற்சக்கர உவமையைத் தாங்களே வியந்து

மயங்கி லெனின் கூற்றில் உள்ள சாராம்சங்களைக் கோட்டை விட்டு விட்டனர். லெனின் கூறியது என்ன? அரசின் பணிகளை சோவியத்துக்கள் ஆற்றுகின்றன. சோவியத்துக்கள் "சிறப்பு நிறுவனங்கள்" "புது மாதிரியானவை" (அவை முதலாளித்துவ சமுதாயத்திலிருக்கும் பழைய மாதிரியானவை அல்ல. இவை அரசு அதிகாரத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அடிப்படையிலேயே மாறுபட்ட, புதிய தன்மைகளை உடைய அமைப்புக்களாகும். அரசு அதிகாரத்தைச் செயல்படுத்துகின்ற பணியை நிறைவேற்றுகின்றன). இதன் வரலாற்று முக்கியத்துவத்தை எவ்வாறு எந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், உணராமல் இருக்க இயலுகிறது?

மேலும் லெனின் வெளிப்படையாகவே கூறுகிறார். "அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் (அதாவது மிகப் பின்தங்கிய இந்த நாட்டில் மட்டுமல்ல) பாட்டாளி வர்க்கம் இன்னும் மிகமிக பிளவுபட்டு, தரம் தாழ்ந்து, (பல நாடுகளில் ஏகாதிபத்தியத்தின் காரணமாக) கெட்டுப் போயுள்ளனர். இவர்களை முழுமையாக ஆட்கொள்ளும் ஒரு அமைப்பால் (இங்கு லெனின் குறிப்பாக தொழிற்சங்கங்களைக் கூறுகிறார்.) பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நேரடியாகச் செலுத்த இயலாது. வர்க்கத்தின் புரட்சிகர சக்தியை முழுமையாகத் தன்பால் கொண்டுள்ள ஒரு முன்னோடியாலேயே செலுத்த இயலும். (பக்கம்-21) பிறகு லெனின் இப்பொழுது கண்டனத்திற்கு ஆளாகியுள்ள வரிகளைக் கூறுகிறார்." ஒட்டு மொத்தமாக இது ஒரு பற்சக்கரங்களால் ஆன தொடர் அமைப்புப் போன்றது. பல்வேறு இணைப்புவார்கள் இல்லாமல் இது இயங்காது: முன்னோடிக்கும், முன்னேறிய வர்க்கத் திரளுக்கும், அவர்

களிடமிருந்து உழைக்கும் வர்க்க மக்கள் திரளுக்கும் இணைப்புவார்கள் செல்ல வேண்டும்.

நமது கேள்வி, இதில் தவறு என்ன கண்டார்கள் என்பதே? மக்கள் திரளுக்குப் பதிலாகக் கட்சியே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் அரசின் பணிகளையும் நடத்துகிறது என்ற கருத்தோட்டம் இதில் எங்காவது உள்ளதா? இதில் எழுப்பக் கூடிய ஒரே மறுப்பு, கட்சியின் முன்னோடிப் பங்கை லெனின் வலியுறுத்துகிறார் என்பதே? சி.ஆர்.சி ஆவணமும் இந்த மறுப்பை எழுப்பியுள்ளது. தாராளமாக, உங்கள் விருப்பம் போல், மறுப்பு எழுப்புங்கள். முதலாளித்துவ வாதிகளும், பல்வேறு மென்ஷிவிக்குகளும், சமூக-ஜன நாயக வாதிகளும், மற்றவர்களும் லெனின் காலத்தி லிருந்தே கடுமையாக மறுத்துத்தான் வருகிறார்கள் ஆனால் தம்மைக் கம்யூனிஸ்ட் என்றும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கொள்கை அளவில் உயர்த்திப் பிடிப்பதாகவும் கூறிக் கொள்ளும் எவரும், எவ்வாறு கட்சியின் முன்னோடிப் பங்கு இல்லாமல், அதாவது நிறுவனமயமாக்கப்பட்ட கட்சியின் முன்னோடிப் பங்கு இல்லாமல், மக்கள் திரள், பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தைச் செலுத்தி, முதலாளித்துவ மீட்சி ஏற்படாமல் தடுக்க முடியும் என்பதைக் கட்டாயமாக விளக்க வேண்டும். முன்னோடிப் பங்கைச் சொல்லளவில் ஏற்றுக் கொண்டு ஆனால் அது நிறுவனமயமாக்கப் பட்ட முன்னோடிப் பங்காக இருக்கக் கூடாது என்பது உண்மையில் இந்த முன்னோடிப் பங்கை மறுப்பதிலேயே சென்று முடியும். சோசலிசத்தின் கீழ், கட்சியின் நிறு வனமாக்கப்பட்ட முன்னோடிப் பங்கு இல்லாமல் இருப்பதே மக்களுக்கு நல்லது என்பதைத்தான் சி.ஆர்.சி ஆவணம் குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறது. ஆனால் நாம் மேலே கேட்டுள்ள கேள்விகளுக்கு விடை அளிப்பதில் ஆவணம் எத்தனை பரிதாபகர

மானத் தோல்வி அடைகிறது என்பதை இனிக் காண் போம்.

சோவியத்துக்களுக்கும் (மற்ற மக்கள்திரள் அமைப்பு களுக்கும்) கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள உறவை, விரிவாக வரலாற்று ரீதியாகப் புரிந்து கொள்வதற்கு நாம் அதைச் சுற்றியுள்ள சில மாயத்திரைகளை விலக்க வேண்டும். முதலாவதாக, ஒரு ஆழ்ந்த பொருளில் 'சோவியத்துக்கள்' மக்கள் திரளால் உருவாக்கப் பட்டவையே என்பது உண்மை ஆயினும், அவை குறை களே அற்றவை என்றோ, திடீரென்று உருவானவை என்றோ கருதி விடக்கூடாது. வர்க்கப் போராட்டத் தால் உருவானவையே சோவியத்துக்கள். இதில் போல்ஷிவிக்குகள், மென்ஷிவிக்குகள், மற்றும் பலரது கருத்துக்களும் மக்களிடம் செல்வாக்குச் செலுத்தின. சோவியத்துக்களுக்கு உள்ளே, அவற்றின் தொடக்கத்தி லிருந்தே இவ்வாறான பல்வேறு போக்குகளை ஆதரிக் கும் குழுக்களிடையே கடுமையான போராட்டங்கள் நடந்தன போக்குகள் படிப்படியாக பல்வேறு வர்க்க நலன்களைப் பிரதிபலிக்கத் தொடங்கின. இந்தப் போராட்டங்களில் தனி கவனம் செலுத்துவதே சோவியத்துக்களின் மெய்யான அரசியல் பணியாயின. எளிமையாகச் சொல்வதானால், சோவியத்துக்களை, மக்களை ஒன்று திரட்டி, பழைய அமைப்பைத் தூக்கி எறிந்து, பழைய அரசு எந்திரத்தை உடைத்து நொறுக்கி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவு வதற்கான ஒரு கருவியாகவே போல்ஷிவிக்குகள் கரு தினர்.

மென்ஷிவிக்குகளும் மற்றவர்களும் இதை எதிர்த் தனர். அவர்களது சோவியத்துக்களைப் பற்றிய கணிப்புகள் குட்டி முதலாளித்துவ சிந்தனையை அடிப் படையாய்க் கொண்டிருந்தன. அவர்களது செல்வாக்கு

சோவியத்துக்களில் ஓங்கிபிருக்கும் பொழுதெல்லாம், ஓங்கியிருக்கும் அளவிற்கு, அரசு அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் கைப்பற்றித் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு எதிராக, சமூக-ஜனநாயக மற்றும் அராஜகத் திசை வழியில் செல்லும் மக்கள் திரள் அமைப்புக்களாகச் சோவியத்துக்களை மாற்றினர். அக்டோபர் புரட்சிக்கு முன்பும், புரட்சியின் பொழுதும் இந்தப் போராட்டங்கள் சோவியத்துக்களுக்குள் நடந்து கொண்டே இருந்தன. அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பும்கூட வேறு வடிவங்களில் இப்போராட்டங்கள் தொடர்ந்தன.

அதிகாரத்தைக் கைப்பற்றிய கொஞ்ச நாட்களிலேயே, சோவியத்துக்களின் பணிகளும் அவற்றுக்கும், கட்சிக்கும் உள்ள உறவும் சரி செய்யப்பட வேண்டியிருந்ததை லெனின் ஏற்றுக் கொண்டது உண்மையே. ஆனால் அந்தக் கால கட்டத்தின் திட்டமான சூழ்நிலைகளுடனும், முழுமையான வரலாற்றுப் பின்னணியிலும் இதனைக் காணவேண்டும். முன்பே கூறியது போல் அது கடுமையான உள்நாட்டுப் போரின் கால கட்டமாகும். போரில் வெற்றியடைந்திருந்தாலும் கூட இழப்புக்கள் ஏராளம். அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அனைத்தும் பிரம்மாண்டமான அளவில் உடைந்து, இடம் மாறி சிதைந்து நொறுங்கிக் கொண்டிருந்தன. ஓர் இரவிற்குள்ளேயே கூட படைப் பிரிவுகளை உருவாக்கித் தீர்மானகரமான போர்க்களங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய நிலையில் செம்படை இருந்தது. இத்தகைய சூழலால், சோவியத்துக்களில் இருந்த பெரும்பாலான முன்னோடிச் சக்திகள் செம்படையில் தலைமைப் பொறுப்புக்களை ஏற்க ஓடிவந்தனர். மற்றவர்களும் எதிர்பாராத சிக்கல்கள் வெடித்தெழும் இடங்களுக்கெல்லாம் சிக்கல் தீர்ப்பவர்களாக, உணவுப் பங்

கீட்டைச் சமாளிக்க, தொழிற்சாலைகளை நிர்வகிக்க, ஆட்சியைக் கட்டி அமைக்க என்று வேறு வகையான ஆனால் இணையான முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களைச் சந்திக்கச் சென்றனர். உண்மையில் உள்நாட்டு போரின் இறுதியில், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், படைவீரர்களும், மாலுமிகளும் மிக முக்கிய நிர்வாகப் பொறுப்புக்களில் இருந்தனர். (பின்பு ஸ்டாலினது தலைமையின் கீழ் கூட்டுறவுப் பண்ணைகள், தொழில் மயப்படுத்துதல் ஆகிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பொழுதும் இவ்வாறே மக்கள் திரளில் முன்னோடிகளை நிர்வாகப் பொறுப்புகளுக்கு இழுத்துக் கொள்ளும் கொள்கை தொடர்ந்தது.) ஆனால், இவற்றின் விளைவாக பாட்டாளி வர்க்கத்தின் மிகச்சிறந்த, தொலை நோக்குடைய பல தலைவர்கள் சோவியத்துக்களில் இயங்குவதற்குப் பதிலாக மற்ற நிறுவனங்களில் நியமிக்கப்பட்டனர். இதன் விளைவாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நடத்துவதில் குறிப்பாக, கட்சி உள்பட, பல்வேறு நிறுவனங்களுக்கும், சோவியத்துக்களுக்கும் இருந்த செல்வாக்கு நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதில் கட்சிக்கு உள்ள முன்னோடிப் பங்கைக் குறிப்பிடும் பொதுவான அறிக்கையிலும் மிகவும் கடுமையான கண்டனத்திற்கு உள்ளாயிருக்கும் அவரது பற்சக்கரங்கள், இணைப்பு வார்கள் உவமையிலும் லெனின் வலியுறுத்துவது இதைத்தான்; முறைப்படுத்தப்பட்ட (நிறுவனமயமாக்கப்பட்ட) கட்சியின் தலைமை இல்லாமல் சோவியத்துக்கள் (மற்ற நிறுவனங்கள், மக்கள் திரள் அமைப்புக்கள்) பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைத் தாமே, தனியாக நடைமுறைப்படுத்த இயலாது. இது உண்மையில் அந்த முக்கிய காலகட்டத்தின் உண்மை அனுபவங்களைத் தொகுத்துக் கூறுவதே ஆகும். அரசுப்

பணிகளை ஆற்றும் பொறுப்பு தொடர்ந்து சோவியத்துக்களிடமே இருக்கும் என்பதையும் லெனின் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சோவியத்துக்களின் (மற்ற நிறுவனங்களின், மக்கள் திரள் அமைப்புக்களின்) இடத்தைக் கட்சி நிரப்பிவிடும் என்றோ, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் தீர்மானகரமான சக்தி மக்கள் திரள் அல்ல தலைவர்களே என்றோ லெனின் ஒருபோதும் குறிப்பிடவில்லை. 4

மார்க்ஸ் மிகவும் தீர்மானகரமானதென்று கருதப்பட்ட பாரிஸ் கம்யூனின் மற்றொரு கொள்கையையும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்வது அவசியம். அது தலைவர்களை 'மாற்றுதல்' அல்லது "திருப்பி அழைத்துக் கொள்ளல்" பற்றியதாகும். பாரிஸ் கம்யூனின் அதிகாரிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எந்த நேரமும் மக்கள் அவர்களைப் பதவியிலிருந்து திரும்ப அழைத்துக் கொள்ளலாம். பாரிஸ் கம்யூனின் அனுபவத்தின் அடிப்படையில் மக்கள் கூறிய பொருளில் இந்தக் கொள்கையை நடைமுறைப் படுத்துதல் இயலாத காரியமென்று பாட்டாளி வர்க்க சர்வாதிகார வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

முதலில் ஒன்றைத் தெள்ளத் தெளிவாகக் கூறி விடுவோம், சமுதாயச் சூழல்கள் (முரண்பாடுகள்) காரணமாக ஒரு சிலரை, மற்றவர்களைப் போல், அத்தனை சுலபமாக மாற்றி வேறு ஒருவரைக் கொண்டுவர முடியாமல் போகும் பொழுது தலைவர்களை மாற்றும் உரிமையை மக்கள் திரள் பெறுவது விஷயத்தின் சாரத்திலிருந்து விலகிச்செல்வதாகும். மிகக் கடுமையான ஒரு எடுத்துக்காட்டைக் காண்போம். மாவோவைப் பதவியிலிருந்து ஓட்டெடுப்பு மூலம் நீக்கும் உரிமை சோசலிச சீன மக்கள் திரளுக்கு இருந்து, அவர்களும் முட்டாள் தன

மாக மாவோவைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்க ளென்று வைத்துக் கொள்வோம். அவருக்குப் பதிலாக பதவிவகிக்க இன்னொரு மாவோ இல்லை என்ற கசப் பான உண்மையை அவர்கள் எதிர்கொண்டிருப்பார்கள். அவர்கள், மாவோவிற்குப் பதிலாக மாவோ ஆற்றிய பங்களிப்பையே, சம்பிரதாய வாதப்படி, இன்னொரு மாவோவையே தேட வேண்டிய வேடிக்கையான கட் டாயத்திற்கு உள்ளாவார்கள். யாராவது ஒருவர் தலை மைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டாக வேண்டும் சமுதாயத்தில் நிலவும் வேலைப் பிரிவினை, குறிப்பாக உடல் உழைப்பிற்கும், மூளை உழைப்பிற்குமான பிரி வினை காரணமாக தலைமைப் பொறுப்பை வகிக்கும் தகுதியுள்ளவர்கள் வெகு சிலரே இருப்பர். மாவோவை ஓட்டெடுப்பின் மூலம் நீக்குவதால் அவரை விட குறை வான தகுதிகள் கொண்ட ஒருவரையே சில சமயம் துரதிர்ஷ்டவசமாக பாட்டாளி வர்க்கத்திற்குப் பதிலாக முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவரைத் தலைமைப் பதவியில் அமர்த்த நேரிடும். இந்தப் பிரச்சினையிலிருந்து சுற்றி வளைத்து தப்ப இயலாது. சம்பிரதாய ஜனநாயக விதிகள் கூட உங்களுக்கு உதவ முடியாது. 5

இதற்காக, மக்கள் திரளுக்கும் தலைவர்களுக்கும் இடையே உள்ள வேலைப் பிரிவினையை மாறாத தன்மையுடையதாக ஆக்க வேண்டும் என்று பொரு ளல்ல அது குறைக்கப்பட்டு இறுதியாக முற்றிலும் நீக்கப்பட வேண்டும். அதே போல சோசலிச சமுதாயத் தின் உண்மையான உரிமையாளர்கள் மக்கள் திரள் அல்ல தலைவர்களே என்ற கருத்தும் ஒரு போதும் தோன்றிவிடக் கூடாது. புரட்சிகரச் சீனத்தில் தலைவர் களை விமர்சிப்பதற்கும், அதன் மூலம் அவர்களை மேற் பார்வை செய்வதற்கும் மக்கள் திரளுக்குள்ள உரிமை மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. அதுவே பண்

பாட்டுப் புரட்சியின் மூலம் முற்றும் புதிய மட்டத்தில் வெளிப்பட்டது. இதனை, "பரந்து பட்ட மக்களைத் தட்டி எழுப்பி, கீழ் மட்டத்திலிருந்து, நமது இருண்ட கூறுகளை வெளிப்படையாக, முழுமையாக வெட்ட வெளிச்சமாக்குமாறு செய்கின்ற ஒருமுறை, வடிவம், முற்றிலும் புதுமையான ஒன்று" என மாவோ குறிப்பிட்டார். இது எத்தனை தான் முக்கியமானதாக, புதிய வழி காட்டியாகத் திகழ்ந்தாலும், சோசலிச மாற்றம் நடை பெறும் காலம் முழுவதும் தலைவர்களுக்கும் மக்களுக்கும் ஒருபுறவய முரண்பாடு இருப்பதும், ஆனாலும் தலைவர்களுக்கான தேவை இருப்பதும் எப்படி உண்மையோ அதே போல் இந்த முரண்பாடு சுரண்டல்-ஒடுக்குமுறை உறவாக மாறிவிடுவதற்கான கூறுகள் இருப்பதும் உண்மையே.

உலகம் முழுவதும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுகின்ற காலகட்டம் முரண்பாடுகள் நிறைந்ததாய் இருப்பதால், பாட்டாளிவர்க்க அரசியல், தலைமைப் பொறுப்பைக் கட்சி ஏற்றுக் கொள்ளாவிட்டால் அந்தப் பொறுப்பு மற்ற அமைப்பாக்கப்பட்ட குழுக்களால், முதலாளித்துவ ஆதரவாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். விரைவில் அரசு பாட்டாளிவர்க்க அரசாக இராமல், முதலாளித்துவ அரசாக மாறிப் போயிருக்கும். பாட்டாளிவர்க்கப் பார்வையிலிருந்து ஒன்றைத் தெள்ளத் தெளிவாகக் கூறிவிடலாம். திரிபுவாத நாடுகளின் ஆளும் கட்சிகளின் தவறு அரசதிகாரத்தை ஏகபோகமாகப் பெற்றிருந்ததல்ல, அந்த அதிகாரத்தை முதலாளித்துவ மீட்சிக்கும், தொடர்ச்சிக்கும் பயன்படுத்தியதே ஆகும். பிரச்சினை என்னவென்றால் அவர்கள் புரட்சியாளர்கள் அல்ல உண்மையான, கம்யூனிஸ்டுகள் அல்ல. எனவே, அவர்கள் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்கும் அதன் கீழ் புரட்சியைத் தொடங்குவதற்கும் மக்களைத்

திரட்டி, அவர்களைச் சார்ந்து இருக்கவில்லை. முன்பே கூறியதுபோல் பழைய சமுதாயத்தின் எச்சசொச்சங்களாகத் தொடர்ந்த ஏற்றத்தாழ்வுகளையும், வேறுபாடுகளையும். எதிர்ப்பதற்கும், எந்த ஒரு நிலையிலும், அந்த நேரத்தின் சிந்தனைமட்டம், புறச்சூழல் ஆகியவற்றிற்கு ஏற்ப எத்தனை முடியுமோ அத்தனை தூரம் முதலாளித்துவ உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் புதிய வழிமுறைகள் பண்பாட்டுப்புரட்சியின் மூலமாக சீனத்தில் வளர்த்தெடுக்கப்பட்டன. இருப்பினும், சோசலிச மாற்றம் நடைபெறும் காலம் முழுவதிலும், இவை அடிப்படை முரண்பாடுகளாக ஊடுருவி நிற்கும், வேறுபாடுகளும், ஏற்றத் தாழ்வுகளும் முதலாளித்துவ உரிமை கோரலாக வெளிப்படும் இதுவே வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் உருவாவதற்கும் முதலாளித்துவ மீட்சி ஏற்படுவதற்கும் அடிப்படைக் காரணங்களாக அமையும்.

இந்தச் சிக்கலை, சம்பிரதாய முறையினால் தீர்க்கவோ, ஏன் அடிப்படையைப் புரிந்து கொள்ளவோ கூடமுடியாது. புரட்சிகரகம்யூனிஸ்டுகளின் தலைமையில் வர்க்கப் போராட்டத்தைத் தொடர்வதன் மூலமே, இப்போராட்டத்தை முக்கிய இணைப்புச் சங்கிலியாகப் பயன்படுத்துவதன் மூலமே இச்சிக்கலை எதிர்கொள்ள முடியும். சரியாக இவ்வாறுதான் மாவோவின் தலைமையில் இச்சிக்கல் அணுகப்பட்டது.

குறிப்பாக வருவாயைப் பங்கீடு செய்வதற்கான திசைவழியும், அதன் அடிப்படையில் திட்டமான கொள்கைகளும் மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு புரட்சியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்கொள்கைகள் அடிமட்டத்தில் இருப்பவர்களை மேலே உயர்த்துவதாயும், பொது வருவாய் மிகுதியாவதைப் பொறுத்து ஊதிய வேறுபாடுகளைப் படிப்

படியாய்க் குறைப்பதாயும் அமைந்தது. இதில் ஒரு முக்கிய அங்கமாக, அரசு அலுவலர்களுக்கும் சாதாரணத் தொழிலாளர்களுக்கும் இடையே ஊதிய விகிதத்தில் இருந்த வேறுபாடு மிகமிகக் குறைவாக்கப் பட்டது; ஆம் பாரிஸ் கம்யூனின் அடிப்படை இலட்சியங் களில் ஒன்று அறிவிக்கப்பட்டு...செயல்படுத்தப்பட்டது. ஊதிய வேறுபாடுகள் இன்னும் தொடர்ந்தாலும் அவை மேலும் குறைக்கப்பட வேண்டிய ஒன்று என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால். குறிப்பிட்ட காலகட்டத்தின் உண்மை நிலைமைகளுக்கு ஏற்ப, இந்தக் கொள்கை களை நடைமுறைப்படுத்துவது முக்கியமென்றாலும்கூட, சோசலிச சமுதாய வரலாற்றில் நீண்ட காலத்திற்கு வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் நிலவவே செய்யும் என்ற உண்மையை இவை மாற்றாது. பாட்டாளி வர்க்கத் திசை வழியில் இவை எதிர்கொள்ளப்படா விட்டால் இந்த வேறுபாடுகள், வர்க்க வேறுபாடுகளாக வளர்ந்து விடும் சக்தி உடையவை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

## சோசலிச சமுதாயத்தில் அதிகாரம் செலுத்துதல் தலைமையும், மக்கள் திரளும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும்

இதுவரை கூறியவற்றை மனத்தில் இருத்திக்கொண்டு, இனி கட்சியின் சர்வாதிகாரத்தைப் பற்றிப் பார்ப்போம். "கட்சி மற்றும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் பற்றி, லெனின் எடுத்திருந்த நிலைக்கும் ஸ்டாலின் பின்பற்றி நடைமுறைப்படுத்திய நிலைக்கும் பெருத்த வேறுபாடு எதுவும் இல்லை" என்று சி.ஆர்.சி. ஆவணம் கூறுகிறது. இதில் பல கூர்மையான முரண்பாடுகள் இருப்பினும், சாராம்சத்தில் சரியானதே. சோவியத் யூனியனில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை முன்னெடுத்துச்

செல்வதற்கு லெனினது கொள்கைகளையே ஸ்டாலின் உயர்த்திப் பிடித்து, நடைமுறைப்படுத்தினார். இது ஸ்டாலினுக்குப் பெருமை சேர்க்கும் விஷயமே. ஆனால் ஸ்டாலினையும், லெனினையும் தவறானவர்களாகக் காட்டவும், தங்களது பாட்டாளிவர்க்க சர்வாதிகார எதிர்ப்பைப் பூசிமெழுகவும் ஆவணம் இவ்வாறு கூறு கிறது, "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது சாராம் சத்தில் கட்சியின் சர்வாதிகாரமே என்றும், இந்த சர்வாதி காரத்தை நடைமுறைப் படுத்த தொழிற்சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள் போல சோவியத்துக்களும் வெறும் இணைப்புவார்களே என்று ஸ்டாலின் கூறினார்" (பத்தி 5-9)

ஸ்டாலின் கூறியவற்றில் ஒரே ஒரு வரியை மட்டும் மேற்கோள் காட்டிவிட்டு. அவ்வரிக்கு முன்னும் பின்னும் ஸ்டாலின் விரிவாக விவாதித்துள்ளவற்றை சி. ஆர். சி ஆவணம் குறிப்பிடாமல் விட்டு விடுவதை நன்றாகக் கவனிக்க வேண்டும். அந்த மேற்கோளை முதலில் முழுமையாகப் பார்ப்போம்.

"சோவியத் ஒன்றியத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் நிலவும் இந்த நாட்டில், கட்சியின் வழிகாட்டுதல் இல்லாமல் சோவியத்துக்களோ, மற்ற மக்கள் திரள் அமைப்புக்களோ எந்த முக்கிய முடிவுகளையும் எடுப்ப தில்லை. கட்சி வகிக்கும் முன்னணிப் பங்கின் மிக உயர்ந்த வெளிப்பாட்டிற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். இந்தப்பொருளில் நோக்கினால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது சாராம்சத்தில், அதன் முன்னோடிகளின் சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கத்தின் முக்கிய வழி காட்டும் சக்தியான கட்சியின் சர்வாதிகாரம் என்று கூறலாம்" (ஜே. வி. ஸ்டாலின் எழுதிய "லெனினியத்தின் மீதான கேள்விகளைப் பற்றி" தொகுதி ஐந்து, லெனினிசத்தின் பிரச்சினைகள்"

பக்கம் 184) அதனைத் தொடர்ந்து ஸ்டாலின், அதற்காக 'பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், கட்சியின் முன்னோடி பங்கும் (கட்சி சர்வாதிகாரமும்) சமமானவை என்றோ, இணையானவை என்றோ, பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்திற்கும் கட்சியின் சர்வாதிகாரம் மாற்றாகுமென்றோ கருதி விடக்கூடாது என்று பக்கம் பக்கமாக விளக்கு கிறார்.(அழுத்தங்கள் ஸ்டாலினின் மூலநூலில் உள்ளபடி) 'சாராம்சத்தில்' என்று சொல்வதற்கு 'முழுமையாக' என்று பொருளல்ல என்பதைத் தெளிவாக, விரிவாகக் கூறு கிறார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்து வதில், மக்கள் திரளுக்கு மாற்றாக கட்சியைக் கருதும் போக்கை எதிர்த்து நீண்ட விவாதத்தை முன் வைப்ப துடன், "கட்சியின் முன்னணிப்பங்கை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக இனம் காணுபவர்கள் சோவி யத்துக்கு மாற்றாக அதாவது அரசு அதிகாரத்திற்கு மாற்றாக கட்சியை முன்வைப்பவர்கள் ஆவர்." என்று தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

(அதே நூல் பக். 189)

கூட்டுக்குழு நடவடிக்கையின் முக்கியத்துவத்தை ஸ்டாலின் வலியுறுத்துகிறார். கட்சியானது மக்களுடன் பரஸ்பர உறவுவைத்திருக்க வேண்டும். பரஸ்பர நம் பிக்கையை உருவாக்கியிருக்க வேண்டும்...அதாவது கட்சியானது, மக்களின் குரலை உற்றுக் கேட்க வேண் டும். மக்களின் புரட்சிகர உணர்வுகளை கவனமாகப் பார்க்க வேண்டும், மக்கள் போராட்டங்களின் வழி முறைகளை நன்கு ஆராய வேண்டும், அவற்றின் அடிப் படையில் தனது கொள்கைகளை சரியா? தவறா? எனப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அதாவது, அது மக்களுக்குச் சொல்லித்தருவதோடு நின்றுவிடாமல் மக்களிடமிருந்து தானும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார். (அதே புத்தகம்-பக்கம் 190-91) கட்சியின் முன்னணிப்பங்கை மக்கள் திரள்

மீதான சர்வாதிகாரமாக மாற்றி விடும் போக்குகளைப் பற்றி எச்சரிக்கிறார். அவர்மேலும் திட்டமாகக் குறிப் பிடுகிறார்.

"கட்சியின் தலைமையை மக்கள் மீது வன்முறை யாகத் திணிக்க முடியுமா? அது இயலாது? எப்படி யாயினும் அத்தகைய தலைமை நிலைத்து நிற்கவே முடியாது. கட்சி, ஒரு பாட்டாளி வர்க்கக்கட்சியாகத் தொடர்ந்து இருக்க விரும்பினால், முதன்மையாக. தான் உழைக்கும் வர்க்கத்தின் வழிகாட்டி, தலைமை, ஆசிரியன என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் கொள்கை தவறாக இருக்கும் பொழுது, வர்க் கத்தின் நலனுக்கு எதிராக இருக்கும் பொழுது, கட் சியை வர்க்கத்தின் உண்மையான தலைமையாகக் கருத முடியுமா? முடியாது. இவ்வாறான நிலைமை களில், கட்சி உண்மையிலேயே தலைமைப் பொறுப்பு ஏற்க நினைத்தால், தனது கொள்கைகளை மீளாய்வு செய்ய வேண்டும், திருத்திக்கொள்ள வேண்டும். தனது தவறுகளை ஏற்றுக்கொண்டு சரி செய்து கொள்ள வேண்டும். (பக்கம் 196-7)

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதில் மக்களுக்கு மாற்றாகக் கட்சியைக் கருதுதல், கட்சி வன்முறையாகத் தனது தலைமையைத் திணித்து மக் களின் விருப்பத்திற்கும், நலன்களுக்கும் எதிராக சர்வாதிகாரத்தைச் செலுத்துதல் ஆகியவற்றை எதிர்க் கும் தீர்மானகரமான வாதங்களை ஸ்டாலின் மீண்டும் பக்கம் பக்கமாக விவரித்துள்ளார்.

ஆனால் இவை எதனையும் சி.ஆர்.சி. ஆவணம் குறிப்பிடவில்லை. ஸ்டாலின் கூறிய "சாராம் சத்தில்" பகுதியையும், ''வெறும் இணைப்பு வார்கள்" பகுதியையும் மட்டும் மேற்கோள் காட்டி யுள்ள வரிகள் இருக்கும் பத்தியைக்கூட இந்த

ஆவணத்தின் ஆசிரியர்கள் முழுமையாகப் படிக்க அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்று நம்புவது கடினமாக இருக்கிறது. அப்படிப் படித்திருந்தால், இதனைப் பற்றி ஸ்டாலின் கூறியுள்ள அனைத்தையும் வேண்டுமென்றே புறக்கணித்திருப்பார்கள் என்று நம்பு வதோ இன்னும் கடினமாயிருக்கிறது. ஆனால் முத லாளித்துவ நிலைப்பாட்டிலிருந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தை எதிர்ப்பவர் கள் அனைவரும் பயன்படுத்திய வழக்கமான வழி முறைகளில் ஒன்று தான் இது. முற்போக்கு அல்லது சோசலிச சாயம் பூசப்பட்டிருந்தாலும் அடிப்படையில் ஒன்று தான். இதுவரை தாம் உயர்த்திப் பிடித்து வந்த அடிப்படைக் கொள்கைகளை முதலாளித்துவச் சிந் தனைகளுக்கு அடகுவைத்து விட்டதால் இம்முறையை கடைபிடிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டுள்ளனர்.

நான் இதுவரை குறிப்பிட்ட ஸ்டாலினின் கூற்றுக் கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்ட பின் பும் கூட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் 'சாராம் சத்தில்' கட்சி சர்வாதிகாரமே என்ற வரையறையே துரதிர்ஷ்டவசமானது என்று வாதிடலாம். இந்தக் கூற் றில் ஓரளவு உண்மையும் உள்ளதாகவே நான் கருது கிறேன். ஸ்டாலின் வலியுறுத்திய உறவிற்கு அதாவது கட்சியின் தலைமையின் கீழ் மக்கள் திரள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துகின்ற உறவிற்கு எதிராக ஸ்டாலினின் இந்த வரையறையையே நிறுத்து வதுதான் இதில் வேடிக்கையான ஒன்று.

மேலும், இந்த வரையறை, மக்களைச் சார்ந்திராத மேலிருந்து கீழான போக்கை வெளிப்படுத்துகிறது அல்லது ஊக்குவிக்கிறது என்றும் வாதிடலாம். அன் றைய காலகட்டத்திலிருந்து நேற்று வரையான, அனுப

வங்களின் நல்ல அம்சங்கள், கெட்ட அம்சங்கள் அனைத்தையும் கணக்கில் கொண்டால் இந்த விவாதத்திலும் சிறிதளவு உண்மை இருக்கிறது என்றே கூற வேண்டும். இந்தப் போக்கு ஸ்டாலினிடம் வெளிப் படையாகவே தெரியத் தொடங்கியது. ஆனால் இது ஒரு நேரடியான வளர்ச்சியல்ல. மாவோ சுட்டிக் காட்டியது போல், ஸ்டாலினின் மிகச்சரியான திசை வழிகள் சில சமயம், சில முக்கியமான கூறுகளில், நேரெதிர் திசையில் சென்றன.

ஆனால் சி. ஆர். சி. ஆவணமோ ஸ்டாலின் தொடக்கத்திலிருந்தே மக்களைச் சார்ந்திராத போக்கு உடையவர் போலவும், லெனினது அடிச்சுவட்டைப் பின்பற்றி ஸ்டாலினும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் திற்கு மாற்றாக கட்சி சர்வாதிகாரத்தை ஆதரித்து, செயல் படுத்தியது போலவும் எழுதியுள்ளது. உண்மை யில் லெனின் இந்தப் போக்கைக் கடுமையாக எதிர்த் தார். ஸ்டாலினோ, சி.ஆர்.சி. ஆவணம் மேற்கோள் காட்டியுள்ள கட்டுரையிலேயே, வெளிப்படையாக, உறுதியாக, விரிவான விவாதங்களின் அடிப்படையில் இந்தப் போக்கினைத் தூக்கி எறிகிறார். லெனினைப் பின்பற்றி ஸ்டாலினும், கட்சிக்கும், மக்கள் திரளுக்கும் உள்ள உறவில்; கட்சி தலைமை தாங்கிச் செல்லும் சக்தி, மக்கள் திரள் உந்து சக்தி என்ற சரியான இயக்க இயல் ரீதியான பார்வையை முன் வைக்கிறார்

சி.ஆர்.சி ஆவணமோ ஸ்டாலினின் 'சாராம்சத்தில்' வரிகளைச் சிதைப்பதில் தொடங்கி கீழ்கண்ட முடிவிற்கு வந்து சேருகிறது.

"இந்த நிலையிலிருந்து, அரசு அதிகார மயமாக்கல், புதிய வர்க்கங்கள் உருவாக்குதல் ஆகியவற்றின் தன்மை யையும், வளர்ச்சிப் போக்கையும் எளிதாகக் கண்டறிய

லாம். இத்தகைய ஒரு அரசியல் அமைப்பிற்குக் கீழே, முதலாளித்துவ உரிமைகளைக் கட்டுப்படுத்தும் சரியான கொள்கைகள் எதுவும் இல்லாது போனதும், உற்பத்தியைப் பெருக்க ஊக்கத் தொகை அளிப்பதையே மேலும், மேலும் சார்ந்திருக்கத் தொடங்கியதும் அரசு அதிகார வர்க்க முதலாளித்துவத்திற்குப் பொருளாதார அடித்தளங்கள் இட்டன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முதலாளித்துவ வாதிகள் கட்சிக்குள்ளேயே தோன்றுகின்றனர் என்று மாவோ கண்டுபிடித்த நிலைமையை நாம் வந்தடையும் பொழுது, கட்சி முழுமையடைகிறது. (பக்கம் 5-9) அழுத்தம் எமது.)

இக்கூற்று, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புதிய வர்க்கங்களை, குறிப்பாக முதலாளித்துவ வர்க்கம் தோன்றுவதற்கான அடிப்படை பற்றி, லெனின் செய்த ஆய்வுகளுக்கு எதிரானதாகும். சோவியத் அரசு ஊழியர்கள், அறிவு ஜீவித் தொழிலாளர்கள், சிறு வீத உற்பத்தி தொடர்ந்து நிலவுதல் ஆகியவற்றையே புதிய முதலாளித்துவ வாதிகள் உருவாகும் ஊற்றுக்கண்களாக லெனின் கருதினார். ஆனால் அவரது ஆய்வு, சோசலிச சமுதாயத்தில் எஞ்சியிருந்த சமூக மற்றும் வர்க்க முரண்பாடுகளைப் பற்றிய எதிர்காலக் கணிப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அரசு அதிகாரத் துறையில் தோன்றியுள்ள புதிய முதலாளித்துவ வாதிகளின் தோற்றத்தையோ தோற்றுவாய்களையோ அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. எனவே லெனின் சரியான திசையில் சென்று சரியான முடிவிற்கு வந்துள்ளார். சி.ஆர்.சி ஆவணந்தான் முற்றிலும் மாறி விட்டது.

முன்பே குறிப்பிட்டது போல் லெனின் தொடங்கி வைத்த இந்த ஆய்வை மாவோ முழுமையான கருத்தாக வளர்த்தெடுத்துள்ளார். சி.ஆர்.சி ஆவணமோ

இக்கருத்தையும், உண்மை நிலையையும் தலைகீழாக முன் வைக்கிறது. எச்ச சொச்ச வேறுபாடுகள், ஏற்றத் தாழ்வுகள், விடாப்பிடியாகத் தொடரும் பண்ட உறவுகள் போன்ற பொருளாதார அடித்தளத்தின் அடிப்படை முரண்பாடுகள் சர்வதேச நிலைமைகள் குறிப்பாக அரசு அதிகார அமைப்புகள், கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து தொடங்கி அவற்றின் ஒளியில் மேற்கட்டுமானத்தை குறிப்பாக அரசு அதிகார அமைப்புகள், கொள்கைகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்குப் பதிலாக மேற்கட்டுமான முரண்பாடுகளைப் பற்றிய திரித்துப் புரட்டிய ஒரு ஆய்வைத் தொடங்கி, அதனைப் பொருளாதார அடித்தளத்தின் மீது திணிக்க முயற்சிக்கிறது. மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது மாவோவின் ஆய்வை ஒத்திருப்பதைப்போல் தோன்றினாலும் உண்மையில் அதற்கு எதிரானதாகும். மாவோவின் ஆய்வு, பொருள் முதல்வாத அடிப்படையிலானது. இதுவோ கருத்து முதல்வாத அடிப்படையிலானதாகும். அரசு அதிகார வர்க்க முதலாளித்துவம் தோன்றுவதற்குக் காரணமான பொருளாதார அடித்தளம் உருவானதற்கு, அரசு அதிகார வர்க்க விலகல்களே காரணம் எனக் கூறுகிறது. அந்த விலகல்களிலும் சிலவே உண்மை, பல இந்த ஆவணமே இட்டுக்கட்டியவை.

சோசலிச சமுதாயத்தில் புதிய முதலாளித்துவவாதிகள் பிறப்பெடுப்பதற்கும், முதலாளித்துவ மீட்சிக்கும் அடிப்படைக் காரணங்கள் பற்றிய இந்தக் கருத்து முதல்வாதக் கண்ணோட்டம், சி.ஆர்.சி ஆவணத்தில் பல முறை பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு முக்கியமான இடத்தைக் காண்போம்.

"அவர் (லெனின்) முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்திற்குப் பதிலாகப் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு, பெரும்பான்மையினர் மேல் சிறு

பான்மையினரின் சர்வாதிகாரத்தை; சிறுபான்மையினரின் மேல் பெரும்பான்மையோரின் சர்வாதிகாரமாக தலை கீழாக மாற்றிவிடும் தீர்வை வந்தடைந்தார். எனவே பழைய அமைப்பிலிருந்து பண்பு ரீதியான மாற்றம், எதுவும் நிகழவில்லை. அதன் பயனாக, இறுதியில், அரசு தலைமையிடம் அதிகாரத்தை குவிக்கும் பழைய அமைப்பு முறை, இப்பொழுது உழைக்கும் வர்க்கம், அணிகள், கட்சித் தலைமை ஆகியவற்றிலிருந்து புதிய ஆளும் வர்க்கம் தோன்றுவதற்கும், உறுதிப்படுவதற்கும் இட்டுச் செல்கிறது" (பத்தி 9.2. அழுத்தம் எமது)

"புதிய ஆளும் வர்க்கம் தோன்றுவதற்கும் உறுதிப் படுவதற்கும்" சோசலிச சமுதாயத்தின் மேற் கட்டு மானமே (உண்மையில் மேற்கட்டுமானத்தைப் பற்றிய திரித்துப் புரட்டிய ஒரு பார்வையே) தீர்மானகரமான காரணியாக சி.ஆர்.சி. ஆவணம் முன்வைப்பது இங்கு மிகத் தெளிவாகப் புலப்படுகிறது.

உற்பத்திச் சக்திகளும், சமுதாயத்தின் பொருளாதார அடித்தளமும் மட்டுமே முழுமையான தீர்மானகரமான சக்திகளாகும் எனக் கூறும் எந்திர கதியான 'உற்பத்திச் சக்திகளின் விதி'யை மாவோ ஏற்க மறுத்தார். மேற் கட்டுமானத்தின் இயக்கத்தால் திரும்ப பொருளாதார அடித்தளமும் பாதிக்கப்படுவதை இவ்விதி காண மறுக் கிறது. மேற்கட்டுமானத்திலும், உற்பத்தி உறவுகளிலும் புரட்சியின் பங்கு காரணமாக உற்பத்தி சக்திகள் விடுதலை செய்யப்பட்டு, வளர்ச்சி அடைவதை இவ்விதி கணக்கில் கொள்ளவில்லை. ஆனால் மாவோ, இந்த எந்திர கதியான பொருள் முதல்வாதத்தை, இயக்க இயல் ரீதியான பொருள்முதல்வாதத்தால் எதிர்த்தாரே தவிர கருத்து முதல்வாதத்தால் எதிர்க்கவில்லை.[6]

சமுதாய மேற்கட்டுமானத்திற்கும், பொருளாதார அடித்தளத்திற்கும் உள்ள உறவை மறுத்து இறுதியாக

உண்மையான பொருளாதார சூழல்களின் தீர்மானகர மான பங்கையே மறுக்கும் ஒரு போக்கை அவர் முன் வைக்கவில்லை. 'பொருளாதாரக் குறுக்கல்வாதம்' என் றொரு முத்திரை குத்தி, அதனை எதிர்க்கிறோம் என்ற பெயரில் மாவோவின் கருத்துக்களைத் திரித்துப் புரட்டி இறுதியாக அரசியலோடு பொருளாதார அடிப்படை களுக்கு உள்ள தீர்மானகரமான உறவையே சி.ஆர்.சி ஆவணம் மறுக்கிறது. (வர்க்க குறுக்கல் வாதத்தை மறுக்கிறோம் என்ற பெயரில் சி.ஆர்.சி ஆவணம் எவ்வாறு மார்க்சிய பொருள்முதல் வாதத்தையே மறுக்கிறது என்பதை விரைவில் காண இருக்கிறோம்.)

சோசலிச சமுதாயத்திற்குள்ளேயே, சமுதாய உறவு களிலும் அனைத்திற்கும் மேலாக உற்பத்தி உறவுகளி லும் நிலவும் முரண்பாடுகளும், சர்வதேச உறவுகளுமே முதலாளித்துவ மீட்சிக்கு முதன்மையான பொருளாதார அடிப்படைகள் என மாவோவின் வழி, அடையாளம் காட்டுகிறது. இந்த முரண்பாடுகளுடன் ஆன உறவின் அடிப்படையிலேயே அது மேற்கட்டுமானத்தைப் பற்றி அலசுகிறது. ஆனால் சி.ஆர்.சி ஆவணமோ பொருளாதார தளத்தில் உள்ள முரண்பாடுகளை இரண்டாம் பட்ச மாகக் கருதுகிறது. ''இது போன்ற ஒரு அரசியல் அமைப்பு" இருப்பதே, அதாவது சம்பிரதாய ஜனநாயக அடிப்படையைக் கொண்டிராத ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலவுவதே தீர்மானகரமான காரணமாக வும், பொருளியல் அடிப்படை அதற்கு துணைக் காரண மாகவும் கருதப்படுகிறது.

அடுத்து, ஸ்டாலினுக்கும் ட்ராட்ஸ்சிக்கும் இடையே நடந்த போராட்டத்தைப்பற்றி சி.ஆர்.சி ஆவணம் கூறுவதைக் கவனிப்போம். ஆவணத்தின் கூற்றுப்படி பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் எதிர்கொண்ட எந்த அடிப்படைக் கேள்விகளும் ட்ராட்ஸ்கியின் விமர்சனங்

கள் விடையளிக்கவில்லை. ஆனால். சந்தர்ப்பவசமாக, ஒரே ஒரு நாட்டில் மட்டும் சோசலிசம் கட்ட இயலுமா என்ற பிரச்சினையில் ஸ்டாலின் முடிவு சரியாக அமைந்துள்ளது (பார்க்க 5.10)

ஆனால் மக்கள் திரள் மீது கட்சி சர்வாதிகாரத்தைத் திணித்ததில் (மற்ற யாரையும் விட) முக்கியமானவர் ஸ்டாலின் என்பது உண்மையானால், இந்த விஷயத்தில் மட்டும் ஸ்டாலின் எப்படிச் சரியாக இருக்க முடியும்? எவ்வாறு அவர் சோவியத் யூனியனில் சோசலிசம் கட்டப்படுவதற்குத் தலைமை தாங்கியிருக்க முடியும்? அம்மாதிரியான ஒரு சர்வாதிகாரத்தின் கீழ் எம்மாதிரியான சோசலிசத்தைக் கட்டியிருக்க முடியும்? அல்லது, ஒரு வேளை சோவியத் ஒன்றியத்தில் சோசலிச சமுதாயமே அமைக்கப்படவில்லையா? அப்படிப் பார்த்தால் சீனாவிலும் கூட அமைக்கப்பட்டிருக்க முடியாதே! பிறகு இவ்விரு நாடுகளின் பொருளாதார அடிப்படைதான் என்ன? தொடக்கத்திலிருந்தே முதலாளித்துவம் தானா? அல்லது வேறு ஏதாவது ஒன்றா? அப்படிப் பார்த்தால் நாம் மீண்டும் ட்ராட்ஸ்கியின் அடிப்படை ஆய்வுகளையே வந்தடைகிறோம்.

இவர்களது வாதம் முழுவதும், விடாப்பிடியாக ஆனால் சீராக, பொருளாதாரத்திற்கும், அரசியலுக்கும் அதாவது அடித்தளத்திற்கும், மேற் கட்டுமானத்திற்கும் உள்ள உறவை இயக்க மறுப்பியல் அடிப்படையிலேயே விளக்குகின்றது. இந்தப் போக்கைக் கடைப்பிடித்தால் பின்பு பொருளாதார அடித்தளமும் சரி, மேற் கட்டுமான அரசியலும் சரி, இரண்டுமே முதலாளித்துவத்தின் மேலாண்மைக்குக் கீழ் வந்துவிடும். ஒருவேளை இவர்கள் அரசுடைமையும் நிறுவனமாக்கப்பட்ட கட்சியின் தலைமைப் பங்கும் சேர்ந்து சோசலிசத்திற்கு உத்திரவாதம் தருகிறது அல்லது சோசலிசத்திற்குச் சமமாகி

விடுகிறது என்ற திரிபுவாதிகளின் அடிப்படை விதிக்கு மாற்றாக, முழுக்க முழுக்க கம்யூன் மாதிரியில் அமைந்த மக்கள் திரள் ஜனநாயகமும், மரபு வழி மார்க்சிய-லெனினிய அணுகுமுறையும் சேர்ந்தால் முதலாளித்துவ மீட்சியைத் தடுக்கும் அடிப்படை ஆகிவிடும் என்ற விதியைக் கொண்டுவர முயற்சிக்கிறார்கள் போலும். இந்த விதிகளில் எது சிறந்தது என்று ஆராயத் தேவை யில்லை. இரண்டுமே தவறானவை.

நாம் ஏற்கனவே கூறிய பல்வேறு காரணங்களால் கட்சி, நிறுவனமாக்கப்பட்ட முன்னோடிப் பங்கைச் செலுத்தாவிடில் அது முதலாளித்துவ மீட்சிக்கு இட்டுச் செல்லும். அதேபோல் சர்வதேச அளவிலும், உள் நாட்டிலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எதிர் கொள்ளும் உண்மையான பொருளியல் முரண்பாடு களுடன் கட்சி கடைப்பிடிக்கும் உறவைப் பற்றிக் கவலைப் படாது, கட்சி, நிறுவனமாக்கப்பட்ட முன் னோடிப் பங்கைச் செலுத்தினாலே போதும் என்று கருதும் போக்கும் முதலாளித்துவ மீட்சிக்கே இட்டுச் செல்லும். முன்பு கூறியதை இங்கு நினைவுபடுத்திக் கொள்வோம்.

நிறுவனமயமாக்கப்பட்ட முன்னோடிப் பங்கை கட்சி நிறைவேற்றத் தவறினால், வேறு சக்திகள், உண் மையில் முதலாளித்துவ சக்திகள், அதனை நிறைவேற் றும். அதனால் முதலாளித்துவ ஆட்சி நிறுவனமயமாக் கப்படும். சோசலிச சமுதாயத்தின் கீழே நிலவும் முரண் பாடுகளே இதற்குக் காரணம். இத்தகைய சூழலில் முழுக்க முழுக்க பாரிஸ் கம்யூன் மாதிரியான சம்பிரதாய அமைப்புக்களை உருவாக்குவது முதலாளித்துவத்திற்கு நிறைய இடம் கொடுப்பதாகிவிடும். அது நிறுவனங் களையும் பின்பு சமுதாய முழுமையையும் அதிகாரம் செலுத்தத் தொடங்கிவிடும்.

இனி சோவியத் ஒன்றியத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப்பற்றி ரோசாலுக்சம்பர்க்கின் "கூர்மையான" விமர்சனம் என்று இந்த ஆவணம் குறிப்பிடுகின்ற பகுதிகளைப் பார்ப்போம். (பகுதி 6) லுக்சம்பர்க் கூற்றுப்படி போல்ஷிவிக்குகள் அடிப்படையான தவறு செய்திருக்கிறார்கள். அதாவது, "காவுட்ஸ்கியைப் போலவே இவர்களும் ஜனநாயகத்தையும், சர்வாதிகாரத்தையும் எதிரெதிரே நிறுத்துகிறார்கள்." அவர் மேலும், போல்ஷிவிக் கொள்கை உண்மையான சோசலிசத்திலிருந்து மிகவும் விலகிச் செல்லாது" என்றும் "போல்ஷிவிக்குகள், ஜனநாயகத்திற்கு எதிரான சிறப்பு வாய்ந்ததாக சர்வாதிகாரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அதன் மூலம், ஒரு சில நபர்களின் சர்வாதிகாரத்தை அதாவது **முதலாளித்துவ மாதிரியில் அமைந்த** சர்வாதிகாரத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர்." (சி.ஆர்.சி ஆவணம் 6.1 'ரோசாலுக்சம்பர்க் பேசுகிறார்'- நியூயார்க் வெளியீடு 1940, பக்கம் 393, அழுத்தம் எமது) இது காலங்காலமாக உள்ள குட்டி முதலாளித்துவ கண்ணோட்டமாகும். அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்திற்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும் நடுவில் நிற்கின்றனர். இவ்விரண்டு வர்க்கங்களின் சர்வாதிகாரத்திலும், குட்டி முதலாளித்துவ வர்க்க நலன்கள் பின்னுக்குத் தள்ளப்படுவதை உணர்கிறார்கள். ஆனால், இவ்விரண்டு சர்வாதிகாரங்களுக்கும் இடையே உள்ள அடிப்படை வேறுபாடுகளைக் காணத் தவறிவிடுகிறார்கள்.

லுக்சம்பர்க்கின் "கூர்மையான விமர்சனங்கள்" சி.ஆர்.சி ஆவணத்தில் மேலும் தொடர்கின்றன. லுக்சம்பர்க் இவ்வாறு குறிப்பிடுகிறார். "அக்டோபர் புரட்சிக்குப்பின் லெனினாலும் ட்ராட்ஸ்கியாலும் அமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பு உண்மையில் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புக்கள் வீண் சுமைகளே என்ற பெயரில் ஜன

நாயகத்தையே அழிக்க முயற்சித்தது. மனிதர்களின் மற்ற அமைப்புகள் போலவே ஜனநாயக அமைப்பு களுக்கும் குறைபாடுகளும், எல்லைகளும் இருப்பது உண்மைதான். ஆனால் இதற்கு மருந்தாக லெனினும், ட்ராட்ஸ்கியும் ஜனநாயகத்தையே நீக்கிட வேண்டும் என்பது வியாதியைவிடக் கொடியதாகும். ஏனென்றால் சமுதாய அமைப்புகளில் இயற்கையாக எழும் குறை பாடுகளைக் களையும் ஊற்றுக்கண்களையே அடைத்து விடுகிறார்கள் பரந்துபட்ட மக்களின் உற்சாகமான, கட்டற்ற அரசியல் ஈடுபாடே அந்த ஊற்றுக் கண் களாகும்.

“முதலாளித்துவ ஜனநாயகத்தைவிட சோவியத் முறையிலான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பல்லா யிரம் மடங்கு சிறந்தது” என்ற லெனின் கூற்றை மறுத்து லுக்சம்பர்க், போல்ஷிவிக்குகளின் தலைமை யில் செயல்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்கிறார். “பொதுத் தேர் தலின் மூலமாக அமைக்கப்படும் பிரதிநிதித்துவ அமைப்புகளுக்குப் பதிலாக உழைக்கும் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் சோவியத்துக்களே என்று லெனினும், ட்ராட்ஸ்கியும் வகுத்துள்ளனர். ஆனால் நாடு முழுவதும் அரசியல் வாழ்வு ஒடுக்கப்பட்டிருக்கும் பொழுது, சோவியத்துகளும், மேலும்மேலும் முடமாகி விடுகின்றன. பொதுத்தேர்தல், பத்திரிகைகளுக்கும், கூட்டம் நடத்துவதற்கும் கட்டற்ற சுதந்திரம், கருத்து சுதந்திரம் ஆகியவை இல்லாவிட்டால் அனைத்து பொதுஅமைப்புகளும் உயிரற்ற சடங்களாகி விடு கின்றன. அரசு அதிகார வர்க்கம் மட்டுமே உண்மை யில் இயங்குகிறது, பொதுவாழ்வு மெள்ள மெள்ள உறக்கத்தில் ஆழ்கிறது. மட்டற்ற அனுபவமும், கட்டற்ற சக்தியும் நிறைந்த சில டஜன் கட்சித் தலை வர்களே வழிகாட்டி, ஆட்சி செய்கின்றனர்” (அதே

புத்தகம்-387,391 சி.ஆர்.சி ஆவனம் 6.2, 6.4) இது சமூக-ஜனநாயகவாதிகளின் வழியாகும். முதலாளித்துவ-ஜனநாயகத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட லுக்சம்பர்க் முயற்சித்தாலும், இந்த வழி, முதலாளித்துவ ஜனநாயகக் கண்ணோட்டத்துடன் முழுக்க முழுக்க ஒத்திருப்பது வெட்ட வெளிச்சமாகி விடுகிறது.

சோவியத் யூனியனின் பரந்துபட்ட மக்கள் திரள், அப்போது, சோவியத் குடியரசின் தொடக்க ஆண்டுகளில் உறுதியாக, அரசியல் வாழ்வில் பங்கெடுத்துக் கொண்டனர். உற்சாகமாக, கட்டற்ற சக்தியுடன், முழு உணர்வுடன், அதுவரை வரலாறு கண்டிராத அளவு ஆழமாகவும், பரவலாகவும், அரசியல் வாழ்வில் ஈடுபட்டனர். எனவே, "எந்த முதலாளித்துவ ஜனநாயக அரசையும் விட, மக்கள் திரளுக்கு பல்லாயிரம் மடங்கு அதிக ஜனநாயகத்தைத் தருவது சோவியத் குடியரசால் கடைபிடிக்கப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்" என்ற லெனின் கூற்றை லுக்சம்பர்க்கின் விவாதங்களால் பொய்யாக்க முடியவில்லை. அவ்வாறன்றி, போல்ஷிவிக்குகள் மக்களின் அரசியல் ஈடுபாட்டை நசுக்கி, ஜனநாயகத்தையே அழிக்க முயலுகிறார்கள் என்று, லுக்சம்பர்க் வாதிடுவது சம்பிரதாய முதலாளித்துவ ஜனநாயகத்தின் விதிகளுடன் பொது மக்கள் அரசியல் ஈடுபாட்டை அடையாளம் காண்பதாகும். முதலாளித்துவ ஜனநாயகத்தில் கடைப்பிடிக்கப்படும் முறைகளையே ஜனநாயகத்தின் பொது விதிகளாக அடையாளம் காண்பதாகும்.

"சோவியத்துக்களை மட்டுமே உழைக்கும் மக்கள் திரளின் ஒரே பிரதிநிதிகளாக" ஏற்றுக் கொள்வதை மறுத்து "பொதுத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ அமைப்புகள், பத்திரிகைகள்,

கூட்டம் கூடுவதற்குக் கட்டற்ற சுதந்திரம் ஆகிய வற்றிற்கு அதிக அழுத்தம் கொடுத்து வாதிடும் பொழுது லுக்சம்பர்க்கும் இதையே செய்கிறார்.

சி.ஆர்.சி ஆவணம் மேலும் ஒரு படி அதிகமாகவே சென்று, "சோவியத் முறையின் அடிப்படைக் குறை பாடுகள்" நன்றாக கவனிக்கவும், அடிப்படைக் குறைபாடுகள் லுக்சம்பர்க்கால் வெட்ட வெளிச்சமாக்கப்படுகின்றன என்று கீழ்க்கண்ட பகுதியை மேற்கோள் காட்டுகிறது. "அரசை ஆதரிப்பவர்களுக்கு மட்டும், ஒரே ஒரு கட்சி யைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும், அவர்கள் எண்ணற்ற வர்களாய் இருப்பினும் கூட தரப்படும் சுதந்திரம், சுதந்திரமே அல்ல. சுதந்திரம் என்பது எப்பொழுதுமே மாறுபட்டுச் சிந்திப்பவனுக்குத் தரப்படுவதே" (பத்தி 6.3 ரோசாலுக்சம்பர்க் பேசுகிறார்–பக்கம் 389–90)

முதலாவதாக, அரசையும், போல்ஷ்விக்குகளையும் ஆதரிப்பவர்களுக்கு மட்டுமே சுதந்திரம் இருந்தது என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானது வெறும் அவதூறு ஆகும். எதிர்புரட்சி சக்திகள் குறிப்பாக அவை சோவியத் அரசை எதிர்த்து ஆயுதமேந்திக் கிளர்ச்சி செய்த பொழுது, அடக்கப்பட்டது உண்மை யானது மட்டுமல்ல, சரியான செயலும் ஆகும். எடுத்துக்காட்டாக 'கிரான்ஸ்டாட்' கலகத்தை எடுத்துக் கொள்ளலாம். அதில் மக்கள் திரளும் பங்கு பெற்றனர் என்று லெனினே வெளிப்படையாக ஏற்றுக் கொள்கிறார். ஆனால் வெகு விரைவிலேயே, பழைய வெள்ளைப்படை ஜெனரல்களின் (பாட்டாளி வர்க்க ஆட்சியை எதிர்த்து உள்நாட்டுப் போர் புரிந்த பழைய ஜெனரல்கள்) சூழ்ச்சிகளும் அவர்களுக்கும் ஏகாதி பத்தியங்களுக்கும் இருந்த ரகசியத் தொடர்புகளும் வெட்ட வெளிச்சமாயின. பாட்டாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி எறிந்து பழைய ஆட்சி முறையை மீட்பதே

'கிராண்ஸ்டாட்' கலகத்தின் நோக்கம் என்பதும் அம்பல மாகியது. எனவே அத்தகைய பிற்போக்குவாத கலகத் தில் பங்கு பெற்ற மக்களும் அடக்கப்பட்டது இயல் பானதும் சரியானதும் ஆகும். (பார்க்க: ரஷ்ய பொது வுடமைக் கட்சியின் பத்தாவது மாநாடு மார்ச் *8-16, 1921* பகுதி-2)

ஆனால், அன்று அரசைப்பற்றியும் கட்சியைப் பற்றி யும் ஏராளமான விமர்சனங்கள் எழுப்பப்பட்டன, அனு மதிக்கப்பட்டன. புதிய சோவியத் ஒன்றியத்தின் அந்த ஆண்டுகளில் லெனினது எழுத்துக்களையும், பேச்சுக் களையும் படித்தால் இது தெளிவாகப் புரியும். தாங்கள் குட்டி முதலாளித்துவச் சூழ்நிலையில் இருப்பதாகவும் பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களை தியாகம் செய்து விடாமல், குட்டி முதலாளித்துவ அடுக்குகளுடன் குறிப்பாக விவசாயிகளுடன் சமரசம் செய்து கொள்ள வழி கண்டுபிடிக்க வேண்டும் என்றும் லெனின் மனம் திறந்து பேசுகிறார். அன்றைய பிரச்சினைகளை முழுமை யாக வரலாற்றுப் பூர்வமாக பின்வருமாறு அலசுகிறார். பெரு முதலாளிகளையும் நிலபிரபுக்களையும், நாம் அதிகாரத்தை கைப்பற்றிய சிறிது காலத்திலேயே விரை வாக ஒடுக்கி அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்துவிட முடியும். ஆனால் சிறுவீத உற்பத்தியாளர் களுடன் பொதுவாக குட்டி முதலாளி வர்க்கத்துடன் நீண்ட காலம் உடன் வாழ வேண்டும். வர்க்க வேறு பாடுகளைக் களையும் முயற்சியில் முன்னேறிச் செல்ல குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் சிந்தனை, பொருளா தாரச் சூழல் இரண்டையும் நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் உடன் வாழ்ந்து கொண்டே மாற்றி யமைக்க வேண்டும். (சோவியத்தின் தொடக்க ஆண்டு களில் எழுதப்பட்ட "இடது சாரி கம்யூனிசம் ஒரு இளம் பருவக் கோளாறு" என்ற நூலில் இத்தகைய விவாதங் களைக் காணலாம்.) எனவே, அந்த ஆண்டுகளில்

லெனின் பேசிய, எழுதிய கருத்துக்களிலிருந்தும், சி.ஆர்.சி ஆவணத்திலேயே திரித்து மேற்கோள் காட்டப்பட்டுள்ள பகுதிகளிலிருந்தும்கூட லெனினது அடிப்படை அணுகு முறையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அரசைப் பற்றியோ, போல்ஷ்விக்குகள் பற்றியோ விமர்சனம் செய்யத் துணியும் எவரையும் ஒடுக்குகின்ற கொள்கையை அவர் பின்பற்றவில்லை என்பதை உறுதி யாகக் கூறலாம்.

இந்தச் சிக்கலான முரண்பாடுகள் பற்றி லெனின் கூறுவனவற்றை உன்னிப்பாகக் கவனித்தும் புரிந்து கொள்வதற்குப் பதிலாக, சி.ஆர்.சி. ஆவணம் ரோசா லுக்சம்பர்க்கின் திசை மாறிய விமர்சனத்திலிருந்து திசை வழிகாண முயற்சிக்கிறது. இந்த விமர்சனங்களில் உள்ள பெரும்பான்மையான தவறுகளையும், அடிப்படை திசை வழியையும் ரோசாலுக்சம்பர்க்கின் சுதந்திரம் பற்றிய, "சுதந்திரம் என்பதே எப்பொழுதும் முழுக்க முழுக்க மாறுபட்டுச் சிந்திப்பவர்களுக்கான சுதந்திரமே" என்ற வரிகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த வரிகள் லுக்சம்பர்க் விரும்பும் "பத்திரிகைகளுக்கும், கூட்டம் கூடுவதற்கும் கட்டற்ற சுதந்திரம்" என்பது துடன் தொடர்புடையது; இதுவும், "பெரும்பான்மை யின் சர்வாதிகாரத்திற்கு எதிராகச் சிறுபான்மை யினரின் உரிமைகளே சுதந்திரம்" என்ற பழமையான முதலாளித்துவ ஜனநாயகத்தின் போக்கும் ஒன்றுதான். எடுத்துக்காட்டாக ஜனநாயகம், தனிமனித சுதந்திரம் ஆகியனபற்றி ஜான் ஸ்டூவர்ட் மில், அலெக்சிஸ்-த-டாக்கவய்யே, ஆகியோர் எழுதியுள்ளவற்றிற்கும், இதற்கும் பல ஒற்றுமைகளைக் காணலாம். இதற்குப் பதில் சொல்வதற்கு முன், வேறொரு கேள்வி யையும் நாம் கேட்க வேண்டும். "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் பெரும்பாலும் யார் மாறுபட்டுச் சிந்திப்பார்கள்? முதலாளித்துவவாதிகளையும், எதிர்ப்

புரட்சியாளர்களையும் தவிர வேறு யார்?'' நான் இதை வேடிக்கையாகக் கேட்கவில்லை. மற்ற யாரையும் விட இவர்களுக்கு சுதந்திரமும், அரசியல் உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பது லுக்சம்பர்க் வாதம் தர்க்க ரீதியாகச் சென்றடையும் முடிவு. அப்படியானால் இதில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எங்கே உள்ளது.[7]

ரோசாலுக்சம்பர்க்கின் இந்த, "எப்பொழுதுமே முழுமையான'' சுதந்திரம் பற்றிய கருத்துக்களை சுதந்திரம் பற்றி மாவோவின் ஆழ்ந்த கூற்றுக்களுடன் ஒப்பிடுவது அறிவூட்டுவதாக உள்ளது. மாவோவின் கூற்றுப்படி, சோசலிச சமுதாயத்தில் உழைக்கும் மக்களின் சுதந்திரம், அடிப்படை உரிமைகள் ஆகியவை சமுதாயத்தைக் கட்டுப்படுத்தும் உரிமை, பொருளா தாரத்தின் உடமையாளர்களாய் இருக்கும் உரிமை, முதலாளித்துவ மீட்சிக்கு முயற்சிக்கும் எதிர்ப்பு சக்தி களை ஒடுக்குவதற்கும், கட்டுப்படுவதற்கும் ஆன் உரிமை, மேற்கட்டுமானத்தின் அனைத்துத் துறை களிலும் தங்களது ஆட்சியைச் செலுத்தும் உரிமை ஆகியவையே. மற்ற அனைத்தும் இந்த சுதந் திரத்தை அல்லது அடிப்படை உரிமைகளை மையமாக வைத்தே செயல்படவேண்டும். இது லுக்சம்பர்க்கின் சுதந்திரம் பற்றிய வரையறையைவிட ஆழமானதும், சரியானதும் ஆகும். உண்மையில் லுக்சம்பர்க்கின் சம்பிரதாய ஜனநாயகத்திற்கு நேர் மாறானது, எடுத்துக்கொண்ட பொருளின் மையத் தையே அலசுகிறது.

''(அதிகார) துறைகள்" நிறுவனங்கள் ஆகிய வற்றைக் கட்டுப்படுத்துபவர்களே மக்கள் உரிமை களை உத்திரவாதம் செய்கின்றனர். மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது பெரும்பான்மை மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்

படுகின்றன. மாறாக, வலதுசாரிகளோ, வலது சந்தர்ப்ப வாதிகளோ இந்தத் துறைகளையும், நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும் பொழுது அவை பண்புரீதியாக மாற்றம் பெற்று விடுகின்றன. அவற்றால் மக்களின் உரிமைகளை உத்திரவாதம் செய்யமுடியாது. சுருங்கக் கூறினால் மேற்கூட்டுமானத்தைக் கட்டுப்படுத்தும் உரிமை மக்களிடம் இருக்க வேண்டும். (மாவோவின் "சோவியத் பொருளாதார விமர்சனம்" பக்கம் 61)

இங்கே மாவோ, முன்பு லெனின் செய்ததைப் போலவே, மக்கள் திரள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்கும், அவர்களது கம்யூனிச முன்னோடிகளின் தலைமைக்கும் இடையே உள்ள உறவைப் பொருள்முதல்வாத இயக்க இயல் ரீதியாக மிகச் சரியாக விவரிக்கிறார்.

சி.ஆர்.சி. ஆவணத்திலுள்ள இன்னொரு கருத்து, "எத்தனைதான் முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும், சீனாவில் புரட்சிக்குப் பின் நிறுவப்பட்ட புதிய ஜனநாயக மக்கள் சர்வாதிகாரமோ, அதனைத் தொடர்ந்து வந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமோ, லெனின், ஸ்டாலின் ஆகியோர் உருவாக்கிய அடிப்படை அமைப்பிலிருந்து குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் அடையவில்லை என்பது கண்கூடு."

சி. ஆர். சி. ஆவணத்தின் நோக்கத்தையும், அழுத்தத்தையும் கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது, "நல்ல வேளையாக" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. ஏனென்றால் இவர்கள் 'குறிப்பிடத்தக்க மாறுதல்' என்று கூறுவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிடுவதும், ரோசா லுக்சம்பர்க் போன்றவர்களின், "கூர்மையான விமர்சனங்கள்", "சோவியத் முறையின்" அடிப்படைக் கோளாறுகள், சம்பிரதாய

ஜனநாயகத்திலிருந்து சோவியத்தின் விலகல்கள்'' ஆகியவற்றின் அடிப்படையிலான ஒரு ஆட்சிமுறையை ஏற்றுக் கொள்வதும் ஆகும்.

இனி இந்த ஆவணத்தின் மற்றொரு கருத்தைக் காண்போம். "மக்கள் நேரடியாக அரசியலில் பங்கு பெற்று தங்களது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழி முறை ரஷ்ய அமைப்பில் இருக்கவில்லை. மேலும் உற்பத்திக் கருவிகளை சோசலிசமயமாக்கியதால் மையப்படுத்தலும் அதன் விளைவாக மொத்த அமைப்பும் அரசு அதிகார வர்க்கத்தின் கீழ் வருவதும் நடைபெற்றது. லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கீழ் சோவியத் ஒன்றியம் எதிர்கொண்ட இதே அடிப்படைப் பிரச்சினைகளை, சீனாவும் எதிர்கொண்டது. எனவே சோவியத் ஒன்றியத்தில் முன்னேறிய நிலையிலிருந்த முதலாளித்துவ மீட்சி சீனாவிலும் முளைவிடத் தொடங்கியது." (பத்தி 7.3)

## சோசலிசத்தின் கீழ் வர்க்கப் போராட்டமும் மக்கள் திரள் ஆட்சியின் வடிவங்களும்

அரசியல் அமைப்பிற்கும், சோவியத் நாட்டு (பொதுவாகவே சோசலிச சமுதாய) பொருளாதார அமைப்பிற்கும் இடையே நிலவும் உறவை எவ்வாறு இந்த ஆவணம் தவறான அடிப்படையில் ஆய்வு செய்கிறது என்பதை பல்வேறு கோணங்களில், பலமுறை விளக்கி விட்டதால், கடைசியாக நான் மேற்கோள் காட்டியுள்ள (பத்தி 7. 3) வரிகளில் வரும் 'எனவே' என்ற ஒரு சொல்லை மட்டும் குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த 'எனவே' நாம் ஏற்கனவே பலமுறை சுட்டிக் காட்டியுள்ளபடி, பொருளாதாரத்திற்கும், அரசியலுக்கும் ஆன உறவை கருத்து முதல்வாத, இயக்க மறுப்பியல் வாத அடிப்படையில்

சி.ஆர்.சி. ஆவணம் அணுகுவதன் தொடர்ச்சியே. குறிப்பாக, முதலாளித்துவ மீட்சிக்கான அடிப்படைகள் பற்றி இந்த ஆவணம் தலைகீழாக ஆய்வு செய்வதன் தொடர்ச்சியே ஆகும். மேலும், சோசலிச சமுதாயத்தில் முதலாளித்துவ வர்க்கம் முளையிடுவதற்கும் பின்பு முதலாளித்துவ மீட்சிக்கும், அடிப்படைகளாகவும், வழிமுறைகளாகவும் மாவோ அடையாளம் காட்டும் காரணங்களிலிருந்து இந்த 'எனவே' நேரெதிர்த் திசையில் செல்கிறது.

சோவியத் ஒன்றியத்திலும், சீனாவிலும், புரட்சியாளர்களின் தவறான திசைவழியும், கொள்கைகளுமே முதலாளித்துவ மீட்சிக்குக் காரணமாயின என்ற கருத்து முதல்வாத சிந்தனையையும் இந்த 'எனவே' வெளிப்படுத்துகிறது. உண்மை நிலையோ முற்றிலும் வேறானதாகும். உலகம் முழுவதும் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு இட்டுச்செல்லும் இடைக்கட்டமாக உள்ள சோசலிசத்தில் புதைந்துள்ள முரண்பாடுகளே முதலாளித்துவ மீட்சிப் பேராபத்திற்கு அடிப்படைகள் ஆகின்றன. சோசலிச நாடுகளுக்கு உள்ளும், சர்வ தேச அளவிலும் நடைபெற்ற வர்க்கப் போராட்டத்தின் விளைவே முதலாளித்துவ ஆதரவாளர்களின் இன்றைய வெற்றி முழக்கம். சோவியத் ஒன்றியத்திலும், சீனாவிலும் நடந்தேறிய நிகழ்ச்சிகள் உண்மையில், சாராம்சத்தில், சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தால் சர்வதேசப் பாட்டாளிவர்க்கம் தோற்கடிக்கப்பட்டதையே காட்டுகின்றன. புரட்சியாளர்களின் தவறுகள் இரண்டாம் பட்சமானவையே. அவை பெரும்பாலும், ஏகாதிபத்தியத்தாலும், சர்வ தேச அளவில் அதன் மேலாண்மையாலும், ஏற்பட்ட மிகப்பெரிய, உண்மையான பிரச்சினைகளையும், அபாயங்களையும் தீர்க்கத் தவறியதே ஆகும். இதை ஏற்க மறுத்து, சி.ஆர்.சி. ஆவணம், இந்தத் தீர்மானகரமான பிரச்

சினையில் முன்வைக்கும் கருத்துகள், இன்று 'கம்யூனிசத்தின் தவறுகளாக' பறைசாற்றப்படும் கருத்துக்களின் வெறும் எதிரொலிகளே.[8]

வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் காணும் பொழுது, குறிப்பாக, பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும், முதலாளித்துவ வர்க்க எதிர்ப்புரட்சிக்கும் நடக்கும் போரின் தொடக்க காலங்களில் – இத்தகைய தோல்விகள் வியப்பை அளிக்கத் தேவையில்லை. இத்தகைய தோல்விகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதே முக்கியமானது. இந்த தற்காலிகப் பின்னடைவுகளை புதிய, முன்னிலும் சிறந்த வழி காட்டிகளாக மாற்றிக் கொள்வதற்காக தோல்வியிலிருந்து பெறும் பாடத்தைக் கசடறக் கற்க வேண்டும். அதன் மூலம் இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த போரில் இறுதி வெற்றியை நோக்கி நடைபோட வேண்டும்.

ஆனால், போராட்டத்தின் உண்மையான தன்மைகள் புரியாமலிருக்கும் பொழுதோ அல்லது உண்மையின்மீது, சி.ஆர்.சி ஆவணம் முயல்வதுபோல, கருத்துமுதல்வாத விளக்கத்தைத் திணிக்க முயற்சிப்பதாலோ அது இயலாததாகி விடும். எடுத்துக்காட்டாக ஆவணம் இவ்வாறு கூறுகிறது. "மேற்கட்டுமானத்தில் போராட்டப் பகுதிகளை அடையாளம் காட்டிய பொழுதும், உற்பத்தி உறவுகளை அடையாளம் காட்டிய பொழுதும் அவர் (மாவோ) உண்மையில் பிரச்சினையின் மையத்தையே தொட்டு விட்டார். அதேபோல் அரசியல் அதிகாரம் தொழிலாளர் வர்க்கத்தின் கைகளிலோ, அல்லது மற்ற உழைக்கும் மக்கள் திரளிடமோ இல்லை என்பதை ஏற்றுக் கொண்டார். இங்கு அவர் பிரச்சினையின் மையத்தை "அரசியல் அதிகாரத்தை எவ்வாறு மக்களின் கைகளின் கொண்டு வருவது?" அடையாளம் காட்டுகிறார். (பத்தி 7.4)

தவறு! மேற்கட்டுமானத்தின் முக்கிய அங்கங்கள் மக்கள் திரளின் கைகளில் இல்லை என்று மாவோ ஏற்றுக் கொண்டார், முதலாளித்துவப் பாதையாளர்கள் ஆக்கிரமித்துக் கொண்ட அந்த முக்கிய அதிகார அங்கங்களை மீண்டும் கைப்பற்றுமாறு மக்களுக்கு அறை கூவல் விடுத்தார். ஆனால், இந்த முதலாளித் துவ பாதையாளர்கள் தலைமை அதிகாரத்தைக் கைப் பற்றிவிட்டதாகவோ, சமுதாய மொத்தத்தின் அரசியல் அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் இல்லை என்றோ அவர் ஒரு போதும் கூறியதில்லை. மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியானது, அரசு அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் இருக்கும்பொழுது ஆனால் திரிபுவாதமும், முதலாளித் துவ மீட்சியும் அதிகாரத்திற்கு வந்து விடாமல் ஒரு ஜீவமரணப் போராட்டம் நடந்து கொண்டிருந்த கால கட்டத்தில் நடந்தேறியது. அது உண்மையில் பாட் டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் நடைபெறும் புரட்சியின் தொடர்ச்சியே.

பண்பாட்டுப் புரட்சியின் தொடக்க காலங்களில் வழிகாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட 16 அம்ச திட்டம் இதைத் தெளிவாக உணர்த்துகிறது. அத்திட்டம் கூறியது, "மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு புரட்சியானது, நமது சோசலிசப் புரட்சியின் வளர்ச்சி யில் ஒரு புதிய கட்டமே, முதலாளித்துவ வர்க்கம் தூக்கியெறியப்பட்டாலும் கூட அது தனது பழைய கருத்துக்கள், பண்பாடு, மரபுகள், சுரண்டும் வர்க்க பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, மக்கள் திரளைக் கெடுத்து, அவர்களது சிந்தனையை ஆக்கிரமித்து முதலாளித்துவத்தை மீட்டெடுக்க முயற்சிக் கிறது. இந்தச் சவாலை பாட்டாளி வர்க்கம் நேருக்கு நேர் நின்று சமாளித்தாக வேண்டும்.

பண்பாட்டுப் புரட்சியின் இலக்குகளாக எவை அடையாளம் காட்டப்பட்டன? மக்கள் திரளிடம் அரசியல் அதிகாரம் இல்லாத ஒரு சூழலைப்பற்றி அது பேசவில்லை. மாறாக அதிகாரத்தில் இருந்துகொண்டு முதலாளித்துவப் பாதையில் செல்லும் நபர்களைப் போராட்டத்தின்மூலம் தூக்கி எறிவது, முதலாளித்துவ மற்றும் அனைத்துச் சுரண்டல் வர்க்கங்களின் கருத்துக் களையும், முதலாளித்துவ வர்க்க, பிற்போக்குக் கல்வித் துறை மேலாளர்களையும் விமர்சனம் செய்து தூக்கி எறிதல், சோசலிசக் கட்டமைப்பை உறுதிப்படுத்தி மேலும் வளர்த்தெடுப்பதற்கு இசைவாக, சோசலிசத்தின் பொருளாதார அடித்தளத்துடன் இசைவில்லாத மேற் கட்டுமானப் பகுதிகளை கல்வி, கலை, இலக்கியம் முதலியவற்றை மாற்றி அமைத்தல் ஆகியவையே பண் பாட்டுப்புரட்சியின் இலக்குகளாகக் குறிக்கப்பட்டன. [மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி பற்றி சீனப் பொது உடைமைக்கட்சியின் மையக் கமிட்டியின் முடிவுகள் (16 அம்சத்திட்டம்)]

மேலும், பண்பாட்டுப் புரட்சி கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த நேரத்தில், மாவோவிற்கும், சாங்-சுன்-சியோவிற்கும் நடைபெற்ற உரையாடலில் (சி.ஆர்.சி. ஆவணத்திலேயே இது குறிப்பிடப் பட்டுள்ளது) மாவோ இவ்வாறு கூறுகிறார்.

"நமது இன்றையப் புரட்சி, மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் நடைபெறும் ஒரு புரட்சி. இதைத் தொடங்கியதும் நாமே! ஏனெனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் ஒருபகுதி ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது, பாட்டாளி வர்க்கத்திடமிருந்து பறிக்கப்பட்டு முதலாளித் துவ வர்க்கத்திற்குச் சொந்தமாகிவிட்டது. எனவே நாம் ஒரு புரட்சியை நடத்த வேண்டியுள்ளது. [அமெரிக்க

நாட்டில் வெளியிடப்பட்ட மாவோவின் சிந்தனைகள் தொகுப்பில் ஷாங்காயின் மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சிக்கு அறிவுரைகள் என்ற பகுதி, பக்கம் 451]

இங்கே சி.ஆர்.சி. ஆவணம் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த முயற்சிக்கிறது. "கட்சி சர்வாதிகாரம்" என்ற தன்னுடைய தவறான திசையில் செல்லும் கருத்தை கட்சிக்கு உள்ளேயே இருக்கும் முதலாளித்துவ வாதிகளைப் (முதலாளித்துவப் பாதையில் செல்பவர்களை) பற்றிய மாவோவின் சரியான, பண்புரீதியாக மாறுபட்ட ஆய்வுடன் ஒன்றிணைக்க முயலுகிறது. இந்த முதலாளித்துவப் பாதையாளர்களுடன் போராட்டம் நடத்தவேண்டும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதற்கும், சோசலிசப் பாதையில் உறுதியாக நிற்பதற்குமான ஒட்டுமொத்தப் போராட்டத்தின் ஒரு பகுதியாக கட்சியை மேலும் புரட்சிகரமானதாக்க வேண்டும் என்பதே மாவோவின் கருத்தாகும்.

ஆனால் சி.ஆர்.சி. ஆவணமோ உண்மையின்மீது தன் கருத்துமுதல்வாதப் பார்வையைத் திணிக்கும் பண்பைத் தொடர்கிறது. பண்பாட்டுப் புரட்சியைப் பற்றிய அதன் கருத்து பின்வருமாறு:

"மாவோவே சுட்டிக்காட்டியுள்ளதுபோல் இந்தப் புதிய போராட்ட வடிவமான பண்பாட்டுப்புரட்சி உண்மையில் மக்களாலேயே உருவாக்கப்பட்டது. அது உண்மையில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் நிலவிய அரசு அதிகார வர்க்கக் கட்டமைப்பை எதிர்த்த போராட்டமாகும். அது மக்களிடமிருந்து தன்னிச்சையாக வெடித்தெழுந்ததால் அராஜக வழியில் விலகிச் சென்றதும் இயல்பானதே. இந்தப் பாடங்களை முறைப்

படுத்தி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு புதிய அரசியல் முறையாகவும், போராட்ட வடிவமாகவும் உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக, இந்தத் திசையில் உருப்படியான வளர்ச்சி எதுவும் மாவோவின் காலத்தில் ஏற்படவில்லை (பத்தி 7.5)

மீண்டும் தவறு. நம்பவே முடியாத அளவு தவறு. முதலாவதாக இந்தக் கருத்து, வால்பிடிக்கும் தன்மையையும், தன்னெழுச்சிக்குத் துதிபாடும் தன்மையையும் கொண்டுள்ளது. வேடிக்கை என்னவென்றால் பண்பாட்டுப் புரட்சி உண்மையில் உயர்மட்ட கும்பல்களுக்கிடையே நடந்த அதிகாரப் போட்டியே, இதில் மக்கள் பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டனர் என்று அடிக்கடி சொல்லப்பட்டுவரும் கருத்தின் மறுபுறமே. (அல்லது அக்கருத்தின் கண்ணாடி பிம்பமே) இந்தக் கருத்து. பண்பாட்டுப் புரட்சி "தன்னிச்சையாக" வெடித்தெழவில்லை. மற்ற புரட்சிகர நடவடிக்கைகளைப் போலவே பண்பாட்டுப் புரட்சியும் அடிப்படையில் மக்களால் உருவாக்கப்பட்டதே எனினும் கம்யூனிச முன்னோடிகள் இதற்குத் தலைமை கொடுத்தனர். மாவோ "இதைத் தொடங்கி வைத்தவர்கள் நாமே" என்று கம்யூனிஸ்ட் கட்சியின் பாட்டாளி வர்க்கத் தலைமையகத்தைக் குறிப்பிடுவதை இங்கு நினைவு கூறவும். இந்தத் தலைமை இருந்திராவிடில் மாபெரும் பாட்டாளிவர்க்கப் பண்பாட்டுப் புரட்சியே நடந்திராது. மாறாக அது தப்பித்தவறித் துவங்கியிருந்தாலும்கூட வெகுவிரைவிலேயே ஒடுக்கப்பட்டிருக்கும். நிச்சயமாக அத்தனை உயரத்தை எட்டியிருக்க முடியாது. மாபெரும் மாற்றங்களைச் சாதித்திருக்க முடியாது. மக்கள் திரளின் உற்சாகமும் கம்யூனிச முன்னோடிகளின் தலைமையும் இணைந்து உருவாகியதே பண்பாட்டுப் புரட்சி.

ஆனால் சி.ஆர்.சி. ஆவண ஆசிரியர்களோ இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஏனெனில் கட்சியை மக்கள் திரளுக்கு எதிரானதாகக் காட்டுதல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் கட்சி வகிக்கும் தலைமைப் பொறுப்பை மக்களின் மீது கட்சியின் சர்வாதிகாரமாக அறிவித்தல் போன்ற அவர்களது கருத்தோட்டங்களுக்கு இந்த உண்மைகள் இசைவானதாக இல்லை. அதனால்தான் அவர்கள், "பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் நிலவிவந்த அரசு அதிகார வர்க்க அமைப்பை எதிர்த்த போராட்டமே மாபெரும் பாட்டாளிவர்க்கப் பண்பாட்டுப்புரட்சி" என்று கூறுகின்றனர். உண்மை அதுவன்று. மாவோ கூறியதுபோல் அது உண்மையில் ஒரு புரட்சிகரப் போராட்டம். அதிகாரத்தில் இருந்துகொண்டு முதலாளித்துவப் பாதையில் செல்பவர்களையே தன் இலக்காகக் கொண்டிருந்தது.

அடுத்து ஷாங்காய் கம்யூனைப்பற்றிய விவாதத்தில் சாங்-சுன்-சியாவோவிடம் மாவோ கூறியதை இந்த ஆவணம் எவ்வாறு புரிந்து கொள்கிறது என்று பார்ப்போம். "ஷாங்காய் கம்யூனைப்பற்றி சாங்-சுன்-சியாவோவிடம் மாவோ கூறியனவற்றைக் கவனித்தால், பண்பாட்டுப் புரட்சியின் பொழுது அவர்களை எதிர்நோக்கிய கேள்விகளுக்கு மாவோவிடம் புதிய விடைகள் எதுவும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அதை விட்டுவிட்டு அவர், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை காப்பதற்கு கட்சியின் இறுதியான அதிகாரம் பற்றிப் பேசத் தொடங்கிவிடுகிறார்" என்று குறிப்பிடுகிறது. (75)

இங்கு சி.ஆர்.சி. ஆவணம் முழுக்க முழுக்கத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளது. இங்கு பிரச்சினை மாவோவிடம் 'புதிய விடைகள்' இல்லாதது அல்ல, அவற்றை இந்த ஆவணம் எழுதியவர்கள் புரிந்து

கொள்ள முடியாமல் போனதுதான். அன்று சீனாவில் இருந்த நிலைமைகளையும், சர்வதேச நிலைமைகளை யும் மனதில் கொண்டு பார்த்தால் பண்பாட்டுப்புரட்சி கொந்தளித்து எழுந்த நேரத்தில் ஷாங்காயில் உருவான கம்யூன்முறை அன்றைய சூழலுக்குப் பொருத்தமான பாட்டாளிவர்க்க சர்வாதிகார வடிவம் அல்ல, அன்று நிலவிய பருண்மையான நிலைமைகளை, குறிப்பாக எதிரெதிர் அணியில் நிற்கும் வர்க்கங்களின் வலிமை களை ஒப்பிடும்பொழுது அந்த வடிவம் சரியானதல்ல என்பதே மாவோ கூற்றின் சாராம்சம். வேறு வார்த்தை களில் சொல்வதானால், 1871 பாரீஸ் கம்யூனின் வடி வத்தை அப்படியே பின்பற்றி (ஷாங்காய்) கம்யூன் வடிவத்தை அன்று சீனா முழுவதும் நடைமுறைப் படுத்த முயற்சித்திருந்தால், எதிர்ப் புரட்சியாளர்கள் பாட்டாளி வர்க்க ஆட்சியை முற்றாகத் தூக்கி எறிந் திருக்க முடியும். அல்லது கம்யூன் வடிவத்தை தவ றாகப் பயன்படுத்தி அவற்றைத் தலைகீழாக மாற்றி இருக்க முடியும் பின்பு அவர்களை அடக்கி ஒடுக்கு வதற்கு கம்யூன்களை பயன்படுத்திக் கொண்டிருப்பார் கள். நாம் முன்பே கூறியபடி, சோசலிச சமுதாயத்தில் புதைந்துள்ள முரண்பாடுகளும், சர்வதேச நிலைமை களுமே இதற்குக் காரணங்களாகும்.

பாரீஸ் கம்யூனைப்பற்றிய மாவோவின் ஆய்விலும் இதே சாரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாரீஸ் கம்யூன் நசுக்கப்பட்டிராவிட்டால் அது ஒரு முதலாளித் துவ கம்யூனாக மாறியிருக்கும் என்று குறிப்பிட்டார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அன்று இருந்த உண்மையான சூழ்நிலையில், பாரீஸ் கம்யூன் இன்றும் சிறிது காலம் தாக்குபிடித்திருந்தால், அந்த வடிவத் திலேயே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நிறுத்த முயற்சித்திருந்தால் முதலாளித்துவ சக்திகள் அதனை உள்ளிருந்தே கைப்பற்றியிருக்கும்.

பொருட்களின் சாராம்சத்தை உள்ளடக்கத்தில் தேட வேண்டும், உருவத்தில் அல்ல என்பதை மாவோ அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கண்ணோட்டத்தையே அவர் சோவியத் ஒன்றியத்திற்கும் பயன்படுத்துகிறார். சோவியத் அதிகார வடிவத்தைப்பற்றிச் சொல்வதானால் அது உருவானவுடன் லெனின் பேரானந்தம் அடைந்தார்.

அதை தொழிலாளர்கள், விவசாயிகள், போர் வீரர்கள் இணைந்து உருவாக்கிய மிகச்சிறந்த படைப்பாகவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் ஒரு புதிய வடிவமாகவும் கருதினார். ஆனால் என்ன பயன்? எவ்வாறு தொழிலாளர்களும், விவசாயிகளும், போர் வீரர்களும் இவ்வடிவான அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியுமோ, அதேபோல் முதலாளித்துவ வர்க்கமும் குருசேவும் இவ்வடிவத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்பதை லெனின் எதிர்பார்க்கவில்லை. எனவே தற்போது லெனின் சோவியத் குருசேவ் சோவியத்தாக மாற்றப்பட்டுவிட்டது (மாவோ, இதர நூல்கள் தொகுப்பு 2, பக்கம் 452)

சி. ஆர். சி. ஆவணம் இந்தப் பகுதியை மேற்கோள் காட்டுகிறது. ஆனால் அதன் பொருளைத்தான் புரிந்து கொள்ளாமல் போகிறது. மாவோவின் ஆழ்ந்த வரலாற்றுச் சிந்தனைகளை ஆவணம் ஆழ்ந்த குழப்பங்கள் என்று குறிப்பிடுகிறது. ஆழ்ந்து குழப்பியுள்ளது. இந்த ஆவண ஆசிரியர்கள் சம்பிரதாய முதலாளித்துவ ஜனநாயகம் அதன் விருப்பு வெறுப்புகள் மாயக் காட்சிகள் ஆகியவற்றில் இவர்களது பார்வை ரொம்பத் தான் பழுதுபட்டுவிட்டது. வர்க்கங்கள் இருக்கும் வரை, குறிப்பாக முதலாளித்துவ வர்க்கம் அனைத்து நிலைகளிலும் திசைகளிலும் சூழ்ந்திருக்கும்வரை தன் வடிவ அமைப்பினால் மட்டுமே முதலாளித்துவ மீட்சி

நுழைந்துவிட முடியாத அரணாக விளங்கக்கூடிய எந்த வடிவமும் இல்லை, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்ட வடிவங்களையே முதலாளித்துவவர்க்கம் கைப்பற்றித் தங்களது நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று மாவோ அதுவரை கற்ற பாடங்களை ஒட்டுமொத்தமாக தொகுத்தளிப்பதைக்கூட இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதனால்தான் பொருட்களின் சாராம்சம் (அடிப்படைக்கூறு) உள்ளடக்கமே தவிர உருவமல்ல. துரதிர்ஷ்டவசமாக இன்று தீர்க்கதரிசனமாகிவிட்ட மாவோவின் வேறொரு கூற்றிலும் இந்தப் புரிதல் உள்ளதைக் காணலாம். "எங்களைத் தூக்கி எரிந்து விட்டு முதலாளித்துவ வர்க்கம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அவர்கள் (அரசின்) பெயரைக் கூட மாற்ற வேண்டியிராது. மக்கள் சீனக்குடியரசு என்றே தொடர்ந்து அழைத்துக்கொள்வார்கள். பெயரல்ல, எந்த வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ளது என்பதே முதன்மையானது, அடிப்படையானது." (மாவோ இதர நூல்கள் தொகுப்பு 2. பக். 453)

மாவோ சாங்-சுங்-சியாவோவுடன் பேசியபொழுது எடுத்துக் கொண்ட முக்கிய விசயங்கள் இவையே. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் உள்ள அமைப்பு முறையை முதலாளித்துவ வர்க்கமும் பயன் படுத்திக் கொள்ள முடியும். வடிவத்தை விட (வர்க்கம்) உள்ளடக்கத்திலேயே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அன்றைய (சீனச்) சூழலில் கம்யூன்முறை பாட்டாளி வர்க்கத்தைவிட முதலாளி வர்க்கத்திற்கே அதிக சாதகமாக இருந்திருக்கும். அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பலவீனப்படுத்தி அதைத் தூக்கியெறிய முயலும் முதலாளிவர்க்கத்தின் கரங்களைப் பலப்படுத்தி

யிருக்கும் அல்லது அவர்கள் உள்ளிருந்தே கம்யூன்களை பலவீனப்படுத்தித் தலைகீழாக மாற்றியிருப்பார்கள். இந்த விவாதங்களில் மிக முக்கியமானதாக மாவோ பின்வரும் கூற்றை முன் வைக்கிறார். "முன்னோடிகளின் தலைமையிலிருந்தாக வேண்டும். அதனை கம்யூனிஸ்ட் கட்சி என்று கூறினாலும் சரி, அல்லது வேறு ஏதாவது பெயரில் அழைத்துக் கொண்டாலும் சரி ஆனால் ஒரு தலைமைக் குழு இருந்தாக வேண்டும்.

அதற்குக் காரணம், எப்படி ஆயினும் கட்சியின் சர்வாதிகாரத்தைத் திணித்தாக வேண்டும் என்று மாவோ கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார் என்பதல்ல, மாறாக நான் ஏற்கனவே விவாதித்த விசயங்கள் அதாவது உலகம் முழுவதும் முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுகின்ற கட்டத்தில் செயல்படும் சமுதாய முரண்பாடுகள் மக்கள் திரளின் புரட்சிகர சக்தியும் உற்சாகமும், வர்க்கப் போராட்டங்களும் நேர் கோட்டில் செல்லாமல் அலை அலையாகவோ அல்லது சுழல் வட்டங்களாகவோ செல்வது ஆகியவையே காரணங்களாகும். இந்த முக்கியமான கருத்தை மீண்டும் தெளிவாகப் பார்ப்போம். சோசலிச சமுதாயத்தில் புதைந்துள்ள முரண்பாடுகள் ஆன உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்கும், கிராமப்புறங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்குமான முரண்பாடுகள் இதுபோன்ற மேலும் பல முக்கிய முரண்பாடுகள்; மொத்தத்தில் ஒரு வர்க்க முழுமைக்கும் அதன்முன்னோடிப் பகுதிகளுக்கும் இடையிலான புறவய வேறுபாடுகளாக வெளிப்படுகின்றன. இந்தப் புறவய வேறுபாடுகள் ஏதாவது ஒரு வகையிலான தலைமைக் குழுக்கள் இருப்பதன் மூலம் வெளிப்படுகின்றன. அது பாட்டாளி வர்க்கத்தலைமையாக இல்லாவிட்டால் நேரடியாகவோ அல்லது சோசலிச போர்வையிலோ வரும்

முதலாளித்துவ வர்க்கத் தலைமையாக இருக்கும். சரியான கருத்து தலைமை தாங்காவிட்டால் தவறான கருத்து தலைமைப் பொறுப்பில் இருப்பதைப்போன்றதே இதுவும். சரியான கருத்திற்காக முழுப் புரிதலுடன் போராடி நடைமுறைப்படுத்த வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தன்னெழுச்சிகளின் அடிப்படையில் செயல்படுத்த முயற்சித்தால் முதலாளித்துவ வர்க்கத்திடம் அனைத்தையும் தாரைவார்ப்பதிலேயே முடியும்.

இதனால்தான் மாவோ கூறுவதுபோல் தலைமைப் பொறுப்பில் ஒரு கட்சி இருந்தாக வேண்டும். அதனால் தான் குறிப்பிட்ட கட்டத்தின் சூழ்நிலையில் கம்யூன்கள் சரியான வடிவங்களாக இருக்க முடியாது. முதலாளித்துவ வர்க்கம் உள்ளிருந்தே கைப்பற்றிக் கொள்வதற்கோ அல்லது ஒட்டு மொத்தமாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிவதற்கோ மட்டுமே இவை சாதகமாக இருக்கும்.

இவற்றுடன் சர்வதேச நிலைமைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏகாதிபத்தியங்களின் தாக்குதலைச் சமாளிக்க எம்மாதிரியான நிறுவனங்களும், தயாரிப்புக்களும் தேவை? இவை ஏற்கனவே சோசலிச சமுதாயத்தில் நிலவும் வர்க்கங்கள், வர்க்கப் போராட்டங்கள், முரண்பாடுகள் ஆகியவற்றுடன் எவ்வாறு உறவு கொள்கின்றன? இந்த கேள்விகளைப் பற்றிய ஆழமான புரிதல்களையும் அவற்றைத் தீர்க்கும் ஆழமான முயற்சிகளையும் மாவோவின் விவாதம் வெளிப்படுத்துகின்றது. ஆனால் சி.ஆர்.சி. ஆவணம் இவை அனைத்தையும் காணத் தவறி மேலோட்டமான சம்பிரதாய அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது.

எனவே அது மாவோ கூற்றின் சாரத்தை உணராமல் மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, "அதை விட்டுவிட்டு

அவர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் காப்பதற்குக் கட்சியின் இறுதியான அதிகாரம் பற்றிப் பேசத்தொடங்கி விடுகிறார்," என்று கூறிவிடுகிறது. கட்சியின் ஒட்டு மொத்த தலைமைப் பங்கை மாவோ தொடர்ந்து உயர்த்திப் பிடித்தார் என்பது உண்மைதான். ஆனால் அவர் அத்தோடு நின்றுவிட வில்லை. சமுதாய முழுமையையும் புரட்சிகரமாக்குவதற்கு ஒரு பகுதியாக கட்சியையும் புரட்சிகரமாக்க வேண்டும் என்பதற்கும் அழுத்தம் கொடுத்தார். பாரீஸ் கம்யூனின் பல குறிப்பான வடிவங்களையும் கொள்கைகளையும் அப்படியே நடைமுறைப் படுத்துவது இயலாது என்று மாவோ ஏற்றுக் கொண்டாலும் கம்யூனின் அடிப்படைக் கொள்கைகளையும் நோக்கங்களையும் இயன்றவரை நடைமுறைபடுத்த முயற்சித்ததை மாபெரும் பாட்டாளி வர்க்கபண்பாட்டுப்புரட்சியின் கொந்தளிப்பிற்குப் பின் கம்யூனிஸ்ட் கட்சி சீரமைக்கப்பட்ட முறையிலிருந்து புரிந்து கொள்ளலாம். கட்சி கீழ்மட்டத்திலிருந்து தொடங்கி வெளிப்படையான முறையில் நடைபெற்றது. மாற்றி அமைக்கப்பட வேண்டிய கட்சிக் கிளைகளின் உறுப்பினர்கள் பொதுக்கூட்டங்கள் மூலமாக மக்கள் திரளின் விமர்சனங்களுக்கும் கண்காணிப்பிற்கும் உட்படுத்தப்பட்டனர்.

இங்கே பாரீஸ் கம்யூனின் அடிப்படைக் கொள்கைகளும் நோக்கங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் கட்சித் தலைமையுடன் மக்கள் திறளினாலேயே நடைமுறைப் படுத்தப் பட்டதற்கு இவை சான்றுகளாக விளங்குகின்றன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மக்கள் திரள் வடிவமாக மாவோ புரட்சிகரக் குழுக்களை ஆதரித்து பிரபலப்படுத்தினார். அன்றைய சூழலில் தலைமை தாங்குவதற்குப் பொருத்தமான வடிவமாக அவற்றைக் கருதினார். புரட்சிகரக்குழுக்கள் மக்களாலேயே உரு

வாக்கப் பட்டவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவை கட்சியின் பாட்டாளி வர்க்க தலைமையகத்தால் தலைமை தாங்கப்பட்டன. இந்த வடிவம் முதலில் சீனாவின் வடகிழக்குப்பகுதியில் குறிப்பாக ஹுய்லாங் ஜியாங் மாநிலத்தில் மக்கள் பொங்கி எழுந்தபோது தொடங்கியது. பின்பு இவ் வடிவம் தொகுக்கப்பட்டு சமுதாயம் முழுமையும் அதன் அனைத்து மட்டங்களிலும் பிரபலமாக்கப்பட்டது. ஆம்! நிறுவனமயமாக்கப்பட்டது!! பண்பாட்டுப்புரட்சியால் உருவாக்கப்பட்ட முக்கியத்துவம் நிறைந்த புத்தம் புதிய ஒன்றாகும் இது. ஏற்கனவே குறிப்பிட்டது போல சீன சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் ஆட்சி யையும், நிர்வாகத்தையும், அரசு, கட்சி முன்னோடி களையும், மக்களையும் இணைக்கும் ஒருவழியாகும்.

சி.ஆர்.சி. ஆவணத்தின் கூற்றில் இந்த அம்சத்தை பற்றிய புரிதல் துளிகூட இல்லை. அது இவ்வாறு கூறு கிறது:

"அரசு அமைப்பின் வடிவமல்ல, எந்த வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது என்பதே முக்கிய மானது என்பதே மாவோ கூற்றின் மையக் கருத்தாகும். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அமையும் வடிவத்திற்கு மார்க்ஸ் கொடுத்த முக்கியத்துவத்தை இங்கே மறந்தே விட்டார் என்பதை இது காட்டுகிறது. (பத்தி 7.5)

யாருக்குக் காட்டுகிறது? அது அவ்வாறு எதையும் காட்டவே இல்லை. மீண்டும் ஒரு தடவை ஆவண ஆசிரி யர்கள் புரிந்து கொள்ளாமலேயே படித்து மேற்கோளும் காட்டுகின்றனர். மாறாக இந்தக் கேள்விகளின் மேல் மாவோ குறிப்பாக, அதிகக் கவனம் செலுத்தினார் என் பதையே இது காட்டுகிறது. உருவம் மட்டுமே விசயத்

தின் சாராம்சம் அல்ல என்பதை அழுத்தமாகக் கூறிய அதே சமயத்திலேயே பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் ஒன்றிணைக்க மாவோ அதிக கவனம் செலுத்தினார். மக்கள் திரளே சோசலிச பொருளாதாரத்தின் சொந்தக்காரர்கள் ஆகவும் முதலாளித்துவ வர்க்கத்தின் மேல் தனது சர்வாதிகாரத்தை முழுமையாகச் செலுத்தவும், தங்களது ஆட்சியை உறுதிபடுத்திக் கொள்ளவும் சாதகமான புதிய வடிவங்கள் உருவாக்குவதில் மாவோ குறிப்பான கவனம் செலுத்தினார்.

கட்சித்தலைமையிலிருந்து திரிபுவாதிகளின் கடும் எதிர்ப்பைச் சமாளித்து முன்பு கிராம மக்களின் கம்யூன்களை உருவாக்குவதற்கு மக்களுக்கு ஆதரவு கொடுத்ததும் தலைமை அளித்ததும் மாவோதான். மக்கள் கம்யூன்கள் பாரீஸ் கம்யூனை அப்படியே ஒத்திரா விட்டாலும் அதன் அடிப்படைப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருந்தன. அவை சோசலிச உற்பத்தியிலும் உறவிலும் ஒரு புதிய முறை, மேற்கட்டுமானத்தில் ஒரு புதிய மாற்றம் மக்களின் ஈடுபாட்டுடன் கூடிய மிக முன்னேறிய நிர்வாக முறையையும் பொது உடமை முறையில் முன்னேற்றம் அடைந்த பொருளாதார முறையையும் ஒன்றிக் காக்கும் புதுமையான வடிவங்கள். பொதுவாகவே மாவோ விவசாயத்திலும் தொழில் துறையிலும் மிக முன்னேறிய சோசலிச உற்பத்தி உறவுகளை நிறுவுவதில் புதிய அனுபவங்களைத் தொகுத்து பிரபலப் படுத்தினார். பழைய, உழைப்புப் பிரிவினை முறையைத் தகர்க்கும் புதிய வழிமுறைகளை ஊக்குவித்தார். நிர்வாகத்திலும் இயக்குவதிலும் மக்கள் திரளைப் பங்கெடுக்கச் செய்தல், அதே நேரம் மேலாளர்கள், நிர்வாக அதிகாரிகள், மூளை உழைப்புத் தொழிலாளிகள் ஆகியோரை மக்கள் திரளுடன் இணைத்து நேரடியான உற்பத்தி உழைப்பில் ஈடுபடச் செய்தல் ஆகியவற்றை

நடைமுறைப் படுத்தினார். மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியின் பொழுது இவை மேலும் சிறப்பான முன்னேற்றம் அடைந்தன.

செறிவு மிக்க இந்த வரலாற்று அனுபவங்களைப் புறக்கணித்துவிட்டு சி.ஆர்.சி. ஆவணம் பொருள் முதல்வாதத்திலும் சம்பிரதாய வாதத்திலும் அமிழ்ந்து கிடக்கிறது. சில பக்கங்களைத் தாண்டியதும் ஆவணம் மீண்டும் தனது தவறான புரிதலை வெளிக்காட்டுவதுடன் தவறு மேலும் பெரிதாகிறது. லெனின் சோவியத்துக்கள் குருச்சேவுடைய சோவியத்துக்களாக மாற்றம் அடைந்த வரலாற்று உண்மையினை மாவோ தொகுத்தளிக்கும் உண்மையான பாடங்களையும் ஆழ்ந்த சிந்தனைகளையும் திரிக்கின்றது. "புதிய அரசியல் அமைப்பு வடிவங்களின் முக்கியத்துவத்தையும்மாவோ புரிந்து கொள்ளவில்லை." மாவோ கருத்துப்படி, "சோவியத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியே அல்ல," என்றே சி.ஆர்.சி ஆவணம் கூறிவிடுகிறது. (பத்தி 7.11) இது நம்பவே இயலாத ஒன்றாகும். நாம் ஏற்கனவே பார்த்தது போல் மாவோவின் கருத்து இது அல்ல. இதில் வேறு ஒரு வேடிக்கையும் உள்ளது.

அரசாட்சி செய்வது சோவியத்துகளே, கட்சிகள் அல்ல என்றாலும் சோவியத்துக்கள் புது மாதிரியான 'சிறப்பு நிறுவனங்கள்' என்றும் லெனின் குறிப்பிட்டதை மறுத்து சோவியத்துக்கள் நிறுவனமயமாக்கப்பட்ட கட்சித் தலைமையின் கீழ் வந்துவிட்ட பின் அவற்றில் பண்பு ரீதியான புதுமை எதுவும் இல்லை என்று வாதிட்டது சி.ஆர்.சி. ஆவணம் (பத்தி 5.7, 5.8) இப்போது அதே ஆவணம் இக்கருத்தை மாவோ வெளியிட்டதாகக் கூறுகிறது. மாவோ அம்மாதிரி எங்கும் கூறாதது மட்டும் அல்ல, அதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையே எடுத்துள்ளார்.

மாபெரும் பாட்டாளிவர்க்க பண்பாட்டுப் புரட்சியைப்பற்றி சி.ஆர்.சி ஆவணத்தின் மதிப்பீடுகளை மேலும் காண்போம்.

"மாவோவின் தலைமையிருந்ததால் மட்டுமே பண்பாட்டு புரட்சி சாத்தியமானது. அது அன்று நிலவிய அரசியல் அமைப்பிற்கு வெளியே உருவானது. சோசலிச காலகட்டம் முழுவதும் இன்னும் பல பண்பாட்டு புரட்சிகள் தேவைப்படும் என்று மாவோ சுட்டிக்காட்டியிருப்பினும் கூட அம்மாதிரியான பண்பாட்டு புரட்சிகள் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ள அமைப்பு இல்லாமல் அவை தொடரப்போவது இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் மாவோவோ சீனத்தின் மற்ற சோசலிசத் தலைவர்களோ அத்தகைய ஒரு அமைப்பை உருவாக்க சிந்தனை அளவிலாவது வடிவத்தைப் பார்க்கக்கூட இல்லை. அவர்கள் செய்ததெல்லாம் பழைய பாட்டாளிவர்க்க சர்வாதிகார அமைப்பையே பயன்படுத்தி முதலாளித்துவ வர்க்கத்தின் மீது முழுமையான சர்வாதிகாரத்தை நிறுவியதுதான். அத்தகைய அனுகுமுறை மேலும் சர்வாதிகாரமானதாகத் தோன்றியது. பண்பாட்டுப் புரட்சியின் அரசு அதிகாரவர்க்க எதிர்ப்புத் தன்மைகூடத் திரிந்து போனது. (பத்தி 7.6)

இது மேலும் பொருள்முதல்வாதமும் இயக்க மறுப்பு இயல் வாதமும் கொண்டதாகும். சோசலிச சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டால் எவ்வாறு அத்தகைய உத்திரவாதம் இருக்க முடியும்?

எந்த சம்பிரதாய நிறுவனம் அல்லது செயல் முறை, பண்பாட்டுப்புரட்சியை அதன் வெற்றியை உத்திரவாதம் செய்ய முடியும்.

இன்னொன்றையும் நாம் கேட்டாக வேண்டும்.

"மேலும் சர்வாதிகாரமானதாய்" யாருக்கு? எந்த வர்க்கத்திற்கு "தோன்றியது?" மிகவும் பின்தங்கிய பகுதியினருக்கு வால் பிடிக்கும் தன்மையையே இந்த ஆவணம் தொடர்ச்சியாக இங்கும் வெளிப்படுத்துகிறது. முதலாளித்துவ ஜனநாயக விருப்பு வெறுப்புக்களுக்கும் பச்சையான கம்யூனிச எதிர்ப்பு உட்பட்ட மற்ற முதலாளித்துவ சிந்தனைகளுக்கும் தரகு வேலை செய்கிறது. இந்த ஆவணம் உண்மையில் இந்த சர்வாதிகாரத்தால் எரிச்சல் அடைந்திருந்த முதலாளித்துவ வர்க்கம் முதலாளித்துவ அறிவு ஜீவிகள் ஆகியோரின் நிலையையே காரணம் வெளிப்படையாக எடுக்கிறது. இங்கே அராஜகவாதிகளின் கருத்தை கேலி செய்து ஏங்கெல்ஸ் எழுதிய கருத்துகளை குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்கும். அக்கருத்துகளில் பாரீஸ் கம்யூனின் வரலாற்றுப் பாடங்கள் சுட்டிகாட்டப்படுவது இன்னும் சிறப்பான அம்சமாகும்.

"இந்த கனவான்கள் புரட்சியை எப்பொழுதுதாவது பார்த்திருக்கிறார்களா? புரட்சியைப் போல் அதிகார வெறி பிடித்தது எதுவுமே இல்லை. அதில் மக்கள் திரளின் ஒரு பிரிவு துப்பாக்கி சனியன்களையும் பீரங்கிகளையும் பயன்படுத்தி தங்களது விருப்பத்தை மற்றொரு பிரிவின் மேல் திணிக்கிறது. இவைகள் அனைத்துமே அதிகார வெறி பிடித்த முறைகள்தான். வெற்றி பெற்ற பிரிவு தங்களது ஆயுத பலத்தைக் கண்டு பிற்போக்கு சக்திகளுக்கு ஏற்படும் நடுக்கத்தை ஆதாரமாகக் கொண்டே தங்களது ஆட்சியை நிலைநிறுத்த முடியும். முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக ஆயுதம் தாங்கிய மக்களது அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் இருந்திருந்தால் பாரீஸ் கம்யூனின் ஒரு நாளைக்கு மேல் தாக்குப் பிடித்திருக்குமா? அந்த அதிகாரத்தை மிகக் குறைவாகவே பயன்படுத்தியதற்காக நாம் அதைக் குற்றம் சாட்டக் கூடாதா? (அரசு

புரட்சியும் நூலில் லெனினால் எடுத்தாளப்பட்டுள்ளது. பக்கம் 442-43)

இங்கே எங்கல்ஸ் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வர்க்க உள்ளடக்கத்தையே மனதில் கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அவர் பொதுப்படையான உருவமற்ற அதிகாரத்தைப் பற்றிப் பேசவில்லை. குறிப்பாக பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர அதிகாரம் பற்றிப் பேசுகிறார். இதையே தான் மாவோவும் சீனாவின் மற்ற சோசலிசப் பாதையாளர்களும் செய்தனர். அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் மீதும் முதலாளித்துவ மீட்சியை விரும்பியோர் மீதும் மக்கள் திரள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதை உயர்த்திப் பிடித்து அதற்கான வழிவகைகளைக் கண்டறிவதில் தலைமைப் பொறுப்பேற்றனர்.

## அரசு அதிகார வர்க்கப் பிரச்சனைகள் கட்சியின் பணிகள் மற்றும் சோசலிசத்தின் கீழ் அரசின் வடிவம்

அடுத்து 'அடிப்படைத் தவறுகள்'என்ற தலைப்பின் கீழ் இந்த ஆவணம், லெனின் எங்கே எவ்வாறு தவறு செய்தார் எனக் கண்டுபிடிக்கப் புறப்படுகிறது. ஆனால் இந்தக் கண்டுபிடிக்கும் முயற்சியோ ஆவணம் முழுவதும் ஊடுருவி நிற்கும் அடிப்படைத் தவறுகளை மேலும் ஆழமாக்குவதிலேயே போய் முடிகிறது. ஏற்கனவே உள்ள வாதங்கள் மோசத்திலிருந்து படுமோசத்திற்குச் செல்கின்றன. அது மட்டுமல்ல, மார்க்சிய-லெனினிய-மாவோயிசத்திலிருந்து வெளிப்படையான விலகல்களும் நழுவல்களும் நிறைந்த "புதிய" வாதங்களும் அறி

முகப்படுத்தப்படுகின்றன. சி.ஆர்.சி. ஆவணத்தின் மீதான இந்த விமரிசனத்தின் இனிவரும் பகுதிகள் அந்த "புதிய" வாதங்களில் கவனம் செலுத்துவதுடன், அவை ஏவ்வாறு புதியவையே அல்ல என்பதையும் விளக்கும்.

"பாரீஸ் கம்யூனின் அரசியல் சட்டமைப்பில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எந்தவித நேரடிப்பொறுப்பும் இருக்கவில்லை" (பத்தி 8.4)

இதற்கு நாம் வரலாற்றுப் பூர்வமான பார்வையுடன் மீண்டும் சொல்ல விரும்புவது "நல்ல வேளை"என்பதே. கம்யூன் உள்ளிருந்த செல்வாக்கு மிகுத்த சக்திகளில் ஏதாவது ஒன்று அவ்வாறு நேரடியாக தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தால் அது பாட்டாளி வர்க்கத்தை உண்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் தலைமையாக இருந்திராது என்ற பொருளிலேயே இவ்வாறு கூறுகிறேன். ஏனெனில் கம்யூனின் முன்னணியில் இருந்த சக்திகள் உண்மையில் கம்யூனிஸ்ட்டுகள் அல்ல, சோசலிஸ்டுகளே. அதுவும் விஞ்ஞான சோசலிஸ்டுகள்கூட அல்ல. அவர்கள் மார்க்ஸின் அரசியல் எதிரிகள். கம்யூன் மேலும் சிறிது காலம் நிலைத்து இருந்து இவர்களது தலைமையும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் எப்படியும் முதலாளித்துவ மீட்சி நடைபெற்றிருக்கும். உண்மையான முன்னோடி கம்யூனிஸ்ட் கட்சி இல்லாதிருந்ததுதான் கம்யூனின் அபாயகரமான தவறாகும் என்பதை மீண்டும வலியுறுத்துகிறோம். இது பாரீஸ் கம்யூனின் அனுபவத்தின் அடிப்படை குறைபாடுகள் பற்றிய விசயமாகும். மார்க்ஸ் அடையாளம் காட்டிய பாரீஸ் கம்யூனின் அடிப்படைகளையும் பண்புகளையும் ருசியப் புரட்சியிலும்,சீனப்புரட்சியிலும் உயர்த்திப் பிடித்தனர். ஆயினும்கூட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் விரிந்த பரந்த அனுபவத்திற்கு எதிராக பாரீஸ் கம்யூனின் குறுக்கலான அனுபவத்தை முன்வைத்தல் தவறாகும்.

சி.ஆர்.சி. ஆவணத்தின் அடுத்த வாதத்தைக் காணலாம்.

"தனது அரசும் புரட்சியும்" நூலில் லெனின் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அமைப்பு முறைபற்றி விளக்கியுள்ளார். ஆனால் இதில் எங்குமே கட்சியின் பங்குபற்றி கூறாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. இது ஒரு வேளை பாரீஸ் கம்யூனின் அரசியல் அமைப்பால் ஏற்பட்ட பாதிப்பாயிருக்கலாம். ஆனால் பாரீஸ் கம்யூனை போல் அல்லாமல் இங்கே கட்சி மிக முக்கியப்பங்கு வகிக்கவிருக்கின்றது. ஏனென்றால், அக்டோபர் புரட்சிக்குப் பின் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னோடியாக கட்சி ஏற்கனவே வளர்ச்சி அடைந்து விட்டது. எனவே, இது அந்த கால கட்டத்தில் தீர்வுகாணப்பட்டிருக்க வேண்டிய மிக முக்கிய தத்துவப் பிரச்சினையாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பற்றிய புரிதலை உருவாக்குவதில் அடிப்படைத் தவறு ஏற்படுவதற்கு மிக முக்கிய காரணங்களில் ஒன்று லெனின் இக்கேள்வியை முற்றாகப் புறக்கணித்ததாகும். (பத்தி-5)

லெனின் தனது 'அரசும் புரட்சியும்' நூலில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் கட்சியின் பங்குபற்றி குறிப்பிடவில்லை என்பது உண்மையே.

பிப்ரவரி 1917ல் நடந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்கும் அக்டோபர் 1917ல் நடந்த பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையிலான காலகட்டத்தில்தான் 'அரசும் புரட்சியும்' நூல் எழுதப்பட்டது. முதலாளித்துவ அரசை வன்முறையின்மூலம் தூக்கியெறிதல் பழைய அரசு எந்திரத்தை உடைத்தெறிதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற புதிய அரசு வடிவத்தை உருவாக்குதல் ஆகியவற்றின் அவசியத்தை விளக்குவதே

அன்றைய உடனடி தேவையாக இருந்தது. எனவே இவைதான் அந்த தீர்மானகரமான கால கட்டத்தில் உடனடி தீர்வு காணப்பட வேண்டியிருந்த தத்துவார்த்த பிரச்சினைகளே தவிர பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் கட்சியின் பங்கு பற்றிய கேள்வியல்ல.

'அரசும் புரட்சியும்' அன்றைய சந்தர்ப்பவாத சோசலிஸ்டுகளுக்கு எதிராக எழுதப்பட்ட அரசியல் விவாதம். (காவுட்ஸ்கி இவர்களில் அதிக மதிப்பும் செல்வாக்கும் பெற்றிருந்தார்) அவர்கள் ஆயுதப் புரட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் மறுத்தனர். வர்க்க ஒடுக்குமுறைக்கான கருவியே அரசு, வர்க்கப் போர்கள் உருவாவதிலிருந்துதான் அரசும் உருவாகிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலமாக, சமுதாயமும் அரசும் அடிப்படை மாற்றங்கள் அடைந்து வர்க்கப் போராட்டங்களும், வர்க்கங்களும் மறையும் பொழுது அரசும் தானே மறைந்து விடும் என்பன போன்ற மார்க்சின் அரசுபற்றி அடிப்படைக் கோட்பாடுகளையே திரித்துப் புரட்டினர். இந்த விவாதத்தை எழுதுவதற்கு பாட்டாளி வர்க்கப் புரட்சியைப் பற்றி அன்று வளர இருந்த ஒரே வரலாற்று அனுபவமான பாரீஸ் கம்யூனைப் பற்றி மார்க்சும், ஏங்கெல்சும் தொகுத்திருந்த கருத்துக்களை லெனின் ஆதாரமாகக் கொண்டார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில், முனனோடி கம்யூனிஸ்ட் கட்சியின், பங்கு பற்றிய வினா அன்று மையப் பிரச்சினையாக இருக்க வில்லை.

பாரீஸ் கம்யூனின் அனுபவத்தையும் குறிப்பாக அதில் உண்மையான முன்னோடி கம்யூனிஸ்ட் கட்சி இல்லை என்பதையும் கணக்கில் கொண்டு பழைய அரசியலமைப்பைத் தூக்கியெறிவதிலும், புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதிலும், கட்சியின் முன்னோடிப் பங்கிற்கான தேவைகள் பற்றிய சில

முடிவுகளை லெனின் வந்தடைந்திருப்பார் என்று யூகிக் கலாம். ஆனால் அவ்வாறு அரசும் புரட்சியும் நூலில் சொல்லாததால் அது "அடிப்படைத்தவறு" ஏற்படக் காரணமான 'பெருங்குறை' என்று கூறுவது கருத்து முதல்வாத இயக்க மறுப்பு இயல் வாத கண்ணோட்டத் திற்கு இன்னுமோர் எடுத்துக்காட்டாகும்

அக்டோபர் புரட்சியின் குறிப்பான அனுபவத் தினாலும் பின்பு பாட்டாளிவர்க்கம் சர்வாதிகாரம் செலுத்திய போதே ஏற்பட்ட அனுபவங்களாலுமே கட்சியின் முன்னோடிப் பங்கு பற்றிய வினா முக்கியத் துவம் அடைந்தது. அந்தக் கட்டத்திலும் அதைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கும் தத்துவார்த்தத் துறை யிலும் நடைமுறையிலும் லெனின் இந்த வினாவை விவா தத்திற்கு எடுத்துக்கொண்டார். (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதற்சில ஆண்டுகளும் லெனினது வாழ்க்கையில் கடைசிச் சில ஆண்டுகளும் ஆன) அந்த கால கட்டத்தில் அவரது பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் இதைப்பற்றிய உரையாடல்களும் இதில் அடங்கியுள்ள முரண்பாடுகளைப் பற்றிய அலசல்களுமே நிரம்பியுள்ளன.

உண்மையில் சி.ஆர்.சி ஆவணமே இந்தப் பேச்சுக் களையும் எழுத்துக்களையும் (மக்கள் திரளின் மேல் கட்சி சர்வாதிகாரத்தை லெனின் திணிக்கிறார் என்று குற்றம் சாட்டும் நோக்கத்துடன் திரித்துப் புரட்டி) மேற் கோள் காட்டியுள்ளது.

இந்தக்கேள்வி எழுந்துள்ள விதத்திலிருந்து நடை முறைக்கும், தத்துவத்திற்கும் உள்ள உண்மையான உறவைப் புரிந்துகொள்ளலாம். தத்துவத்தின் மிக முக் கிய பணி உண்மையில் லெனின் குறிப்பிட்டது போல், நம்மை உடனடியாக அழுத்தி நிற்கும் பிரச்சினைகளை,

நடைமுறையில் எழுந்துள்ள உண்மையான தத்துவப் பிரச்சனைகளை எதிர்கொள்வதே என்பதும் இதன் மூலம் தெளிவாகிறது.

சி.ஆர்.சி ஆவணத்தின் அடுத்த விசயத்தைக் கவனிக்கலாம்,

அக்டோபரில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் 'சோவியத்துக்களின்' மாநாடு புதிய அரசியல் சக்தியின் முறையான தலைமை ஆயிற்று. ஆனால் உண்மையில் அனைத்து முக்கிய கொள்கைகளையும் செயல் தந்திரங் களையும் வகுக்கும் முக்கிய பணிகளை திறைமறைவில் கட்சியே செய்து கொண்டிருந்தது. புதிய அரசு அமைப் பில் கட்சியின் பங்கு வரையறுக்கப் படாமலிருக்கும் பொழுதே கட்சிதான் சோவியத்துக்களைக் கட்டுப்படுத் தியது (பத்தி 8 : 6)

சதிகார கம்யூனிஸ்டுகள் தங்களது ரகசியத் திட்டங் களுடன் அலைவது போன்று ஒரு கற்பனைக் காட்சியை முதலாளித்துவ வர்க்கம் அடிக்கடி முன்வைப்பது உண்டு. அதே கட்சியை சி.ஆர்.சி ஆவணமும் இங்கே முன் வைப்பதுதான் நமக்கு வருத்தம் விளைவிக்கிறது. மேலும் வழக்கம்போல் முதலாளித்துவ சம்பிரதாய வாதத்தைத் திரும்பவும் முன் வைக்கிறது. (ஜனநாயகத்தின் சம்பிர தாய வடிவங்கள் உண்மையில் கடைப்பிடிக்கப்பட வில்லை என்று புகார் சொல்கிறது) ஆனால், இம்முறை இதனை சம்பிரதாய எதிர்ப்பு போர்வையில் செய்கிறது! (சோவியத்துக்கள் வெறும் சம்பிரதாயத் தலைமையே திரைமறைவிலிருந்து கம்யூனிஸ்ட்டுகளை உண்மையில் கட்டுப்படுத்தினர்) ஆனால் உண்மையில், இதில் திரை யும் இல்லை மறைவுமில்லை. முன்பு இதே சி.ஆர்.சி ஆவணம் லெனினை இவ்வாறு மேற்கோள் காட்டியது. "கட்சியின் முன்னோடிப்பங்கு தவிர்க்க இயலாதது"

என்று போல்ஷ்விக்குகள் உலகிற்கு அறிவித்தனர்! பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்காக மக்கள் ஒன்று திரட்டப்பட்டனர். அவர்களுக்கு முன்னோடியாகக் கட்சி செயல்படுவதே கட்சிக்கும் மக்களுக்கும் உள்ள இயங்கியல் பூர்வமான உறவானது. இது மேலும் மேலும் தெளிவான வரையறைக்குள் வந்தடைந்தது. இந்தப் பிரச்சனையை சரியாக இவ்வாறு தான் நடைமுறையிலும், தத்துவத்திலும் லெனின் கையாண்டார். ஸ்டாலினும்கூட, குறிப்பாக துவக்க காலங்களில் கையாண்டார்.

(தொடக்கத்தில் ஸ்டாலின் திறமைக்கு ஆதாரமாய் மக்கள் திரள் மட்டுமே இருந்தது. எனவே ஸ்டாலின் மக்களையும், கட்சியையும் முழுமூச்சாக ஒன்றுதிரட்டக் கோரினார். ஆனால் பின்பு இவ்வழியில் பல முன்னேற்றங்களை அடைந்ததும், அவர்கள் மக்களைச் சார்ந்திருப்பது குறையத் தொடங்கியது என்று மாவோ கூறியதை இங்கு நினைவில் கொள்வோம்.)

சி.ஆர்.சி ஆவணம் மேலும் கூறுகிறது, "எனவே சூழ்நிலைகளின் நெருக்கடிகள் காரணமாகவும் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வந்த அபாயங்கள் காரணமாகவும் சோவியத்துக்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு கட்சி முன்னோடிப் பங்கு ஆற்ற வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானது."

சோவியத்துக்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டதாகக் கூறுவது கொச்சைபடுத்தலும், அடிப்படையிலேயே தவறான ஒன்றும் ஆகும். சூழ்நிலையின் நெருக்கடிகள் இருந்தன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதிலும், சமுதாய நிர்வாகத்திலும் சோவியத்துக்களுக்கு இருந்த செல்வாக்கு ஒப்பீட்டளவில் கட்சிக்கும், மற்ற நிர்வாக எந்திரங்களுக்கும், தேவைக்கேற்ற அளவில்

இடப்பெயர்ச்சி அடைந்தது. (இதை முன்பே விவாதித்திருக்கிறோம்) ஆயினும்கூட லெனின் கூறியதுபோல் அரசுப்பணிகளை நடத்துவதற்கு, கட்சித்தலைமையுடன் கூடிய சோவியத்துக்களையே சார்ந்திருந்தனர். ஆனால் இங்கு சோசலிசப்புரட்சி நடைபெறும் பொழுதும் கம்யூனிசத்தை முன்னெடுத்துச் செல்வதிலும் சோவியத்துக்களின் (அதுபோன்ற மற்ற நிறுவனங்கள், மக்கள்திரள் அமைப்புக்கள் ஆகியவற்றின்) பங்கு பற்றிய வினாவை விரிவாக வரலாறு பூர்வமாக ஆய்வுசெய்யவேண்டியது அவசியம்.

சீனப்புரட்சியைப்பற்றி ஸ்டாலின் குறிப்பிடும்பொழுது (சீனப்புரட்சி தொடக்ககால கட்டமான 1927ல்) குறிப்பாக, அப்புரட்சியில் சோவியத்துக்களை உருவாக்குதல், அவற்றின் பணி பற்றிப் பேசும்பொழுது இவ்வாறு குறிப்பிடுகிறார். "சோவியத்துக்கள் நிலவுகின்ற அதிகாரத்திற்கு எதிரான எழுச்சியின் அங்கங்கள். புதிய புரட்சிகர அதிகாரத்திற்கான போராட்டத்தின் அங்கங்கள்", (சன்யாட்சென் பல்கலைக்கழக மாணவர்களுடன் ஸ்டாலினது உரையாடல்; 18.5 1927) எதிர்ப்புகளைப் பற்றி எட்டாவது வினா, பீகிங் பதிப்பு பக்கம்-689) சீனப் புரட்சியின் அந்த காலக் கட்டத்தின் மிகச்சிக்கலான குறிப்பான, ஒரு செயல் தந்திரம் பற்றி ஸ்டாலின் இங்கு விரிவாகப் பேசுகிறார். அதில் முக்கியமான, பொதுவான பிரச்சினை ஒன்றைப் பற்றியும் ஸ்டாலின் தொட்டுச் சொல்கிறார். போல்ஷ்விக் புரட்சியின் அனுபவத்தில் (சீனப்புரட்சியில் சோவியத்துக்கள் உருவான கட்டத்திலும் கூட இதே அனுபவம் தான்) மக்கள் திரள் எழுச்சிகளின் பொழுதும் சோவியத்துக்கள் உருவாயின. அந்த எழுச்சிகளின் பொழுது பரிணமித்த உற்சாகம் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் [12] சிறிது காலம் நீடித்தது. ஆனால் இந்த உற்சாகத்தைத் தொடர்ச்சியாக, அதே மட்டத்தில்

நீண்ட காலத்திற்குக் தக்க வைத்திருப்பது இயலாத காரியம் ஆனது.

புரட்சிகர சக்தியையும், மக்களின் உற்சாகத்தையும் தக்கவைத்துக் கொள்வதில் உள்ள பிரச்சினை எவ்வாறு சோசலிச சமுதாயத்தில் (முதலாளித்துவ சமுதாயத்திலும் கூட) மக்கள் திரளின் எழுச்சிகளும் வர்க்கப் போராட்டங்களும் அலை அலையாக அல்லது சுழல் வட்டங்களாக எழுகின்றன என்பது பற்றி நாம் ஏற்கனவே விவாதித்ததுடன் தொடர்புடைய கருத்தே இது. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சோவியத்துக்கள் மற்றும் அது போன்ற அமைப்புகளின் வேகத்திலும் சமயத்தில் வேகமின்மையிலும், இது கட்டாயமாகப் பிரதிபலிக்கிறது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மக்கள் குமுறி எழுந்த காலத்திலும்,அவர்களே அதிகாரம் செலுத்தத் தொடங்கிய துவக்க ஆண்டுகளிலும் சோவியத்துக்களிடம் நிரம்பியிருந்த அளவு செயலூக்கம் பின்வந்த ஆண்டுகளில் இருக்கவில்லை. இந்த உண்மை காட்டுவது என்ன? முன்னேற்றங்கள் அலை அலையாக வருகின்றன என்பதைத்தானே தவிர சி.ஆர்.சி ஆவணம் குற்றம் சாட்டுவது போல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை விரட்டிவிட்டுத் திருட்டுத்தனமாக கட்சி சர்வாதிகாரத்தை நிறுவ போல்ஷ்விக்குகள் முயல்கின்றனர் என்பதை அல்ல.

இந்த ஆவணம் சொல்வதுபோல் சர்வாதிகாரத்தை மக்களால் செலுத்த முடியாது, கட்சியால் மட்டுமே முடியும் என்று கொள்கை எதையும் லெனின் வகுக்கவில்லை. அதற்கு மாறாக, அரசு நிர்வாகத்தில் எவ்வாறு மக்கள் திரளைப் பங்கெடுக்கவைப்பது, அதற்கு இடையூறாக நிற்கும் அரசு அதிகார வர்க்கப் போக்குகளை எவ்வாறு சமாளிப்பது என்ற வினாக்களுக்கு விடை

காணப் போராடிக் கொண்டிருந்தார். அவரது வாழ் நாளின் இறுதி ஆண்டுகளில் பெரும் பகுதியை இப் போராட்டங்களே நிரப்பியுள்ளன. அதே சமயம், ஏதாவது ஒரு வகையிலான அரசு அதிகார வர்க்கம் இருப்பதை நீண்ட காலத்திற்கு நீக்குவது இன்னும் பல காலத்திற்கு இயலாத காரியம் என்ற உண்மையையும் ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயத்திலிருந்தார்.

கம்யூனிஸ்ட் கட்சியில் அரசு அதிகாரவர்க்கப் போக்கு தலையெடுப்புகளையும், அதிகாரத்தில் இருப்ப தால் ஊழலுக்கு அடையாளமாவதையும் எதிர்த்த போராட்டத்தில் லெனின் கையாண்ட முக்கியமான வழிகளில் ஒன்று பிழைப்பு வாதிகளைக் களையெடுத்த தாகும். குறிப்பாக, அதிகாரம் உறுதிபடுத்தப்பட்டு, சமுதாய நிறுவனங்களிலும், நாட்டின் அரசியல், பொருளாதார துறைகளிலும் கட்சி முன்னனிப் பங்கு வகித்த காலகட்டத்தில் கட்சிக்குள் நுழைந்த வர்களைக் களையெடுத்தார். ஆட்சியில் இருக்கும் பாட்டாளிவர்க்கத்தின முன்னோடியாகக் கட்சி விளங்கத் தொடங்கி விட்டதால், பாட்டாளிவர்க்க நலனுக்காகத் தங்களைத் தியாகம் செய்து கொள்ள வெண்டி வரும் என்று தெரிந்தும் கட்சியில் சேர்ந்த நபர்களையே கொண்டதாக கட்சி இருக்க வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினார்.

1921 ஆம் ஆண்டு பல்வேறு ஏகாதிபத்தியங்களுடன் தொடர்பு கொண்டிருந்த உள்நாட்டுப் பிற்போக்கு சக்தி களை எதிர்த்த பயங்கரமான உள்நாட்டுப் போரில் வெற்றி பெற்ற பின்பு லெனின் கட்சியில் களையெடுத் தலைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்.

"கட்சியில் களையெடுத்தல் மிகக் கடுமையான ஒன்றாகவும், மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் ஆகிவிட்டது."

"பல இடங்களில், பெரும்பாலும் கட்சி உறுப்பினர் அல்லாத தொழிலாளர்களின் அனுபவங்களையும், ஆலோசனைகளையும் வைத்தே கட்சியில் களையெடுப்பு நடைபெறுகிறது. இந்த ஆலோசனைகளும், கட்சி சாராத பாட்டாளி வர்க்க மக்கள் திரளின் முறையீடுகளும் உரிய கவனத்துடன் பரிசீலிக்கப்படுகின்றன. இது தான் மிக மிக முக்கியமானதும், மதிப்பு வாய்ந்த அம்சமும் ஆகும். விதிவிலக்கின்றி, கட்சியின் மேலிருந்து கீழ்வரை இம்மாதிரியான களையெடுப்பை நாம் வெற்றிகரமாக நடத்தி விட்டால் அது உண்மையிலேயே புரட்சியின் மிகப்பெரிய சாதனையாகும்.

". மக்கள் திரள் மத்தியில் ஆட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தியவர்கள் மட்டுமல்ல மக்கள் திரளுடன் தொடர்பு அற்றுப் போனவர்களைக் கூடக் கட்சியிலிருந்து களையெடுக்க வேண்டும். மக்கள் திரள் சொல்வது அனைத்தையும் அப்படியே நாம் ஏற்றுக் கொள்ளாதது இயல்பானதே. ஏனெனில் சில சமயங்களில் குறிப்பாக, கடுமையான கஷ்டங்களாலும், துயரங்களாலும் மக்கள் திரள் சோர்வும், சக்தியற்ற தன்மையும் கொண்டதாகின்ற நேரத்தில் அவர்களது சிந்தனைகள் முற்போக்காக இல்லாமல் உணர்ச்சி வசப்பட்டவையாக உள்ளன. ஆனால் கட்சியுடன் சுய நல நோக்கங்களுக்காகச் சேர்ந்து கொண்டவர்கள் தொந்தி பருத்த உயர் அதிகாரிகள், அரசு அதிகார வர்க்கத்தினரை வெறுத்து ஒதுக்குவதிலும் கட்சி சாராத விவசாயிகள், தொழிலாளர்களுடைய யோசனைகள் மிகமிகப் பயனுள்ளதாய் இருக்கும். தங்களது நெற்றி வியர்வை சிந்திப் பாடுபட்டு உயிர் வாழும், சிறப்புச்சலுகைகளோ, செல்வாக்கோ இல்லாத மக்களுக்கு இயல்பாக போலிக் கம்யூனிஸ்ட்டுகள் மேல் வெறுப்பு ஏற்படும்.

இந்தப் போலிக் கம்யூனிஸ்ட்டுகளை, நேர்மையும் அர்ப்பணிப்பும் உள்ள கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்து

இனம் பிரித்து அறியும் உள் உணர்வும் மக்கள் திரளிடம் இயல்பாகவே உள்ளது.

"கட்சியில் களையெடுப்பு நடத்த கட்சி சாராத மக்கள் திரளின் ஆலோசனைகளை கணக்கில் எடுத்துக் கொள்வது அவசியமாகும். அது மாபெரும் விளைவுகளை ஏற்படுத்தும். அது கட்சியை முன்பிருந்ததை விட வலிமையான வர்க்க முன்னோடியாக மாற்றும். வர்க்கத்துடன் முன்பைவிட இறுக்கமாகப் பிணைக்கப் பட்ட முன்னோடியாக எண்ணற்ற ஆபத்துக்களுக்கும் கஷ்டங்களுக்கும் நடுவிலும் வர்க்கத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லும் சக்தி உள்ளதாய் கட்சியை மாற்றும் (லெனின் கட்சியில் களையெடுத்தல் தொகுப்பு நூல்கள், தொகுதி-33, பக்கம் 340, திருத்தங்கள் மூலத்தில் உள்ளவையே)

லெனினது தலைமையின்கீழ் அரசு அதிகார வர்க்க உருவாக்கத்தைக் தடுக்க எடுத்துக் கொண்ட, கட்சியில் களையெடுத்தலும் அது போன்ற மற்ற முயற்சிகளும் தாமாகவே பிரச்சினையைத் தீர்த்து விடவில்லை. கட்சி மற்றும் அரசு நிர்வாகிகளிடையே அதிகார வர்க்கப் போக்கும் பிழைப்புவாதமும் உருவாவதற்கு அடிப் படையான முரண்பாடுகளை அம்முயற்சிகளால் தீர்க்க முடியவில்லை-தீர்க்கவும் முடியாது. ஆனால் அவ்வாறான பிழைப்பு வாதத்தையும், அதிகார வர்க்கப் போக்கையும், கட்சியையும் அரசையும் தலைகீழாக, மக்கள் மேல் சர்வாதிகாரம் செலுத்தும் அமைப்பாக, மாற்ற முயற்சிக்கும் போக்குகளையும் எதிர்க்க லெனின் பூண்டிருந்த உறுதியை இக்கொள்கைகள் தெளிவாக விளக்குகின்றன

இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு புதுமையான கண்டுபிடிப்புகள் புதிய வழிமுறைகள் தேவைப்பட்டன.

மாபெரும் பாட்டாளி வர்க்க பண்பாட்டுப் புரட்சி அத்தகைய ஒரு புதுமையான கண்டுபிடிப்பும் புதிய வழியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் போராடுவதற்கான புதிய முறையும் ஆகும். ஆனால் மாவோ குறிப்பிட்டது போல் ஒரே ஒரு பண்பாட்டுப் புரட்சியால் அத்தனை பிரச்சனைகளையும் தீர்த்துவிட முடியாது. வர்க்கப் போராட்டம் மற்றும் மக்கள் திரள் எழுச்சிகளின் அலை அலையான புறவியத் தன்மையை யும் அதனால் நீக்கிவிட முடியாது. மாவோ கூறியது போல் கம்யூனிசத்தின் இறுதி வெற்றியை எய்துவதற்கு வழிநெடுக பல பண்பாட்டுப் புரட்சிகள் நடந்தேற வேண்டும்.ஆயினும் எல்லா நேரங்களிலும் பண்பாட்டுப் புரட்சி நடந்தேறி விடாது. பண்பாட்டுப் புரட்சி நடைபெற இயலாத நேரங்களிலும் அதிகார வர்க்கப் போக்கை மூறியடிக்க வேண்டும். சரியாகச் சொன் னால் மக்கள் திரளின் அறிவுப் பூர்வமான செயல் ஊக்கத்தை முடிந்த மட்டும் பேரளவில் திரட்ட வழி வகைகள் காண வேண்டும். ஆனால் இவை எதனாலுமே முதலாளித்துவ மீட்சியே வராதென்றோ சோசலிச சமுதாயத்திலும் மக்களின் முன் முயற்சியும் புரட்சித் துடிப்பும் எப்பொழுதும் உயர்ந்த மட்டத்திலேயே இருக்குமென்றோ எஃகு உறுதியான உத்திரவாதம் எதுவும் தரமுடியாது.

இதனோடு தொடர்புடைய மற்றொரு பிரச்சனை உள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் முன்னணிச் சக்தியாக விளங்கும் கட்சி, தனது அணி களிலிருந்தும் பொதுவாக சமுதாயத்திலிருந்தும் எழும் எதிர்ப்புக்களையும் மாறுபட்ட கருத்துகளின் மோதல் களையும் எவ்வாறு அணுகுகிறது என்ற பிரச்சனை எனது "முதலும் முடிவும்" நூலிலும், மற்றும் பல நூல் களிலும் மாவோவைப் பின்பற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இத்தகைய கருத்துகளை அணு

மதிப்பது மட்டுமல்ல ஊக்குவிப்பதையும் ஒரு பொதுக் கொள்கையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன். ஆனால் அதே சமயம் இந்தப் பிரச்சனைகளை நடைமுறையுடன் தொடர்பற்ற ஒன்றாகவோ வெற்று சம்பிரதாயமாக அல்லது ஏதாவது தூய்மையான, வர்க்கங்களற்ற ஜனநாயக கோட்பாடுகளின் அடிப்படையிலோ அணுகக் கூடாது. அண்மை நிகழ்ச்சிகள் இவற்றில் தீர்மானகரமான செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் நிலவும் வர்க்க உறவுகளும் வர்க்கப் போராட்டங்களும் இவற்றைப் பாதிக்கின்றன.

சில சமயங்களில் வெளிப்படையான விவாதங்கள், மாற்றுக் கருத்துக்கள் ஆகியவற்றிற்கு கதவுகளை அகலத் திறந்துவிடுவது பாட்டாளி வர்க்க நலன்களுக்கு ஏதுவாக இருக்கும். அந்த நேரங்களைப் பயன்படுத்திக் கொண்டு கதவுகளை அகலத் திறந்துவிட கட்சி சிறிதும் தயங்கக் கூடாது. வேறு சில சமயங்களில் அணிகள் ஐக்கியமாகி தத்துவப் போராட்டங்களையும் விவாதங்களையும் குறுகலான வட்டத்திற்குள்ளேயே நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். அந்த நிலைமைகளுக்கு ஏற்ப இந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவும் கட்சி தயங்கக் கூடாது. ஆனால் இவை அனைத்திற்கும் பொதுவாக, கட்சிக்கு உள்ளும் மக்கள் திரள் மத்தியிலும் விவாதங்கள் கருத்து மாறுபாடுகள் தத்துவார்த்தப் போராட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதற்கான வடிவங்களைக் கண்டுபிடிப்பதே நமது வழிகாட்டும் தத்துவமாக இருக்க வேண்டும். இந்த வடிவங்கள் குறிப்பிட்ட சூழலில் பாட்டாளி வர்க்க நலன்களோடு ஒத்திருப்பதாகவும் அன்றைய நிலைமைகளுக்குப் பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும், பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு இசைவாக இருக்க வேண்டும். மக்கள்

திரள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்தி கொண்டே அச்சர்வாதிகாரத்தின் கீழ் முன்னோடி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் புரட்சியை தொடர்ந்து கொண்டிருக்கும். அதே சமயத்தில் கதவு களை அகலத் திறந்து விடுவதற்கு கிடைக்கும் எல்லா சந்தர்ப்பங்களையும் ஒன்றுவிடாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சோசலிசத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அமைப்பை ஆட்டம் காணச் செய்வதுடன் பல்வேறு அபாயங் களையும் இவை தோற்றுவித்தாலும்கூட இதை நாம் செய்தாக வேண்டும். ஆனால் பழைய முதலாளித்துவ அமைப்பு மீண்டும் வந்துவிடாதவாறு மீட்சிக்கான வாய்ப்புக்களைப் பலவீனப்படுத்தும் முறையில் இதனைச் செய்ய வேண்டும். இது சோசலிசத்தின் கீழ் தீர்க்கப்படாத முரண்பாடுகளின் நல்ல அம்சங்களுடன் தொடர்புடையது. கீழ்கண்ட கொள்கையுடனும் தொடர் புடையது.

சோசலிச சமுதாயத்தில் கட்சி முன்னோடிப் பங்கு வகிக்க வேண்டும். அப்பங்கு அதிகாரத்தில் இருக்கும் கட்சி என்ற அளவில் மட்டுமல்ல? மக்கள் திரள் போராட்டங்களில் ஈடுபட்டுத் தலைமை தாங்க வேண்டும். சரியாகச் சொன்னால் போராட்டங்களைத் தானே கட்டவிழ்த்து விட்டு தலைமையை வென்றெடுக்க வேண்டும். புதிதாக முளைத்தெழும் புரட்சிகர சக்தி களுக்கு எதிராக சமுதாயத்தை மேலும் புரட்சிகரமாக்கு வதற்குத் தடையாக எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கட்சி யால் அப்போது நிலவுகின்ற கூறுகளை எதிர்ப்பதாக மக்கள் திறளின் இந்தப் போராட்டங்கள் இருக்க வேண் டும். சுருக்கமாகச் சொல்வதானால் அதிகாரத்தில் இருந்து கொண்டே முழுமையான விடுதலைக்குத் தடையாக நிற்கும். அதிகாரத்தில் எந்தப் பகுதியையும் எதிர்க்கும்

புரட்சிகரப் போராட்டத்தாலும் முன்னணிப் பங்கு வகிக்க வேண்டும்.

(அவேக்கியான் "இறுதிக்குறிப்பு புரட்சி 1990 ஆண்டு இறுதியில், பக்கம் 46 அழுத்தம் மூலத்தில் உள்ளது)

இவை அனைத்தையும் தீர்ப்பதற்கு ஆழமான பல கேள்விகளுக்கு விடை காண முயலவேண்டும். ஆனால் முயற்சி, மார்க்சிய-லெனினிய-மாவோயிசத்தை அடிப் படையாகக் கொண்டதாக, அவற்றின் ஒளியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனு பவத்தைத் தொகுத்து ஆய்வதாக இருக்கவேண்டும். மாறாக மரபுவழி கம்யூனிச எதிர்ப்பாளர்களைப் பின் பற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறுத்து மக்களுக்கு எதிரானதாகக் கட்சியைச் சித்தரித்து, எளிமையான பதில்களைத் தேடுதலை அடிப்படை யாகக் கொண்டிருக்கக் கூடாது. இன்றைய சர்வதேச நிகழ்ச்சிகளின் பின்னணியில் புரட்சிகர சர்வதேச இயக்கத்தின் கொள்கை அறிவிப்புகள் மேலும் முக்கியத்துவம் பெறு கின்றன. "வரலாற்று அனுபவங்களைத் தொகுப்பதே கூட எப்பொழுதுமே கூர்மையான வர்க்கப் போராட்டக் களமாக விளங்கியுள்ளது. பாரீஸ் கம்யூன் தோற்று விக்கப்பட்டதிலிருந்து, சந்தர்ப்பவாதிகளும், திரிபுவாதி களும், பாட்டாளிவர்க்கத்தின் குறைபாடுகளையும் தோல்விகளையும் காரணம் காட்டி சரியானவற்றைத் தவறாகவும், தவறானவற்றைச் சரியானதாகவும் திருத்திக் காட்ட முயலுதல், இரண்டாம் பட்சமானவற்றை முதன்மையானவற்றுடன் சேர்த்துக் குழப்புதல் மூலமாக பாட்டாளி வர்க்கம் ஆயுதமேந்தியிருக்கக்கூடாது" என்ற முடிவுக்கு வருகின்றனர். "ஆக்கபூர்வ வளர்ச்சி என்ற பெயரில் புதிய நிலமைகள் தோன்றுவதைச் சாக்கிட்டு மார்க்சியத்தின் அடிப்படைக் கொள்கைகளையே எதிர்க்கும் வேலை பல முறை நடந்துள்ளது. அதே சமயம் மார்க்சியத்தின் அடிப்படைத் தன்மையான

விமர்சனம்-செய்தலைக் கைவிடுதலும் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி, தோல்வி அனைத்தையும் தொகுத்து ஆய்ந்துவிட்டுக் கடந்த காலத்தில் சரியானவை என்று கருதப்பட்டவைகளை உயர்த்திப் பிடித்தலோடு நின்றுவிடுவது தவறானதும் இணையான சேதம் விளைவிப்பதும் ஆகும். உண்மையில் இம்மாதிரியான அணுகுமுறை மார்க்சீய-லெனினியத்தை எளிதில் உடைந்துபோகும் தன்மையுள்ளதாக மாற்றிவிடும். அதன் புரட்சிகரத்தன்மையை மாசுபடுத்தி, எதிரியின் தாக்குதலைச் சமாளிக்கும் திறனற்றதாய் வர்க்கப் போராட்டத்தில் புதிய முன்னேற்றங்களுக்குத் தலைமை வகிக்கும் தகுதியற்றதாய்ச் செய்துவிடும்".

மார்க்சிசத்தின் உண்மையான "ஆக்கபூர்வ வளர்ச்சி" (போலியான, திரிபுவாத புரட்டுகள் அல்ல) எப்பொழுதுமே மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படை கொள்கைகளை காப்பதற்கும், உயர்த்திப் பிடிப்பதற்குமான கடுமையான போராட்டத்துடன் இரண்டறக் கலந்திருப்பதை வரலாறு நமக்கு உணர்த்தியுளளது. ஒருபுறம் வெளிப்படையான திரிபுவாதத்தையும் மறுபுறம் மரபுவழி மார்க்சியத்தின் மூலம் புரட்சியை எதிர்த்த காவுட்ஸ்கி, போன்றோரையும் எதிர்த்து லெனின் நடத்திய இருமுகப் போராட்டமும், ஒருபுறம் லெனின் ஸ்டாலின் ஆகியோரது தலைமையின்கீழ் சோவியத் ரஷ்யாவில் சோசலிசம் கட்டப்பட்ட வரலாற்று அனுபவங்களை மறுக்கும் நவீனத் திரிபுவாதிகளை எதிர்த்துப் போராடிக் கொண்டே, அதே சமயம் திரிபுவாதத்தின் வேர்களை முழுமையாக அறிவியல் பூர்வமாக விமர்சித்த மாவோவின் மாபெரும் போராட்டங்களும் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

"சர்வதேச கம்யூனிச வரலாற்றின் இன்றைய கட்டத்தின் பிரச்சனைகளுக்கும் கூர்மையான கேள்வி

களுக்கும் விடைகாண அத்தகையதொரு அணுகுமுறை அவசியமாகும்".

(ரிம் கொள்கை அறிக்கை பக்கம் 13)

துரதிஷ்டவசமாக இந்தச்சரியான அணுகுமுறையி லிருந்து விலகி சி.ஆர்.சி ஆவணம் எதிர்த்திசையில் செல் கிறது. திரும்பி அழைத்துக் கொள்ளும் உரிமையுடன் கூடிய பிரதிநிதிகளால் நடத்தப்படும் அரசியல் அமைப்பு நிலையான ராணுவத்திற்குப் பதிலாக ஆயுதமேந்திய மக்கள் படையை நிறுவுதல் ஆகிய பாரீஸ் கம்யூனின் இரண்டு நடைமுறைகளையும் வலியுறுத்துவதன் மூல மாகவும், இந்த அடிப்படையில் இருந்து அரசுஅதிகாரத் தின் சக்திகளைப் பற்றி ஆழமாக அலசுகிறோமென்ற பெயரிலும் சி.ஆர்.சி ஆவணம் முழுமையாக முதலாளித் துவ நிலைப்பாட்டை வந்தடைகிறது. அரசின் தன்மையைப் பற்றிக் கீழ்கண்ட கருத்துடன் அது துவங்கு கிறது.

"வர்க்க சமுதாயத்தில் சமுதாயம் முழுமையையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு அதிகார வர்க்கம் அரசியல் அதிகாரத்தைச் செலுத்துகிறது. ஆளும் வர்க்கத்திற்கும் சமுதாய முழுமைக்கும் இடையிலான முரண்பாடாக இது பிரதிபலிக்கிறது. இந்த முரண் பாட்டைத் தீர்ப்பதற்காகவே அரசுக் கட்டமைப்பில் அதிகாரம் குவிக்கப்பட்டு, அதன் நிர்வாக சக்தியான ஆளும் வர்க்கத்தால் செலுத்தப்படுகிறது. சமுதாய மொத்தத்தின் அரசியல் விருப்பம் என்ற பெயரில், ஆளும் வர்க்கத்தின் அரசியல் விருப்பம், அரசு என்ற திட வடிவத்தில், குறிப்பாக அதன் ஆயுதப்படையின் வலிமையால் குவிக்கப்படுவதே இதுவரை நிலவி வந்துள்ள சமுதாயங்களின் அரசியல் அதிகாரத்தின் தன்மையாகும். (பத்தி 10 அழுத்தம் எமது)

விசயத்தின் சாரம் இதில் தொடர்புள்ள முரண்பாடு கள் ஆகியவற்றின் தன்மைகளைப்பற்றிய தவறான

சித்தரிப்பு இது. ஆதிக்க வர்க்கம் அரசியல் அதிகாரத்தைச் செலுத்துவதின் அடிப்படையான, சாராம்சமான காரணம், ஆளும் வர்க்கத்திற்கும் சமுதாய முழுமைக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்கும் நோக்கத்தில் அல்ல. அதிகார வர்க்கத்திற்கும், அது சமுதாயத்தில் தனது மேலாண்மையை நிலைநிறுத்திக்கொள்ள சர்வாதிகாரத்தை எந்தவர்க்கம் (அல்லது வர்க்கங்களின்) மேல் செலுத்துகின்றதோ அந்த வர்க்கங்களுக்கும் இடையில எழும் எதிர்ப்புணர்வுகளைச் சமாளிப்பதே இதன் அடிப்படையான சாரம்சமான காரணமாகும். மேலும் இதன் வேர்கள் உருவமற்ற மாறுபட்ட அரசியல் விருப்பங்களின் மோதலில் அல்ல அவற்றின் அடியில் உள்ள பொருளாதார நிலைமைகளில், குறிப்பான திடமான உற்பத்தி உறவுகளுக்கு ஏற்ப வெளிப்படும் வர்க்க மோதல்களில் உள்ளன. ரேமண்ட் லோட்டாவின் கூர்மையான தொகுப்பு இவ்வாறு கூறுகிறது.

"சமுதாயத்தின் புறவயமான கூட்டமைப்பே அரசு ஆகும. அதன் தன்மை அதன் முன்னோடி மனிதர்களின் வர்க்கப் பின்னணியால் நிர்ணயிக்கப்படுவதில்லை. மாறாக, குறிப்பாக, உழைப்பு பிரிவினையாலும் (அதன் விரிவாக்கமே அரசு), உற்பத்தி உறவுகளாலும் நிர்ணயிக்கப்படுகிறது. இவ் உற்பத்தி உறவுக்குச் சேவை செய்வதும், மறு உற்பத்தி செய்வதுமே இறுதியில் அதன் பணியாகிறது."

சி.ஆர்.சி ஆவணம் இந்த வினாவை எழுப்பும் முறையே இதற்கு முற்றிலும் எதிரானது. ஆவணம் வர்க்கத்தின் அரசியல் விருப்பத்திற்கும் சமுதாய மொத்தத்தின் அரசியல் விருப்பத்திற்கும் இடையில் உள்ள முரண்பாடு என்று மையப்படுத்துவது கருத்துமுதல்வாதக் கண்ணோட்டமாகும். அது அரசிற்கு வர்க்கத் தன்மைகள் இருப்பதை மூடி மறைப்பதில் போய்

முடிகிறது. (இந்த ஆவணமும் சரியாக அந்தத் திசையை நோக்கித்தான் போகிறது என்பதை விரைவில் காண்போம்)

சி.ஆர்.சி ஆவணம் மேலும் தொடர்கிறது. "இந்த அமைப்பிலிருந்து பண்பு ரீதியாக உடைத்துக்கொண்டு போவதே பாட்டாளிவர்க்கத்தின் நோக்கமாகும். ஒன்று குவிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை ஒட்டுமொத்த சமுதாயம் மீண்டும் உறிஞ்சிக் கொள்ளும் தன்மையுடையதாக்கும் வழிமுறையை அது ஏற்படுத்த வேண்டும். நிலையான ராணுவத்திற்குப் பதிலாக ஆயுதமேந்திய மக்கள் படையை உருவாக்குவது இத்தத்திசையில் செல்வதற்கான முதல் படியாகும். ஆனால் இவ்வாறு மீண்டும் அதிகாரத்தை உறிஞ்சிக் கொள்ளும் சக்தியை உத்திரவாதம் செய்யும் முழுமையான அரசியல், பொருளாதார சமூக அமைப்பு இல்லாதவரை அது மட்டுமே அந்த நோக்கத்தை நிறைவேற்றி விடாது. ஒட்டுமொத்த சமுதாயத்தின் (அரசியல்) விருப்பங்களையும், அரசின் தலையீடு இல்லாமலேயே பிரதிபலிப்பதற்கும் நேரடியாக நிறைவேற்றிக் கொள்வதற்கும் தேவையான சூழல்களையும் அமைப்பு முறைகளையும் உருவாக்கும் முழுமையான வழிமுறைகள் வேண்டும். அதன் பிறகுதான் பாட்டாளிவர்க்கத்தின் லட்சியமான அரசு உலர்ந்து உதிர்தல் நிறைவேறும். இவ்வாறான ஒரு மாற்று அரசியல் வழியை பாட்டாளி வர்க்கம் முன் வைக்க இயலாதவரை, இப்பொழுது நிலவும் முதலாளித்துவ முறையிலிருந்து அதனால் பண்பு ரீதியாக முறித்துக் கொண்டு செல்ல முடியாது." (பத்தி 8.10)

கடைசிப் பகுதியிலிருந்து தொடங்குவோம் 'அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள உறவை கருத்து முதல்வாத அடிப்படையிலும் இயக்க மறுப்பியல் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும் தலைகீழாக புரட்டுவதின் தொடர்ச்சியே இது."

மேலும் அரசியலே குறிப்பாக அரசமைப்பே இங்கு கருத்து முதல்வாத இயக்க மறுப்பியல்வாத அடிப்படையில் அலசப்படுகிறது. இவ்வாதங்கள் அனைத்துமே முதலாளித்துவ அமைப்பிலிருந்து பண்பு ரீதியாக முறித்துக் கொண்டு செல்வதற்கு பொருளாதார அடிப்படை மாறவேண்டும் என்பதை மறந்துவிடுகின்றன. பொருளாதார அடிப்படையிலிருந்து ''மாற்று அரசியல் வழியை முன்வைப்பதைத் தனியாகப் பிரிக்கின்றன. பொருளாதார அடித்தளம் மாற்றம் அடைதல், அம் மாற்றம் புதுவகையான அரசு அமைப்பு உருவாக்க காரணமாதல், அதன் மூலமாக அரசு உலர்ந்து உதிர்வதை நோக்கிச் செல்லுதல் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளாமலேயே விட்டு விடுகிறது.'' போகிற போக்கில் அப்படியே மீண்டும் அதிகாரத்தை உறிஞ்சிக் கொள்ளும் சக்தியை உத்திரவாதம் செய்யும் முழுமையான, அரசியல், பொருளாதார சமூக அமைப்பு முறை பற்றிக் குறிப்பிடுகிறது ஆயினும் முதன்மையானதாகவும் ஏராளமாகவும் அரசியல் அமைப்பு முறை பற்றித்தான் பேசுகிறது. அதற்குக் காரணமான சமூக பொருளாதார நிலைமைகளைப் பற்றியோ, இவற்றை நிர்ணயிப்பதில் இறுதியானதும், தீர்மானகரமானதும் ஆன பொருளாதார நிலைமைகளைப் பற்றியோ, அவற்றுடன் அரசியலுக்கு இருக்கும் இயங்கியல் பூர்வமான உறவைப் பற்றியோ கவலைப்படுவதில்லை.

அதனுடைய ஒட்டுமொத்த சமுதாயத்தின் (அரசியல்) விருப்பங்களையும் அரசியல் தலையீடு இல்லாமலேயே பிரதிபலிப்பதற்கும் நேரடியாக நிறைவேற்றிக் கொள்வதற்கும் தேவையான சூழல்களையும் அமைப்பு முறைகளையும் உருவாக்கும் ''முழுமையான வழிமுறைகள்'' பற்றிய வரைமுறையை எடுத்துக் கொண்டால், இந்த ''முழுமையான வழிமுறைகளின்'' தன்மையை நிர்ணயிக்கும் தீர்மான

கரமான கூறு ஒன்று விடுபட்டு இருப்பதைக் காணலாம். நிலவுகின்ற வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களுமே அந்த விடுபட்ட கூறு ஆகும். பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் நிலவும் பகை முரண்பாடும் போராட்டமும் மட்டுமல்ல, விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலும் உழைக்கும் மக்களுக்கும் அறிவு ஜீவி களுக்கும் இடையிலும் உள்ள முரண்பாடுகளும், போராட்டங்களும் மேலும் வர்க்க முரண்பாடுகளைப் பிரதிபலிக்கின்ற அல்லது தம்முள் வர்க்க முரண்பாட்டின் விதைகளே, சில சமயம் வர்க்கப் போர்களையே அடக்கியுள்ள சமுதாய முரண்பாடுகளும் ஆகும்.

கம்யூனிசம் வெற்றி பெறும் பொழுது, சமுதாய மேற்கட்டுமானமும், பொருளாதார அடித்தளமும் புரட்சி கரமாக மாற்றம் அடைகின்றன. அப்பொழுது நடை முறைக்கு வரும் அரசியல் நிர்வாக முறைகள் ஒட்டு மொத்த சமுதாயத்தின் விருப்பங்களைப் பிரதிபலிக்கும் என்பது உண்மையே. எனினும் அதிலும் முரண்பாடுகள் இல்லாமலிருக்காது. ஆனால் கம்யூனிசம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் நடைபெறும் புரட்சியின் மூலம், ஆழமான சமுதாய முரண்பாடுகளையும், வர்க்கப் போர்களையும் தீர்ப்பதன் மூலமே உருவாகும். இவர்கள் கற்பனை செய்வதுபோல் "ஒட்டுமொத்த சமுதாயத்தின் அரசியல் விருப்பங்களை பிரதிபலிக்கும் அமைப்புகள்" "ஒட்டுமொத்த சமுதாயமும் அரசு அதிகாரத்தை மீண் டும் உறிஞ்சிக் கொள்ளுதல்" ஆகியவற்றின் நேரடி பரிணாம வளர்ச்சியாக கம்யூனிசம் மலர்ந்து விடாது. (பக்கம் 10.3)

அடுத்ததாக சி.ஆர்.சி ஆவணத்தின் கருத்துப்படி "லெனின் தொடங்கி மாவோ வரை இதுவரை கடைப் பிடிக்கப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகார முறை மொத்தமும் தோல்வியையே தழுவியுள்ளன". ஏனெனில்

சி.ஆர்.சி ஆவணம் சிபாரிசு செய்யும் "மாற்று அரசியல் முறையை" நடைமுறைப்படுத்தாததோடு, அரசு உலர்ந்து உதிர்தலைக் கொண்டு வருவதற்கு இந்த ஆவணம் தன் நுண்ணோக்கில் கண்டறிந்த முறைகளுடன் (ஒட்டுமொத்த சமுதாயமும் அரசு அதிகாரத்தை மீண்டும் உறிஞ்சுதலுடன்) அவர்களுடைய முறை ஒத்திருக்க வில்லை. இதற்கு நாம் கூறவேண்டிய ஒரே பதில் "நல்ல வேளை அவ்வாறு நடக்கவில்லை" என்பதே. உண்மையிலேயே "இதுவரை பாட்டாளி வர்க்க சர்வாதிகார முறை மொத்தமும்" சி.ஆர்.சி ஆவணம் சொல்கின்ற வழியில் சென்றிருந்தால் அந்தப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இப்பொழுது நடந்ததை விட மேலும் விரைவாக தகர்ந்து, தூக்கி எறியப்பட்டிருக்கும். உண்மையான பாடங்கள் நிரம்பிய இந்த வரலாற்று அனுபவம் மொத்தத்தையும் பாட்டாளி வர்க்கம் இழந்திருக்கும்.

எனவே சி.ஆர்.சி ஆவணத்தின் பரீட்சையில் இந்தப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மேலும் முழுமையாகத் தோற்றிருக்க வேண்டும் என்பது நமது விருப்பம். இதை நேர்மறையாகச் செல்வதானால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முதலாளித்துவம் ஆட்சிக்கு வராமல் அதனால் முடிந்த மட்டும் தடுத்தது மட்டுமல்ல, அதற்கு அப்பாலும் இன்று வரையிலும்கூட வெற்றி பெற்றிருக்கிறது.

அரசு பற்றிய குறிப்பாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றி, சி.ஆர்.சி ஆவணத்தின் சமுக ஜனநாயக வழிக்கும், மார்க்சிய-லெனினிய மாவோயிசத்திற்கும் இடையில் உள்ள முக்கியமான கருத்து வேறுபாட்டை மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வந்துவிட்டபின் ஜனநாயகத்தை, சம்பிரதாய ஜனநாயகத்தைக் கொண்டுவருவதே கம்யூனி

சத்தை நோக்கிய வளர்ச்சியின் சாரம்சம் ஆகும் என்ற அடிப்படையில் இந்த ஆவணம் செல்கிறது, உண்மையில் வர்க்கப் போராட்டமே சாராம்சம் ஆகும். மாவோ தெளிவாகக் கூறியபடி, அதுவே முக்கிய இணைப்புக் கண்ணியாகும்.

சி.ஆர்.சி ஆவணத்தின் "அரசு அதிகாரத்தை ஒட்டு மொத்த சமுதாயமும் மீண்டும் உறிஞ்சிக் கொள்ளுதல்" போன்ற கருத்துக்களுடன் மேலோட்டமாக ஒத்திருக்கும் கருத்துக்களை மார்க்ஸ், ஏங்கெல்ஸ் (லெனின்) ஆகியோரிடமும் காணலாம். ஆனால் இந்த ஆவணம் அவற்றின் சாரத்தை மறந்து (மறைத்து)விடுகிறது. சமுதாயம் எதிர் எதிர் வர்க்கங்களாகப் பிரிந்து நிற்பதாலேயே அரசு தோன்றுகிறது. அது ஒரு வர்க்கத்தின் பொருளாதார மேலாண்மை வகிக்கும் ஒரு வர்க்கத்தின் கருவியாகவே விளங்கி மற்றவர்களை ஒடுக்கும். அது ஒரு வர்க்கசர்வாதிகாரக் கருவி. ஏங்கல்சின் "குடும்பம், தனிச் சொத்துடமை, அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்ற நூலில் இக்கருததுகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. எனவே அரசு என்பது எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கவில்லை. அரசே இல்லாத சமுதாயங்கள் அரசு பற்றியோ அதன் அதிகாரங்கள் பற்றியோ அறிந்தே இராத சமுதாயங்கள் இருந்துள்ளன. பொருளாதார வளர்ச்சி, சமுதாய வர்க்கங்களாக பிளவு படுவதோடு தொடர்புடையதாகும். அவ்வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் இந்தப் பிளவுகள் காரணமாக அரசு அவசியமான ஒன்றாகிறது. (பக்கம் 330)

"இந்த அரசு எங்கிருந்தாலும் எவ்வடிவமான ஆட்சி முறையைக் கொண்டிருந்தாலும் சாராம்சத்தில் ஒடுக்கப் பட்ட சுரண்டப்பட்ட மக்களை அடக்கி வைத்திருக்கும் ஒரு எந்திரமே ஆகும்" (பக்கம் 332)

ஒட்டுமொத்த சமுதாயத்தின் அரசியல் விருப்பம் என்று எதுவும் கிடையாது. நிச்சயமாக வர்க்க சமுதாயத்

தில் அவ்வாறு இருக்க முடியாது. வர்க்கங்களுக்கு அரசியல் விருப்பம் உண்டு என்று வேண்டுமானால் கூறலாம். அரசியல் அதிகாரம் (சர்வாதிகாரம்) ஆதிக்க வர்க்கத்தால் செலுத்தப்படுகிறது. ஆதிக்கவர்க்கத்தின் அரசியல் விருப்பத்திற்கும் சரியாகக் கூறுவதனால், ஆதிக்கவர்க்கத்தின் புறவயமான வர்க்க நலன்களுக்கும், அதனால் ஒடுக்கிச் சுரண்டப்படும் வர்க்கங்களின் நலன்களுக்கும் இடையிலான முரண்பாடுகளைச் சமாளிப்பதற்காகவே அரசு அதிகாரம் செலுத்தப்படுகிறது என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

நாம் கவனம் செலுத்த வேண்டிய மற்றுமொரு மையமான பிரச்சனை இங்குள்ளது. அரசின் அதிகாரம் திரண்டிருப்பது அதன் ராணுவத்தில் அரசு இருக்கும் வரை, அதாவது, சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபட்டிருக்கும் வரை ராணுவம் ஏதாவது ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாகவே இருக்கும். அத்தகைய ராணுவம் "அனைத்து மக்களையோ" "ஒட்டுமொத்த சமுதாயத்தையோ" வர்க்க வேறுபாடு இல்லாமல் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. சோசலிச சமுதாயம் வர்க்கங்களால் ஆனது மட்டுமல்ல, அவற்றினிடையே சண்டை சச்சரவுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயம். இந்தச் சூழலில் நிலையான (முழுநேர, தொழில் ரீதியான) ராணுவத்தைச் தடைசெய்து விட்டு அங்கு ஆயுதமேந்திய மக்கள் படையை உருவாக்க வேண்டும் என்பது ராணுவத்தின் மேல் பாட்டாளி வர்க்கத்திற்கு உள்ள ஏகபோகத்தைத் தடை செய்வதும் அதன் மூலம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையே தடை செய்யும்படி கூறுவதும் ஆகும்.

முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் இடைக்கட்டமாக சோசலிசத்தை அடையாளம் காட்டும் அடிப்படை முரண்பாடுகள் வர்க்கங்

கள் தொடர்ந்து நிலவுவதற்கும் குறிப்பாக முதலாளித்துவ வர்க்கம் மீண்டும் மீண்டும் துளிர் விடுவதற்கும் மற்றும் புதிய முதலாளித்துவ சக்திகள் முளைவிடுவதற்கும் காரணமாக அமைந்துவிடுகின்றன. இந்த முதலாளித்துவ சக்திகள் கட்சி மற்றும் அரசு எந்திர நிர்வாகிகளிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் தோன்றுகின்றன.

இந்த நிலைமையில், பாட்டாளி வர்க்கக்கட்சியின் (அதன் ஒரே முன்னோடி கம்யூனிஸ்ட் கட்சியின்)[13] தலைமையில் இயங்கும் நிலையான ராணுவத்தை ஒழித்து ஆயுதமேந்திய அனைத்து மக்கள் படையை உருவாக்குவது உண்மையில் முதலாளித்துவ வர்க்கம் உள்ளிட்ட வெவ்வேறு வர்க்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வெவ்வேறு ராணுவங்கள் உருவாவதிலேயே முடிவடையும். பாட்டாளிவர்க்க அரசின் நிலையான ராணுவத்திற்குப் பதிலாக ஏற்படுத்தப்படும் ஆயுதமேந்திய 'அனைத்து மக்கள்' படையில் தூக்கி எறியப்பட்ட ஆளும் வர்க்கத்தையும், அதன் (வெளிப்படையான) ஆதரவாளர்களையும் சேர்க்க மறுத்து விட்டாலும் கூட இதே முடிவு தான் ஏற்படும். பாட்டாளி வர்க்கத்தின் ராணுவம் தகர்ந்து பலவீனமடையும். முதலாளித்துவ வர்க்கம் உள்ளிட்ட மற்ற முதலாளித்துவ மீட்சியை விரும்பும் ராணுவங்களின் பலம் கூடத் தொடங்கும். உண்மையில் அத்தகையதொரு சூழலில் அரசு அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதும், கம்யூனிசத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதும் பாட்டாளி வர்க்கத்தினரால் இயலாத ஒன்றாகும். உள்நாட்டு எதிர்ப்புரட்சியாளர்கள் கட்டாயமாக வெளி நாட்டு ஏகாதிபத்தியங்கள் மற்றும் பிற்போக்கு அரசுகளின் கூட்டை நாடுவார்கள் என்பதையும் கணக்கில் கொண்டால், இவ்வாறு தான் நடக்கும் என்பதை மேலும் உறுதியாகக் காணலாம். எனவே முழுநேர, நன்கு பயிற்சிபெற்ற பாட்டாளிவர்க்க அரசின்

ராணுவத்தை ஒழித்துவிடுவதால் ஏகாதிபத்தியங்களின் தாக்குதல்களையும், நாட்டிலேயே உள்ள முதலாளித் துவ மீட்சிச் சக்திகளையும் எதிர்த்த போரில் நமது பலம் ஆபத்தான அளவு குறைந்துவிடும்.

அதற்காக, சோசலிசத்திற்குக் கீழ் பரந்து பட்ட மக்கள் ஆயுதம் தாங்குவது அவசியமில்லை என்றோ பாட்டாளிவர்க்கத்தின் ஆட்சியைப் பாதுகாக்க நிலை யான ராணுவத்தை மட்டுமே சார்ந்திருக்க இயலு மென்றோ பொருளல்ல. உண்மையில், ஒரு புறம் எதிர்ப் புரட்சியாளர்களின் ஆயுதப் போராட்டம் ஏகாதிபத்தி யங்களின் தாக்குதல் ஆகியவற்றைச் சமாளிப்பதற்கும், மறுபுறம் சமுதாயத்தில் வர்க்கங்களே இல்லாமல் (அதன் மூலம் அரசே தேவை இல்லாமல்) செய்வதற்காக சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றுவதற்கும் பரந்து பட்ட மக்கள் ஆயுதமேந்தியிருப்பது அவசியமாகும். அதுமட்டுமல்ல, நிலையான ராணுவத்தைக் கலைத்து விடுகின்ற நிமைமை வரும்வரை பரந்துபட்ட மக்கள் ஒழுங்குப்படுத்தப்பட்ட பயிற்சிபெற்ற மக்கள் படை ஒன்றும் பாட்டாளி வர்க்க அரசின் நிலையான ராணுவத் திற்குஅருகே இருப்பதுஅவசியம்.

ஆனால் நிலையான ராணுவமோ, மக்கள் படையோ எதுவாக இருப்பினும் தீர்மானகரமான விஷயம் ஆயுதங் கள் பெயரளவில் இல்லாமல் உண்மையிலேயே மக்கள் திரளின் கைகளில் இருக்கிறதா என்பதே. நிலையான ராணுவத்திலும், மக்கள் படையிலும் உள்ள தலை மையைப் பொறுத்தே இக்கேள்விக்கு விடைகாண முடியும். இந்தத் தலைமையின் தன்மை அது பின்பற் றும் அரசியல், தத்துவார்த்த வழிகளிலும் இன்னும் தெளி வாக அதன் திட்டமான கொள்கைகளிலும் வெளிப்படு கிறது. இது ராணுவத்திற்குள்ளும் மக்கள் படைக்குள் ளும் நிலவும் அக உறவுகளோடும் அவற்றிற்கும் மக்கள்

திரளுக்கும் இடையேநிலவும்புற உறவுகளோடும் சம்பந்த பட்ட விஷயம். மேலும் இந்த ஆயுதப் படைகளின் அடிப்படை நோக்கம் வரையறுக்கப்படுதல், அந்த வரை யறையால் தீர்மானிக்கப்படும் கூறுகளான போரிடும் முறை, கோட்பாடுகள் ஆகியவற்றோடும் சம்பந்த முடையது.

மக்களிடையே வர்க்க வேறுபாடுகள் நிலவுவதை ஏற்றுக் கொள்வதும், திசை வழி, கொள்கைகள் மூல மாகப் பாட்டாளி வர்க்கம் மற்றும் அதனுடைய முன் னோடியான கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைமைப் பங்கை ஏற்றுக் கொள்வதும் இவ்விஷயங் களில் தீர்மானகரமான கூறாகும். பாட்டாளி வர்க்க அரசின் ராணுவம் மக்களின் ஆயுதப் படையாக, பாட் டாளி வர்க்கத்தின் புரட்சிகர நலன்களுக்கு இசை வாகச் செயல்படுகிறதா இல்லையா என்பதை, மேற் கூறிய அணுகுமுறையைத் தொடர்ந்து கடைப்பிடிப் பதன் மூலமும், நமது திசை வழிக்காகத் தொடர்ந்து போராடுவதன் மூலமும் மட்டுமே உறுதி செய்ய முடியும்.

## வர்க்க குறுக்கல்வாதத்தை எதிர்க்கிறோம் என்ற பெயரில் வர்க்க ஆய்வையே ஒழித்தல்

ஆனால் சி.ஆர்.சி ஆவணம் இத்தகைய அணுகு முறையை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்பது தெளிவு. மாறாக அது அரசின் வர்க்கத் தன்மையை இருட்டடிப்புச் செய்ய முயல்கிறது. உண்மையில் அரசு மற்றும் அரசு உலர்ந்து உதிர்தல் ("ஒட்டுமொத்த சமு தாயமும் அரசு அதிகாரத்தை மீண்டும் உறிஞ்சிக் கொள்ளுதல்") பற்றிய இதன் ஆய்வு பாட்டாளி வர்க்க அரசைக், கைப்பற்றுவது மட்டுமல்லாமல் முதலாளித்துவ அரசைப் பற்றிய அடிப்படை உண்மைகளையும்

திரித்துப் புரட்டுவதை ஆதாரமாகக் கொண்டுள்ளது. "முதலாளித்துவ சர்வாதிகாரமும், பாட்டாளி வர்க்க ஜனநாயகமும்" என்ற தலைப்பில் கீழ்கண்ட (மறு) மதிப்பீடு தரப்பட்டுள்ளது.

"எல்லா விதமான முதலாளித்துவ அரசுகளும் தவிர்க்க முடியாமல் முதலாளித்துவ சர்வாதிகாரமும், மாறுகின்ற இடைக் கட்டத்தில் நிறுவப்படும் எல்லாவித மான பாட்டாளி வர்க்க அரசுகளும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே என்ற லெனின் மதிப்பீடு செய்தது முற்றிலும் சரியே. ஆனால் சர்வாதிகாரத்தின் இந்தப் பகுதி ஒரு முக்கியமான பகுதிதானே அன்றி முழுமை யும் அதுவே அல்ல. ஒரு முதலாளித்துவ ஜனநாயக அரசு தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள முரண் பாட்டைப் பற்றிய கேள்வியை எதிர்கொள்கிறது. ஆனால் ஒரு முதலாளித்துவ பாசிச அரசும். இதே போல் ஒரு முதலாளித்துவ சர்வாதிகாரமே என்றாலும் மேலே குறிப்பிட்ட முரண்பாட்டை எதிர்கொள்ள அதில் உள்ள அளவிற்கு அனுமதிப்பதில்லை. முதலாளித்துவ சமுதாயம் மனித சமுதாய வர லாற்றிலேயே முதன் முதலாக தனிமனிதனை ஒரு அர சியல் கூறாக ஒப்புக்கொள்வதோடு பெயரளவிலாவது அவனுக்கோ அவளுக்கோ அரசியல் அமைப்பில் பங் களிக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தின் பலவீனம் அது தனிச் சொத்துடைமையின் இறையாண்மையை அடிப்படையாகக் கொண்டு அதனால் முதலாளித்துவ சமுதாயத்தை உறுதி செய்வதுதான் என அது பேசித் திரியும் சமத்துவம் பெயரளவிலானது மட்டுமல்ல பித்த லாட்டமானதும் ஆகும்". (பத்தி 9.1)

முதலாவதாக, முதலாளித்துவ, ஜனநாயகத்தை அதன் பலவீனத்தின் அடிப்படையில் சி.ஆர்.சி ஆவணம் விமர்சனம் செய்யும் முறை மிக அருமை. ஆனால்

அதற்கப்புறம், முதலாளித்துவ ஜனநாயகம் "தனிச் சொத்துடைமையின் இறையாண்மையை அடிப்படையாகக் கொண்டுள்ளது" என்று வெறுமனே கூறல் தவறானதும், தெளிவற்றதுமாகும். முதலாளித்துவ ஜனநாயகம் முதலாளித்துவ சொத்துடைமையின் இறையாண்மையை அடிப்படையாகக் கொண்டதாகும் சாதாரணமாக இந்த வேறுபாடு அத்தனை முக்கியமற்றதாக மிகச் சிறிதாகத் தோன்றலாம். மற்ற சமயங்களில் இது சிறிய வேறுபாடுதான். ஆனால் முதலாளித்துவத்தின் வர்க்க அடிப்படையையும் தன்மையையும் சி.ஆர்.சி ஆவணம் இருட்டடிப்புச் செய்ய முயலும் இந்த இடத்தில், இந்த வேறுபாடு மிக முக்கியமானதாகிறது. எனவே மேலும் இதன் விளைவை ஆய்வது மிக முக்கியமாகிறது. முதலாளித்துவச் சொத்துடைமையின் சாராம்சம் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவதாகும். கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டறிக்கையில் இதைத்தான் மார்க்சும், ஏங்கெல்சும் குறிப்பாக வரையறுக்கின்றனர். அவர்கள் எவ்வாறு "நவீன முதலாளித்துவத்தின் தனி சொத்து, வர்க்க எதிர்ப்பை, பலரைச் சிலர் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது" என்று காட்டியுள்ளனர். மேலும் அவர்கள் 'தனிச் சொத்துடைமையை அழிப்பது என்றால் இந்த உறவுகளையும் நிலைமைகளையும் அழிப்பது என்று பொருள் கொள்ள வேண்டும். 'இந்தப் பொருளில்' அவர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். (கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டறிக்கை- பீகிங் பதிப்பு பக்கம் 50, 51)

தனியார் சொத்து என்றாலே பொதுவாக இந்த வர்க்க எதிர்ப்புக்கள் இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. பொருள் உற்பத்திக்கான கருவிகள் மட்டுமின்றி, சொந்த உபயோகத்திற்கான பொருட்களையும், சேர்த்தே பொதுவாக தனிச் சொத்து என்று கூறப்படு

கிறது இந்த சொந்த உபயோகத்திற்கான பொருட்களின் உடைமை எந்தவிதச் சுரண்டல் உறவையும் கொண்டிருக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் உற்பத்திக் கருவிகள் தனியார் உடமையாக இருந்தாலும்கூட இவ்வாறான உறவு நிலவ வேண்டும் என்று கட்டாயமில்லை. (எடுத்துக்காட்டாக தானே நில உடைமையாளனகவும், தொழிலாளியாகவும் உள்ள (சிறு விவசாயி) மார்க்சும், ஏங்கெல்சும் தெளிவாகக் கூறியது போல் முதலாளித்துவ தனிச் சொத்துடைமை (மற்றும் நிலப்பிரபுத்துவம், அடிமைமுறை போன்ற எதிர்ப்புணர்வோடு கூடிய சொத்து உறவுகளும்) மட்டுமே இந்தச் சுரண்டல் உறவுகளோடும், வர்க்க எதிர்ப்புகளோடும் சம்பந்தப்பட்டுள்ளன. கம்யூனிசம் உற்பத்திச் சாதனங்களில் அனைத்து தனியார் உடைமை முறைகளையும், ஏன் பண்ட உற்பத்தியையே கூட ஒழித்து விட இயலும். அதே நேரத்தில் தனிச் சொத்துடைமையின் பல்வேறு வகைகளின் வேறுபாடுகளையும் தெளிவாக வரையறுக்கிறது. 15

'தனிச் சொத்துடைமை'என்றபொதுவானதன்மையை இங்கே பயன்படுத்துவதிலும் முதலாளித்துவ ஜனநாயகம் தனிச் சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று மொட்டையாகக் கூறுவதும் முதலாளித்துவ சமுதாயத்தின் வர்க்கப்பிரிவுகளை மூடிமறைக்கும் செயலாகும். இந்த வர்க்கப் பிரிவினையை, முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையே நிலவும் உறவின் சம்பிரதாயத் தன்மை மூடிமறைப்பதை நாம் ஏற்கனவே அறிவோம் (மேலோட்டமாக இது உழைப்பிற்கும் கூலிக்கும் இடையே நிலவும் சமமான பரிவர்த்தனைபோல் தோன்றினாலும் உண்மையில் சுரண்டல் உறவாகும்.)

சி.ஆர்.சி ஆவணத்தின் இந்தப் பகுதியில்; முதலாளித்துவ வர்க்கத்தை போற்றிப் பாடப்படும் பக்திப் பாடல்

கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. (மனித சமுதாய வரலாற்றில் முதன் முறையாக முதலாளித்துவ ஜனநாயகம் தனிமனிதர்களை அரசியல் கூறுகளாக அங்கீகரித்து அவர்களுக்குப் பெயரளவிலாவது அரசியல் முறையில் பங்களிப்புத் தருகிறது முதலாளித்துவ ஜனநாயகத்தை மேலும் கவர்ச்சிகரமானதாகக் காட்டுவதற்காக அதை முதலாளித்துவ பாசிசத்துடன் ஒப்பிடும் நுணுக்கத்தையும் இங்கு கட்டாயம் கவனிக்க வேண்டும். இங்கே முதலாளித்துவ சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினைகளை மறைப்பதற்கு அல்லது அதன் கடுமையைக் குறைத்துக் காட்டுவதற்காக உண்மை திரிக்கப்படுவதையே நாம் காண்கிறோம்.

இவை அனைத்தும் திரிபுவாதத்தின் வழக்கமான பொறுக்கி எடுத்து ஒட்டுச் சேர்க்கும் முறைதான். ஒரு புறம், முதலாளித்துவ ஜனநாயக அரசுகள் தவிர்க்க முடியாமல் "முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரங்களாக" உள்ளன. ஆனால் மறுபுறம் அவை "தனி மனிதர்களை அரசியல் கூறுகளாக அங்கீகரித்து பெயரளவிலாவது அரசியலில் பங்கு தருகின்றன". சி.ஆர்.சி ஆவணம் (பெயரளவிலாவது) அனைத்து முதலாளித்துவ அரசுகளும் சர்வாதிகாரங்களாக இருப்பதே சாரமான விசயம் என்று ஏற்றுக் கொள்கிறது. ஆனால் உடனேயே தனது பொறுக்கி எடுத்து ஒட்டுச்சேர்க்கும் முறையைப் பயன்படுத்தி சாரத்தைச் சாரமற்றதாக்குகிறது. தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள முரண்பாட்டில் கவனத்தைக் குவிக்கிறது. இதை முன்பு கூறிய, அனைத்து முதலாளித்துவ அரசுகளும் சர்வாதிகாரங்களே என்பதற்கு இணையான, உண்மையில் அதைவிட முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காட்ட முயற்சிக்கிறது. இதனை இன்னும் கவனமாகப் பரிசீலிக்கலாம்.

முதலாளித்துவ ஜனநாயக அரசுகள் மட்டுமல்லாமல் எல்லாவிதமான அரசுகளும் ஏதாவது ஒரு வழியில்

வர்க்கங்களை மட்டுமில்லாமல் தனி மனிதர்களையும் எதிர்கொள்வது சாதாரண விசயம்தான். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திலும் தனி மனிதர்களின் சேர்க்கையான மக்கள்திரள்தான் ஒட்டு மொத்தமாக ஆட்சி செய்கிறது. என்றாலும் மக்கள்திரளில் உள்ள தனிமனிதர்களின் மேல்கூட அடக்குமுறையைச் செலுத்த வேண்டியுள்ளது என்று நாம் முன்பு கூறியுள்ளதை இங்கு நினைவு கூர்தல் அவசியமாகும். அனைத்து அரசுகளும் அனைத்து சர்வாதிகாரங்களும் முதலாவதாகவும், முக்கியமானதாகவும் ஆளும் வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் வர்க்கங்களுக்கு எதிராக ஆளும் வர்க்கத்தின் நலன்களை உயர்த்திப் பிடிக்கவேண்டும். ஆனால் அத்தோடு நின்றுவிடாமல் ஆளும் வர்க்கத்திலேயே உள்ள தனிமனிதர்களின் நலன்களுக்கும் ஆளும் வர்க்கத்தின் பொதுநலன்களுக்கும் இடையே மோதல் ஏற்படும் பொழுது பொது நலன்களையே உயர்த்திப் பிடித்தாக வேண்டும். முன்பிருந்த அரசுகளிலிருந்து வேறுபட்டு, தனி மனிதர்களின் உரிமைகளை புதிய வழிகளில் முதலாளித்துவ ஜனநாயகம் அறிவிப்பது உண்மையே. ஆனால் வர்க்க எதிர்ப்புகளிலிருந்துதான் அரசுதோன்றுகிறது. “அனைத்து அரசுகளும் சாராம்சத்தில் வர்க்கங்களை ஒடுக்கும் கருவிகளே” என்ற ஏங்கல்ஸின் ஆய்வுரை மற்ற எந்த அரசு வடிவத்திற்கும் போலவே நிச்சயமாக முதலாளித்துவ ஜனநாயக அரசு வடிவத்திற்கும் பொருந்துகிறது என்பதை நாம் இங்கே வலியுறுத்தியாகவேண்டும். முதலாளித்துவ ஜனநாயக சமுதாயத்தில் தனிமனிதர்களுக்கும், அரசுக்கும் உள்ள உறவில், வர்க்க சர்வாதிகாரம், வர்க்க உறவுகள் ஆகிய அம்சங்களைத் தனியே பிரித்து ஒதுக்கி விட சி.ஆர்.சி ஆவணம் முழுமூச்சாக முயல்கிறது. எனவே இந்த ஆவணம், “முதலாளித்துவ ஜனநாயகத்தை முதலாளித்துவ அரசுடன் ஒப்பிட்டு, முதலாளித்துவ ஜனநாயகத்தில் வெளிப்படும் ஜனநாயகத்தின்

வர்க்கத்தன்மையற்ற கூறுகளை லெனின் புறக்கணித்து விட்டார். ஒரு சமுதாயத்தின் அரசியல் அமைப்பில் தனி மனிதர்களின் அரசியல் பங்களிப்பை அங்கீகாரம் செய்வது சமுதாயத்திற்கும், தனிமனிதர்களுக்கும் இடையே எழும் வர்க்கத்தன்மையற்ற முரண்பாடுகளை எதிர் கொள்வதில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னேற்றமாகும்" என்று நமக்குக் கூறுகிறது (பத்தி 9)

மார்க்சை ஒரு தாராளவாதியாகச் சித்தரித்து, மார்க்ஸ் "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டது, ஒரு பேச்சுக்குத்தானே தவிர உண்மையான பொருளில் அல்ல. ஏனென்றால் அது ஜனநாயகத்திற்கு எதிரானது" என்று காவுட்ஸ்கி மற்றவர்கள் நம்பும்படியாக வாதிட்டார், இதனை அம்பலப்படுத்தும் பொழுது லெனின், "இந்த போக்குகளின் தத்துவார்த்த வேர்களைத் தேடினால், அவை இயக்க இயலுக்குப் பதிலாக பொறுக்கி எடுத்து ஒட்டுச் சேர்த்தலையும் நுட்பமான பொய்களையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன" என்று குறிப்பிட்டதை இங்கு நினைவு கூர்தல் அவசியம். வர்க்க சமுதாயத்தில், சமுதாய வர்க்கங்களின் அங்கமான தனி மனிதர்கள் வர்க்க அடிப்படையிலிருந்து பிரிக்க முயலுதல், முதலாளித்துவ அரசிற்கும், அவ்வரசு எதிர்கொள்ளும் முரண்பாடுகளுக்கும் இரட்டைத் தன்மை கற்பித்தல், முதலாளித்துவ ஜனநாயக அரசின் வர்க்கதன்மையற்ற அம்சத்தை வலியுறுத்துதல் ஆகிய முயற்சிகளில் சி.ஆர்.சி. ஆவணம் ஈடுபடும்பொழுது பொருள் முதல்வாத இயக்க இயலுக்குப் பதிலாகப் பொறுக்கி எடுத்து ஒட்டுச் சேர்த்தலையும் நுட்பமான புரட்டுக்களையும் பயன்படுத்துவதைக் காண முடிகிறது.

சீனத்து டெங் கும்பல் புரட்சியில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. உற்பத்தியிலும் கவனம் செலுத்துதல் அவசியமாகும்; நிறுவனங்களின் சட்டங்

களும், விதிகளும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மக்களுக்கிடையிலான உறவுகளைப் (வர்க்க உறவுகளை) பற்றி மட்டுல்லாது உற்பத்தி முறையில் மனிதர்களுக்கும், இயற்கைக்கும் இடையே உள்ள உறவுகளைப் (வர்க்கத் தன்மை அற்ற முரண்பாடு) பற்றியும் இருக்க வேண்டியுள்ளது என்று வாதிட்டன. இதை மாவோவும் அவரது தோழர்களும் இந்த முதலாளித்துவ பாதையாளர்களை எதிர்த்த மாபெரும் இறுதிப்போரில் அம்பலப்படுத்தினர். உற்பத்தியின் பொழுது மக்களுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள உறவை (வர்க்கத் தன்மையற்ற உறவை) உற்பத்தியின் பொழுது மக்களுக்குள் ஏற்படும் உறவிலிருந்து (உற்பத்தி உறவு - வர்க்க சமுதாயத்தில் - எனவே வர்க்க உறவு) இவ்வாறு பிரிக்க முடியாது என்பதைச் சீனப் புரட்சியாளர்கள் சுட்டிக் காட்டினர். 'வர்க்கத்தன்மையற்ற முரண்பாடுகள், என்ற போர்வையில் முதலாளித்துவ வர்க்கத்தன்மை நிறைந்த சட்டங்களையும் விதிகளையும் திணிப்பதும் உற்பத்தியைப் பெருக்குவது என்ற போர்வையில் புரட்சியை மூச்சுத்திணறச் செய்யும் திசைவழியை உயர்த்திப் பிடிப்பதின் மூலமும் "புரட்சியை பற்றிக் கொள்ளுங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்ற மாவோவின் சரியான திசைவழியைத் தூக்கி எறிய முயலுவது ஆகியவற்றிற்கான முயற்சியே திரிபுவாதிகளின் இந்தப் பொறுக்கி எடுத்து ஒட்டுச் சேர்க்கும் வேலை என்பதையும் புரட்சியாளர்கள் அம்பலப்படுத்தினர்.

முதலாளித்துவ ஜனநாயக அரசு ஒரு வர்க்க ஒடுக்கு முறைக்கான கருவிமட்டுமல்ல, அதற்கு வர்க்கம் சாராத கூறுகளும் உண்டு என்று வாதிடுவதற்கு சி. ஆர் சி. ஆவணமும் இதே மாதிரியான ஒட்டு சேர்ப்பு முறையைத்தான் பயன்படுத்துகிறது. முதலாளித்துவ ஜனநாயக அரசு என்பதன் பொருள் ஜனநாயகம் முதலாளித்துவ வர்க்கத்திற்கு மட்டுமே கிடைக்கும். அது

பாட்டாளி வர்க்கத்தின் மேலும் மக்கள் திரள் மேலும் செலுத்தப்படும் சர்வாதிகாரம் ஆகும் என்ற மாபெரும் சாராம்சமான உண்மையை மறுப்பது அல்லது நீர்த்துப் போகச் செய்வதே. இந்த விவாதங்களின் பொருளும், விளைவும் ஆகும். இதை மறந்து விட்டு சமுதாயத்திற்கும், தனி மனிதர்களுக்கும் இடையே நிலவும் வர்க்கத்தன்மையற்ற முரண்பாடுகளைத் தீர்ப்பதில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முன்னேற்றங்கள் பற்றிப்பேசுவது மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடு ஒன்றை மறந்து விடுவதாகும். வர்க்க சமுதாயத்தில் தனிமனிதர்கள் மிகமிக அடிப்படையாகவும், தீர்மானகரமாகவும் ஒரு வர்க்கத்தின் உறுப்பினர்கள். அவர்களது தனிமனித விருப்பங்களும் கூட அவர்களது வர்க்கத்தின் நிலையாலும், சமுதாயச் சூழல்களாலும் உருவாகின்றனவே தவிர சமுதாய உறவுகளுக்கு அப்பற்பட்ட ஏதோ ஒரு தனி மனித, தனித்தன்மையால், உருவாவதில்லை.[16]

இந்தப்பிரச்சினையின் சாரத்தை மேலும் தெளிவாக உணர்வதற்கும், முதலாளித்துவ ஜனநாயக அரசைப்பற்றியும், அந்த அரசிற்கும் தனிமனிதர்களுக்கும் மற்றும் வர்க்கங்களுக்கும் உள்ள உறவைப் பற்றியும் சி.ஆர்.சி. ஆவணம் கடைபிடிக்கும் அணுகு முறையின் வர்க்க அடிப்படை, வர்க்க நலன்கள், வர்க்க கண்ணோட்டங்கள் ஆகியவற்றை முழுமையாக வெட்ட வெளிச்சமாக்குவதற்கும், இந்த விசயங்களைத் தெளிவு படுத்த மார்க்சீய நூல்களின் சில முக்கிய பகுதிகளை மீண்டும் நோக்குவது பயனுள்ளதாயிருக்கும். முதலாவதாக முதலாளித்துவப் புரட்சி, "அனைவருக்கும் பொதுவான கோட்பாடுகள்" என்று தானாகவே அறிவித்துக் கொண்டவற்றின் வர்க்க உள்ளடக்கங்களை ஏங்கெல்ஸ் வெட்டவெளிச்சமாக்கும் பகுதியைக் காணலாம்.

"பிரான்சு நாட்டில் வரவிருந்த (முதலாளித்துவ) புரட்சிக்கு மக்களின் மனங்களைத் தயார் செய்த மாபெரும் மனிதர்களும் தீவிர புரட்சியாளர்களே! அவர்கள் எந்தவிதமான புறச்சக்திகளையும், அங்கீகரிக்கவில்லை. மதம், இயற்கை, அறிவியல், சமுதாயம், அரசியல் நிறுவனங்கள் என்று அனைத்துமே கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டன. பகுத்தறிவு என்ற நீதிபதிக்கு முன்னால் அனைத்துமே தாங்கள் இருப்பதற்கான காரணத்தைக் கூறியாக வேண்டும். இல்லையேல் மறைந்து போக வேண்டும்..!

இப்போது, முதன் முறையாக, வெளிச்சம் பிறந்துள்ளது, பகுத்தறிவின் சாமராஜ்யம் தோன்றியுள்ளது, இனிமேல், மூடநம்பிக்கை, அநீதி, சலுகை, ஒடுக்குமுறை அனைத்தும் என்றென்றும் நிலைத்திருக்கும் உண்மைகளால், உரிமைகளால், இயற்கையையும் பறிக்கப்பட முடியாத மனித உரிமைகளையும் அடிப்படையாகக் கொண்ட சமத்துவத்தால் தோற்கடிக்கப்படும்.

இந்த 'பகுத்தறிவு சாம்ராஜ்யம்' முதலாளித்துவ வர்க்கத்தின் வெறும் கோட்பாட்டு சாம்ராஜ்யமே என்பது இன்று நமக்குத் தெரிந்ததுதான். இந்த 'என்றென்றும் நிலைத்திருக்கும் உரிமைகள்' முதலாளித்துவ நீதியாக வெளிப்பட்டன. இந்த 'சமத்துவம்' சட்டத்தின் முன்னால முதலாளித்துவ சமத்துவமாகத் தன்னைக் குறுக்கிக் கொண்டது; முதலாளித்துவச் சொத்துரிமை மனிதனின் இன்றியமையாத உரிமைகளில் ஒன்றாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அந்தப் பகுத்தறிவு சாம்ராஜ்யம், ரூசோ கூறிய ஒப்பந்த சமுதாயம், ஒரு ஜனநாயக முதலாளித்துவ குடியரசாகத்தான் வந்தது, வர முடிந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் மாபெரும் சிந்தனையாளர்களும், அவர்களுக்குமுன் தோன்றிய சிந்தனையாளர்

களைப் போலவே, அவர்கள் வாழ்ந்த கால கட்டத்தின் வரம்புகளை மீறிச் செல்ல முடியவில்லை. (ஏங்கெல்ஸின் கற்பனாவாத சோசலிசமும், விஞ்ஞான சோசலிசமும், பக்கம் 115-16.)

அடுத்ததாக, "எனது ஆய்வுகளின் வழிகாட்டியாகத் திகழும் கோட்பாடுகள்" என்று மார்க்ஸ் குறிப்பிட்ட பகுதியைக் காணலாம்.

"தங்களது உயிர்வாழ்தலுக்கான சமுதாய உற்பத்தியில் ஈடுபடும் பொழுது, மனிதர்கள் தேவையான, உறுதியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்; அவை அவர்களது சுயவிருப்பு வெறுப்புக்களுக்குக் கட்டுப்பட்டவை அல்ல. உற்பத்திச் சாதன சக்திகளின், ஒரு குறிப்பிட்ட கட்ட வளர்ச்சிக்கு ஏற்ப வரும் உற்பத்தி உறவுகள், இந்த உற்பத்தி உறவுகள் ஒன்றாய்த் திரண்டுதான் சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்பாய் ஆகிறது. இந்த உண்மையான அடித்தளத்திலிருந்துதான் சட்டம், அரசியல் ஆகிய மேற்கட்டுமானங்கள் எழுகின்றன. இதன் மட்டத்திற்கு ஏற்ப சமுதாய உணர்வுகள் திட்டமான வடிவங்கள் தோன்றுகின்றன. பொதுவாக புறவாழ்வின் உற்பத்தி உறவுதான் சமுதாய அரசியல் சிந்தனை துறைகளின் வாழ்க்கை முறையை நிர்ணயம் செய்கின்றன. மனிதர்களின் சிந்தனை மட்டம் அவர்கள் வாழும் முறையைத் தீர்மானிப்பதில்லை. அதற்கு மாறாக மனிதர்களின் சமுதாய வாழ்வுதான் அவர்களின் சிந்தனை மட்டத்தைத் தீர்மானிக்கின்றது. (மார்க்ஸ் எழுதிய அரசியல் பொருளாதார விமர்சனத்திற்கு ஒரு பங்களிப்பு நூலின் முன்னுரையில், பீகிங் பதிப்பு, பக்கம் 3)

இறுதியாக இதுபற்றி லெனின் கூறுவதைக் கேட்போம். மக்கள் திரள் வர்க்கங்களாகப் பிரிந்து நிற்பது அனைவருக்கும் தெரியும். வர்க்கங்கள் வழக்கமாக

அரசியல் கட்சிகளால் வழிநடத்தப்படுகின்றன. அரசியல் கட்சிகளோ எப்பொழுதும் மற்றவர்களைவிட அதிக அனுபவமும் செல்வாக்கும் அதிகாரமும் வாய்ந்த நபர்களின் நிலையான குழுக்களால் வழிநடத்தப்படுகின்றன. அவர்களே மிகப் பொறுப்பு வாய்ந்த பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களைத் தலைவர்கள் என்று அழைக்கிறோம். இவை அனைத்தும் ஆரம்பப் பாடங்கள். (லெனின் எழுதிய இடது சாரிக் கம்யூனிசம் ஒரு இளம் பருவக் கோளாறு என்ற நூலில், பக்கம் 29-25)

இந்த மேற்கோள்கள் அனைத்திலும் நாம் காணும் அடிப்படையான பொதுவான கருத்து என்ன? முதலாளித்துவ உலகினாலும் முதலாளித்துவ வர்க்கக் கண்ணோட்டத்தினாலும் தங்களது சிந்தனைகளை வடிவமைத்துக் கொண்டுள்ளவர்களால் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உள்ளடக்கம் நிறுவனங்கள், சிந்தனைகள் ஆகியவற்றை நிர்ணயிக்கும் அடிப்படைப் பொருளாதார உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியாது. இதற்கு குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் விதிவிலக்கல்ல. அவர்களால் எவ்வாறு பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றின் உண்மையான உள்ளடக்கங்களைச் சரியாகச் புரிந்துகொள்ள இயலாதோ அதே போல் முதலாளித்துவ ஜனநாயகத்தின் உண்மையான வர்க்கத் தன்மை, அடிப்படை, மேலும்சுதந்திரம், தனித்தன்மை போன்றவற்றைப் பற்றி முதலாளித்துவ ஜனநாயகத்தின் கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையையும் புரிந்து கொள்ள இயலாது. பல்வேறு வர்க்கங்களுக்கும் இடையே, தனிமனிதனுக்கும் வர்க்கங்களுக்கும் இடையே, வர்க்கங்களுக்கும் அதன் தத்துவார்த்த அரசியல் தலைமைக்கும் (கட்சிகள்) இடையே நிலவும் உறவுகளை அவர்களால் சரியாகப் புரிந்து கொள்ள இயலாது.

தனது வர்க்கத் தன்மையற்ற (அல்லது வர்க்க தன்மையற்ற கூறுகள் பற்றிய) ஆய்வு முயற்சியால் சி.ஆர்.சி ஆவணம் மார்க்ஸ், ஏங்கெல்சின் ஜெர்மானியக் கோட்பாடுகள் நூலின் முதல் அதிகாரத்தில் ஒருபத்தியை-சரியாகச் சொன்னால் அந்த பத்தியில் ஒரு பகுதியை மேற்கோள் காட்டுகிறது.

"வரலாற்றின் பரிணாம வளர்ச்சியின் போக்கில் ஒவ்வொரு தனிமனிதனுடைய வாழ்வும் இரண்டாகப் பிளவு படுகிறது. ஒன்று தனிமனித வாழ்வு, மற்றது உழைப்பின் ஒரு பிரிவைச் சேர்ந்து அந்தப் பிரிவின் விதிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது." (பக்கம் 66)

சி.ஆர்.சி ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது இவ்வளவே. கொடுக்கப்படாமல் விடப்பட்டதோ பெரும் பகுதியாகும். முழுப் பகுதியையும் நோக்கினால் சி.ஆர்.சி ஆவணம் கொள்ளும் பொருளுக்கு முற்றிலும் மாறுபட்ட பொருளில் மார்க்சும்-ஏங்கெல்சும் கூறியிருப்பதைத் தெளிவாக உணரலாம். ஒரு வர்க்க சமுதாயத்தில் தனித் தன்மை வர்க்கத்திற்குள்ளிலிருந்துதான் உருவாகிறது, வர்க்க உறவுகளால் கட்டுப்படுத்தபடுகின்றது என்பதை மார்க்சும்-ஏங்கெல்சும் தெள்ளத் தெளிவாக உணர்த்தி யுள்ளனர். எடுத்துக் காட்டாக சி.ஆர்.சி ஆவணம் மேற் கோள் காட்டியுள்ள பகுதிக்கு அடுத்த வரியைக் கவனி யுங்கள். "இதிலிருந்து எடுத்துக்காட்டாக குத்தகை யாளனோ, முதலாளியோ, தனிமனிதர்களோ அல்ல என்று பொருள் கொள்வது எங்கள் நோக்கம் அல்ல. ஆனால் அவர்களது குண நலன்கள் திட்டமான வர்க்க உறவுகளால் தீர்மானிக்கப்பட்டுக் கட்டுப்படுத்தப்படு கின்றன. மற்ற வர்க்கங்களுடன் ஆன எதிர்ப்பில்தான் பிளவு ஏற்படுகிறது. தங்களுக்குள்ளேயே பிளவு ஏற் படுவது அவர்கள் திவாலாகும்பொழுதுதான்"(பக்கம் 66)

மார்க்சும், ஏங்கெல்சும் இங்கு குறிப்பிடுவதின் பொருள் வர்க்க சமுதாயத்தில் தனி மனித வாழ்க்கையிலோ அவர்களது உழைப்பிலோ, வர்க்கத் தன்மையற்ற கூறுகள் உண்டு என்பதல்ல மாறாக, தனிமனிதர்கள் தனிமனிதர்களாகவே வாழ்ந்து உற்பத்தியில் ஈடுபட்டாலும் ஒட்டுமொத்த சமுதாயத்தின் உற்பத்தி முறையாலும் அதன் வேலைப் பிரிவினையாலும் தீர்மானிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப் படுவதில் ஒரு முரண்பாடு நிலவுகிறது என்பதையே முதலாளித்துவ் சமுதாயத்தில் அவர்களது உழைப்பு (மொத்த வாழ்க்கையையும்கூட) பண்ட உற்பத்தியுடனும் பரிவர்த்தனையுடனும், அனைத்திற்கும் மேலாக மூலதனத் திரட்சியுடனும் பிணைந்துள்ளது. மார்க்சும் ஏங்கெல்சும் இதனை விரிவாக அலசுகின்றனர் எவ்வாறு முதலாளித்துவத்தின் கீழ், குறிப்பாக, பாட்டாளி வர்க்கத்திற்கு தனிமனித சுதந்திரத்தின் வெளித் தோற்றத்திற்கும், சாரத்திற்கும், (வர்க்க ஒடுக்குமுறை சுரண்டல்) இடையே வேறுபாடு நிலவுகிறது என்பதை விளக்குகின்றனர். அதே நூலின் மற்றொரு நீண்ட பகுதியைக் காணலாம்.

பண்ணை முறையில் (இன்னும் சிறப்பாக காட்டுவாசிகள் மத்தியில்) இது இன்னும் கண்ணுக்குப் புலப்படாமலேயே உள்ளது. எடுத்துக் காட்டாக மற்ற எந்த உறவுகள் இருப்பினும் ஒரு பிரபு எப்பொழுதுமே பிரபுவாகத்தான் இருக்கிறான். ஒரு சாமானியன் எப்பொழுதுமே சாமானியனாகத்தான் இருக்கிறான். இது அவனது தனிமனிதத் தன்மையிலிருந்து பிரிக்க முடியாத பண்பாகும். தனி மனிதனாகவும், ஒரு வர்க்கத்தின் மனிதனாகவும் பிரிவு ஏற்படுவது; அதாவது தனி மனிதனின் வாழ்க்கை நிலைகள் விபத்துக்களில் நிர்ணயிக்கப்படுகின்ற நிலைமை வர்க்கங்கள் தோன்றியதாலேயே தோன்றுகின்றன. வர்க்கங்களோ முதலாளித்துவ வர்க்கத்தில் உருவாக்கப்பட்டவை. இந்த விபத்துத் தன்மை

தனிமனிதர்கள் தங்களுக்குள் போட்டாபோட்டி போட்டுக் கொள்வதாலும், போராடுவதாலும் முளைவிட்டு வளர்ச்சியடைகின்றன. எனவே கற்பனையில் முதலாளித்துவத்தின் கீழ் தனிமனிதர்கள் முன்பிருந்ததைவிடச் சுதந்திரமாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் அவர்களது வாழ்க்கை நிலை விபத்துக்களால் நிர்ணயிக்கப்படுவதுபோல் தோன்றுகின்றன. உண்மையில் அவர்கள் முன்னைவிடச் சுதந்திரம் குறைந்தவர்களாவே உள்ளனர். ஏனெனில் சூழ்நிலை அவர்களை முன்னைவிடக் கடுமையாகப் பாதிக்கின்றது. சமுதாயத்தில் தமது நிலையினால் வரும் எதிர்ப்புகுறியாக பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையே வெளிப்படுகிறது.

கிரண்ட்ரைஸ், நூலில் மார்க்ஸ் இதனையே மிகவும் விரிவாக அலசுகிறார். சி.ஆர்.சி ஆவணத்தின் நிலைப்பாட்டையும், பார்வையையும் அம்பலப்படுத்துவதற்கு பொருத்தமான ஒரு வாதத்தை அதில் முன்வைக்கிறார்.

"பரிவர்த்தனையின் வளர்ச்சி பெற்ற வடிவம் பண வடிவமாகும். (இந்த மேல் தோற்றமே ஜனநாயக வாதிகளைக் கிரங்கடிக்கிறது,) இந்த நிலையை அடையும் பொழுது தனிமனிதனைச் சார்ந்து நிற்கும் பிணைப்புக்கள், (உயர்குடிகள்) ரத்தத்தினாலோ, கல்வி உயர்வினாலோ தனித்துவம் பெறல் அனைத்தும் உண்மையில் சிதறடிக்கப்படுகின்றன, பிய்த்தெறியப்படுகின்றன. (குறைந்த பட்சம் தனிமனிதப் பிணைப்புக்கள்; தனிமனித உறவுகளாகத் தோற்றமளிக்கின்றன) தனிமனிதர்கள் சுதந்திரமானவர்களாகத் தோற்றமளிக்கின்றனர். (இந்த 'சுதந்திரம் உண்மையில் மாயத் தோற்றமே' இதைச் சரியாக 'கேட்பாரற்றுக் கிடத்தில்' என்றே கூறவேண்டும்.) அவர்கள் இந்த சுதந்திரத்திற்குள் ஒருவரோடு ஒருவர் முட்டி மோதிக் கொள்ளலாம்.

பரிவர்த்தனை செய்து கொள்ளலாம், ஆனால் நிலைமை களிலிருந்து சாரத்தைப் பிரித்தறிய முயலுவோருக்கே இவ்வாறு தோற்றமளிக்கும். இங்கு நிலைமைகள் என்பது உயிர் வாழ்வதற்குத் தேவையான நிலைமைகளைக் குறிக்கும். இந்த நிலைமைகளுக்கு உட்பட்டே தனி மனிதர்கள் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள இயலும் (இந்த நிலைமைகளோ தனிமனிதர்களுக்கு அப்பாற் பட்டவை, சமுதாயத்திலேயே உருவாக்கப்பட்டவையே ஆயினும், இயற்கையாக உருவானவையாக, தனி மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாதவையாக, தோற்ற மளிக்கும்) ஆனால் இந்தப் புற உறவுகளை, இந்த நிலைமைகளை உற்று நோக்கினால் அவற்றை முற்றாக அழித்தொழிக்காமல் ஒரு வர்க்கத்தின் தனிமனிதர்களால் அவற்றைத் தாண்டி வெளியே வர இயலாது. (பக்கம் 163-164)

இந்த சி.ஆர்.சி ஆவணத்தின் ஆசிரியர்கள் தனி மனிதர்களுக்கும் வர்க்கத்திற்கும் உள்ள உறவைப் பற்றி மார்க்சிய நிலைபாட்டை திரித்துப் புரட்டுவதன் மூலமும், முதலாளித்துவ ஜனநாயக அரசின் வர்க்கத் தன்மையற்ற அம்சங்களையும் தனிமனிதனுக்கும் சமு தாயத்திற்கும் இடையே நிலவும் வர்க்க தன்மையற்ற முரண்பாட்டையும் வலியுறுத்துவதன் மூலமும் எங்கே செல்கிறார்கள் என்பதைக் கவனிப்போம். மிக விரை விலேயே "லெனின் தொடக்கம் கம்யூனிஸ்டுகள் பின் பற்றிய திசை வழியில் மேலோட்டமாய் நின்ற போக்கு" என்று அடையாளம் காட்டப்படுவதைப் பற்றிய முழு மூச்சான விமர்சனமாக வளர்ச்சியடைகிறது.

" ...ஒரு வர்க்கக் குறுக்கல் வாதப் போக்கு அதாவது சமுதாயத்தை வர்க்கங்கள்" வர்க்கப் போராட் டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே ஆய்வு செய்வது, அதனால் சிக்கலான, சமுதாயத்தின் வர்க்க

தன்மையற்ற கூறுகளைப் புறக்கணித்து விடுதல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சிக்கலைப் புரிந்து கொள்வதில் லெனினின் ஒரு புறம் சார்ந்த பார்வைக்கும் ஒரு அரசியல் முறையை உருவாக்குவதின் தேவையை அவர் முற்றாகப் புறக்கணித்த தாகும். இந்த வர்க்கக் குறுக்கல் வாத அணுகு முறையையே காரணமாகக் கூறி யாக வேண்டும். இந்த அணுகு முறையேதான் இப் போதும் கூட கம்யூனிஸ்ட் இயக்கம் முழுவதும் மேலோங்கி நிற்கிறது.

இது மிகவும் குறிப்பிடத்தக்க ஊகமாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தலைமை தாங்கிச் செல்வது பற்றிய லெனினின் உண்மையான தத்துவங்களையும், நடைமுறைகளையும் பற்றி இந்த ஆவணம் கூறுவதைக் தவறென்று நிரூபிக்க நாம் இது வரையில் கூறிய அனைத்தும் ஒரு புறம் இருக்கட்டும். தேசியஇனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிக் கத்தை கத்தையாக எழுதிய வர் லெனின் என்பதை சி.ஆர்.சி ஆவணத்தின் ஆசிரியர்கள் மறந்து விட்டார்களா? ரோசா லுக்சம்பர்க் கும் மற்றவர்களும் தேசிய இனப்பிரச்சனையைக் கை கழுவ முனைந்தனர். மேலாண்மைக்கு உட்பட்டிருந்த நாட்டு மக்கள் திரள் ஒடுக்கப்படுவதை வர்க்கச் சுரண்ட லின் மிகக் குறுகலான பொருளில் முடக்கிவிட முயன்ற னர். வர்க்கக் குறுக்கல் வாதம் என்பதற்கு உண்மையி லேயே பொருள் ஏதுமிருந்தால் அது இது போன்ற புரட்டுப் பொருளாதாரத்திற்கு அனைத்து முரண் பாடுகளையும் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையி லான உறவுகளின் மிகக் குறுகிய வெளிப்பாடாகக் காணும் போக்கிற்கே மிகச் சரியாகப் பொருந்தும் இந்தப் போக்குகளை லெனினைப் போல் விடாப்பிடியாக, தொடர்ச்சியாக எதிர்த்தவர்கள் எவருமில்லை. எல்லா வித மான பொருளாதாரப் போக்குகளையும் எதிர்த்து லெனின் போரிட்ட போதிலும் அவர் தெளிவாக பாட்

டாளிவர்க்க நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே போரிட்டார். அதுதான் இங்கே முக்கியமான விசயம். 'வர்க்கக் குறுக்கல்வாதம் என்று' சி.ஆர்.சி ஆவணம் பூச்சாண்டி காட்டுவது உண்மையில் மார்க்சிய வர்க்க ஆய்வைத்தான். அவர்கள் மாவோவின் "வர்க்க சமுதாயத்தில் அனைவருமே வர்க்கசமுதாயத்தின் அங்கத்தினர்களாகவே வாழ்கின்றனர். மேலும் விதி விலக்கில்லாமல் எல்லாத வித சிந்தனைகளும் அந்தந்த வர்க்கத்தின் முத்திரையைத் தாங்கியே நிற்கின்றன." என்ற கூற்றிலிருந்து தாங்கள் அடிப்படை யாக வேறுபாடு கொண்டிருப்பதையே இங்கு வெளிப் படுத்துகின்றனர்.

இதற்கு எடுத்துக்காட்டாக மாவோவின் வேறொரு உரையையே காட்டலாம். சில கலைஞர்கள் எழுப்பிய "மனித நேயம்" என்ற கருத்திற்கு அவர் பதில் அளித் ததை, ஏனான் கலை இலக்கிய மன்றத்தில் அவர் ஆற்றிய உரையிலிருந்து காணலாம். அதில் அவர் கூறு கிறார், "மனித நேயம்' பற்றி மக்கள் என்னதான் பேசிக் கொண்டாலும் வர்க்கங்களாகப் பிளவு பட்டிருக்கும் சமுதாயத்தில் உண்மையில் அதை நடைமுறையில் கடைப்பிடிப்பது யாராலும் இயலாத காரியம். சமுதாயம் வர்க்கங்களாக பிரிந்து நிற்பதால் ஒடுக்குபவர் ஒடுக்கப் படுபவர் ஆகிய இருவரையுமே நேசிப்பது இயலாது. நீங்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் எந்தப் பக்கம் சேரப் போகிறீர்கள் என்பதை முடிவு செய்தாக வேண்டும். மேலும் வர்க்க சமுதாயத்தில் இவை அனைத்துமே வர்க்க உறவுகளால் நிர்ணயம் செய்யப் படுகின்றன. மனித நேயம் என்பது குறிப்பாக குட்டி முதலாளித்துவ நிலைப்பாட்டில், வர்க்கத் தன்மையே அற்றது போலவோ அல்லதுவர்க்க உறவுகளைக் கடந்து, வர்க்கத்தன்மையற்ற முரண்பாடுகளைச் சமாளிப்பது போலவோ தோன்றலாம்".

ஆனால் உண்மையில் (சமுகாயம் வர்கங்களாகப் பிளவு பட்டிருக்கும் வமை) அது வர்க்க அடிப்படையில் தான் இறுதியில் வெளிப்படுகிறது. இந்தப் புரிதலை வலிறுத்துவது வர்க்க குறுக்கல் வாதம் அல்ல மார்க்சிய பொருள் முதல்வாதமே ஆகும்.

ஆனால் சி.ஆர்.சி ஆவணத்தின் கருத்தையே எடுத்துக் கொண்டாலும் கூட சமுதாயத்தில் உள்ள (வர்க்க குறுக்கல் வாதம்) அனைத்தும் நேரடியாகவோ உடனடியாகவோ தங்களை வர்க்க அடிப்படையில் வெளிப்படுத்திக் கொள்வதில்லை. எனினும் இறுதியான ஆய்வில் அவை அனைத்தையுமே வர்க்க அடிப்படையில் குறுக்கிவிட முடியும். எடுத்துக்காட்டாக, 1968ல் மாவோ ஆப்பிரிக்க, அமெரிக்க இன மக்களின் போராட்டங்களை ஆதரித்துப் பேசும் பொழுது அமெரிக்க இன மக்களுக்கும் கறுப்பு இன மக்களுக்கும் இடையில் ஆன முரண்பாடு இறுதி ஆய்வில் ஒரு வர்க்க முரண்பாடே என்று கூறினார். இதில் தேசிய இனப் பிரச்சனை இல்லை என்ற பொருளில் அவர் கூறவில்லை. மாறாக இந்த முரண்பாடு பாட்டாளி வர்க்க புரட்சியின் மூலமே இறுதியில் தீர்க்கப்படும் என்ற பொருளிலேயே கூறினார். தேசிய இனப்பிரச்சனை இறுதி ஆய்வில் ஒரு வர்க்கப் போராட்டம் தான் என்று பொதுப்படையாகக் கூறுவதன் பொருள் தேசிய இனப் பிரச்சனைக்கு தனியான இயக்கமே இல்லை என்பதல்ல. ஆனால் நிச்சயமாகவும், அடிப்படையாகவும், சாராம்சமாகவும் தேசிய இனப் பிரச்சனை அடிப்படை உறவுகளால்தான் நிர்ணயிக்கப் படுகிறது. அதனுடைய இறுதித் தீர்வும் வர்க்கப் போராட்டத்தின் இறுதி வெற்றியில், முதலாளித்துவ வர்க்கத்தின் மேல் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்று உலகம் முழுவதும் கம்யூனிசத்தை நிறுவுவதில்தான் அடங்கியுள்ளது. ஒடுக்கப்பட்ட தேசத்திலும் ஒடுக்குகின்ற தேசத்திலும் வாழும் வெவ்வேறு வர்க்கங்கள் மற்ற பிரச்

சனைகளைப் போல தேசிய இனப்பிரச்சனையாலும் வெவ்வேறு நிலைப்பாட்டைக் கொண்டிருப்பர்.

இந்த கட்டத்தில் சி ஆர்.சி. ஆவணத்தின் 'வர்க்க குறுக்கல் வாத எதிர்ப்பு' உண்மையில் மார்க்சிய முறையிலான வர்க்க ஆய்வு. ஒட்டு மொத்தமான பாட்டாளி வர்க்க உலக கண்ணோட்டம், அதன் செயல்முறைகள் அனைத்திலிருந்தும் விடுதலை கோரும் ஒரு குட்டி முதலாளித்துவ கோரிக்கையே என்பது தெளிவாகிறது. அன்றாட வாழ்வில் பாட்டாளி வர்க்கத்திடமிருந்தும், அதன் சர்வாதிகாரத்திடமிருந்தும் விடுதலை அடைவதற்கும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் மொத்த வரலாற்று அனுபவங்களையும் (லெனின் தொடக்கம்) மறுப்பதற்குமான விருப்பத்திற்கு இணையானதே இது. மார்க்சின் பின்வரும் பகுதிகள் இங்கு மிகப் பொருத்தமாய் இருக்கும். இந்த விமர்சனம், வேறு மாதிரியான ஒரு குட்டி முதலாளித்துவ சமூக ஜனநாயகத்தைப் பற்றியது. அதன் வடிவமும், சூழ்நிலையும் சற்று வேறுபட்டிருந்தாலும் சமுதாயத்தை ஜனநாயக வழியில் மாற்றமடையச் செய்வது பற்றியே, அதுவும் பிரச்சாரம் செய்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

"குட்டி முதலாளித்துவ வர்க்கம் தமது வர்க்க நலன்களைத் திணிப்பதையே கொள்கையாகக் கொண்டிருப்பதாகக் தவறான முடிவிற்கு, குறுகிய சிந்தனை காரணமாக, நாம் வந்துவிடக் கூடாது. மாறாக, தமது வர்க்க விடுதலைக்குத் தேவையான சிறப்பு நிலைமைகளே நவீன சமுதாயத்தைக் காப்பதற்கான பொதுவிதிகள் ஆகும் என்று அது நம்புகிறது. இந்தக் கூட்டமைப்புக்குள்தான் வர்க்கப் போராட்டத்தைத் தவிர்க்க முடியும் என்று நினைக்கிறது. ஜனநாயகத்தின் பிரதிநிதிகள் அனைவரும் உண்மையில் கடைக்காரர்கள் அல்லது கடைக்காரர்களின் ஆதரவாளர்கள் என்று யாராவது

நம்புவது போன்ற தவறுதான் இதுவும். கல்விப் பயிற்சியாலும், சமுதாய நிலையிலும்இவர்கள் இருவருக்கு மிடையே வானத்திற்கும் பூமிக்கும் இடையே உள்ள இடைவெளி உள்ளது. ஆனால் இவ்விருவரையும், குட்டி முதலாளித்துவ வர்க்கப் பிரதிநிதிகளாக்கும் பொதுத் தன்மைகள் உண்டு. கடைக்காரர்கள் தங்கள் வாழ்வில் கடக்கமுடியாத எல்லையை, ஜனநாயக வாதிகள் தங்கள் சிந்தனையால் கடக்க முடிவதில்லை. முன்னவர்கள் பொருளாதார நலன்கள் காரணமாகவும், சமுதாயத்தில் தங்கள் இடம் காரணமாகவும் நடைமுறையில் சந்திக்கும் பிரச்சனைகளுக்கும், வந்தடையும் அதே தீர்வுகளுக்கும் பின்னவர்கள் கோட்பாட்டு ரீதியாக வந்தடைகின்றனர். ஒரு வர்க்கத்தின் அரசியல், இலக்கிய பிரதிநிதிகளுக்கும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்திற்கும் இடையே பொதுவாக நிலவும் உறவு இதுதான்......"

"ஆனால் ஜனநாயகவாதி குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியாக இருக்கிறான். இது ஒரு இடைநிலை வர்க்கம் இதில் இரண்டு வர்க்கங்களின் நலன்கள் ஒன்றோடு ஒன்று முட்டி மோதி, ஒன்றை ஒன்று ஒரே சமயத்தில் மழுங்கடிக்கின்றன. இதனால் ஜனநாயக வாதிகள் பொதுவாகத் தங்களை, வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டவர்களாகக் கற்பனை செய்து கொள்வது வழக்கம். சலுகை பெற்ற வர்க்கம் தங்களுக்கு எதிராக நிற்பதை ஜனநாயகவாதிகள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், மற்றவர்களுடன், இந்த வர்க்கமும் சேர்ந்ததே 'மக்கள்'. ஜனநாயகவாதிகளோ மக்களது உரிமைகளின் பிரதிநிதிகள், அவர்கள் கவலைப்படுவதெல்லாம் மக்களது நலன்கள் பற்றியே. எனவே போராட்டம் என்று வரும் பொழுது அதில் வெவ்வேறு வர்க்கங்களின் நிலைபாடுகள், நலன்கள் பற்றியெல்லாம் அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை"

## வரலாற்று அனுபவத்தை மதிப்பீடு செய்தல்

சோசலிசத்தின் இன்று வரையிலான வரலாற்றைத் தனது நிலைபாட்டிலிருந்து பார்த்து, சி.ஆர்.சி ஆவணம் கீழ்கண்ட முடிவிற்கு வருகிறது "ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதற்கான வீரம் செறிந்த முயற்சிகளையும் சோசலிசத்தின மூலம் உருவான புதியனவற்றையும் (வரலாற்றை உருவாக்குவதில் ஆக்கபூர்வமான பங்காற்றியவை) உயர்த்திப்பிடிக்கும் அதே நேரத்தில், நமது தவறுகளையும் கண்டறிந்து திருந்துவதே, கம்யூனிஸ்டுகள் என்ற முறையில் நம் கடமையாகுமே தவிர வரலாற்று ரீதியான குறைபாடுகள் என்ற பெயரில் தவறுகளை நியாயப்படுத்துவதல்ல. (பக்கம் 9.6)

இதில் உள்ள மூன்று விசயங்களுக்கு நமது பதில் :

1) உண்மையில் கம்யூனிஸ்டுகள் என்ற முறையில் அதுவும் இன்றைய சூழலில் நமது பணி–

"ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதற்கான வீரம் செறிந்த முயற்சியை மட்டுமல்ல, முதன்முதலாக சோவியத் ஒன்றியத்தில் முற்றிலும் புதுமையான ஒரு சமுதாயத்தை பிறப்பெடுக்க வைத்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையையும், பின்பு சீனப்புரட்சியின் மூலமும் பின்பு மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி மூலமும் இவற்றை மேலும் உயரத்திற்குக் கொண்டு சென்றதையும் உயர்த்திப் பிடிப்பது, அவ்வெற்றியைப் பாதுகாப்பது நமது கடமையாகும். அதே சமயம், இந்த அடிப்படையில் நமது உண்மையான தவறுகளை கூர்மையாகவும் கடுமையாகவும் விமர்சனம் செய்வதன் மூலமும் இவ்விதத் தவறுகள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழாமல் தடுப்பதுடன் பொதுவாகவே முடிந்த அளவிற்கு தவறுகள் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும்."

இந்த இடத்தில் சி.ஆர்.சி ஆவணம் முன்னுக்குப் பின் முரணாக, இரட்டைவேடம் போடுகிறது. அதனது கூற்றுப்படி லெனின் தொடக்கம் பாட்டாளி வர்க்க அரசு பற்றிய தீர்மானகரமான பிரச்சினைக்கு கம்யூனிச இயக்கத்திற்கு அடிப்படைத்திசைவழியும், நடைமுறையும் அடிப்படையிலேயே கோளாறு நிறைந்தவை.

அக்டோபர் புரட்சி முடிந்த சில ஆண்டுகளிலேயே மக்கள் திரளின் சர்வாதிகாரத்திற்குப் பதிலாக கட்சியின் சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. பிறகு எப்படி "சோசலிசத் தின் மூலம் உருவான புதியனவற்றை" (வரலாற்றை உருவாக்குவதில் ஆக்கபூர்வமான பங்காற்றியவை) உயர்த்திப் பிடிக்க முடியும். அவர்களது வாதம் முன்னுக்குப்பின் முரண் இல்லாமல் அதாவது தொடர்ச்சி யாக மார்க்சிய வழியிலேயேசெல்வதானால் அந்த ஆய்வு இந்த சமுதாயங்களில் சோசலிச சமுதாயங்கள் ஏற்படவே இல்லை. என்ற முடிவிற்குத்தான் வந்தாக வேண்டும். ஏனெனில் சோசலிசத்தில் வர்க்கங்கள் நிலவினாலும் அது ஒரு உலகளாவிய-வரலாற்றுச் சிறப்பு மிக்க-மாற்ற மாகும். அதை மக்களைச் சார்ந்து நின்று வழி நடத்திச் செல்லும் ஒரு கட்சியால் தானே சாதிக்க முடியும். பின் எவ்வாறு மக்களின் மீது தனது சர்வாதிகாரத்தைத் திணிக்கும் ஒரு கட்சியில் இதனைச் சாதித்திருக்க முடியு மென்று ஒரு மார்க்சிஸ்ட்டால் சிந்திக்க முடியும் இந்த அடிப்படையிலிருந்து நோக்கும் பொழுது இவர்கள் உயர்த்திப் பிடிப்பதற்கு ஒன்றிரண்டு கூட மிஞ்சாது. அதுவும் சோசலிசப் புதுமைகள் எதுவும் நிச்சயமாக மிஞ்சாது.

2. நமது தவறுகளை எடுத்துக் கொண்டால், நாம் முதன் முதலாகச் செய்ய வேண்டியது, ஒருசரியான மதிப் பீடே. தவறுகள் யாவை, தவறல்லாதவை யாவை ஆகிய வற்றை வேறுபடுத்தி அதனடிப்படையில் தவறுகளின் வேர்களை புறவய அகவய வேர்களைக் கண்டறிய

வேண்டும் வரலாற்றுச் சூழல் காரணமாக கூட வர்க்க சக்திகளின் பாதகமான சமன்பாட்டால், ஏற்பட்ட தவறு களையும் அரசியல் போர்த்தந்திரம், வழிமுறை, கண் ணோட்டம் ஆகியவற்றால் ஏற்பட்ட தவறுகளையும் இனம் காணவேண்டும்.

3. இந்த வரலாற்று அனுபவத்தின் மாபெரும் சாதனை களையும் சரி, உண்மையான தவறுகளையும் சரி இரண் டையுமே சி.ஆர் சி ஆவணம், சரியாகப் புரிந்து கொண்டு தொகுத்தளிக்கத் தவறிவிட்டது. இது ஒரு தற்செயலான நிகழ்ச்சியல்ல. எவ்வாறு தவ்றுகளை மதிப்பீடு செய்யா மல் சாசனைகளை சரியாக மதிப்பீடு செய்ய முடியாதோ அதே போல் சாதனைகளை மதிப்பீடு செய்யாமல் தவறுகளைச் சரியாக மதிப்பீடு செய்ய முடியாது. (நாம் முன்பு சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் (ரிம்) பிரகடனத்திலிருந்து மேற்கோள் காட்டியதைத் திரும்ப வும் இங்கு நினைவு கூறலாம். அதில் கூறியுள்ளவைகளை வரலாற்று அனுபவங்களைத் தொகுப்பதே வர்க்கப் போராட்டங்களில் ஒரு போர்க்களம் தான். இந்த அனுப வத்தை விமர்சனம் செய்து உண்மையான ஆக்கபூர்வ மான வளர்ச்சி நிலைக்கு மார்க்சிசத்தை உயர்த்துவது மார்க்சிசத்தின் அடிப்படைத் தத்துவங்களை உயர்த்திப் பிடிப்பதற்கான கடுமையான போராட்டத்துடன் பின் னிப் பிணைந்துள்ளது.) ஆனால் துரதிர்ஷ்டவசமாக சி ஆர்.சி ஆவணம் மார்க்சிசத்தின் அடிப்படைத் தத்து வங்களையே கைவிட்டுவிடுகிறது.

## மையப்படுத்தல், மைய விலக்கல், அரசு உலர்ந்து உதிர்தல்

நாம் ஏற்கனவே பார்த்ததுபோல், கட்சியின் பாத்திரம் பற்றிய, குறிப்பாக பாட்டாளிவர்க்க சர்வாதி காரத்தின் கீழ் அதன் பங்கு பற்றிய தவறான நிலை

பாடே சி.ஆர்.சி ஆவணம் இந்தக் கோட்பாடுகளைக் கைவிடுவதற்குத் திருப்பு முனையாக உள்ளது.

"சமுதாயப் புரட்சியின் அடிப்படையில் கட்சியே அனைத்தையும் தீர்மானிக்கிறது என்று கருதும் போக்கு சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் மேலோங்கி நிற்கிறது. பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தில் கட்சியின் மையமான பாத்திரம் பற்றிய லெனின் நிலைபாடே இத்தகைய போக்கை ஊக்குவித்துள்ளது." என்று கூட இந்த ஆவணம் சொல்கிறது. (பத்தி 9.7)

அக்டோபர் புரட்சியின் தலைவராக லெனின் கையாண்ட நடைமுறை, சர்வதேச கம்யூனிச இயக்கத்தை நடத்தியமுறை மார்க்சீய சித்தாந்தத்திற்கு அவரது பங்களிப்பு ஆகிய அனைத்தையும் உற்று நோக்கினால் இத்தகைய குற்றச்சாட்டு காற்றில் பறந்து விடுகிறது. அதிலும் இதிலும் குற்றச்சாட்டிற்கு மாவோவைக் காரணம்காட்டுவதோ இன்னும் மோசமான செயலாகும்.

மக்களே வரலாறு படைக்கின்றனர். மக்களே, மக்கள் மட்டுமே சர்வதேச வரலாற்றின் உந்து சக்தியாவர்" என்ற புரிதலை நிலைபெறச் செய்தவர் மாவோ தான். இந்த ஒருமுகப்படுத்தப்பட்ட தத்துவத்தை அளித்ததோடு மட்டுமல்லாமல் அதனை, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்திலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செலுத்துவதிலும், கம்யூனிசத்தை நோக்கிப் புரட்சிகரப் போராட்டங்களை எடுத்துச் செல்வதிலும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தினார்.

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் உண்மையில் மேலோங்கியிருந்த சிந்தனை மற்றும் நடைமுறையைப் பற்றிய இத்தகைய திருத்தல்வாதப்பார்வை கொண்

டுள்ள சி.ஆர்.சி ஆவணம் 'ஒரு புறம்'கம்யூனிச முன்னோடிகளுக்கு உள்ள தலைமைப் பொறுப்பை அங்கீகரித்துக் கொண்டே 'மறுபுறம்' 'சாராம்சத்தில்' அந்தப் பங்கை மறுப்பதில் வியப்பேதுமில்லை.

"புதிய திசைவழி" என்று இந்த ஆவணம் சொல்லிக் கொள்ளும் பகுதிக்கு வரும்பொழுது இது இன்னும் தெளிவாகிறது. இந்த 'புதிய' திசைவழியில் புதியது எதுவுமில்லை என்பதில் வியப்பும் எதுவுமில்லை. முதலாளித்துவ சோசலிஸ்டுகளுக்கும், பல்வேறு குட்டி முதலாளிகளுக்கும் பொதுவான இந்தக் கருத்துக்கள் ஏற்கனவே நன்கு தெரிந்தவை தான். அந்தக் கருத்துக்களைப் போலவே, இந்த 'புதிய' திசைவழியும் கருத்து முதல் வாதத்தில் உறுதியாகக் காலூற்றி நிற்கிறது. குறுகிய காலத்தில் அழிந்துபோன, குறைவான அனுபவத்தையே தந்த பாரிஸ் கம்யூன் அடிப்படையில் மார்க்ஸ் கணிப்புக்களை வெளியிட்டார். ஆனால் சோசலிச சமுதாயத்திலும், சர்வதேச அளவிலும் நிலவும் பல மிக உண்மையான முரண்பாடுகளின் காரணமாக மார்க்சின் அந்தக் கணிப்பிலிருந்து உண்மையான பாட்டாளி வர்க்க வரலாற்று அனுபவம் சில முக்கியமான அம்சங்களில் வேறுபடுகிறது. இந்தக் காரணங்களை விடாப்பிடியாக மறுத்தும், மறைத்தும் சி.ஆர்.சி ஆவணம் இவ்வாறு கூறுகிறது.

"பாட்டாளி வர்க்க அரசியல் அதிகாரம் பற்றிய ஒரு புதிய புரிதலில் இருந்து தொடங்க வேண்டும். அது பாரிஸ் கம்யூன் பற்றிய மார்க்சின் கருத்துக்களைப் பிரதிபலிக்க வேண்டும். அதாவது ஒட்டு மொத்த சமுதாயமும் மீண்டும் அதிகாரத்தை உறிஞ்சிக் கொள்வதாய் இருக்க வேண்டும். எனவே, பாட்டாளி வர்க்க அரசு. முதலாளித்துவ அரசு போன்றே, மையப்படுத்தப்பட்ட அரசு எந்திரத்தில் அனைத்து அதிகாரத்தையும்

குவித்துவைக்கும் முறையிலான இதுவரை கம்யூனிஸ்டுக் களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சோசலிசத்தின் கீழ் இயங்கிய அரசுகள் போன்றோ இருக்கக் கூடாது. இது ஒரு புதிய அரசியல் முறையாக இருக்க வேண்டும் ஒட்டு மொத்த சமுதாயமும் அதிகாரத்தை மீண்டும் உறிஞ்சிக் கொள்ளுதல் ஒட்டுமொத்த சமுதாயத்தின் அரசியல் விருப்பமும் அரசின் தலையீடு இல்லாமலேயே வெளிப் படுவதற்கும் நிறைவேறுவதற்கும் ஏற்ப அரசு அதி காரத்தை மையத்திலிருந்து விலக்கும் போக்கு ஆகியவை மூலமாக அரசு அரசாக இல்லாமல் போக வேண்டும் அத்தகைய ஒரு முறையை வளர்த்தெடுப்பதற்கு உற் பத்திச் சாதனங்களை உண்மையிலேயே சமுதாய மயமாக்கம் அவசியமாகும். அதற்கு பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை உறுதி செய்யும் அரசு இன்றி யமையாதது. இந்த அரசியல் அமைப்பில் சோசலிச மயமாக்கப்பட்ட பொருளாதார அடித்தளமும் பாட்டாளி வர்க்க ஜனநாயக அரசியல் அமைப்பும் ஒன்றை ஒன்று இட்டு நிரப்புபவையாக இருக்க வேண்டும். இந்த சோசலிச முறை அனைத்து மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பாட்டாளி வர்க்கத் தலைமை யின் கீழ் ஒட்டுமொத்த மக்களாலேயே நடைமுறைப் படுத்தப்படுவதன்மூலம் தானாகவே பிழைத்து நிற்க வேண்டும். (பத்தி 10.3.)

கொடுக்கப்பட்டுள்ள சில சமன்பாடுகளைக் கவனி யுங்கள் மையப்படுத்தல் – கெட்டது, மையவிலக்கல் - அல்லது தனது வலிமையான மையப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கட்டுப்பாடு ஆகியவற்றின் மூலம் ஆட்சி நடத்தும் பாட்டாளி வர்க்க அரசின் மீது குட்டி முதலாளித்துவ சக்திகளுக்கு எப்பொழுதும் இருந்து வரும் வெறுப்பே இது என்று மீண்டும் வலியுறுத்து கிறோம். பாட்டாளிவர்க்கம் தனது ஆட்சியை உறுதிப் படுத்திக்கொண்டு, உடமைகளை சமுதாயமாக்கிவிட்ட உடனேயே பாட்டாளிவர்க்க அரசு கலைக்கப்பட்டு

அந்த இடத்தில் அரசல்லாத ஜனநாயக அரசியல் முறையை நிறுவவேண்டும் என்பதே சி.ஆர்.சி ஆவணத்தின் மையக்கருத்து.

உண்மை நிலையிலோ, அரசு உலர்ந்து உதிர்தலும், மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பை அகற்றுதலும் சமமானவை அல்ல. கம்யூனிச சமுதாயத்திலும் கூட இம்மாதிரியான அமைப்புத் தேவைப்படும். ஆனால் அது, சோசலிச சமுதாயத்தில் இருந்ததுபோல் அல்லாமல், முற்றிலும் புதிய மாதிரியில் இருக்கும். அரசு உலர்ந்து உதிர்தல் அல்லது, அரசு அதிகாரத்தை ஒட்டுமொத்த சமுதாயமும் மீண்டும் உறிஞ்சிக் கொள்ளுதல் ஆகியவற்றின் மிக முக்கியமான வெளிப்பாடு மையப்படுத்தப்பட்ட அரசு எந்திரத்தை பலவீனப் படுத்தி அதற்குப் பதிலாக மைய அதிகாரங்கள் குறைக்கப்பட்ட ஒரு அமைப்பை நிறுவுவதில்தான் உள்ளது என்பதும் தவறு ஆகும்.

சமுதாயத்தில் உள்ள அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும் போக்குதல், மூளை உழைப்பிற்கும், உடல் உழைப்பிற்கும் இடையே உள்ள மற்றும் அனைத்து வகையான ஒடுக்கு முறையிலான உழைப்புப் பிரிவினைகளையும் அகற்றுவது ஆகியவற்றிற்கான போராட்டங்களின் ஒரு பகுதியாக மைய அளவிலும், உள்ளூர் மட்டத்திலும் பரந்துபட்ட மக்களை (இறுதியாக ஒட்டுமொத்த மக்களையும்) சமுதாய நிர்வாகத்தில் பங்கு கொள்ளச் செய்வதன் மூலமே இது நடந்தேறும்.

மையப்படுத்தல், மையவிலக்கல் ஆகியவை பற்றியும், இதனைப்பற்றிய சி. ஆர். சி. ஆவணத்தின் திருத்தல்வாத பார்வை பற்றியும் மேலும் பார்ப்போம்: உண்மையில் சி.ஆர்.சி. ஆவணத்தில் 'புதிய திசை வழி

என்ற பெயரில் கொடுக்கப்பட்ட ஆலோசனைகள் புதியது எதுவுமில்லை. லெனினால் விமர்சனம் செய்யப் பட்ட அராஜக – சிண்டிகலிஸ்ட் வழிதான் இதுவும். மையப்படுத்தலுக்கும் மையவிலக்கலுக்கும் இடையே நிலவும் பகையற்ற இயக்க இயல் உறவைப்புரிந்து கொள்ளாது மையப்படுத்தப்பட்ட அரசு அதிகாரத்திற் கும், பாட்டாளி வர்க்க அரசின் பொருளாதாரக் கட்டுப் பாடுகளுக்கும் எதிராக மையவிலக்களை நிறுத்தும் போக்கே இது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வலிமையான மையப்படுத்தப்பட்ட அரசு எந்திர மும், பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் மைய விலக்கலை நாடினால் அது ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளும். 'உள்ளூர் நலன்கள், தனிப்பட்ட நலன்கள் ஆகியவற்றின் காரணமாக முதலாளித்துவப் போட்டி முறைக்கே இட்டுச்சென்று முதலாளித்துவ மீட்சிக்கே துணையாக நிற்கும். நிஜவாழ்க்கையிலோ உண்மையல்ல. அவ்வாறான வலிமையான மையப் படுத்தப்படல் இல்லாமல் பாட்டாளிவர்க்கத்தால் தமது எதிரிகளின் மீது சர்வாதிகாரத்தைச் செலுத்துதலோ, மக்களிடையே ஜனநாயகத்தை நடைமுறைப் படுத்து தலோ மேலும் பொருளாதாரத்தின் எஜமானனாக இருப்பதோ இயலாத காரியம் ஆகும். ஒன்றுபடுத்தப் பட்ட, பிணைந்து நிற்கும் சோசலிச பொருளாதாரத்தை கடைப்பிடித்தல், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர நலன்களுக்குச் சேவைசெய்யும் திட்டமிட்ட, சீரான வளர்ச்சியை உறுதிசெய்தல், பாட்டாளி வர்க்கத்தின் விரிவான நலன்களே ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும், வழிகாட்டும் கொள்கைகளாகவும், வழிமுறைகளாகவும் விரிவடைதல் ஆகிய அனைத்தும் இத்தகைய மையப் படுத்தப்படல் இல்லாமல் நடைபெற இயலாது. ..

மறுபுறம், மக்களைச் சார்ந்திராத, உள்ளூர் மட்டத் திலும், கீழ்மட்டத்திலும் முன்முயற்சியை ஊக்கு விக்

காத மையப்படுத்தலும் (தொடக்க காலங்களில்) அரசு முதலாளித்துவ வடிவத்திலான முதலாளித்துவ மீட்சிக்கு வழி வகுக்கும். இதனால்தான், சோசலிசப் பொருளாதாரத்திற்குத்திட்டம் வகுக்கும் பொழுதும், அவற்றை நிறைவேற்றும் பொழுதும் எப்பொழுதும் போலவே மக்கள் திரளைச் சார்ந்திருக்கும் வழியைப் பின்பற்ற வேண்டும். மக்களின் உணர்வு பூர்வமான செயல்பாட்டின் மீது அடிப்படை நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்று மாவோ வலியுறுத்தினார். சோசலிச சீனத்தில் 'புரட்சியைப் பற்றுங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்ற வழியைப் பின்பற்றும் பொழுது ஏற்பட்ட புதிய வழிகாட்டியான அனுபவங்களை ரேமண்ட் லோட்டா இவ்வாறு தொகுத்தளிக்கிறார்கள்.

"சீனத் திட்டமிடும் முறை, முடிவெடுத்தலை, உள்ளூர் அரசியல் நிர்வாகத்திடம் ஒப்படைத்தது. உள்ளூர் அரசியல் நிர்வாகம், ஒன்றுபடுத்தப்பட்ட அரசியல் வழியையும், புது வடிவிலான சோசலிச நிர்வாக முறையையும் பயன்படுத்தி பாட்டாளி வர்க்கத்தின் மொத்தக் கட்டுப்பாட்டை அதிகப்படுத்தியது. சட்ட திட்டங்களுடன் ஆக்க பூர்வமான சோதனைகளை மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளுடன் உள்ளூர் முன் முயற்சிகளை சமநிலையுடன் புதிய கண்டுபிடிப்புகளை பொருளாதார ஒருங்கிணைப்புடன், பரந்துபட்ட அரசியல் பிரச்சாரத்தை இணைப்பது இயலுகின்ற காரியமே என்பதைச் சீனப் புரட்சியாளர்கள் நிருபித்துக் காட்டினர். பொருளாதார முன்னேற்றத்தைப் புரட்சிகர அரசியலின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். சோசலிச சித்தாந்தத்திலும், நடைமுறையிலும் இந்த வடிவம் ஒரு பண்பு ரீதியான முன்னேற்றமாகும்,

பொருளாதாரத்தில் மேலிருந்து கீழான கட்டுப்பாடு அளவுக்கு அதிகமாவதால் மக்களின் முன் முயற்சிபட்டு

போய் விடுகின்றது என்று மாவோ குறிப்பிட்டார். இவ்வாறான திட்டமிடல் உள்ளூர் திறமைகளை முழுமையாக வளர்ந்தெடுப்பதையும் உள்ளூர் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தலையும் தடுக்கிறது. மேலும், ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மேல் ஒன்றுபடுத்தப்பட்ட தலைமையை நிறுவுவதையும் இது இயலாத தாக்குகிறது. ஏனெனில் புள்ளி விவரங்களும் விலைவாசிக் கணக்கீடுகளும் எத்தனைதான் நுட்பமாக இருப்பினும்கூட பரந்துபட்ட, சிக்கலான ஒரு பொருளாதாரத்தை மேலிருந்து விரிவான உத்தரவுகள் போடும் ஒரு முறையினால் நிர்வகிக்க முடியாது.

இவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட மையத்தலைமை, திட்டம் ஆகியவற்றுடன் உள்ளூர் நிர்வாகிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் கொள்கையை இயக்க இயல் ரீதியாக ஒற்றுமைப்படுத்தல் நிறைவேற்றப்பட்டது. உள்ளூர் முன் முயற்சிகள் மையத் தலைமையையும் ஒன்றுபடுத்தப்பட்ட திட்டத்தையும் பலப்படுத்துமேயொழிய பலவீனப் படுத்தாது. ஆனால், இந்த முறையில் அனைத்து மக்களின் நலன்களையும், புரட்சியின் மொத்த தேவைகளையும் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தும் உண்மையான பசை அரசியல் மற்றும் கோட்பாட்டு ரீதியானது. இந்த நடைமுறையில் மக்கள் திரள் வழியைப் பின்பற்றுவது தீர்மானகரமானது ஆகும். அதுவே மக்களின் நலனிற்காக, மக்களைச் சார்ந்து, அவர்களைத் திரட்டுவதன் அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்யும்".

## முன்னோடி தலைமைதாங்காவிட்டால் வேறு யார்?

இவற்றை நினைவில் இருத்திக் கொண்டு சி.ஆர்.சி ஆவணத்தின் 'புதிய திசைவழியை' ஆய்வு செய்யலாம். சோசலிச மயமாக்கப்பட்ட பொருளாதார அடித்தள

மும் பாட்டாளி வர்க்க ஜனநாயக அரசியல் அமைப்பில் ஒன்றை ஒன்று இட்டு நிரப்புபவையாக இருக்க வேண்டும். இந்த சோசலிச முறை அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பாட்டாளி வர்க்கத் தலைமையின்கீழ் ஒட்டுமொத்த மக்களாலேயே நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் தானாகவே பிழைத்து நிற்க வேண்டும்." இங்கே நாம் கேட்க வேண்டிய கேள்வி இந்த ஒட்டுமொத்த மக்கள் என்பது என்ன? தூக்கி எறியப்பட்ட சுரண்டவாளர்களையும் சேர்த்தா விலக்கியா? சோசலிச சமுதாயத்திலேயே பிறப்பெடுக்கும் புதிய சுரண்டலாளர்களை எதில் சேர்ப்பது? உழைக்கும் மக்களிடையே உள்ள சீரழிந்த கூறுகளை என்ன செய்வது? அவ்வாறான கூறுகள் நிலவும் என்பது நியாய உணர்வுள்ள எவரும் ஏற்றுக் கொள்ளும் ஒன்றுதான். இந்தக் கும்பல்களின்மேல் சர்வாதிகாரம் செலுத்தப் படவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டால் பின்பு நாம் கீழ்வரும் உண்மைகளையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களாலேயே நடைமுறைப்படுத்தப்படும் ஒரு சமுதாய முறை உடனடியாக இயலாது. கூடிய சீக்கிரத்திலும்கூட வராது. அதற்கு முன்பாக நீண்ட கால, பல சமயங்களில் மிகக் கடுமையான வர்க்கப் போராட்டங்கள் நடைபெற்றாக வேண்டும். சமுதாய அடித்தளமும் மேற்கட்டுமானமும், சர்வதேச நிலைமைகளும் கூட நன்கு மாற்றம் அடைய வேண்டும்.

இங்கு "தானாகவே பிழைத்து நிற்கவேண்டும்" என்பதன் பொருள் என்ன? "அனைத்து மக்களும்" இந்த அரசியல் முறை நமக்கே வேண்டாம் என்று முடிவு செய்து விட்டால் மீண்டும் ஒரு வேளை எதிர்காலத்தில் இந்த "அனைத்து மக்களும்" பரவாயில்லை இந்த முறையே கொஞ்ச காலத்திற்காவது இருந்து விட்டுச் போகட்டும் என்று முடிவு செய்யும் வரை இதனை

விட்டுவிட வேண்டும் என்பதுதான் பொருளா? குருஷ்சேவிசத்தின் வர்க்கங்களற்ற 'அனைத்து மக்கள்' கருத்தின் முட்டாள் தனத்துடன் தொடர்புடைய இந்தக் கருத்தின் முட்டாள்தனமும் வெளிப்படையா கவே தெரிகிறது

ஓ! ஆனால், இந்த "அனைத்துமக்களும்" இந்த "சோசலிச முறை"யை பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் தானே நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது! ஆனால் சி.ஆர்.சி ஆவணம் தானே எழுப்பிய தர்க்கத்திற்குள் சிக்கிக் கொள்கிறது. அதனுடைய வாதங்களின் அடிப்படையிலேயே நாம் சட்டங்களை கேட்கலாம், "தங்களது தலைமையை நிறுவும் உரிமையை இந்தப் பாட்டாளி வர்க்கத்திற்கு யார் கொடுத்தது?" 'அனைத்து மக்கள்' என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் இதுவும் அந்தப் பயங்கரமான 'கட்சி சர்வாதிகாரத்தை'ப் போன்றே மோசமானது அல்லவா? சரி, அப்படியே இந்தப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்றுக் கொள்வதானாலும் அது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும்? நிறுவனங்கள் மூலமாகவா? நிறுவனங்களுக்குப் புறம்பாகவா? பாட்டாளி வர்க்கத்தின் முன்னோடிகள் தலைமைப்பொறுப்புக்கு மீண்டும் வந்துவிடும் நிலைமை ஏற்படாவண்ணம் தடுப்பதற்கு இதில் என்ன வழிவகைகள் இருக்கின்றன?

திரும்பவும் நோக்குவோம், இந்த ஆவணத்தின் வாதங்களின்படி முன்னோடிகள் என்று எவரும் இருக்கக் கூடாது. அப்படியே இருந்தாலும் அவர்கள் பாட்டாளி வர்க்க முன்னோடிகளாக இருக்கக்கூடாது. மேலும், யாரும், எந்த சமுதாய வர்க்கங்களும், சக்திகளும் அனைத்துமக்கள் என்ற கருத்திற்கு அப்பாற்பட்டவையல்ல. ஏனெனில் 'அனைத்து மக்கள்' என்ற கருத்தில் யாரைச் சேர்க்கலாம் என்று முடிவு செய்யும் நீதிபதியாக

எந்த ஒரு தனிப்பட்ட குழுவினரும் யாரும் அதிகாரம் எதுவும் வழங்கவில்லையே இவற்றிற்கு நிச்சயமாக பதில் உள்ளது. ஆனால் அதை,இந்த சி.ஆர்.சி. ஆவணம் முழுவதும் ஊடுருவி நிற்கும் முதலாளித்துவ ஜனநாயகக் கண்ணோட்டத்தால் தரமுடியாது.

இந்தக் கட்டத்தில், பழைய அரசமைப்பைத் தூக்கி எறியவும், பழைய அரசு எந்திரத்தை உடைத்தெறியவும் பிறகு புதிய அரசியல் அமைப்பை நிறுவுவதற்கும் முன்னோடிக் கட்சியின் பங்கு தேவைப்படுவதை சி.ஆர்.சி ஆவணம் ஏற்றுக்கொள்வதுபோல் தோன்றுகிறது. (பத்தி 10.4). மேலும், "உற்பத்திச் சாதனங்களை சோசலிச மயமாக்குதலை நிறைவேற்றி, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புதிய ஆளும் வர்க்கங்களின் கைகளில் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் புதிய அரசியல் அமைப்பு செம்மையாகச் செயல்படத் தொடங்கும் வரை பாட்டாளி வர்க்கத்தின் முன்னோடிக் கட்சி தலைமைப் பொறுப்பு ஆற்ற வேண்டும். இதனைச் சாதித்துவிட்டால், பின்பு புரட்சிகர மாற்றம் ஏற்படுதல்கள் ஏகபோகக் கட்டுப்பாட்டை கம்யூனிஸ்ட் கட்சி விட்டுக் கொடுத்துவிட்டு அமைப்பு முறை தானாக இயங்க அனுமதிக்க வேண்டும். பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின்கீழ், புதிய அமைப்பு முறையை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ள மறுப்பதும் வெளிப்படையான ஜனநாயக முறையில் மக்களால் முடிவு செய்யப் படும். இதில் தங்களது அமைப்புக்களின் மூலமாகவோ அல்லது வேறுவழிகளிலோ அனைத்து மக்களும் சுதந்திரமாகப் பங்கேற்பர்"

ஆவணம் மீண்டும் தானே ஏற்படுத்திக்கொண்ட தர்க்க ரீதியான முரண்பாடுகளுக்குள் சிக்கிக்கொள்கிறது. முதலில் பழைய அமைப்பை வன்முறையாகத் தூக்கி எறிதல், அதில் முன்னோடிக் கட்சியின் பங்கு ஆகியன

பற்றிப் பார்ப்போம். நாம் முன்பே இந்த விமர்சனத்தின் தொடக்கத்தில், சி.ஆர்.சி. ஆவணத்திலிருந்து பெறப் படும் பொதுக் கோட்பாடுகள் பற்றிக் கூறும்பொழுது சுட்டிக்காட்டியதை நினைவு கூர்வோம். கட்சி சர்வாதி காரம் பற்றிய இந்த ஆவணத்தின் கருத்து வன்முறை யாகத் தூக்கி எறிதல் தவறு என்ற கருத்துடன் பிரிக்க முடியாவண்ணம் தொடர்பு கொண்டுள்ளது. அதன்படி தூக்கி எறிதல் அதுவும் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை யில் தூக்கி எறிதல் தவறு, மேட்டிமைத்தனமானது. இது முதலாளித்துவ வர்க்கத்தின் மேல் மட்டுமல்லாது மக்கள் திரளின் மீதும் திணிக்கப்படும் ஒன்றாகும். ஏனெனில், குறைந்தது தொடக்க கட்டத்திலாவது மக்கள்திரள், இவ்வாறு வன்முறையாகத் தூக்கி எறிதலின் அவசியம் பற்றி முன்னோடிக் கட்சியிடமிருந்து மாறுபடலாம். இந்த (பழைய அமைப்பைத் தூக்கி எறியலாமா? கூடாதா? என்ற) கேள்வி பற்றி 'அனைத்து மக்களிடமும்' வாக் கெடுப்பு நடத்த வேண்டுமல்லவா? அல்லது ஒருவேளை பழைய ஆளும் வர்க்கத்தையும் அவர்களது வெளிப் படையான ஆதரவாளர்களையும் கழித்து விட்டு மீதம் இருக்கும் 'அனைத்து மக்களிடம்' மட்டும் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமா? ஆனால் மீண்டும் வேறொரு தலைவலியில் மாட்டிக்கொள்வீர்கள். அதாவது 'அனைத்து மக்கள்' என்பதில் யாரைச் சேர்க்கலாம், யாரைச்சேர்க்கக்கூடாது என்பதை யார் முடிவு செய்வது? யாருக்கு அந்த உரிமை உள்ளது? அமைப்பைத் தூக்கி எறிவதையும் நோக்கம் ஏதாவது இருந்தாலும், கூட அதனை விரைவில் இதுபோன்ற சம்பிரதாய ஜனநாயகம் பற்றிய சிந்தனைகள் மூழ்கடித்துவிடும்!

பார்ப்பதற்கு இது சி.ஆர்.சி. ஆவணத்தைப் பற்றிய கேலிச்சித்திரம் போல் தோன்றலாம். ஆனால் அப்படி யல்ல. குருஷ்சேவின் "அமைதி வழியில் சோசலிச மாற்றம்" என்ற கொள்கை இருந்த அதே தொகுப்பில்

"அனைத்து மக்களின் அரசு" பற்றிய கருத்துக்களும் இருந்தது தற்செயலான நிகழ்ச்சி அல்ல. அதற்கு இணையான கருத்துக்களும், வாதங்களுமோ சி.ஆர்.சி ஆவணத்தில் உள்ளன. இந்தக் கருத்துக்களும், வாதங்களும் தொடர்ந்தால் மிகவிரைவில் ''அமைதி வழியில் சோசலிச மாற்றம்'' கூட ஏதாவதுஒரு வடிவத்தில்முளைத்து வெளிப்படையாகவே ஆதரவுப் பெறத் தொடங்கிவிடும்.

புதிய சமுதாயத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட முன்னோடிப்பங்கை இனியும் கட்சி ஆற்றக்கூடாது என்ற பிரச்சினைக்கு வருவோம். எப்பொழுதிலிருந்து ஆற்றக்கூடாது? எந்த அடிப்படைகளை வைத்து இதனைத் தீர்மானிப்பது? சி.ஆர்.சி ஆவணத்தில் நமக்கு இப்பொழுது பழகிப்போன இன்னுமொரு தர்க்கரீதியான முரண்பாடு, ''புதிய அரசியல் அமைப்பு செம்மையாகச் செயல்படத் தொடங்கும் வரை'' குறிப்பாக 'பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புதிய ஆளும் வர்க்கங்களின் கைகளில் அதிகாரத்தைப் போதுமான அளவு உறுதிப்படுத்திய பின்பு'' கட்சி இந்தப் பணியை நிறுத்தி விடவேண்டும். இதனை கட்சியா தீர்மானிக்கின்றது? ஆனால் அதுவும் முரண்பாடாயிற்றே! கட்சியின் நிறுவனமயமாக்கப்பட்ட தலைமைப்பணி இனியும் தேவையில்லை என்று மக்களுக்காக கட்சி எவ்வாறு தீர்மானிக்க முடியும்? அல்லது கட்சி இதைத் தீர்மானிக்கவில்லை என்றால் பின்பு யார்? எவ்வாறு இதைத் தீர்மானிப்பது? மக்கள் ஓட்டளிப்பதன் மூலமா? சரி, ஆனால் வாக்கெடுப்பு நடத்த வேண்டிய நேரத்தை யார் நிர்ணயிப்பது? வாக்கெடுப்பை யார் நடத்துவது? அதற்கான விதிகளை நிர்ணயிப்பது? என்று கேள்விக்கு மேல் கேள்விகள். சி.ஆர் சி. ஆவணத்தின் அடிப்படையான கருத்து முதல்வாதப்போக்கின் பிரதிபலிப்பே இக்கேள்விகளில் வெளிப்படும் முட்டாள்தனம்.

பொருளாதாரக் கூறுகளுக்கு வருவோமானால், உடைமைகளைச் சோசலிச மயமாக்குதல் முழுமையாக, கிட்டதட்ட முழுமையாகவோ கூட, எந்த ஒரு சோசலிச நாட்டிலும் இதுவரை நடைபெறவில்லை. நிச்சயமாக மார்க்ஸ் "கோத்தா திட்டத்தைப் பற்றிய ஒரு விமர்சனத்தில்" கூறியுள்ள பொருளில் நடைபெறவில்லை (இதில் தான் அனைத்து உடமைகளும் ஒட்டு மொத்த சமுதாயத்தின் உடைமைகளே என்ற கருத்தை மார்க்ஸ் சிந்திக்கிறார்) அதைச் சாதிப்பதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்று அனுபவத்தின் வாயிலாக உணரமுடிகிறது. சீனத்திலும், சோவியத் ஒன்றியத்திலும், அவை சோசலிச நாடுகளாக இருந்தபொழுதும்கூட அனைத்து உற்பத்திச் சாதனங்களும் அனைத்து மக்களின் உடைமைகளாகிவிட்ட கட்டத்தை அடைந்துவிடவில்லை. பொருளாதாரத்தை நெறிப்படுத்துவதில் பண்ட உற்பத்தியும் மதிப்பு விதிகளும், முக்கியமான சொல்லப் போனால் முழுமையான பங்கு வகிப்பதற்கும் இதுவே காரணமாகும். சீனத்தில், விவசாயிகளின் குழுக்களால் ஆன கூட்டுப்பண்ணைகளே பெரும்பான்மையான உடைமை வடிவமாயிருந்தது. சிறிய உற்பத்திக் குழுக்களே பொருளாதாரத்தின் முக்கிய கூறுகள் ஆயின. மாவோவும் அவரைப் பின்பற்றி சாங்-சன்-சியோவும் இதனை நீண்ட கால, முக்கியத்துவம் வாய்ந்த முரண்பாடாகவும், சோசலிசத்தின் கீழ் முதலாளித்துவ வர்க்கம் தொடர்ந்து முளைத்தெழுதல், வர்க்கங்களும் வர்க்கப்போராட்டங்களும் தொடர்ந்து நிகழ்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகவும் கருதினர். எனவே, இதுபோன்ற முக்கியமான கேள்விகளைக் கணக்கில் கொள்ளாமல், சோசலிச மயமாக்கல் நிறைவேற்றி முடிந்ததும் நிறுவனமயமாக்கப்பட்ட முன்னோடிப் பொறுப்பிலிருந்து கட்சி விலகிவிட வேண்டும் என்று வாதிடுவது சி.ஆர்.சி ஆவணத்தின் கருத்து முதல்வாதப் போக்கின் வெளிப்பாடே.

உண்மை நிலை என்ன? சோசலிச காலகட்டம் முழுவதும் இந்த ஆழமான முரண்பாடுகளும் நிலவுகின்றன. அவை மேற்கட்டுமானத்தில் பிரதிபலிக்கின்றன எனவே தனது தலைமைப்பங்கை கட்சி நீண்ட காலத்திற்கு, சோசலிச மாற்றம் நடைபெறும் வரலாற்றுக் காலம் முழுவதும், ஆற்றுவது இன்றியமையாததாகும். இந்தப் பணியைச் சரியான முறையில் ஆற்றுவதற்கு, மக்களுடனான உறவு சரியாக இருப்பதற்கு இந்த முன்னோடிப் பங்கு நிறுவனமயமாக்கப்பட்டாக வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், முன்பே சுட்டிக் காட்டியது போல், ஏற்கனவே நிலவும் முரண்பாடுகள் காரணமாக, வேறு ஏதாவது குழு முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கைப்பற்றி விடும். கைப்பற்றியாக வேண்டும். ஆனால், அது ஏதாவது ஒரு வடிவிலான முதலாளித்துவக் கும்பலாகவே இருக்கும்.

## எது மாதிரியான கட்சி, எது மாதிரியான புரட்சி

இந்தப் புரிதலுக்கு எதிரான சி.ஆர்.சி ஆவணத்தின் 'புதிய திசைவழி' செல்கிறது. அதன்படி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் கட்சி முன்னோடிப்பங்கு ஆற்றவேண்டியிருந்தாலும், கைப்பற்றிய உடன் தனது அதிகாரத்தை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மூலம் அரசியல் ரீதியாக மட்டுமே செலுத்த வேண்டும். மேலும் கட்சி வெளிப்படையாக இயங்குவதாகவும், தனக்குள்ளேயே பல்வேறு குழுக்கள் இயங்குவதைக் கோட்பாட்டு ரீதியாகவே அனுமதிக்கும் அளவிற்கு ஜனநாயகமானதாகவும் இருக்கவேண்டும். (பத்தி 105) "இந்த ஆவணத்தில் கூறியுள்ள கோட்பாடுகளின்படி புதிய பொருளாதார, அரசியல் அமைப்பை இயங்கச்செய்தபின் கட்சி முறைப்படி தன்னுடைய ஏகபோகத்தைத் துறந்துவிடவேண்டும். அதன்பின் ஆட்சி செய்யும் உரிமை மற்ற கட்சிகளைப்

போலவே, இதன் கொள்கைகளுக்கு மக்களிடையே தேர்தலில் கிடைக்கும் ஆதரவைப் பொறுத்தே இருக்க வேண்டும். (பத்தி—109)

மேலும் மேலும் கருத்து முதல்வாதம் சோசலிசப் புரட்சியை விளையாட்டுப் பொருளாக ஆக்குகிறது என்றுகூட இதைச்சொல்ல முடியாது. ஏகாதிபத்தியங்களால் ஆளப்படாத, சோசலிச சமுதாயத்திற்குள்ளிருந்தே முதலாளிவர்க்கம் மீண்டும் மீண்டும் முளைவிடாத மண்வளம் உடைய, மக்களுக்கிடையே சமுதாய நிலையில் வேறுபாடுகளும்-வர்க்க முரண்பாடுகளும் நிலவாத சூரண்டும் வர்க்கங்களின் கருத்தியல் மேலாதிக்கம் நிலவாத ஒரு நாட்டில் இவர்களது கற்பனை உலகத்திலே நிலவும் ஒரு லட்சிய சோசலிச சமுதாயத்திற்கு வேண்டுமானால் இது பொருத்தமான கட்சியாய் இருக்கலாம். ஆனால் சர்வதேச அளவில் பலம் பொருந்திய, சோசலிச சமுதாயத்திற்கு உள்ளேயே கூட தனக்குச் சாதகமான பொருளாதாரச் சூழல்களைப் பெற்றுள்ள ஒரு வர்க்க எதிரியுடன் உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் உறுதியான வர்க்கப்போராட்டத்தை நடத்துவதில் முன்னோடிப் பங்கு ஆற்றவேண்டிய ஒரு புரட்சிகர கட்சிக்கு இது பொருந்தாது என்பது தெளிவு.

தனக்குள்ளேயே குழுக்கள் இயங்க அனுமதிப்பதை ஒரு கொள்கையாகவே கொண்டுள்ள, வெளிப்படையான ஒரு கட்சியைப் பற்றிப் பேசுவது 'ஜனநாயகம் மிகுந்த' செயலாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் இதன்படி நடந்தால், பல மையங்களை உடைய ஒரு கட்சியே உருவாகும். அதில் எந்த மையமும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர நலன்களை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருக்காது. குறிப்பாக, கடுமையான வர்க்கப்போர் நிகழும் நேரங்களில் ஆற்றலற்று நிற்கும், முதலாளித்துவ குறுங்குழுவாதத்திற்குச்

சீரழிந்து விடும். ஆம் இவை அனைத்தும் உண்மை யிலேயே ஜனநாயகமானவைதான், முதலாளித்துவ ஜனநாயகமானவை, இதன் கொள்கைகள் முதலாளித் துவக் கொள்கைகளே.

அக்டோபர் புரட்சியைத் தலைமையேற்று நடத்திய பொழுதும், சோவியத் அரசு பிறப்பெடுத்தபொழுதும், போல்ஷ்விக் கட்சிக்கு ஏற்பட்ட அனுபவங்களை இங்கு நினைவு கூறவேண்டும். அன்று காவுட்ஸ்கி யின் ஜெர்மானிய சமூக-ஜனநாயகக்கட்சியால் பிரதான மாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சமூக-ஜனநாயகத்தின் செல்வாக்கிலிருந்து உடைத்துக் கொண்டு செல்வது மிக முக்கியமானதாயிருந்தது. இது முழுமையாகப் பிய்ந்து செல்வதில் முடிவடைந்தது. முதல் உலகப்போரை மையமாக வைத்து ஏற்பட்ட பெரிய திருப்பம் இது. ஒரு புறம், இரண்டாவது அகி லத்திலிருந்த பெரும்பான்மையான கட்சிகள் அளவு ரீதியிலிருந்து பண்பு ரீதியாக மாற்றம் அடைந்து சீரழிவை நோக்கிச்சென்றன. மறுபுறம், போல்ஷ்விக்கு களும் பண்பு ரீதியான மாற்றமடைந்து சர்வதேச சோசலிச இயக்கத்தில் நெடுநாளாக ஆட்சி செலுத்திய தவறான போக்குகளிலிருந்து விடுபட்டனர். அவற்றில் மையமான பிரச்சினைகளில் ஒன்று கட்சி பற்றியதாகும்.

அக்டோபர் புரட்சிக்குத் தயார் ஆவதற்கும், பிறகு தலைமை தாங்கி நடத்திச் செல்வதற்கும் தேவையான கட்சியை, பாட்டாளிவர்க்கப் புரட்சியின் தேவைகளை நிறைவேற்றும் வலிமையுள்ள கட்சியை நிறுவி, நடத்து வதற்கு, லெனின் தலைமையில் போல்ஷ்விக்குகள் கடுமையான போராட்டங்கள் நடத்தவேண்டியிருந்தது நமக்கு தெரிந்ததே. மேலும், அதிகாரத்தைக் கைப் பற்றியப் பிரதான காலகட்டங்களில் மீண்டும் போராட் டங்களை இடைவிடாது முன்னெடுத்துச் செல்லும்

வலிமையுள்ள முன்னோடிக் கட்சியைச் சிந்தனை செய்து நடைமுறைப்படுத்த வேண்டியிருந்தது. கட்சிக் குள் பல்வேறு குழுக்கள் இருப்பதைத் தடை செய்தது இவற்றில் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்று. முதலில் அது உள்நாட்டுப்போர் காரணமாக ஏற்பட்ட மிகக்கடுமையான, சிக்கலான சூழ்நிலையை சமாளிப் பதற்காகவே கொண்டுவரப்பட்ட தற்காலிக நட வடிக்கை என்றாலும் பின்பு அதுவே பொது விதியாக, நீண்ட காலத் தேவையாக நடைமுறைப்படுத்தப் பட்டது. அதுவே சரியானதும் ஆகும்

உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உண்மையான முன்னோடிக்கட்சி, மாறுபட்ட கருத்துக்களின் மோதலையும் உயிரோட்ட மான தத்துவார்த்தப் போராட்டங்களையும் கட்சிக்குள் அனுமதிப்பது அவசியமாகும். ஆனால் இது ஒன்றுபட்ட கட்சி அமைப்பின் வழியாக நடைபெற வேண்டுமே யொழிய, அமைப்பாக்கப்பட்ட பல்வேறு குழுக்கள், தனித்தனியான கொள்கைகள், வெவ்வேறு தலைவர் கள் என்ற முறையில் அல்ல, போல்ஷ்விக் கட்சிக்குள் ஏற்பட்ட மோசமான ஒழுங்கின்மையும், குறுங்குழு வாதமும் அக்டோபர் கிளர்ச்சியைக் கிட்டத்தட்ட கொன்றேவிட்டன. (கிளர்ச்சியை அல்லது குறைந்த பட்சம் கிளர்ச்சி தொடங்கப்பட்ட நேரத்தை ஏற்றுக் கொள்ளாத காமனேவும், ஜினோவிவேவும் கிளர்ச்சி பற்றிய திட்டங்களை வெளியே கூறிவிட்டதால் கிளர்ச்சி தோல்வியுறும் அபாயம் ஏற்பட்டது). அன்று (1921) குழுக்கள் தடைசெய்யப்படாமல் இருந்தால் புதிய சோவியத் குடியரசு அழிக்கப்பட்டிருக்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சோசலிச நிர்மாணம் ஏற் படுவது தடை செய்யப்பட்டிருக்கும். (20)

சோசலிசத்தின் கீழ் கட்சியின் தன்மை, பணிகள் பற்றி சி. ஆர். சி. ஆவணம் முன் வைக்கும் வழியில் சென்றால் பின்பு பாட்டாளி வர்க்கம் எவ்வாறு தன் தலைமையை நிறுவமுடியும்? ஒட்டுமொத்த சர்வாதிகாரத்தை, மேற் கட்டுமானத்தில், குறிப்பாக பண்பாட்டுத்துறை போன்ற முக்கிய துறைகளில் செலுத்த முடியும்? இதுபோன்ற ஒரு அமைப்பில் அந்த வர்க்கத்திற்குச் சொந்தமான, எந்தப் பண்பாடு மேலோங்கி நிற்கும்? மாபெரும் பாட்டாளிவர்க்கப் பண்பாட்டுப் புரட்சியின் அவசியத்தையும், அவசரத்தையும் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பும்கூட, பண்பாட்டுப்புரட்சி நடைபெறும்வரை கல்வி மற்றும் பண்பாட்டுத் துறைகளில் முதலாளித்துவ வர்க்கத்தின் (குறிப்பாக திரிபு வாதத்தின்) மேலாதிக்கமே நிலவியது என்று மாவோ குறிப்பிட்டார். இந்த முக்கியமான துறைகளில் திரிபுவாதிகளின் ஆதிக்கத்தை ஒழித்து அடிப்படை மாற்றங்கள் கொண்டு வருவதற்காக மாபெரும் போராட்டங்கள் தேவையாயிருந்தன. பண்பாட்டுத் துறையில், பொதுவாக, மேற்கட்டுமானத்தில் பாட்டாளி வர்க்கச் சிந்தனைகள் தன்னெழுச்சியாக மேலாதிக்கத்திற்கு வந்துவிடும் என்று கருதுதல் முழுக்க முழுக்க கருத்து முதல்வாதச் சிந்தனையாகும். அதற்கு, குழுக்களாகப் பிளவுபடாத, குறுங்குழுவாதத்தால் சிதைவுறாத ஒரே கருத்தின் அடிப்படையில் ஒற்றுமைப்படுத்தப்பட்ட, கட்சியின், முறைப்படுத்தப்பட்ட, எல்லாத் துறைகளிலுமான தலைமைப் பங்கு அவசியமாகிறது. அவ்வாறான தலைமை இல்லையேல், மேற்கட்டுமானம் உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்தின் மேலாதிக்கத்திலேயே இருக்கும். அதனால், பொருளாதார அடித்தளத்திலும் முதலாளித்துவ உறவுகள் மேலாதிக்கத்துக்கு வரத்தொடங்கி, சமுதாயம் முழுவதிலும் முதலாளித்துவம் மீண்டும் நிறுவப்படும்.[21]

## முதலாளித்துவ தேர்தல் மாதிரியும் உலகை மாற்றுவதற்கு மக்கள் திரளை வழிநடத்துதலும்

கட்சி தனது பதவியைச் சார்ந்திராமல், மக்களையே சார்ந்திருக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனால் அதற்காக மக்கள் திரளுக்கு வால்பிடிக்கும் பழைய சமூக-ஜனநாயகக் கட்சிகளைப்போல் சீரழிந்து விடக்கூடாது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் வாக்குச்சீட்டு அரசியலுக்குள் தன்னைக் குறுக்கிக் கொண்டுவிடக்கூடாது. தனது முன்னோடிப் பங்கையும், புரட்சியில் மக்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பையும் உதறிவிடக்கூடாது.

சி.ஆர்.சி ஆவணத்தின் தொலைநோக்கில் கண்டறியப்பட்டுள்ள பாட்டாளி வர்க்க ஜனநாயக முறை உண்மையில் மரபுவழி முதலாளித்துவ ஜனநாயக முறையிலிருந்து பண்புரீதியாக எவ்விதத்திலும் வேறுபடவில்லை என்பது இதற்குள் தெளிவாகியிருக்கும். மற்ற கட்சிகளைப் போலவே கம்யூனிஸ்ட் கட்சியும் முழுக்க முழுக்க தனது கொள்கைகளுக்கு தேர்தலில் மக்களிடையே கிடைக்கும் ஆதரவின் அடிப்படையிலேயே ஆளும் உரிமையைப் பெறவேண்டும் என்ற சி.ஆர்.சி ஆவணத்தின் 'மாதிரி' மிஞ்சிப்போனால் பல்வேறு அதிகார மையங்கள், வேறுபட்ட கொள்கைகளின் அடிப்படையில் திரண்டு மக்களின் வாக்குகளுக்காக முட்டி மோதிக்கொள்வதிலேயே முடியும். உயர்ந்தபட்சம், இதன் விளைவும் ஒரு கூட்டணி அரசாகவே இருக்க முடியும். சோசலிஸ்டுக்கள், பல்வேறு வகையான கம்யூனிஸ்டுக்கள், பல்வேறு ஜனநாயகப் போக்குகளை, குறிப்பாக மிக வெளிப்படையாகச் செயல்படத் தொடங்

கும் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ ஜனநாயகப் போக்குகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய இந்தக் கூட்டணி மக்கள் திரளின் அடிப்படை நலன்களைக் சமரசத்திற்குத் தாரைவார்த்துவிடும். சமுதாயத்தில் அடிப் படை மாற்றம் கொண்டுவருவது கைவிடப்படும். (அப் படி முயற்சி எதுவும் நடந்தாலும் அம்முயற்சி இக் கூட்டணி அரசாங்கத்தால் விரைவாக, ஈவிரக்கமின்றி ஒடுக்கப்படும்.) இவற்றை மிகத்தெளிவாக உணர்த்து வதற்கு ஏற்கனவே உலகில் தேவையான, உண்மையில் தேவைக்கு அதிகமான, வரலாற்று அனுபவங்கள் இல்லையா என்ன?[12]

இம்மாதிரியான அரசியல் முறைகளை அறிந்து அ சியல் நினைவாற்றல் பழுது (அரசியல் அம்னீசியா) எதுவும் ஏற்படாதவர்களிடம் இந்த 'மாதிரி'யான தேர்தல் முறையின் மூலம்எப்படியாவது மக்கள்திரளின் அரசியல் விருப்பங்கள் வெளிப்படும் என்று கூறுவது கேலிச் சிரிப்பையே வரவழைக்கும். இம்மாதிரியான நம்பிக்கை முதலாளித்துவ வர்க்கம் நம்புவதைவிட அதிகமாக் முதலாளித்துவ ஜனநாயகத்தை நம்புபவர்களிடமே தோன்றமுடியும். இம்மாதிரியான ஜனநாயகமும், தேர் தல் முறையும் மக்கள் திரளின்மேல் முதலாளித்துவ சர் வாதிகாரத்தைச் செலுத்துவதற்கான ஒரு கருவியே என்ற பாடத்தை படிக்காதவர்களுக்கும் அல்லது படித்து மறந் தவர்களுக்குமே தோன்றும் நம்பிக்கை இது. சோசலிச சமுதாயத்தில் தேர்தல் முறைக்கு சட்டப்படி பங்கே யில்லை என்பதல்ல இதன் பொருள். ஆனால், வழக்க மான தேர்தல் முறைகளே மக்களின் அரசியல் விருப் பத்தின் மிகஉயர்ந்த அல்லது சாராம்சமான வெளிப் பாடு என்ற தவறான புரிதலின் அடிப்படையில் அது இருக்கக்கூடாது. இந்த 'அரசியல் விருப்பங்கள்' வெளிப் படும் முறைகளில் தேர்தல்கள் ஒரு பகுதியே ஆகும். வர்க்க சமுதாயத்தில் மற்ற அனைத்தையும் போலவே

தேர்தல்களும் அடிப்படை வர்க்க உறவுகளிலேயே வடிவமைக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படும். சோசலிச சமுதாயத்தில் கட்சியின் தலைமையுடன் பாட்டாளிவர்க்கம் அரசியல் அதிகாரம் செலுத்துவதற்குத் துணையாகவே தேர்தல் இருக்கவேண்டும்.

சி.ஆர்.சி ஆவணத்தின் கருத்துப்படியான 'சோசலிச, சமுதாயத்திற்கும்' 'பாட்டாளிவர்க்க ஜனநாயக முறைக்கும்' அதன் தொலைநோக்கில் உதித்துள்ள ஜனநாயக தேர்தல் முறையோ இதற்கு நேர்மாறானது. முதலாளித்துவ சமுதாயத்தில் தேர்தல் முறை ஆற்றும் பங்குபற்றிய கீழ்க்கண்ட வரையறை இதற்குப் பொருத்தமாக உள்ளது.

"இந்தத் தேர்தல் முறையே சமுதாயத்தில் நிலவும் அடிப்படை வர்க்க உறவுகள், வர்க்க எதிர்ப்புகள் ஆகியவற்றை முடிமறைப்பதுடன் நிலவுகின்ற நிலைமையைத் தொடர்ந்து நீடிக்கச் செய்வதில் (தனித்தனிக் கூறுகளாகப் பிரிக்கப்பட்ட) அணுமயமாக்கப்பட்ட தனிமனிதர்களின் அரசியல் விருப்பங்களின் சம்பிரதாய, நிறுவனமயமாக்கப்பட்ட வெளிப்பாடாகிறது. இந்த முறை மக்களைத் தனிமனிதர்களாகப் பிரிப்பதுடன் அவர்களை அரசியலில் வெறும்பார்வையாளர்கள் நிலைக்குத் தள்ளுகிறது. மேலும் இந்த அணுமயமாக்கப்பட்ட, செயலற்ற தன்மையே அரசியலின் சாராம்சம் என்று வரையறுக்கிறது. ஒவ்வொருவரும் தனிமனிதர்களாக, மற்ற அனைவரிடமிருந்தும் விலகிநின்று, இந்த அல்லது அந்த 'விருப்பத்திற்கு' அவனது அல்லது அவளது ஒப்புதல் தரப்படுகிறது. ஆனால் இந்த 'விருப்பங்கள்' அனைத்தும் இந்த அணுமயமாக்கப்பட்ட மனிதத் திரளுக்கு மேலே இருக்கும், செயலூக்கமிக்க ஒரு சக்தியால் முன்வைக்கப்படுகின்றன. (அவேக்கியான் எழுதிய 'ஜனநாயகம்' பக்கம் 70)

சி.ஆர்.சி. ஆவணம் முழுவதும் 'மக்களின்' அல்லது பாட்டாளி வர்க்கத்தின் "அரசியல் விருப்பம்" பற்றிய குறிப்புகள் பரவிக்கிடக்கின்றன. ஆனால் கட்சி முன்னோடிப்பங்கு வகிக்காமல், மக்கள் திரள்வழியை நடைமுறைப்படுத்தாமல், கம்யூனிசச் சித்தாந்தங்களையும். அரசியல் கோட்பாடுகளையும் அனைத்திலும் பயன்படுத்தாமல் பாட்டாளிவர்க்கம் மற்றும் மக்கள் திரளின் 'அரசியல் விருப்பத்தை' நிறைவேற்றவோ சரியாகச் சொன்னால் தீர்மானிக்கவோகூட இயலாது, சி.ஆர்.சி ஆவணத்தில் எங்குமே இந்தப்புரிதல் இல்லாதது மட்டுமல்ல, புரிதலை மறுக்கும் போக்கே உள்ளது.

உண்மையில், நாம் ஏற்கனவே பார்த்ததுபோல், சி.ஆர்.சி ஆவணம், மக்களின் அறிவுபூர்வமான செயலூக்கத்தையும், கட்சியின் முன்னோடிப் பணியையும் எதிர்எதிரான அம்சங்களாகத் தொடர்ந்து காட்டுகிறது. கீழ்வரும் அதன்கருத்துக்களில் இது தெளிவாக வெளிப்படுகிறது. நிலையான இராணுவத்தைக் கலைத்துவிட்டு ஆயுதமேந்திய அனைத்து மக்கள் படையை நிறுவவேண்டும். கட்சியும், அதன் முன்னோடிப் பங்கும் குறைக்கப்பட்டு அது (மற்ற கட்சிகளைப் போலவே) தனது கொள்கைகளின் அடிப்படையில் தேர்தல் வாக்குகளுக்காகப் போட்டி போடவேண்டும். பின்பு, இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தபாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவங்கள் போலல்லாது, இந்த புதிய அரசியல் அமைப்பில் மக்களின் கைகளில் உண்மையான அதிகாரம் இருக்கும், ஆயுதங்களும் இருக்கும். அவர்கள் சமுதாயத்தின் ஒட்டுமொத்த அரசியல் வாழ்க்கையிலும் செயலூக்கமிக்க பங்கு வகிப்பர். அதனால் மீட்சி ஏற்படாமல் தடுப்பதற்குச் சிறந்த உத்திரவாதமாகவும் அப்படியே மீட்சி வந்துவிட்டால் அதனை மாற்றுவதற்குச் சிறந்த சூழலாகவும் இது விளங்கும். (பத்தி-109)

இது மிகமிக வியப்பானகூற்று. மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியைப்பற்றி அறிந்த எவரால் தான் சீனத்து மக்கள்திரள் சமுதாயத்தின் மொத்தப் பொதுவாழ்க்கையிலும் செயலூக்கமிக்க பங்காற்ற வில்லை என்று வாதிடமுடியும்? பொதுவாகவும், திரிபு வாதத்தையும், முதலாளித்துவ மீட்சியையும் எதிர்ப்பதில் குறிப்பாகவும், மக்கள் பங்கேற்றனர். இந்தப்பண் பாட்டுப் புரட்சியுடன் சீனாவில் அண்மையில் நடந்த (முதலாளித்துவ) ஜனநாயகக் கிளர்ச்சிகளை ஒப்பிட்டுப் பாருங்கள். அறிவுபூர்வமான செயலூக்கமும், வர்க்க உணர்வுள்ள புரட்சிகர முன்முயற்சியும் சீனமக்கள் திர ளாய் பின்னதைவிட முன்னதில் ஆயிரம் மடங்கு அதிக மாக வெளிப்படுத்தப்பட்டன எனத் தயக்கமின்றிச் சொல்லலாம். பண்பாட்டுப் புரட்சியின்போது மக்கள் திரள் கம்யூனிச முன்னோடிகளின் தலைமையைப் பெற் றிருந்தனர். அண்மையில் நடந்த போராட்டத்தில் அத்தகைய தலைமை இல்லை என்பதே இந்த வேறு பாட்டிற்குக் காரணம்.[23] இந்தப் போராட்டத்தில் நல்ல அம்சங்கள் பல இருந்தன. முற்போக்கான, புரட்சிகர மான சக்திகளும் கூடப் பங்கேற்றனர். மாவோவை வெளிப்படையாகப் போற்றுவதும், அவரது கொள்கை களுக்கு ஆதரவு தெரிவிப்பதும் நடைபெற்றது. மாவோ மற்றும் அவரது புரட்சிகரத் தொண்டர்களையும், ஊழல் நிறைந்த இன்றைய திரிபுவாத ஆளும் கும்பலையும் வெளிப்படையாக ஒப்பிட்டுப் பார்த்தனர். இவையெல் லாம் இருப்பினும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் மக்கள் திரள் எழுச்சியின் தலைமைப்பொறுப்புக்களில் இருந்த சக்திகளும், கொள்கைகளும் முதலாளித்துவ வர்க்க நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவையே.

அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டத்தின்போது மட்டுமல்லாமல், சோசலிச மாற்றம் நடைபெறும் கால கட்டம் முழுவதிலும் லெனினிஸ்ட் கட்சியின் பங்கு

மக்கள் திரளோடு அதற்குள்ள தொடர்பு ஆகியவைப் பற்றிய எனது உரை ஒன்றை மேற்கோள் காட்டுவது பொருத்தமாயிருக்கும்

"ஏற்கனவே மார்க்சும், எங்கெல்சும் எழுதியிருந்தவைகளுக்கும் அப்பால் சென்றும், மார்க்சீய இயக்கத்தின் மரபுவழி நடைமுறைகளையும், சித்தாந்தங்களையும் உடைத்துக்கொண்டும் லெனின் இந்தக் கொள்கைகளை உருவாக்கி பயன்படுத்தினார். ஆனால் அவர் அடிப்படை மார்க்சீய கோட்பாடுகளின் அடித்தளத்தில் நின்று, அடிப்படை மார்க்சீய முறைகளின் வழியே, அதன் புரட்சிகரமான விமர்சன கண்ணோட்டம் நிறைந்த சாராம்சத்திலிருந்து வழுவாமலேயே இவற்றைச் செய்தார். பாரீஸ் கம்யூனின் தோல்விக்கு லெனினியக் கட்சி போன்ற ஒன்று இல்லாததும் முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இரண்டாவது அகிலமோ ஏகாதிபத்தியத்தின் ஒரு கருவியாகச் சீரழிந்தது. லெனினியச்சிந்தனைகளுக்கு எதிராக இவை இரண்டையும் நிறுத்துவது தலைகீழான, பிற்போக்குத்தனமான சிந்தனையாகும். ரஷியப் புரட்சியின் சீரழிவிற்கு லெனினியக் கட்சியின் தன்மையும் அதன் பங்களிப்புமே காரணம் என்று கூறுவது முதலாவதாக உண்மைக்குப் புறம்பான செயல். மேலும், இது அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து நழுவிச் செல்வதாகும். எத்தனைக்கெத்தனை சிறப்பாகக் கட்சி அமைக்கப்பட்டு, மையப்படுத்தப்பட்டுள்ளதோ அத்தனைக்கத்தனை அது புரட்சியாளர்களின் உண்மையான முன்னோடி ஆகும். அத்தனைக்கத்தனை புரட்சிப் போரில் மக்கள்திரளின் பங்கேற்பும், முன்முயற்சியும் மிகுதியாக இருக்கும் என்று "இனி என்ன செய்ய வேண்டும்" நூலில் லெனின் வாதிடுகிறார். இந்த வாதத்தின் உண்மையை ரஷியப்புரட்சிமட்டுமின்றி அனைத்துப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளும் நிருபித்துள்ளன. அவ்வாறான ஒரு கட்சி இல்லாமல் அவ்வாறான ஒரு புரட்சி

எங்குமே நடந்தேறியதில்லை. அவ்வாறான கட்சி இல்லாமலிருந்ததால் அறிவுபூர்வமான புரட்சிகரப் போராட்டங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள்திரளின் முன் முயற்சி எங்கும் கட்டவிழ்த்துவிடப்பட்டதும் இல்லை. முன்னோடி லெனினியக்கட்சி பிற்காலத்தில் மக்கள் திரளின்மேல் ஓர் ஒடுக்குமுறைக் கருவியாகச் சீரழிந்து விடும். எனவே, அம்மாதிரியான ஒருகட்சி இல்லாம லிருப்பது நல்லது என வாதிடுவதும், ஒரு புரட்சியே நடைபெறக்கூடாது என வாதிடுவதும் ஒன்றுதான், அவ்வாறான கட்சியின் தேவையை உருவாக்கிய முரண் பாடுகள், மாற்றம் செய்யப்படவேண்டிய பொருளியல் கருத்தியல் நிலைமைகள் இதனால் நீங்கிவிடப் போவ தில்லை. வர்க்க வேறுபாடுகள், இம்முன்னோடிக் கட்சி யின் தலைமையின்கீழ் அழிக்கப்படுவதன் மூலமே முன்னோடிக் கட்சிக்கான தேவையும் இறுதியாக அழிக்கப்படும்" (அவேக்கியானின் "டிராகன்களை அறு வடை செய்தல் என்ற நூலில். 84)

## ஜனநாயக மத்தியத்துவம், இருவழிப்போராட்டம் மற்றும் முன்னோடியை புரட்சிப்பாதையில் வைத் திருத்தல்

"லெனினால் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்பட்ட ஜனநாயக மத்தியத்துவக் கொள்கைகளே கம்யூனிஸ்ட் கட்சிகளின் அமைப்பு விதிகளாக இருக்கவேண்டும்" என்று சி.ஆர்.சி ஆவணம் கட்சியைப் பற்றிய தன் விவா தங்களைத் தொடங்குகிறது. (பத்தி 112). சி.ஆர்.சி ஆவ ணம் ஒருபுறம் ஜனநாயக மத்தியத்துவத்தை தத்துவார்த்த ரீதியாக உயர்த்திப்பிடிக்கிறது. ஆனால், மறுபுறம் நடை முறையில் மத்தியத்துவம் அதிகமாக்கப்பட்டு ஜனநாய கம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகக் கூறு கிறது. (இந்த ஆவணத்தின் கருத்துப்படி போல்ஷ்விக் கட்சியில் குழுக்கள் தடைசெய்யப்பட்டதிலிருந்து இது

தொடங்கியது. பின்பு கம்யூனிஸ்ட் கட்சிகள் இதை ஒரு பொதுவிதியாகவே பின்பற்றுகின்றன.)

"ஸ்டாலினால் முன்வைக்கப்பட்டு. கோமிண்டாங் காலகட்டம் முழுவதிலும் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு குடைக்கீழான கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய அனைத்துக் கருத்துகளுடன்" இதுவும் தத்துவார்த்த வடிவம் பெற்றது (பத்தி 11.4). பின்பு, "லெனின் நடைமுறைப்படுத்திய ஜனநாயக மத்தியத்துவத்தை மேலும் முறைப்படுத்தி பயன்படுத்துவதற்காக மாவோ கட்சிக்குள் நடத்த முயற்சித்த இருவழிப்போராட்டமும் அடிப்படையில் எந்த முன்னேற்றத்தையும் உண்மையில் கொண்டுவரவில்லை. ஏனெனில், குழுக்களைத் தடை செய்தல், ஸ்டாலினது தலைமையில் சோவியத் யூனியனிலும் பின்பு கோமிண்டாங்கிலும் கிடைத்த அனுபவங்கள் ஆகியவற்றின் திசைவழியிலிருந்து மாவோ உடைத்துக்கொண்டு செல்லவிரும்பவில்லை. எனவே இந்த இருவழிப்போராட்டங்கள் எல்லாம் உண்மையில் ஏற்கனவே நிறுவப்பட்டுவிட்ட முழுமையான கட்டமைப்பிற்குள் சிற்சில, சில்லறை பழுதுபார்க்கும் வேலைகளே" (பத்தி-11.5). இதற்கு எதிராக, "சோசலிசம் மற்றும் கம்யூனிசத்தை நிறுவும் செயல்முறையில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுப் பூர்வமான பங்களிப்புப் பற்றிய தத்துவம், நடைமுறை அனைத்தையும் மீண்டும் துல்லியமாகப் பரிசீலிக்க வேண்டியதே இன்றைய தேவையாகும்" என்று சி.ஆர்.சி. ஆவணம் வாதிடுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சி அதன் பங்கு ஆகியவை பற்றி சி.ஆர்.சி. ஆவணத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவை என்று ஏற்கனவே நாம் நிறையப் பார்த்து விட்டோம். ஆயினும், 'கம்யூனிஸ்ட் கட்சியில் மாயங்களை நீக்குதல்' என்ற தலைப்பின் கீழ் இந்த ஆவணம்

வைத்துள்ள ஒப்பிட்டு மயமானதும் நடைமுறை வாத மானதுமான சில கருத்துக்களை ஆய்வது பயனுள்ளதா யிருக்கும். "கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி வர்க்கத் தின் முன்னோடியாக இருப்பது வரலாற்றுப்பூர்வமாக சோதனை செய்யப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டும். அவ்வாறு வரலாற்றுப் பூர்வமாக சோதனைக்கு உட் படுத்தப்படுவது கட்டாயம் என்று உணர்ந்திருந்தால் மட்டுமே கம்யூனிஸ்ட் கட்சி உண்மை நிலையின் சிக் கல்களை உணருமளவிற்கு இறங்கி வரும். பிறகுதான் உழைக்கும் வர்க்கத்தாலோ, மக்களாலோ அல்லது வர லாற்றாலோ தனக்கு அதிகாரம் எதுவும் வழங்கப்பட வில்லை என்பதைக் கட்சி உணரும்" (பத்தி-12 1) அது மேலும், "அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக புரட்சிக்குத் தலைமைதாங்கும் கட்சிக்கும், அதிகாரத் திலிருக்கும் ஏகபோகமான கட்சிக்கும் இடையே உள்ள பண்பு ரீதியான வேறுபாடுகளைப் பற்றிக் கூறுகிறது. முதலாவது கட்சி, மக்களைப் புரட்சிக்காகத் திரட்ட வேண்டி இருப்பதால் இயல்பாகவே சுய விமர்சனம் உள்ளதாகவும், தனது கொள்கைகளையும், செயல் முறைகளையும் தொடர்ந்து கவனித்து தவறுகளைத் திருத்தி, முன்னேறும் பண்புள்ளதாகவும் உள்ளது. இரண்டாவது கட்சியிலோ, சூழ்நிலைகளின் அழுத்தம் இதற்கு எதிரான திசையில் செயல்படுகிறது".(பத்தி-12 1).

இங்கு சி.ஆர்.சி ஆவணம் சில உண்மையான, ஆழ மான வினாக்களைத் தொடுப்பதுடன் அவற்றைச் சரி யான, இயக்கவியல் ரீதியான முறையில் அணுகுவது போலவும் தோன்றுகிறது. ஆனால் மீண்டும் துரதிருஷ்ட வசமாக அது உண்மையல்ல. முதலாவதாக அதிகாரத் தில் இல்லாத ஒரு கட்சி சுயவிமர்சனத்துடன் செயல் படவேண்டிய கட்டாயத்திலிருப்பதும், மக்கள் திரள் வழியைப் பயன்படுத்தி புரட்சிக்காக மக்களைத் திரட் டும் தன் சக்தியையும், வழியையும் வளர்த்தெடுக்கும்

அவசியத்தைக் கொண்டிருப்பதும் உண்மையே. ஆனால் புரட்சிகரக் கட்சியாய்த் தொடர்ந்து நிலவி பழைய அமைப்பைத் தூக்கியெறிந்து, கம்யூனிச லட்சியத்திற்காகப், புரட்சிகரப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல மக்களைத் திரட்டி, வழி நடத்திச் செல்வதைத் தன் திசை வழியாகக் கொண்டிருக்கும் வரை மட்டுமே கட்சியின்மீது இந்தக் கட்டாயங்கள் இருக்கும். வேறு வார்த்தைகளில் கூறினால், எந்தக் கட்டத்திலும், சுயவிமர்சனம், திசைவழி, செயல்முறைகளைத் தொகுத்து ஆய்ந்து மேலும் புரட்சிகரமான திசையில் வளர்த்தெடுத்தல் ஆகியவற்றிற்குப் பதிலாக கட்சியானது முற்றிலும் எதிரான திசையில் சென்றுவிடலாம். புரட்சிகரப் பாதையை விட்டு விலகுவதன் மூலம் புரட்சிக்காக மக்களைத் திரட்டும் திசைவழி, செயல்முறை ஆகியவற்றை வளர்த்தெடுப்பதன் அவசியம் இல்லாமல் போய் அதனால் சுயவிமர்சனம், தொடர்ந்து சரிசெய்து கொள்ளுதல் ஆகிய கட்டாயங்களிலிருந்தும் விடுபட்டு விடலாம்.

இது ஒரு சிறிய விஷயமோ, சாதாரணமான விஷயமோ அல்ல. பழைய அமைப்பு முறைகளைத் தூக்கி எறியும் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கும் கட்சிகளின் மேல் செயல்படும் மிகச் சக்திவாய்ந்த, மிக மிக உண்மையான அழுத்தங்களை சி.ஆர்.சி ஆவணம் காணாமல் விட்டு விடுகிறது. போராட்டங்களைக் கைவிட்டு, திரிபுவாத, சீர்திருத்தவாதக் கட்சிகளாகச் சீரழியச் செய்யும் அழுத்தங்களே இவை, இந்த அழுத்தங்களை எதிர்த்து நின்று புரட்சிகரப் பாதையில் தொடர்ந்து நிற்பது மிகமிகக் கடினமானதும், கடுமையான போராட்டங்கள் நிறைந்ததுமாகும் என்று வரலாற்று அனுபவங்கள் காட்டுகின்றன.

மறுபுறம், அதிகாரத்திலிருக்கும் கட்சிகளுக்கு, சி.ஆர்.சி ஆவணம் சுட்டிக் காட்டிய திசையை நோக்கிய உண்மையான அழுத்தங்கள், மக்கள் திரள் வழியை

முறையாகப் பயன்படுத்துதல், தனது திசை வழியையும், செயல்முறையையும் தொகுத்து ஆய்வு செய்தல் ஆகியவற்றிற்கு எதிரான திசையில், இருப்பது உண்மையே. ஆனால், அதிகாரத்திற்கு வரும் அனைத்துக் கட்சிகளுமே அவ்வாறுதான் சீரழியும் என்பதுதான் உண்மையல்ல. (குறிப்பாக அதிகாரத்தில் ஏகபோகம் இருப்பின் இவ்வாறு நிகழும் என்பது சி.ஆர்.சி ஆவணத்தின் வாதம்) இரண்டிலுமே சி.ஆர்.சி ஆவணம் முக்கியமான ஒன்றை, தீர்மானகரமான ஒன்றை அதாவது கட்சிக்குள் நடக்கும் தத்துவார்த்தப் போராட்டங்களை மறந்து விடுகிறது. திசைவழி, கட்சியின் இலக்கு, கட்சியின் தன்மை எவ்வாறு கட்சியின் உடனடி நோக்கங்களும், கொள்கைகளும் அதன் இறுதி இலக்குடன் ஒத்திசைகின்றன ஆகியவை பற்றிய தத்துவார்த்தப் போராட்டங்களை கணக்கில் கொள்ள சி.ஆர்.சி ஆவணம் தவறி விடுகிறது.

இருவழிப் போராட்டத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து, இதில் மாவோவின் பங்களிப்பைக் குறுகியதாகவும், தவறானதாகவும் சிந்திக்கும் சி.ஆர்,சி ஆவணத்தின் செயல் வியப்பான ஒன்றல்ல. உண்மையில் மார்க்சிசம், திரிபுவாதம் ஆகிய இரண்டு கொள்கைகளுக்கும், சோசலிசம், முதலாளித்துவம் ஆகிய இரண்டு பாதைகளுக்கும் இடையிலான உட்கட்சிப் போராட்டங்களின் தீர்மானகரமான முதலாளித்துவத்தை வலியுறுத்தியதன் மூலம் கட்சி, குறிப்பாக அதிகாரத்திலிருக்கும் கட்சி, திரிபுவாதக் கட்சியாகச் சீரழிந்துவரும் போக்கைத் தடுக்கும் ஒரு முக்கியமான வழியை மாவோ சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு குடைக்கீழான கட்சியைப் பற்றிய இயக்க இயலுக்கு எதிரான பார்வையைப் பற்றி விமர்சனம் செய்யும்போதே மாவோ இவ்வாறு கூறியுள்ளார். (மாவோ தனது செங்டு உரையில், "அப்பொழுதும் ஒரு குடைக்கீழான கட்சியின் ஒற்றுமை பற்றியே பேசிக் கொண்டு, போராட்டத்தைப் பற்றி பேசாமலேயே

இருப்பது மார்க்சிசம்-லெனினிசம் அல்ல" என்று குறிப் பிட்டுள்ளார்.)

ஒட்டுமொத்த சமுதாயத்தின் வேறுபட்ட நலன்களை உண்மையில் வேறுபட்ட வர்க்க நலன்களைப் பிரதி நிதித்துவப் படுத்தும் வேறுபட்ட போக்குகள் புறவயு மாக கட்சிக்குள் நிலவும் என்பதை மாவோ அங்கீகரித் தார். மேலும், ஒற்றுமை என்பது ஒப்பீட்டளவிலானதே- தவிர, அறுதியானதல்ல, இயக்கம் உடையதே தவிர அசையாத்தன்மை பெற்றதல்ல. ஒற்றுமை போராட்டம் ஒற்றுமை என்கிற முறையில் வளர்ச்சி அடையும் என்றும் வலியுறுத்தினார். நாம் புரிந்து கொள்ள வேண்டிய சாராம்சமான அம்சமும், சிஆர்சி ஆவணத்திற்கும், மாவோவின வழிக்கும் இடையிலுள்ள முக்கியமான வேறுபாடும் என்னவென்று பார்ப்போம். கம்யூனிசத்தை அடைகின்றவரை கட்சியானது ஒரே வழியைச் சுற்றி ஒன்றுபட்டு நின்று அதனடிப்படையில் சோசலிச சமுதாயத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட, முன்னோடிப் பங்கு வகித்தலையும், கட்சிக்குள் நடக்கும் போராட்டங் களுக்கான தேவைகளையும் ஒன்றுக்கொன்று எதிரான வைகளாக மாவோ நிறுத்தவில்லை. 24

குட்டி முதலாளித்துவ அராஜகத்தின் நிலையி லிருந்தோ, முதலாளித்துவ குறுங்குழுவாத நிலையி லிருந்தோ கட்சிக்குள் நிகழும் போராட்டங்கள் பற்றிய பிரச்சினையை அணுகவில்லை. வர்க்கப் பிரிவுகளும் வர்க்கப் போராட்டங்களும் நிரம்பிய ஒரு சமுதாயத்தில் கட்சிக்குள் அமைப்பாக இயங்கும் குழுக்கள் தவிர்க்க முடியாமல் முதலாளித்துவ குறுங்குழுவாதமே என்பதை மாவோ ஏற்றுக்கொண்டார். அத்தகைய குழுக்கள் கட்சியின் செயல்பாட்டின் ஒற்றுமையை மட்டுமில்லாமல் உறுதிப்பாட்டின் ஒற்றுமையையும் குலைத்துவிடும்.

அவை கட்சியின், மக்களைத் தலைமை தாங்கிச் செல்லும் திறனைக் குன்றச் செய்வது மட்டுமில்லாமல், அத்திறனுக்கு அடிப்படையான, மக்களிடமிருந்து கற்றுக்கொள்வதையே குன்றச் செய்துவிடும். குழுக்கள், கட்சிக்குள் கட்டளைகள் முறையாகச் சென்றடைவதை மட்டும் தடுப்பதில்லை, விவரங்கள் (அதாவது) மக்களிடமிருந்து தொடர்ந்துவரும் ஆலோசனைகள், கீழ்மட்டத்திலிருந்து கட்சித் தலைமைக்கு முறையாகச் சென்றடைவதையே தடுத்துவிடுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னும், பின்னும் பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு முன்னோடியாக விளங்குவதற்கான சக்தியைக் கட்சிக்கு இல்லாமல் செய்துவிடுகின்றன.

அதனால் தான் மாவோ கட்சிக்குள் இருவழிப் போராட்டத்தின் ஆவசியத்தையும், அதன் தீர்மானகரமான பங்கையும் வலியுறுத்திய அதே சமயத்தில் மூன்று முக்கிய கொள்கைகளையும் வலியுறுத்தினார். திரிபுவாதத்தை அல்ல, மார்க்சியத்தைக் கடைப்பிடியுங்கள்; உடைக்காதீர்கள், ஒன்று சேருங்கள்; ரகசியத் திட்டங்களும், சதித்திட்டங்களும் தீட்டாதீர்கள், வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றி இருங்கள் ஆகிய கொள்கைகளே அவை. எனவேதான் மாவோ, கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து புரட்சிகரமாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அதே சமயத்தில் அனைத்திலும் கட்சி தலைமைப் பங்காற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கட்சியைப் புரட்சிப் பாதையில் வைத்திருப்பதும், அதன் புரட்சிகர முன்னோடிப் பங்கை உறுதிப்படுத்துவதுமே மாவோ வலியுறுத்தும் வழியின் நோக்கம். சிஆர்சி ஆவணத்தின் வழியோ கட்சியைச் சீர்திருத்தவாதக் கட்சியாகக் குறுகச் செய்து, ஒப்பீட்டளவுகளில்

சூழ்கடித்து, மக்கள் திரளுக்கு வால் பிடிப்பதாய், உடனடிச் சூழலுக்கு ஏற்ப தத்துவங்களை வெட்டித் தைத்துக் கொள்கின்ற கட்சியாய் மாற்றிவிடும் இந்தத் தன்மை சிஆர்சி ஆவணத்தின், "ஒரு குறிப்பிட்ட சூழ் நிலையில் பாட்டாளிவர்க்க நலன் என்பதே நிச்சயமாக ஒப்பீட்டளவிலானதே அது மாறுகின்ற உண்மை நிலைக்கேற்ப மாறுபடும் ஆனால், கம்யூனிசத்தை நிறுவுதல் என்ற அதன் நீண்டகால லட்சியம் மட்டும் மாறாது. (பத்தி-121)" என்பதில் வெளிப்படுகிறது. இது அடிப்படையிலேயே தவறான வாதம். பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்கள் சிஆர்சி ஆவணம் வாதிடுவதைப்போல் மாறுவதில்லை. குறிப்பிட்ட செயல் தந்திரங்கள், ஏன் போர்த்தந்திரங்களுமே கூட மாறலாம். குறிப்பிட்ட கொள்கைகளும், திட்டங்களுமே கூட மாற லாம் ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்கள் மாறுவதில்லை.

இந்த வேறுபாடு ஏதோ சொல்லாட்சியில் நிகழ்ந்த பிழை போலத் தோன்றலாம். ஏனென்றால், " கம்யூனிசத்தை நிறுவுதல் என்ற அதன் நீண்டகாலத் திட்டம் மட்டும் மாறாது" என்று சிஆர்சி ஆவணம் குறிப்பிடுகிறது. ஆனால் இந்த "நீண்டகால லட்சியத்தை," ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், "பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலனிலிருந்தே வேறுபடுத்துவதும் பின்னதை நிச்சயமாக ஒப்பீட்டளவிலானதே" என்பதன் மூலமும் சிஆர்சி ஆவணம் பெரிய ஆபத்திற்குக் கதவைத் திறந்து விடுகிறது.

இறுதி லட்சியம் கம்யூனிசமே என்ற பொதுவான சில வரிகளைச் சேர்த்துவிட்டால் போதும் எதை வேண்டுமானாலும் எந்தக் கொள்கையை வேண்டுமானாலும் பாட்டாளிவர்க்கத்தின் நலனுக்கானது என்று கூறிவிடமுடியும். சிஆர்சி ஆவணத்தின்

இந்த வரையறை ஒன்றை இரண்டாக்குவதும், அது பாட்டாளிவர்க்கத்தின் வர்க்க நலனுடன் எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்தின் குறிப்பிட்ட கொள்கைகளையும் திறமையாக ஒன்று கலக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நலன்கள் மாறுவதில்லை. ஆனால் எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் அவற்றைக் குறிப்பிட்ட கொள் கைகள் மூலமாக வெளிப்படுத்தலாம். இந்தக் கொள்கை கள் மாறலாம், மாறுகின்றன என்பதே சரியான, இயக்க இயல் ரீதியான புரிதலாகும்.

இதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். எந்த ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் எல்லா நேரங்களிலும் கொள்கைகள், திட்டங்கள், போர்த்தந்திரம், செயல் தந்திரம் அனைத்துமே கம்யூனிசமே இறுதி லட்சியம் என்ற வழிகாட்டும் தத்துவத்தின் அடிப்படையிலேயே செல்ல வேண்டும். அவை அனைத்தும் சொல்லில் மட்டு மில்லாமல், செயலிலும், நிகழ்காலத்திலிருந்து கம்யூனிச எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் பாலமாகப் பயன் படவேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் எந்த ஒரு குறிப் பிட்ட நேரத்திற்கான நலன்களுக்கும், அதன் ஒட்டு மொத்த நலனான கம்யூனிசத்திற்கும் இடையில் அடிப் படையான ஒத்த அடையாளங்கள் உள்ளன. கட்சியின் எந்தவொரு கட்டத்திற்கான குறிப்பிட்ட கொள்கை களுக்கும், கம்யூனிசத்தை அடைவதற்கான புரட்சிப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் அடிப் படை வழிக்கும் இடையே உள்ள ஒற்றுமையில் இந்த அடையாளங்கள் வெளிப்பட வேண்டும். இந்த ஒற்று மையைத்தான் பொறுக்கி எடுத்து ஒட்டுச் சேர்த்தல், ஒப்பீட்டளவுகள், நடைமுறைவாதம் ஆகியவற்றால் சிஆர்சி ஆவணம் உடைத்துவிட முயல்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புக் கொள்கைகள், பாட்டாளிவர்க்கத்தின் லட்சியங்கள், தத்துவங்கள்

ஆகியவற்றுடன் பொருந்தியிருக்க வேண்டும். அவற்றின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். வலிமை நிறைந்த, வெறிப்பிடித்துள்ள வர்க்க எதிரியுடனான நீண்டகால, முன்மாதிரியில்லாத போராட்டம் முழுவதிலும் கட்சிக்கு முன்னோடிப்பங்கை ஆற்றுவதற்கான ஆற்றலைத் தருவதாய் இருக்க வேண்டும். வர்க்க எதிரிக்கு தான் தூக்கி எறியப்பட்டதாலும், வரலாற்றிலிருந்து மறைந்து போக வேண்டிய அபாயத்தை உணர்ந்துள்ளதாலும் பாட்டாளிவர்க்கப் புரட்சியைத் தோற்கடிப்பதற்கான வெறியும் உறுதியும் மேலும் பன்மடங்கு பெருகியுள்ளது. சிஆர்சி ஆவணத்தின் ஒட்டுமொத்த கண்ணோட்டத்தையும் கணக்கில் கொண்டால், மேற் கூறப்பட்டவற்றின் தேவைகளை அது உணராதிருப்பதில் வியப்பொன்றுமில்லை ஆவணம் உண்மையில் கட்சியின் 'மாயத் தன்மையை' நீக்கவில்லை. 'புரட்சித் தன்மையை'த்தான் நீக்குகிறது. இந்தப்போக்கு, சிஆர்சி ஆவணத்தின் தொடக்கம் முதல் முடிவுவரை ஊடுருவியுள்ள புரட்சிகரத் தன்மையற்ற, சமூக ஜனநாயகவாதிகளின் சோசலிசம், கம்யூனிசம் பற்றிய பார்வையுடன் ஒத்திருக்கின்றது.

முடிவுரை

## சவாலை எதிர்கொள்வது அல்லது புரட்சியை மறுப்பது

சிஆர்சி ஆவணத்தின் மையக் கருத்துக்களையும் வாதங்களையும் இதுவரை பார்த்துவிட்டோம். இப்பொழுது நம் முன் நிற்கும் கேள்வி இந்த வழியைப் பின்பற்றுவதில் உறுதியாய் இருப்பவர்கள் எங்குபோய்ச் சேருவார்கள்? சிஆர்சி ஆவணத்தின் இறுதிப்பகுதியில் "மேலும் சில கேள்விகள்"—

என்ற தலைப்பின்கீழ் இந்த வழியின் விரிவான கொள்கைகளும், செயல்முறைகளும் தெளிவாகப் புலப் படுகின்றன. மொத்தத்தில் வர்க்கக் குறுக்கல் வாதத்தை எதிர்ப்பதும், பல முக்கியமான சமுதாயப் பிரச்சனை களின் வர்க்கத் தன்மையற்ற கூறுகளை மையப்படுத்து வதுமான ஒரு திசைவழி முன்வைக்கப்படுகிறது. மார்க்சிய-லெனினிய-மாவோயிசத்தின் அடிப்படைக் கொள்கைகளிலிருந்தும், செயல்முறைகளிலிருந்தும் விலகிச்செல்ல விரும்பும் போக்கு இவ்வழியின் தொடக் கத்திலிருந்தே இருப்பது இதனால் தெளிவாகிறது.

இந்த விலகல் முக்கியமான அரசியல் நிலைகளில் மட்டுமல்ல, முக்கியமான தத்துவார்த்தப் பிரச்சினைகளி லும் வெளிப்படுகிறது. சிஆர்சி ஆவணத்தின் இறுதியில், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களின் தவறுகள் மற்றும் பங்களிப்புக்கள் பற்றிய சரியான அணுகுமுறை பற்றிய விவாதத்தில் கீழ்வரும் கருத்துகளைக் காண்கி றோம். "சீனப்புரட்சியின் செறிவான அனுபவத்திலும் கூட மார்க்சிசத்தை வளப்படுத்துவதற்கு மாவோவின் பங்களிப்பு மட்டுமே எடுத்துக்கொள்ளப்படுகிறது" (பத்தி-12-2)

அருபமான, வழக்கமான பொருளில், மாவோ என்ற தனிமனிதரையோ, அல்லது தலைவர் என்ற முறையில் இவரது தகுதியையோ பொறுத்த விஷயமல்ல இது என்பதை இதற்குப் பதிலாக வலியுறுத்த விரும்பு கிறோம். மாவோ தவறே செய்யவில்லை என்றோ, அவரது தவறுகளைத் தொகுத்து ஆய்வு செய்யக் கூடாது என்றோ பொருளல்ல, சீனத்திலும் சர்வதேச அளவிலும் அரசியல் ரீதியான தெளிவான அனுபவத் திரட்சியை மாவோவின் தத்துவார்த்த, அரசியல் வழிகள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன என்பதே இங்கு மைய மான விஷயமாகும். இந்த அனுபவங்கள் கம்யூனிச

தத்துவங்களின் அடிப்படையில் அணுகப்படுவதையும், கம்யூனிசத் தத்துவங்கள் புதிய கட்டத்திற்கு வளர்த்தெடுக்கப்படுவதையும் அவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இதைப் புரிந்து கொள்ளாமலிருத்தல், சரியாகச் சொன்னால் பெருந்தலைவர்களின் பங்களிப்பின் மீது ஒருதலைச்சார்பாக இல்லாமலிருப்பது என்ற பெயரில் அதனை அங்கீகரிக்காமல் நழுவுதல் மீண்டும் பொறுக்கி எடுத்து ஒட்டுச்சேர்க்கும் தொழில் நுட்பந்தான். இப்பொருள் முதல்வாத இயங்கியலுக்கு எதிராக, கருத்து முதல்வாதத்தையும் இயக்கமறுப்பியலையும் அடிப்படையாகக் கொண்டது. நடைமுறைக்கும். தத்துவத்திற்கும் உள்ள உறவை முறித்து வெறும் நடைமுறைகளின் திரட்சி ஆக்குவது எந்தவொரு கொள்கைக்கும், மற்றொரு கொள்கை மட்டமானதல்ல என்ற ஒப்பீட்டுக் கொள்கையாளர்களின் பொதுவான வாதத்திற்குக் கதவை அகலத்திறந்துவிடும் ஒப்பீட்டுவாதமாகும். சிஆர்சி ஆவணம் முழுவதும் உள்ள குட்டி முதலாளித்துவ சிந்தனைக்கு இது இன்னுமொரு எடுத்துக்காட்டாகும்.

"இரண்டாவது அகிலம் நொறுங்குதல்" என்ற நூலில் லெனின் குறிப்பிட்டுள்ளதிலும், இதிலும் ஒரே மாதிரியான பல அம்சங்கள் உள்ளன. உலக நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட திடீர் திருப்பத்தால் திசைவழி குலைந்து, தடுமாற்றம் அடைந்துள்ளனர். முன்பு பாக்கியங்களாகக் கருதப்பட்டு நிறைவேற்றப்பட்ட கொள்கைகள் இன்று சுமைகளாகி, அவற்றைத் தூக்கியெறிவதற்குப் போட்டா போட்டி நடைபெறுகின்றது. மக்களின் தன்னெழுச்சிக்கு வால்பிடித்தல், குறிப்பாக குட்டிமுதலாளித்துவ விருப்பு வெறுப்புகளுக்கும், ஜனநாயகக் கனவுகளுக்கும் இரையாதல், முதலாளித்துவத்திற்குப் பின் செல்லுதல் ஆகிய திசைவழிகள் தான் இன்று சுமைகளாகிவிட்டன. முன்பு, தெருவில் நடமாடும் (சாதாரண) மனிதர்களை

சோவியத் யூனியன் பற்றி "அது உண்மையான கம்யூனிசம் அல்ல" என்றாவது நம்ப வைக்க முடியும். ஆனால் இன்று அந்தச் சாதாரண மனிதனே லெனினது சிலைகள் சோவியத் யூனியனின் மண்ணில் சாய்வதைப் பார்க்கிறான். அவனது (முதலாளித்துவம் பிரச்சாரத்தினால் உருவான) தன்னெழுச்சியான "முதன் முதலாக கம்யூனிசப் புரட்சி நடந்த நாட்டிலேயேகூட கம்யூனிசம் பயனற்றது" என்ற கருத்து மேலும் உறுதிப்படுகிறது.

இவ்வாறு பிற்போக்குச் சக்திகளுச்கும், உணர்வுகளுக்கும் வால்பிடிக்கும் தன்மை சி.ஆர்.சி ஆவணத்தின் இறுதியில் மீண்டும் வெளிப்படுகிறது. கடைசிப் பத்தியில் அது இவ்வாறு கூறுகிறது.

"முன்னாள் சோசலிச நாடுகளின் மக்கள், மாற்றம் நிகழும் சோசலிச கால கட்டம் முழுவதிலும் கட்சிக்கு ஏகபோக அதிகாரம் என்ற கொள்கையை வரலாற்றின் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும்பொழுது, இது மக்களின் பிற்போக்குச் சிந்தனையின் விளைவு என்று கூறி கம்யூனிஸ்டுகள் திருப்தி அடைந்து விடமுடியாது. மாறாக, மக்களே வரலாறு படைக்கின்றனர் என்ற மார்க்சியப் பாடத்தையே இந்த அனுபவங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன, (பத்தி-14.2)

முதலாவதாக, இந்த நாட்டு மக்கள் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவனமயமாக்கப்பட்ட முன்னோடிப்பங்கை வரலாற்றின் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளனர் என்பது மாபெரும் மிகைப்படுத்தலாகும். சீன உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இதனைச் சிறிய உதாரணமாக உதறிவிடமுடியாது. அங்கு சி.ஆர்.சி ஆவணம் கூறுவது போன்ற கருத்தையே மக்கள் அனைவரும் கொண்டுள்ளனர் என்று கருதுவது

உண்மைக்கு மிகவும் புறம்பானதாகும். அங்கு, மாவோவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், டெங்கின் தலைமையிலான ஊழல் மலிந்த கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையே நிலவும் பண்பு ரீதியான வேறுபாட்டை அறிந்தவர்கள் பலர் உள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் முன்னதின் மேல் மட்டற்ற மதிப்பும் பின்னதின்மேல் கட்டற்ற வெறுப்பும் கொண்டுள்ளனர். தொழிலாளர்கள் விவசாயிகளின் திரளைக் கணக்கில் கொண்டால் இந்த உண்மை மேலும் உறுதிப்படுகிறது.

சோவியத் ஒன்றியத்திற்கு வருவோம். ஸ்டாலினது தலைமையில் நாடு இருந்ததற்கும், அதற்குப் பின்உள்ள சூழலுக்கும் இடையிலே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்தவர்கள் நிறையப் பேர் (குறிப்பாக வயது முதிர்ந்த தொழிலாளர்கள்) உள்ளனர். (பல்வேறு காரணங்களுக்காக இவர்கள் முன்னதையே விரும்பி கின்றனர்.) முதலாளித்துவ மீட்சி நடைபெறும் முறை திரிபுவாத நாடுகளில் உள்ள ஆளும் வர்க்கங்களின் தன்மை மற்றும் ஆளும் வர்க்கங்களின் பல்வேறு பிரிவுகளிடையே நிலவும் மோதல்கள் ஆகியவை பற்றிய மாவோவின் முறையான அறிவியல் பூர்வ ஆய்வுகளை சோவியத் ஒன்றியத்தில் (மற்றும் சோவியத் தொகுப்பிலிருந்த முன்னாள் சோசலிச நாடுகளிலும்) மிகச்சிலரே கேள்விப்பட்டிருந்தனர் என்று நிச்சயமாகக் கூறமுடியும். சரியாக, இந்த அறிவியல் பூர்வ ஆய்வுதான் தேவைப் படுகிறது. இந்நாடுகளில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளைப் பற்றிய பொருள் முதல்வாத ஆய்வு செய்வதற்குப் பதிலாக, அந்நிகழ்ச்சிகள் தொடர்பாக மக்களில் ஒரு சாராரிடையே ஏற்பட்டுள்ள குழப்பத்தையும், பிற்போக்குத்தனத்தையும் தொழுவதில் ஒரு தத்துவார்த்தக் கொள்கையையே சி.ஆர்.சி ஆவணம் உருவாக்குகிறது. எடுத்துக்காட்டாக, "மக்களே வரலாறு படைக்கின்றனர்" என்ற மார்க்சியப் பாடத்தையே இந்த அனுபவங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன".

முதல் உலகப்போர் வெடித்தபொழுது ரஷ்யா முழுவதும் தேசிய இனவெறி பொங்கி எழுந்தது. அந்தத் தேசிய இன உணர்வையும், ரஷ்ய மக்கள் திரண்டு எழுந்ததையும் "மக்களே வரலாறு படைக்கின்றனர் என்ற மார்க்சிய பாடத்திற்கு" உயிருள்ள ஓர் எடுத்துக் காட்டு என லெனின் ஒருவேளை கூறியிருந்தால் எப்படியிருக்குமோ அதுபோலத்தான் இதுவும் உண்மையில் சிஆர்சி ஆவணத்தின் தர்க்கரீதியான முடிவு இதுதான்- அதாவது, மக்கள் திரள், குறிப்பாக முதலாளித்துவ பிரச்சாரத்தாலும் முதலாளித்துவ வர்க்கக் கண்ணோட்டத்தாலும் எளிதில் பலமாகக் கவரப்படும் இடைநிலை அல்லது பிற்போக்கான மக்களின் திரள், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் என்ன நினைக்கிறதோ அதுவே மக்கள் திரளின் நலனின் உண்மையான, மிக உயர்ந்த வெளிப்பாடாகும். லெனின் கடுமையாக விமர்சித்த திரிபுவாத வரையறையை இது அப்படியே ஒத்திருக்கிறது. எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் எது நடைபெறுகின்றதோ அதுவே நடைமுறை சாத்தியமானது. எது நடைமுறை சாத்தியமானதோ அதுவே விரும்பத்தக்கது மக்களைத் தங்களது தளைகளைக் குறிப்பாக, சிந்தனைத் தளைகளை உடைத்துக்கொண்டு புதிய உலகைப் படைக்கப் புரட்சிகரப் பாதையில் இட்டுச்செல்லும் திசைவழியோ, செயல்முறையோ இது அல்ல. மாறாக, இது பரிதாபகரமாக மக்கள் திரளுக்கு வால்பிடித்து அவர்களை வட்டப்பாதையில் இட்டுச்செல்வதாகும். அவர்களது தளைகளிலிருந்து என்றும் விடுபடாமல், அவர்களது முதுகுகளையே பின்பற்றிச் செல்வதாகும்.

முன்னாள் திரிபுவாத நாடுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய உண்மையான, ஆழமான பிரச்சினைகளுக்கு திரட்சியான வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கான பதில்களை, மார்க்சீய-லெனினிய-மாவோயிசத்தில் தமது கால்களை மேலும் ஆழ

மாகப் புதைத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் அச்சமின்றி, ஈவிரக்கமற்ற அறிவியல் பூர்வமான அணுகு முறையில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வரலாற்று அனுபவங்களை ஆய்வு செய்வதன் மூலமே பெறமுடியும். ஆனால் சிஆர்சி ஆவணத்தில் நாம் காணும் அணுகு முறை முற்றிலும் வேறானது என்பதை: மாவோயிசத்தை, "நாம் இதுவரை உயர்த்திப் பிடித்து வந்த அடிப்படைக் கொள்கைகளை மறுத்து ஒதுக்குகிறது.

"இரண்டாவது அகிலம் நொறுங்குதல்" நூலில் லெனின் கூறிய வேறொன்றை இங்கு நினைவு கூர்தல் நலம்பயக்கும். அவர் எவ்வாறு அத்தகைய சந்தர்ப்ப வாதப் பாய்ச்சல்கள் திடீரென்று வானத்திலிருந்து குதித்து விடுவதில்லை என்பதையும் அவைகள் நீண்ட காலமாக வளர்ந்து உருவான சில தவறான போக்குகள் முற்றி வெடிப்பதே என விளக்கியுள்ளார். (இதனை கொப்புளம் சீழ்பிடித்து இறுதியாக உடைவதுடன் ஒப் பிடுகிறார் . இதில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண் டிய அம்சம் ஒன்று உண்டு. சிஆர்சி ஆவணத்தில் ஊடுருவி நிற்கும் போக்கும், சிஆர்சியின் அண்மைக் காலப் பண்பாக விளங்கும் தேசியத்திற்கு வால்பிடிக்கும் போக்கும், குறிப்பாக அதன் (தற்பொழுது) இந்தியா என அழைக்கம்படும் நாடான தேசிய இனங்கள் தனித் தனியே நடத்தும் புதிய ஜனநாயகப் புரட்சிகளின் கூட்டமைப்பு பற்றிய கருத்துக்களும் ஒன்றோடொன்று தொடர்பு உடையவையே, அதன் கருத்துப்படி இவையே (தேசிய இனப்போராட்டங்களே) இந்தியப் புதிய ஜனநாயகப் புரட்சியின் வழியும், உள்ளடக்கமும் ஆகும்.[25]

சி.ஆர்.சி ஆவணத்தின் ஆசிரியர்கள் மேலும், தேசீய இனப்பிரச்சினையில் தங்களது வழியை வரை யறுக்கும்பொழுது மீண்டும் இந்த "வர்க்கக் குறுக்கல்

வாதம்" பற்றிய பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தேசிய இனப்பிரச்சினைக்கு எதிராக வர்க்கப் போராட்டத்தை நிறுத்தும் பிரச்சினைக்கு நாங்கள் தீர்வு கண்டுவிட்ட போதிலும்கூட எங்களது வர்க்கக் குறுக்கல்வாத அணுகுமுறை காரணமாக தேசிய இனப் பிரச்சினையின் வர்க்கத் தன்மையற்ற கூறுகளை நாங்கள் இன்னும் புரிந்து கொண்டிருக்கவில்லை" (பத்தி–13.2) ஆனால் இப்பொழுது அவர்கள் "மாற்றம் நிகழும் சோசலிச கால கட்டத்திற்கான அரசியல், பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவதில் வர்க்கத்தன்மை உள்ள கூறுகளையும், வர்க்கத் தன்மைகள் அற்ற கூறுகளையும் சரியாக, இயக்க இயல் ரீதியாகப் புரிந்து கொள்ளாமலிருந்ததால் கம்யூனிச இயக்கம் அடைந்த தேக்கத்தின் ஆபத்தை உணர்கிறார்கள்". எனவே, இந்த "வர்க்கக் குறுக்கல்வாத அணுகுமுறையின் திட்டமான வெளிப்பாடுகளை" எதிர்த்த மேலும் ஒன்றுபட்ட போராட்டத்தின் தேவையை உணருகிறார்கள். ஏனெனில் அவர்கள் புதியதாகக் கண்டுபிடித்துள்ள கண்ணோட்டத்தையும், செயல் முறையையும் தேசிய இனப்பிரச்சினைக்கும், மற்ற பல முக்கியப் பிரச்சினைகளுக்கும் மேலும் முறையாகப் பயன்படுத்திப் பார்ப்பதற்கான தயார் நிலையில் அவர்கள் இருந்தாக வேண்டும்.

வேறு சொற்களில் கூறுவதானால், பல பிரச்சினைகளில் சி.ஆர்.சி ஆவணம் எடுத்துள்ள தவறான முடிவுகள் அனைத்திற்கும் இடையே தொடர்புகள் உள்ளன. சி.ஆர்.சியின் இந்தப் பின் பாய்ச்சலுக்கு பல முக்கியமான காரணங்கள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதன் அனைத்து வேர்களையும், வளர்ச்சிகளையும் ஆய்வு செய்வது இக்கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்ட விஷயமாகும். ஆனால் ஒன்றைத் தெளிவாகக் கூறலாம். மற்ற பல முக்கியப் பிரச்சினைகளைப் போலவே தேசிய இனப் பிரச்சினைக்கும்,

இந்தியாவில் புதிய ஜனநாயகப் புரட்சிக்கும் இடையே உள்ள உறவிலும் சி.ஆர்.சி தவறான அணுகுமுறையைக் கொண்டுள்ளது. பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டி லிருந்து விலகி குட்டி முதலாளித்துவ வர்க்க நிலை பாட்டை எடுக்கிறது. இந்தியாவின் ஒடுக்கப்பட்ட பல் வேறு தேசிய இனச் சக்திகளுக்கு வால் பிடிக்கிறது. இந்தக் குட்டி முதலாளித்துவ நிலைபாடு, வலுவான மைய அமைப்பை எதிர்க்கிறது. எதிர்க்கும்பொழுது, மையத்தில் ஆளும் சக்தி பாட்டாளி வர்க்கத்தினரா அல்லது பிற் போக்கு வர்க்கங்களின் பிரதிநிதியா என்றெல்லாம் பார்ப்பதில்லை. இந்தப் போக்கே பின்பு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் (லெனின் தொடக்கம்) வர லாற்று அனுபவங்களைப் பற்றிய மரபு வழி மார்க்சிய லெனினிய விளக்கத்தை மறுப்பதற்குக் காரணமாகிறது ஏனெனில், இதில் கட்சியின் நிறுவனமயமாக்கப்பட்ட முன்னோடிப் பங்கு, வலிமையான மைய அரசு எந்திரம் ஆகியவை இன்றியமையாதன, மறுபுறம், இத்தகைய தீர்மானகரமான கேள்விகளில் மார்க்சிசம்-லெனினிசம்-மாவோயிசத்தை மறுக்கும் அளவிற்கு வந்துவிட்டதனால் இந்தத் தவறான பார்வையையும், செயல்முறையையும் தவறான நிலைப்பாட்டையும் எண்ணற்ற முக்கியமான பிரச்சினைகளுக்கும் பயன்படுத்தும் போக்கு உருவாகும், ஏற்கனவே பல விஷயங்களில் உருவாகி விட்டது எனலாம்.

தங்களது தவறான அரசியல் நிலைபாடுகளுக்கு இடையே உள்ள தொடர்பை சி.ஆர்.சி ஆவண ஆசிரியர் களே வெளிக்காட்டுகின்றனர். இந்தத் தவறான பார்வை கள், செயல் முறைகளை இணைக்கும் தீர்மானகரமான ஒன்றை அவர்களே வெட்ட வெளிச்சமாக்குகின்றனர். "வர்க்கக் குறுக்கல் வாதத்தை" எதிர்க்கிறோம் என்ற பெயரில் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க நிலைப்பாட்டை,

மார்க்சிய வர்க்க ஆய்வுகளை, உண்மையில் மார்க்சியப் பொருள் முதல் வாதத்தையே கைவிடுவதுதான் அது.

"பாட்டாளி வர்க்க ஜனநாயகம் பற்றி" என்ற இந்த ஆவணத்தின் மூலம் அதன் ஆசிரியர்கள், முதலாளித்துவ உரிமைகள், வழக்கமான முதலாளித்துவ ஜனநாயகம் ஆகியவற்றின் குறுகிய எல்லைகளைத் தாண்டுவது சாத்தியமும் அல்ல, சாதகமும் அல்ல என்ற நிலைக்குப் பின் வாங்குகின்றனர். இதைவிடச் சிறப்பாக நம்மால் செய்ய முடியாதா? என்ற கேள்விகளுக்கு 'முடியாது' என்பதே அவர்களது பதிலாகும் கம்யூனிச இறுதி லட்சியத்தை உயர்த்திப் பிடிக்கும் நோக்கங்களோ, பிரகடனங்களோ அறிவிக்கப்பட்டிருப்பினும்கூட அவர்கள் பண்டைய, ஒளிவுமறைவற்ற முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ-சோசலிசக் கருத்துகளுக்குள் ஒடுங்கி விடுகின்றனர். சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டு, வர்க்க மோதல்கள் நிறைந்த வரலாற்றுக்கால கட்டத்தை நாம் தாண்டக் கூடாது, தாண்டவும் முடியாது என்று முன்பைவிட பலமாக அண்மைக் காலங்களில் முழக்க மிடத் தொடங்கியிருக்கும் பாடல் குழுவில் சேர்ந்து அதே பழைய பல்லவிகளை இவர்களும் பாடத் தொடங்கிவிட்டனர்.

அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இவர்களது நிலைபாட்டின் முடிவு மக்களுக்குப் பாதக மாகும். இதன்கீழ் மக்களால் பொங்கியெழுந்து பழைய அமைப்பு முறையைத் தூக்கியெறிய முடியாது. சுரண் டும் வர்க்கங்களின் மீது பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தைச் செலுத்த முடியாது, இந்தச் சர்வாதிகாரத் தின்கீழ் இறுதி லட்சியமான கம்யூனிசத்தை நோக்கிப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாது. முதலாளித்துவச் சுரண்டல் பொருளாதாரம் அதற் கேற்ற முதலாளித்துவ அரசியல் முறை ஆகிய

வற்றின் மேலாண்மையின் கீழ் மக்களை விட்டுவிடும். குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை எந்தக் கும்பலைச் சேர்ந்த சுரண்டலாளர்கள் தங்கள் மீது ஆட்சி செய்து, தங்களை ஒடுக்கலாம் என்பதைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு அவர்களுக்குத் தரப்படும் என்று மார்க்ஸ் இதைக் குறிப்பிட்டார். சோசலிச சமுதாயத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவங்களையும் அதிலிருந்து கம்யூனிஸ்டுகள் பெறவேண்டிய உண்மையான பாடங்களையும் மறுத்து ஒதுக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஒரு பொய்யான ஜனநாயகத்திற்குக் கோரிக்கை விடுப்பதன் தர்க்க ரீதியான முடிவு இதுவேயாகும். அத்தகைய ஜனநாயகம், சோசலிசத்தின் கீழ் இனவாததும், விரும்பத்தகாததும் ஆகும். உலகம் முழுவதும் கம்யூனிச சமுதாயம் வெற்றியடையும் பொழுது தேவையற்றதும், ஆழமான பொருளில் பார்த்தால் சாத்திய, மற்றதும் ஆகும்.

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் பற்றி சிஆர்சி ஆவணம் கொண்டுள்ள முழு வளர்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கும், சிஆர்சி யின் தன்மையாக விளங்கும் மற்ற தவறான போக்குகளுக்கும் இடையே உள்ள அனைத்துத் தொடர்புகளையும் பரிசீலிப்பது இங்கு எனது நோக்கமோ, விருப்பமோ அல்ல. தவறான பார்வை, செயல்முறை, அரசியல் வழி ஆகியவற்றின் ஒரு திரட்சியாக உள்ள இந்த முழுவளர்ச்சியடைந்த சந்தர்ப்பவாதப் போக்கையே அம்பலப்படுத்துவதே எனக்கு முக்கியமானது. இந்த விமர்சனத்தின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டதுபோல் இந்த சிஆர்சி ஆவணத்தை அதன் ஆசிரியர்களே முழுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தி மறுத்து ஒதுக்குவதற்கு எனது விமர்சனம் உதவியாய் இருக்கும் என்பதே எனது நம்பிக்கை. அதன் மூலம் சிஆர்சி எடுத்துள்ள மற்ற நிலைகளிலும், இந்தத் தவறான பார்வை,

செயல்முறை, அரசியல் வழி ஆகியவற்றின் கூறுகள் எங்கே எத்தனை பாதித்திருக்கின்றன என்பதையும் மீளாய்வு செய்ய வேண்டும்.

## அடிக்குறிப்புகள்

இந்த சிஆர்சி ஆவணம் டிசம்பர் 1990-லேயே வெளியிடப்பட்டது. அதாவது 1991 கோடை காலத்தில், ரஷ்யாவில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கள்-எதிர்க் கவிழ்ப்புகளுக்கு முன்பாகவே இந்தக் கவிழ்ப்புகளுக்கு அப்புறம் அங்கு ஆட்சியிலிருந்தவர்கள் கம்யூனிஸ்டுகளாகப் பாசாங்கு செய்வதைக்கூட விட்டுவிட்டார்கள். வெளிப்படையான கம்யூனிச எதிர்ப்பு மக்கள் கிளர்ச்சிகள் நடந்தன. 1917 அக்டோபர் சோவியத் புரட்சியில் தொடங்கி, சீனப்புரட்சி, மாபெரும் பாட்டாளிவர்க்கப் பண்பாட்டுப் புரட்சி ஆகிய அனைத்துப் பாரம்பர்யங்களையும் இந்த ஆவணம் கைவிடுவதை விரைவில் காணப்போகிறோம். இந்த ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கு முன்பாகவே, சோவியத் யூனியனிலும், சீனாவிலும் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்ற நிகழ்ச்சிகளே சிஆர்சி ஆவணம் எழுதியவர்களின் அடிப்படையான பின் வாங்கலுக்குத் தூண்டுகோலாக இருந்துள்ளது. எனவே இந்தக் கருத்துக்களைத் தொடர்ந்து ஏற்றுக் கொண்டவர்கள் மனதில் அண்மைக்கால நிகழ்ச்சிகள் துரதிருஷ்டவசமாக பின்வாங்குதலை மேலும் நியாயப்படுத்தும் என்று உறுதியாக நம்பலாம்,

2. இந்த சிஆர்சி ஆவணத்தின் மீதான விமர்சனம் முழுவதிலும், எங்கெல்லாம் "எவ்வாறு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் ஒட்டுமொத்த வரலாற்று அனுபவமும் மறுக்கப்படுகிறது" என்று பேசுகிறேனோ அங்கெல்லாம் நான் குறிப்பாக 1917-ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியி லிருந்து ஏற்பட்ட அனுபவங்களையே குறிப்பிடுகிறேன். இந்த ஆவணம் இந்த வரலாற்று அனுபவங்களில் சில சாதனைகளை அங்கீகரிப்பதாகக் கூறிக்கொண்டாலும் உண்மையில் அது இந்த அனைத்து அனுபவங்களும் அடிப்படையில் பிழையானதென்றும், முற்றிலும் புதிய திசைவழிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென்றும் கருதுகிறது. இதனை அதன் கருத்துக்களைத் தர்க்க ரீதியான முடிவிற்குக் கொண்டுபோய்க் கண்டு பிடிக்க வேண்டியதில்லை. ஆவணத்தைப் பரிசீலிக்கும் பொழுது வெளிப்படையாகவே இது தெரிகிறது. மேலும் ஒன்றையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். பாரீஸ் கம்யூனின் குறுகிய வரையறைகளுக்குட்பட்ட அனுப வங்களை அதற்கப்புறம் ஏற்பட்ட பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் மொத்த அனுபவங்களுக்கு எதிராக நிறுத்துகிறது. உண்மையில் இவ்விரண்டு அனுபவங் களுக்கும் இடையே உள்ள அடிப்படை ஒற்றுமைகளை வலியுறுத்திருக்க வேண்டும். அதற்கு மாறான இந்தச் செயல் உண்மையில் பாரிஸ் கம்யூனின் அடிப்படை உணர்வுகளையும், பாடங்களையுமே மறுக்கின்ற செய லாகும்.

3. திரிபுவாதிகளின் ஆட்சியில் மக்கள் படைகள் முற்றாக அழிக்கப்படவில்லை. அவைகளும் முதலாளித் துவவர்க்கத்தின் ஒர்ஒடுக்குமுறைக் கருவியாக, நிலையான இராணுவத்திற்கு உதவிப்படையாக, மக்கள் திரளின் மேல் திரிபுவாதிகள் ஆட்சி செய்வதற்கு ஊழியம் செய் யும் படையாக மாற்றப்பட்டு விட்டன.

4. சமுதாயத்தில் சோசலிச மாற்றத்தைக் கொண்டு வரும் விரிவான நீண்டகாலத் திட்டத்தில் சோவியத்துக்கள், புரட்சிகர நிறுவனங்கள் போன்ற மக்கள் திரள் அமைப்புக்களின் பொதுவான பணி பற்றிய கேள்வி முக்கியமானதும், சிக்கல் நிறைந்ததும் ஆகும். "சோவியத்துக்கள் எவ்வாறு பின்னுக்குத் தள்ளப்பட்டன" என்பது பற்றிய சிஆர்சி ஆவணத்தின் கருத்துக்குப் பதிலளிக்கையில் இந்தக் கேள்விக்கும் மீண்டும் வருவோம்.

5. உண்மையாகவே, தொழிலாளர்களையும், விவசாயிகளையும் பெருமபான்மையாகக் கொண்ட கோடிக்கணக்கான சீனக்கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு முறைப்படி மாவோவை ஓட்டுப் போட்டுப் பதவி நீக்கம் செய்யும் உரிமை இருந்தது. தெளிவாகச் சொல்வதனால், கட்சியின் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உறுப்பினர்களிடம் இருந்தது. சட்சியின் மையக் குழுவைத் தேர்ந்தெடுக்கும் இந்தப் பிரதிநிதிகள் மாவோவை மையக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்க மறுத்துவிட முறையான உரிமை பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாததும், செய்யாமலிருந்ததற்கான காரணமும் நமது அடிப்படைவாதற்குப் பல்வேறு கோணங்களிலும் எடுத்துக்காட்டாக விளங்குவதாகும். அதாவது வடிவங்கள் அல்ல. பொருளாதார முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாய (வர்க்க)உள்ளடக்கமே சாராம்சமான விஷயம்.

6. உண்மையில் "உற்பத்திச் சக்திகளின் விதி" (பொதுவாக எந்திரவியல் பொருள் முதல்வாதம்) இறுதியில் கருத்து முதல் வாதமே. அது எண்ணத்திலிருந்து பொருளை இயக்க மறுப்பியல் அடிப்படையில் பிரிக்கின்றது. (மாவோ கூறியதுபோல்) எவ்வாறு பொருள் எண்ணமாகவும், எண்ணம் பொருளாகவும் மாற்றமடையலாம் என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. இவ்வாறாக

இது, அனைத்து எண்ணங்களுக்கும் அடிப்படை பொருள் என்பதையோ, கருத்துக்களை எவ்வாறு மாபெரும் சக்திகளாக மாற்ற முடியும் என்பதையோ உணரவில்லை.

7. லுக்சம்பர்க் பற்றி லெனினது அணுகுமுறையை அறிந்து கொள்வது இங்கு அவசியமாகும். அவருடன் லெனினுக்குப் பல ஆண்டுகள், அக்டோபர் புரட்சிக்கு முன்னும், பின்னும் கருத்து வேறுபாடு இருந்தது. லுக்சம்பர்க்கின் நிலையையும், செயல் முறையையும் லெனின் அருமையாக விமர்சித்த போதிலும், புரட்சிப் பாசறையின் தோழர்களில் ஒருவர் என்ற முறையில் லெனின் அவருடன் தொடர்ந்து போராட்டம் நடத்தினார். புதிய சோவியத் அரசு பற்றிய அவரது பல விமரிசனங்கள் அவர் சிறையில் இருக்கும்பொழுது எழுதியவை. "அவர் சிறையிலிருந்து வெளியேறியபின், ரஷ்யாவின் நிலைமைபற்றி நேரடித் தகவல்கள் கிடைத்த பின்பு தனது விமரிசனங்களில் பலவற்றை விலக்கிக் கொண்டார். வேறு சில விமரிசனங்களைப் பற்றி மௌனமாக இருந்து விட்டார். எதிரிகளுக்கு கட்டற்ற சுதந்திரம் அனுமதிப்பதன் சிரமத்தை அவர் புரிந்துகொண்டார்." (பத்தி 6-6) என்று சி.ஆர்.சி ஆவணம் குறிப்பிடுகின்றது. ஆனால், துரதிருஷ்டவசமாக, லுக்சம்பர்கின் விமர்சனங்களை குறிப்பாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் ஜனநாயகம் பற்றிய பிரச்சினையில், உயர்த்திப் பிடிக்கிறது. சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய தனது ஒட்டுமொத்த தாக்குதலில் அவரது கருத்துக்களை முக்கியமாகப் பயன்படுத்துகிறது. (சீனாவைப் பற்றிய விமர்சனத்திலும்கூட)

8. இதைப் பற்றி மேலும் விரிவான விவாதங்களுக்கு அவேக்கியான் எழுதிய "ஒரு கட்டத்தின் முடிவு ஒரு புதிய கட்டத்தின் தொடக்கம்" என்ற நூலைக் காண்க.

9. சி.ஆர்.சியின் இந்தக் கருத்து, பண்பாட்டுப் புரட்சியின் பொழுது இடது சந்தர்ப்பவாதிகளால் முன் வைக்கப்பட்ட கருத்துக்களுடன் அடிப்படையில் ஒத்திருக்கின்றது. அவர்களது கருத்துப்படி (மாவோவையும், ஒரு சிலரையும் தவிர) கம்யூனிஸ்ட் கட்சியின் மொத்த தலைமையும், அரசும் திரிபுவாதமானது. எனவே அவர்களைச் சந்தேகிப்பதும், தூக்கி எறிவதும்கூட, அவசியமானதாகும் என்று அறிவித்தனர். இந்த வழி பண்பாட்டுப் புரட்சியின் தலைமையைக் கைப்பற்றியிருந்தால் அது புரட்சியை உள்ளிருந்தே உடைத்திருக்கும். மேலும், லியு-ஷாவோ-சி (லியு-ஷாவோசி) டெங்-சியாவோ-பிங் ஆகியோர் தலைமை தாங்கிய உண்மையான திரிபுவாதக் கும்பலின் கரங்களை வலுப்படுத்தியிருக்கும். உண்மையில் அவர்களது திரிபுவாதத் தலைமையகம், பண்பாட்டுப் புரட்சியைத் தடம்புரளச் செய்வதற்காக, இந்த இடதுசாரி வழியை ஊக்குவித்தது அல்லது குறைந்த பட்சம் நன்கு பயன்படுத்திக் கொண்டது.

10. பாட்டாளி வர்க்கப் புரட்சி சரியாக எப்படிச் செல்லும் என்பதையோ, இதுவரை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உண்மையில் எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலைமைகளையோ ஏங்கெல்சும் (மார்க்சும்) முன்னதாகவே அறிந்திருக்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம் மேலும், இதனோடு தொடர்புடைய மற்றொரு அம்சமான முதலாளித்துவத்திலிருந்து, கம்யூனிசத்திற்கான மாற்றம் எத்தனை காலம் பிடிக்குமென்பதையும், எத்தனை சிக்கல் நிறைந்தது என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

எனவேதான் ஏங்கெல்ஸ் (சி.ஆர்.சி ஆவணத்தில் மேற்கோள் காட்டியிருப்பதுபோல்) "போதுமான அளவு வலிமையான மையப்படுத்துதலும், மைய அதிகாரமும்

இல்லாதிருந்தது பாரிஸ் கம்யூனின் அழிவுக்குக் காரண மாகும். அதே சமயம், வெற்றி பெற்றபின் இந்த அதி காரத்தை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ள லாம்'' என்று குறிப்பிட்டுள்ளார். (கார்லோ டெர்ராகிக்கு எழுதிய கடிதங்கள்) இதில் முக்கியமானது ''வெற்றி பெற்றபின்'' என்பதன் பொருளென்ன என்பதுதான். வலிமையான மையப்படுத்தலுக்கும், மைய அதிகாரத் திற்குமான தேவையே இல்லாமல் போகுமளவு பாட் டாளி வர்க்கம் உறுதியான வெற்றி பெற்ற நிலையையே இது குறிக்கிறது. சோசலிச சமுதாயத்திற்குள்ளும், சர்வ தேச அளவிலும் நீண்ட கால வர்க்கப் போராட்டங் களுக்குப் பின்னரே அத்தகைய உறுதியான வெற்றியை அடைய முடியும். (அதன் பின்னரே மைய அதிகாரத்தை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்) அது வரை, மக்களைச் சார்ந்து, முன்னோடிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இயங்கும் இத்தகைய மைய அதிகாரமும், அரசும் உறுதியாக உயர்த்திப் பிடிக்கப் பட வேண்டும், நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சரியாக, இத்தகைய மையப்படுத்தலையும், அதிகாரத் தையுமே சி ஆர்.சி ஆவணம் மறுக்கிறது.

**11.** அக்டோபர் புரட்சிக்குப் பிந்தய கால கட்டங் களில் இந்தப் பிரச்சினை பற்றி லெனின் எங்கும் முறை யாக (அவரது மரணத்திற்குப் பின்னால் அச்சிடப்பட்ட நூல்களில்கூட) பேசவில்லை என்பதே சி ஆர்.சி ஆவணத்தின் குற்றச்சாட்டிற்குக் கிடைத்த மரண அடி யாகும். அவர்களது குற்றச்சாட்டின்படி ''கட்சி சர்வாதி காரத்தை நிறுவும் நோக்கம் லெனினுக்கு எப்பொழுதுமே இருந்தது'' மேலும் ''இனி என்ன செய்ய வேண்டும்'' நூலிலிருந்தே ''கட்சி சர்வாதிகாரத்திற்கான'' முளைகள் தோன்றிவிட்டன. (சமூக-ஜனநாயக வாதிகள் போன் றோர் வழக்கமாக முன் வைக்கும் வாதம் இது.)

12. சீனப் புரட்சியில், அதிகாரத்தைக் கைப்பற்றுதல் நாடு தழுவிய அளவில் நடைபெறுவதற்கு முன்பாக நாட்டின் சில பகுதிகளில் அதிகாரம் கைப்பற்றப் பட்டதை இது குறிக்கின்றது.

13 அது கட்டப்பட வேண்டியதே. கட்சியால் தலைமை தாங்கப்படும் நிலையான இராணுவத்திற்குப் பதிலாக ஏன் பரந்துபட்ட மக்களைத் திரட்டி கட்சியின் தலைமையிலேயே துணைப் படைகளை உருவாக்கக் கூடாது, அவ்வாறான படை உருவாகத் தேவையான தலைமைகள், இதுவரை ஏன் நிலையான இராணுவத் திற்குப் பதிலாக (துணையாக அல்ல) துணைப் படைகளை சோசலிச நாடுகளில் உருவாக்கிப் பயன்படுத்த இயலவில்லை, ஆகியவை பற்றி நாம் ஏற்கனவே விவாதித்துள்ளோம். ஆனால், இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் ஒன்று உண்டு. ஆயுதப் படையின் மேல் கட்சியின் தலைமை நிறுவப் படுவதை (நிலையான இராணுவம், துணைப்படை இரண்டிலும்) சி.ஆர்.சி ஆவணம் குறிப்பாக மறுத்தாக வேண்டும். ஏனெனில் ஆயுதப் படையின் மேல் கட்சியின் தலைமை செயல்படுவதைவிட கட்சியின் ஆயுதப் படையின் சர்வாதிகாரத்திற்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்?

சிஆர்சி ஆவணத்தின் வாதங்களின்படி அத்தகைய தலைமைக்குப் பொருள் ஆயுதப்படையின் மேல் கட்சிக்கு ஏகபோகம் உள்ளது என்பதே. ஆயுதப் படையோ அரசியல் அதிகாரத்தின் திரட்சியான வெளிப்பாடு. ஆயுதப்படையில் தலைமையின் பணி ஆயுதப்படைகள் (நிலையான இராணுவம் துணைப் படைகள்) உண்மையிலேயே பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர நலன்களை உயர்த்திப் பிடிக்கும் மக்கள் திரளின் ஆயுத வலிமையைப் பிரதிநிதித்துவப்படுத்து,

கின்றனவா என்ற அடிப்படைக் கேள்வியுடன் தொடர்புடையது. இவைபற்றி நாம் இங்கே கூறியுள்ள கருத்துக்கள் சிஆர்சி ஆவணத்தின் கருத்துக்களோடு இயல்பாகவே முற்றிலும் மாறுபடுகின்றன.

**14.** "சம்பிரதாயமானது மட்டுமல்ல பொய்யானதும் ஆகும்" என்ற வரையறையை விரிவாகக் கவனிப்பது அவசியம். 'சம்பிராதாய மானது' என்பதையும் 'பொய்யானது' என்பதையும் இங்கு பிரிக்க முடியாது. ஏனெனில், முதலாளித்துவ ஜனநாயகத்தால் "போற்றப்படும் சமத்துவம்" சம்பிரதாயமானதாகவே இருக்கிறது, இருக்க முடியும் என்பதால் அது 'பொய்யான' தன்மை கொண்டிருப்பதையும் தவிர்க்க முடியாது. ஆனால் மறுபுறம், அது முழுக்க முழுக்க "பொய்யானதாக" இருக்க முடியாது அதில் உண்மையான சமத்துவத்தின் கூறு ஒன்றும் இருக்கவே செய்கிறது. மார்க்சியம் வலியுறுத்தும் ஆழமான, சாராம்சமான உண்மை என்னவென்றால் எல்லா சமத்துவங்களும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழும்கூட, அதேசமயம் சமத்துவ மற்றவையே மேலும். ஜனநாயகத்தைப்போலவே சமத்துவமும், வர்க்க முரண்பாடுகள் இன்றும் நிலவுகிற ஒரு நிலையையே பிரதிபலிக்கின்றது. சமத்துவம் தனது வழக்கமான வடிவத்தில் வர்க்க வேறுபாடுகளுக்கு இடமளிக்காத ஒன்றாகத் தோன்றினாலும், உண்மையில், அதில் அடங்கியுள்ள சமத்துவமற்ற கூறுகள் காரணமாக வர்க்க வேறுபாட்டின் விதைகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

**15.** சிஆர்சி ஆவணத்தின் மீதான இந்த விமர்சனம் "போலிக் கம்யூனிசம் இறந்துவிட்டது. வாழ்க உண்மை கம்யூனிசம்!" என்ற நூலின் ஒரு பகுதியாக எழுதப்பட்டது. அந்த நூலில் வேறொரு பகுதியில் வரும் அடிக்குறிப்பை இங்கு தருவது பயனுள்ளதாயிருக்கும்.

இங்கு ஏற்கனவே வலியுறுத்தியதுபோல், மக்களின் ஒரு சாராரால் மற்றொரு சாரார் சுரண்டப்படுகின்ற சொத்து உறவுகளை நீக்குவதே கம்யூனிசப் புரட்சியின் லட்சியம். பிரெசென்ஸ்கி குறிப்பிடுவதுபோல "மக்களின் சொந்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதல்ல", மறுபுறம், கம்யூனிசத்திற்கு மாறும்பொழுதும், கம்யூனிச சமுதாயத்தில் முழுமையாகவும், இன்றைய சமுதாயத்தில் தனியாரால் உடைமையாக்கப்பட்டு, தனிப்பட்டமுறையில்,(குறைந்தபட்சம்இன்றைய தனிக்குடும்ப எல்லைகளுக்குள்) பயன்படுத்தப்படும் பல பொருட்கள், அன்று பல்வேறு அளவுகளில் சமுதாயமயமாக்கப்பட்டு, சமுதாய ரீதியில் பயன்படுத்தப்படும். எடுத்துக்காட்டாக, உணவு (அதன் தயாரிப்பும், நுகர்தலும்) இன்று அது தனித்தனிக் குடும்பங்களின் தனிப் பொறுப்பாய், குறிப்பாக அக்குடும்பங்களின் பெண்களின் மீது ஒரு சுமையாய் உள்ளது. மேலும் பொதுமையாய்க் கூறினால், பண்ட உற்பத்தியும் பரிமாற்றமும் நீக்கப்படும். இதனால் இன்று நுகர்வதற்காக, முதலில் பண்டங்களாக விலைக்கு வாங்கப்பட வேண்டியுள்ள பொருட்கள் (உணவு மட்டுமில்லாமல் தனிப்பட்ட நுகர்வுக்கான மற்ற பொருட்கள், அடிப்படைத் தேவைகள் ஆகியன) அனைத்தும் பணத்தின் (அல்லது வேறு எந்தப் பரிமாற்றப் பண்டத்தின்) மூலமாக இல்லாமல் நேரடியாகவே, தேவைக்கு ஏற்றபடி மக்களுக்குக் கிடைக்கும் பணமும் பண்டங்களும் இல்லாத இந்தச் சூழலில் பல்வேறு பொருட்கள் (குறிப்பாக தனிப்பட்ட நுகர்விற்கான பொருட்கள்) பல்வேறு தனியார்களின் சொந்தங்களாகவே இருப்பினும் அந்தத் தனி மனிதனின் சொந்தமாக மட்டுமே இருக்கும். மற்றவர்களைச் சுரண்டுவதற்கு அடிப்படையாய் அமையும் மூலதனமாக மாற்றப்படக் கூடிய தனியார் சொத்தாக உருவாகி விடக்கூடிய தன்மை இருக்காது.

*16.*எங்கெல்ஸ், *1890* 'ல் பிளோக்' கிற்குஎழுதியகடிதத்தில் தனிமனித விருப்பங்கள் பற்றி மிகைப்படுத்திக் கூறி

யுள்ளார் என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம். மனித சமுதாய வளர்ச்சியை நிர்ணயிப்பதில் அடிப்படையான பொருளாதார (உற்பத்தி) சக்திகளின் பங்கைப் பற்றி மார்க்சும், எங்கெல்சும் மிக அதிகமாக வலியுறுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. அந்தப் போக்கைச் சமன் செய்வதற்காகவே எங்கெல்ஸ் இங்கு தனிமனித விருப்பங்களின் பங்கை மிகைப்படுத்தியுள்ளார். இந்தக் கடிதத்தின் முடிவில் எங்கெல்ஸ், சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகள் எண்ணற்ற தனிமனித விருப்பங்களின் மோதல்களே என்றும்' இவ்விருப்பங்கள் இறுதியாக அடிப்படைப் பொருளாதார சக்திகளால் நிர்ணயம் செய்யப்படுகின்றன என்றும் விவரிக்கிறார். இந்த விவரிப்பு ஒரு அடிப்படை உண்மையைப் புறக்கணிக்கிறது அல்லது மூலையில் ஒதுக்கிவிடுகிறது. தனிப்பட்ட மனிதர்களும், அவர்களது விருப்பங்களும் சமுதாயத்தில் தனிமனிதர்கள் உள்ள நிலையினால் வடிவமைக்கப்படுகின்றன. ஒரு வர்க்க சமுதாயத்தில், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களது வர்க்கத்தின் நிலையினால் நிர்ணயிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட இந்தக் கடிதத்தில் உள்ள இந்தக் குறிப்பிட்டபோக்கு எங்கெல்சும், பொதுவாக மார்க்சிசமும் (வர்க்கங்கள் தோன்றிய நாளிலிருந்தே) வர்க்கங்களுக்கும், வர்க்கப் போராட்டங்களுக்கும் உள்ள தீர்மானகரமான பங்கை அங்கீகரிக்கின்ற உண்மையை மாற்றிவிடுவதில்லை. இதனை 'கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டறிக்கையிலும், மற்றும் எண்ணற்ற மார்க்சீய நூல்களிலும் காணலாம்.

**17.** ஒவ்வொரு மனிதனின் வர்க்கநிலைக்கும் அவரது சிந்தனை முறைக்கும் இடையே நேர்விகிதத்தில் ஒன்றுக்கொன்று உறவு இருப்பதாக இதனைப் புரிந்துகொண்டு விடக்கூடாது. முதலாவதாக, மார்க்சும் எங்கெல்சும் சுட்டிக்காட்டியது போல், ஒரு சமுதாயத்தில் ஆட்சி செய்யும் கருத்துக்கள், ஆளும் வர்க்கத்தின் கருத்துக்களே.

இந்தக் கருத்துக்கள் ஒடுக்கப்படும் வர்க்கத்தின் உறுப்பினர்கள்மேல் கூடக் கணிசமான அளவு செல்வாக்குப் பெறுகிறது. மேலும் கருத்துக்கள் பொருளாதார அடிப்படைகளிலிருந்தே தோன்றினாலும், பிறகு அந்த அடிப்படைகளின்மீதே மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது மார்க்சீய இயங்கியல் பொருள் முதல்வாதத்தின் ஒரு அடிப்படைக் கோட்பாடாகும். இவ்வாறாக, கருத்துக்கள் குறிப்பாக, சரியான கருத்துக்கள், சமுதாயத்தில் பரவலாக மக்களைப் பாதிக்கும் சக்தி பெற்றுள்ளன (ஏன் முதலாளித்துவ மற்றும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து சிலர், குறிப்பாக அறிவுஜீவிகள் பாட்டாளிவர்க்கச் சிந்தனையை ஏற்றுக்கொண்டு, புரட்சிப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர் என்பதை இது விளக்குகிறது). இவையனைத்தும் இருப்பினும்கூட, பரந்துபட்ட மக்கள் என்று பார்த்தோமானால், இறுதி மதிப்பீட்டில் அவர்களது சிந்தனைக்கும், வர்க்க நிலைக்கும் பொதுவான தொடர்பு இருப்பது உண்மையே. மேலும் பொதுமையாகச் சொன்னால், மாவோ குறிப்பிட்டது போல், "வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினர்களாகவே வாழ்கின்றனர்; விதிவிலக்கின்றி அனைத்து வகையான சிந்தனைகளும் அந்தந்த வர்க்கத்தின் முத்திரைகள் பதிக்கப்பட்டுள்ளன".

18. சிஆர்சி ஆவணம் இங்கு வர்க்கப்போராட்டத்தைக் குறிப்பிட முற்றிலும் மறந்துவிடவில்லை. அது கூறும் பாட்டாளிவர்க்க ஜனநாயக முறை 'மேலும் வளர்ச்சியடைய வேண்டும் ("ஏனெனில் சோசலிசம் என்பதே புரட்சிகர மாற்றம் நடைபெறும் காலகட்டம் தான்)' என்றும், மேலும் அரசியல், சமுதாய, பொருளாதாரத் துறைகளில் இந்த மாற்றம் "வர்க்கப் போராட்டங்களின் மூலமே நிகழும்" என்றும் ஆவணம் குறிப்பிடுகின்றது. வர்க்கப் போராட்டம் பற்றிய இந்த மேலோட்

டமான பார்வையே சிஆர்சி ஆவணத்தின் சோசலிசம் பற்றிய கருத்து முதல்வாதக் கண்ணோட்டம் ஆகும். இதில் முதலாளித்துவ வர்க்கத்தின் இருப்பிற்கும், வலிமைக்குமான பொருளாதார அடிப்படைகள் சரியாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப் படவில்லை. சரியாகப் புரிந்து கொள்ளப்படக்கூட இல்லை. இந்த ஆவணத்தின் 'சோசலிசம்' பற்றிய கனவு போலவே இந்த 'வர்க்கப்போராட்டமும்' கற்பனையாகவே இருக்க முடியும். சோசலிச மாற்றம் நிகழும் காலம் முழுவதிலும் நடத்தவேண்டிய இணைப்புச்சங்கிலி போல விளங்கும் உண்மையான, தீர்மானகரமான வர்க்கப்போராட்டத் திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. புரட்சிகர மாற்றம் நிகழும் காலத்தின் தன்மை இங்கே திரிக்கப்படுகிறது, இந்தக் காலகட்டம் முழுவதும் நிலவும் வர்க்க முரண் பாடுகள் மற்றும் வர்க்கப் போராட்டங்களின் மையமான தன்மைகளும், அடிப்படைகளும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுத் தவறாக பிரதிநிதித்துவப்படுத்தப்படு கின்றன. இத்தனைக்கும் பிறகு வர்க்கப் போராட்டம் 'புரட்சிகர மாற்றம் நிகழும் காலகட்டம்' என்று வெறுமனே பேசுவதால் பயனில்லை.

**19.** இங்கு பயன்படுத்தப்படும் ஒரு முக்கியமான முத லாளித்துவ கோட்பாடு என்னவென்றால், அரசியல் கட்சிகளின் கொள்கை அறிவிப்புகள், வழிகள் உள்பட அனைத்துக் கருத்துக்களும் பண்டங்களாகக் கருதப் படுவதும், கருத்துக்களின் சந்தையில்' அவை தங்களின் மதிப்பைப்பெறவேண்டும் என எண்ணுவதும் ஆகும் (சந்தைப் பொருளாதாரம் செயல்படும்பொழுது உண்மையாகவே சமத்துவம் நிலவும் என்ற கற் பனைக்குக் குறிப்பாக குட்டி முதலாளித்துவப் பிரிவினர் எளிதில் இரையாகின்றனர்). முதலாளித்துவச் சந்தை சாரமே குறிப்பாக வர்க்க மேலாதிக்கமும், சுரண்டலும் தான் என்பதை உணர்ந்து கொள்ளாத அடிப்படைத் தவறு இதில் உள்ளது.

20. அரசியல் ரீதியாகவும் (நடைமுறையிலும்) ஜீவ மரணப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்த நேரத்தில் காமனேவும், ஜீனோவிவேவும் செய்த இந்தத் துரோகம் அவர்கள் அமைப்பாக்கப்பட்ட எந்தக் குழுக்களிலும் இருந்ததனால் செய்யப்பட்டதல்ல. குழுக்களைத் தடை செய்தல் போன்ற அமைப்பு ரீதியான நடவடிக்கைகளினால் இதைத் தடுத்து நிறுத்தியிருக்கவும் முடியாது. ஆயினும், அவர்களது நடவடிக்கை குறுங்குழுவாதத் தன்மையுடையதே. கட்சியின் வழி, கட்டுப்பாடு ஆகியவற்றிற்குப் பதிலாக தங்களது சொந்த வழியிலும், கட்டுப்பாட்டிலும் செயல்பட்டனர். எத்தனைக் கெத்தனை குழுக்கள் வளர்ச்சியடைந்து பெருகுகின்றனவோ அத்தனைக்கத்தனை கட்சியின் ஒற்றுமை, உறுதி, செயல்பாடு ஆகியவற்றைக் குலைத்துவிடும். முதலில் அதிகாரத்தைக் கைப்பற்றுதல், பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவுதல் பின்பு இந்த சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை முன்னெடுத்துச் செல்லுதல் ஆகிய வற்றிற்கான புரட்சிகரப் போராட்டங்களுக்கு மக்களைத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் முன்னோடிப் பங்கை நிறைவேற்றும் ஆற்றலற்றதாக கட்சி ஆகிவிடும்.

இந்த வினாவை மேலும் முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு 1921-ல் போல்ஷ்விக் கட்சியில் குழுக்கள் தடைசெய்யப்படுவதற்குக் காரணமான குறிப்பான வாழ்நிலைகளைக் காண்பது அவசியமாகும்... அன்று போரால் சிதைவுற்று நின்ற பொருளாதாரத்தை மீண்டும் கட்டியமைக்க வேண்டிய பிரச்சினையை போல்ஷ்விக்குகள் எதிர் கொண்டனர். மக்களின் முக்கியப் பிரிவினரோடு (குறிப்பாக கிராமப்புறங்களில்) தொடர்புகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டியதாயிருந்தது. சமுதாய நிலைகுலைவு, அரசியல் அதிருப்தி (நகர்ப்புற தொழிலாளர்கள் இடையேயும்) நடுத்தர வர்க்கத்தின் ஊசலாட்டம் ஆகியவற்றின் பின்னணியில் அமைப்பைப்

பயன்படுத்த வேண்டியிருந்தது. உள்நாட்டுப் போரில் வெற்றி பெற்றாயிற்று. ஆயினும் புரட்சியின் வெற்றி இன்றும் ஊசலாட்டத்தில் இருந்தது. புதிய கடைமை களை எதிர்கோள்ள வேண்டியிருந்தது. கொள்கைகளில் முக்கியமான மாற்றங்கள் தேவைப்பட்டன. (புதிய பொருளாதாரக் கொள்கை இத்தேவையின் ஒரு வெளிப் பாடாகும்) புதிய திறமைகள், குறிப்பாக பொருளா தாரத்தை நிர்வாகம் செய்வதில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியிருந்தன. புதிய சூழலின் அறை கூவல்களை எதிர்கொள்ள ஒன்றுபட்ட, உறுதியான கட்சி தேவைப் பட்டது. ஆனால் கட்சியோ உள்நாட்டுப் போரின் விளைவாக தவிர்க்க முடியாமல் பாதிப்பிற்குள்ளா யிருந்தது. முன்செல்லும் பாதையெங்கும் கூர்மையான இருவழிப் போராட்டங்கள் கொதித்தெழுந்தன. அதுவும் தவிர்க்க முடியாததே. ஆனால் அந்தப் போராட்டங்கள் வெற்றிகரமாக நடந்தேறுவது குறுங்குழுவாதத்தின் வளர்ச்சியால் சிக்கலாகியது.

எதிரெதிரான பல்வேறு குழுக்கள், அவரவர்களது கொள்கை அறிவிப்புக்கள் அடிப்படையில் திரளத் துவங்கினர். கட்சியில் இரண்டாம் பட்சமான விஷயங் களை விவாதிப்பதிலேயே நேரம் முழுதும் செலவாகும் படி செய்தனர். கட்சியின் கட்டுப்பாட்டிற்கும் மேலாக தங்கள் குழுவின் கொள்கைகளைக் கருதினர். அந்தச் சிக்கலான காலகட்டத்தில் கட்சியில் பிளவு ஏற்படுவதன் அபாயத்தை லெனின் நன்கு உணர்ந்திருந்தார். பொருளாதாரத்துறையில் தேவைக்கேற்ப கொண்டுவரப் பட்ட கட்டுப்பாடு நீக்கல்கள் கட்சியில் முதலாளித்துவ ஜனநாயகப் போக்குகளைத் தூண்டிவிட்டுவிடக் கூடாதே என லெனின் கவலைப்பட்டார். மேலும் ஓர் உண்மையையும் கவனிக்க வேண்டும். எங்கெல்லாம், எப்பொழுதெல்லாம் தங்களால் இயலுமோ அங்கெல் லாம் குழுக்கள் தங்கள் சொந்தக் கொள்கைகளை நடை

முறைப்படுத்தவிழைந்தனர். எடுத்துக்காட்டாக, ட்ராட்ஸ்கியின் ஆதரவாளர்கள் தொழிற்சங்கங்களை இராணுவமயமாக்கும் தங்களது திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்றனர். அது தொழிற்சங்கங்களுக்குள் உற்சாகமின்மையையும், சமுதாயத்திற்குள் கட்சிமீது சந்தேகத்தையும் தோற்றுவித்திருக்கும் கொள்கையாகும். அதுவோ புரட்சிமீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது மிகச்சிரமமாக இருந்த காலகட்டம். அன்று அனுபவமில்லாத இளைஞர்கள், மாற்றியமைக்கப்படாத முன்னாள் மென்ஷ்விக்குகள், சோசலிசப் புரட்சியாளர்கள் முதலியோர் கட்சிக்குள் நுழைந்து கொண்டிருந்தது கட்சிக்குள் குழுக்கள் முளைப்பதற்கான வளமான சூழலை உருவாக்கியிருந்தது.

குறுங்குழுவாதம் கட்டுப்படுத்தப்படாவிட்டால், கட்சி முடிவுகள் எடுப்பதும், எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்துவதும் மிகமிகக் கஷ்டமானதாகிவிடும். கட்சியின் ஒற்றுமையைக் குலைத்து, தவறான கொள்கைகள் மேலாண்மை பெற வழிவகுக்கும். சுருக்கமாக அது பாட்டாளிவர்க்க ஆட்சியின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்துவிடும். மேலும், போல்ஷ்விக்குகள் அப்போது அதிகாரத்திலிருக்கும் கட்சியாக இருந்ததால் குறுங்குழுவாதம் புதிய, அபாயகரமான பரிமாணத்தை எட்டியது. புரட்சியின் உள்ளும், வெளியிலும் இருந்த எதிரிகள் குறுங்குழுவாதத்தைத் தங்களுக்குச் சாதகமாகத் திட்டம் தீட்டிப் பயன்படுத்தினர். குழுக்களுக்கிடையேயான இரகசியத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டனர். குழுக்களுக்கிடையே புகுந்து எளிதில் அதிகார மையங்களுக்கு மிக அருகில் வந்தனர். கட்சியில் எண்ணற்ற குழுக்கள் தனித்தனிக் கொள்கை அறிவிப்புக்களுடன் திரண்டது. கட்சிக்கு உள்ளேயே இருந்து புரட்சியின் எதிரிகள் அணிதிரளவும், செயல்படவும் நிறைய இடம் அளித்தது.

1921-ல் போல்ஷ்விக் கட்சியில் குழுக்களைத் தடை செய்வதற்கு ஆன்று நிலவிய குறிப்பான சூழ்நிலைகளும், புதிய பாட்டாளி வர்க்க அரசிற்கும், அதன் முன்னோடிக் கட்சிக்கும் ஏற்பட்ட நெருக்கடிகளுமே காரணம். அதிகாரத்திலிருக்கும் கட்சிக்குள் குழுக்கள் இருப்பது எதிர்ப் புரட்சிக் சக்திகளுக்கு வலிமையான அடித்தளத்தை உருவாக்கித் தருகிறது. சோசலிசத்திற்கு உள்ளும், வெளியிலும் உள்ள எதிரிகள் அதனை பலவீனமடையச் செய்வதற்கும், தூக்கியெறிவதற்கும் அல்லது உள்ளிருந்தே அதனை முற்றிலும் எதிர்த் திசைக்குத் திருப்பி விடவும் வாய்ப்பளிக்கிறது. இதில் பல பொதுக் கொள்கைகளின் பிரச்சினைகள் உள்ளடங்கியுள்ளன. இரண்டாவது அகிலத்தில் அங்கம் வகித்த சோசலிசக் கட்சிகளிடையே அன்று மேலோங்கியிருந்த வழியில் கட்சிக்குள் குழுக்கள் அனுமதிக்கப்பட்டன. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பேகூட இந்த வழியிலிருந்து முழுமையாக உடைத்துக் கொண்டு செல்லவேண்டிய கட்டாயம் போல்ஷ்விக்குகளுக்கு இருந்ததை அக்கட்சியின் வரலாறு காட்டுகிறது. மேலும் மேலும் சீர்திருத்தக் கருத்துக்களும், பெரும்பான்மையினரின் (செல்வாக்கு மிகுந்தவர்களின்) திட்டத்தையே பின்பற்றுதலும் இக் கட்சிகளில் பெருகியதன் விளைவாகவே இந்த வழி உருவாகியது. முதலாளித்துவ அரசைத் தூக்கி எறிந்து, அதன் அரசு எந்திரத்தை உடைத்தெறிந்து புதிய பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதற்கு மக்களைத் திரட்டி வழிநடத்திச் செல்லும் திசைவழி கொண்டதல்ல இது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னும், பின்னும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் புறவயமான தேவைகளுடன் முழுமையாக ஒத்திசைவுள்ள அமைப்புக் கோட்பாடுகளையும், நடைமுறைகளையும் கொண்டு வரத் தொடங்கியதன் வெளிப்பாடே குழுக்கள் போல்ஷ்விக் கட்சியில் 1921-ல் தடைசெய்யப்பட்டதும் அதற்குப் பின்பு அவ்வாறு தடைசெய்வதே கம்யூனிஸ்ட் கட்சி

களின் அடிப்படை அமைப்புக் கோட்பாடாக நிறுவியதும் ஆகும்.

சிஆர்சி ஆவணத்தின் முடிவுரைக்கு வரும்பொழுது கட்சிக்குள் குழுக்கள் பற்றிய வினாவிற்கு மீண்டும் வருவோம்.

21 "நாம் சோசலிசப் பொருளாதாரத்தைக் கட்டியமைக்காவிட்டால் நமது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரமாக, ஒரு பிற்போக்குச் சர்வாதிகாரமாக மாறிவிடும்" என்ற மாவோவின் எச்சரிக்கை "சீனத் தத்துவத்துறையில் மூன்று முக்கிய போராட்டங்கள்" என்ற துண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கருத்தின் மறுபுறம் என்ன? மேல்கட்டுமானத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் மேல் பாட்டாளி வர்க்கம் முழுமையான சர்வாதிகாரத்தைச் செலுத்தாவிடில், குறிப்பாக தத்துவ, பண்பாட்டுத் துறைகளில், பின்பு சோசலிசப் பொருளாதாரத்தைக் கட்டி அமைப்பதோ, சோசலிசப் பாதையில் செல்வதோ இயலாததாகிவிடும். சிஆர்சி ஆவணத்தின் வழி உண்மையில் லியூ-ஷாவோ-சியும் அவரது சீடர்களும் பின்பற்றிய வழியின் எதிரொலியே அல்லது மறுபுறமே ஆகும். சீனாவில் நாடு தழுவிய அளவில் அரசியல் அதிகாரம் கைப்பற்றப்பட்டபின், பொருளாதாரம் முதலாளித்துவ-சோசலிச கலப்புப் பொருளாதாரமாகவும், மேல்கட்டுமானம் சோசலிச முதலாளித்துவத் துறைகளுக்கும் முதலாளித்துவ வர்க்கத்தினருக்கும்கூடச் சேவை செய்வதாகவும் நீண்டகாலத்திற்கு இருக்கவேண்டும்என்று இவர்கள் பிரச்சாரம் செய்தனர். இதே இடத்திற்கு சிஆர்சி ஆவணம் "மறுபுறத்திலிருந்து" வந்தடைகிறது. அது மேற்கட்டுமானத்தில் பாட்டாளி வர்க்கத்தின் ஒட்டுமொத்த சர்வாதிகாரத்தின் உறுதியைக் குலைத்துவிடும். தத்துவார்த்த ரீதியாக பல்வேறு வர்க்கங்கள் மேற்கட்டுமானத்தில்

அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும். ஆனால், நடை முறையிலோ, இந்த 'கலப்பு' மேற்கட்டுமானம் உண்மை யில் முதலாளித்துவ 'கலப்பு' ஆகவே இருக்கும். பாட்டாளி வர்க்கத்தை விழுங்கிவிட்டு மேற்கட்டுமானம் முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடும். சமுதாயத்தைத் தனது வடிவத்திற்கு மாற்றி யமைக்கும் அதாவது, மீண்டும் முதலாளித்துவம்.

22. முதலாளித்துவப் பாராளுமன்றப் பாதையிலும் அல்லது பல்வேறு முதலாளித்துவச் சக்திகளுடன் கூட் டணி அரசு அமைப்பதிலும், வீழ்ந்துவிட்ட சோசலிச, கம்யூனிச கட்சிகளின் தோல்விகளிலெல்லாம் மிகப் பரிதாபமானதும், வேடிக்கையானதும் 1960 ஆம் ஆண் டின் நடுப்பகுதிகளில் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்ட அனுபவம்தான். இதில் லட்சக் கணக்கான கம்யூனிஸ்டுகள் (சாதாரண இந்தோனேசிய மக்களும்கூட) பிற்போக்குவாதச் சக்திகளால் படு கொலை செய்யப்பட்டனர். வலிமையான கம்யூனிஸ்ட் கட்சி உடைந்து நொறுங்கியது. இதற்கு இட்டுச் சென்ற நிலைமைகளைப் பார்ப்போம். பாராளுமன்றப் பாதை யிலும், மற்ற சட்ட வடிவப் போராட்டங்களிலுமே இந்தோனேசியக் கட்சி முக்கிய கவனம் செலுத்தத் தொடங்கியது. அது தனது பாராளுமன்ற வெற்றிகளை யும், கூட்டணி அரசில் தன் இடத்தையுமே மேலும் மேலும் சார்ந்திருக்கத் தொடங்கியது. (கூட்டணி அரசு முதலாளித்துவ தேசியவாதியான சுகர்னோவின் தலை மையில் இயங்கியது). அதனால், அது (சுகர்ட்டோ தலைமையில்) இந்தோனேசிய ராணுவம் நடத்திய எதிர்ப் புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பிற்குத் தயாரான நிலையில் இல்லாமல் போயிற்று. ஆட்சிக் கவிழ்ப்பில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ ஏ. முழு ஆதரவு கொடுத்து,

பின்னிருந்து இயக்கியது மட்டுமல்ல, நேரடியாகவும் கலந்து கொண்டது.

சுகர்னோவின் அரசு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லையென்றாலும், அந்த தேசிய அரசாங்கத்தில் இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைமைக்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் கட்சி எவ்வாறு இயங்க வேண்டுமென்பது பற்றி சி.ஆர்.சி ஆவணம் முன்வைக்கும் வழியை நடைமுறைப்படுத்த முயலும் ஒரு கட்சி சென்றடையும் நிலைமைக்கும் இடையே ஒரு ஒற்றுமை இருக்கிறது. ஏற்கனவே கூறியதுபோல் அதுபோன்ற ஒரு கட்சி கூட்டணி அரசு அமைப்பதிலேயே முடியும். கூட்டணி அரசின்கீழ் முழுமையான தலைமைப் பங்கு ஆற்ற முடியாது. சரியாகச் சொன்னால் எவ்விதத் தலைமைப் பங்கும் ஆற்ற முடியாது. கட்சியும், புரட்சிகர மக்கள் திரளும் பொதுவாக, பிற்போக்கு சக்திகளின் ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கு (அதைத் தொடரும் படுகொலைகளுக்கும்) எளிதில் இறையாவர். இங்கே, மீண்டும் ஒன்றை வலியுறுத்த வேண்டும். "அனைத்து மக்கள்" என்பதில் தூக்கி யெறியப்பட்ட ஆளும் வர்க்கத்தைச் சேர்க்காவிடினும்கூட, சோசலிச சமுதாயத்தில், அது புதிதாகத் தோன்றும் முதலாளித்துவ வர்க்கம் உட்பட்ட பல்வேறு வர்க்கங்களை உள்ளடக்கியதாக இருக்கும். எனவே, 'அனைத்து மக்களை'யும் ஆயுதம் தாங்கியவர்களாக ஆக்குவது உண்மையில் பல்வேறு ஆயுதம் தாங்கிய பாசறைகளை உருவாக்குவதாகும். இதில் முதலாளித்துவ, எதிர்ப்புரட்சியாளர்களின் தலைமையிலான படைகளும் இருக்கும்.

23. மேலும், மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியின்பொழுது மக்கள் திரளின் சக்தி மாபெரும் அளவில் கட்டவிழ்த்து விடப்பட்டதற்கு, அது, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் கடந்ததே கார

ணம் என்பதைக் கவனிக்க வேண்டும். அதேநேரம், 1989-ல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் முதலாளித்துவ அரசால், முதலாளித்துவ சர்வாதிகாரத்தால் நசுக்கப்பட்டன.

24. 1962-ல் "ஜனநாயக மத்தியத்துவம்" பற்றிய ஓர் உரையில் மாவோ இவ்வாறு குறிப்பிடுகிறார். "இரகசியக் குழுக்கள் தடைசெய்யப்படவேண்டும். ஆனால் நாங்கள் வெளிப்படையான எதிர்ப்புக் குழுக்களைக்கண்டு அஞ்சவில்லை. இரகசியமான எதிர்ப்புக் குழுக்களைக் கண்டே அஞ்சுகிறோம்". மாவோ உரையின் ஒட்டு மொத்த உள்ளடக்கத்தைக் கணக்கில் கொண்டு, இந்த விவாதத்தை உள்ளடக்கிய பகுதி மொத்தத்தையும் படித்தால், இங்கே மாவோ சில தத்துவார்த்தப் போராட்டங்கள் மறைமுகமாக அல்லாமல் வெளிப்படையாக நடப்பதை வரவேற்றல் போன்ற சில அடிப்படைத் திசைவழிகளை வலியுறுத்துகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இங்கே இரகசியமாக அல்லாத எதிர்ப்புக் குழுக்களைக் கண்டு அஞ்சவில்லை என்று குறிப்பிடுவது நிச்சயமாக தங்களுக்கென்று தனியான கட்டுப்பாடுகளையும், ஒற்றுமைகளையும் உடைய, கம்யூனிசக் கட்சிக்கு உள்ளேயே இருந்துகொண்டு கட்சியின் வழிக்கும், கட்டுப்பாட்டிற்கும் எதிராகச் செயல்படும் குழுக்களை அல்ல. மாறாக, குறிப்பிட்ட பிரச்சினைகள்மீது கருத்துக் கூறுவதற்காக சாதாரணமாகக் கூடிப் பேசும் குழுக்களையே அவர் குறிப்பிடுவதாகத் தோன்றுகிறது. "கட்சியின் முன்னோடி உறுப்பினர்கள் அனைவரும் ஜனநாயகத்தை ஊக்கப்படுத்தி, மக்களை வெளிப்படையாகப் பேசவிடவேண்டும்" என்று மாவோ வலியுறுத்தினார். அதேசமயம் அவர் இவையனைத்திற்கும் அடிப்படையாக கட்சி உறுப்பினர்கள் சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கட்சிக்கட்டுப்பாட்டைக் கடைபிடித்தல், பெரும்பான்மைக்குச் சிறுபான்மைக் கட்டுப்

படுதல், ஆகியவையே அவை. வேறு சொற்களில் கூறுவதானால் கட்சியின் வழியைப்பற்றியோ, அல்லது ஒரு குறிப்பிட்ட கட்சிக் கொள்கையிலோ கருத்து வேறுபாடு இருப்பினும்கூட கட்சியின் (குழுக்களுடையதை அல்ல) ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் உயர்த்திப் பிடித்தாக வேண்டும். மாவோ மேலும் கூறுகிறார், "அவர்கள் கட்சிக்கட்டுப்பாட்டை உடைக்காதவரை, இரகசியக் குழு நடவடிக்கைகள் எதிலும் இறங்காதவரை நாம் அவர்களை எப்பொழுதுமே பேச அனுமதிக்கவேண்டும். அவர்கள் பேசுவது தவறாக இருப்பினும் தண்டிக்கக்கூடாது. தவறாகப் பேசினால் விமர்சனம் செய்ய வேண்டும். சரியான காரணங்களைக் காட்டியே அவர்களை நமது கருத்தை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். இதனோடு தொடர்புடையதே மாவோ வலியுறுத்தும் வேறொரு முக்கியமான கொள்கை. "பலசமயங்களில் சிறுபான்மையினரின் கருத்து சரியானதாக நிரூபிக்கப்படும். இதற்கு வரலாற்றில் ஏராளமான எடுத்துக்காட்டுக்கள் உண்டு. தொடக்கத்தில் உண்மை, பெரும்பான்மையினரின் கையில் இருப்பதில்லை, சிறுபான்மையின் கையில்தான் இருக்கிறது". ஆனால், உண்மையைப் புரிந்து கொள்வதற்கும், மக்களை உண்மையின் பக்கம் வென்றெடுப்பதற்கும் கட்சியில் குழுக்கள் இருப்பது உதவியாய் இருக்காது. ஊறு செய்வதாய் இருக்கும் இந்தக் காரணத்தால் மாவோவின் தலைமையிலான சீனக்கம்யூனிஸ்ட் கட்சி, உயிரோட்டமான, கடுமையான விவாதங்களும், தத்துவார்த்தப் போராட்டங்களும் (கட்சியிலும், பொதுவாக சமுதாயத்திலும்) நிரம்பிய ஆனால் கட்சிக்குள் அமைப்பாக்கப்பட்ட குழுக்களை (குறைந்தபட்சம் முழுவளர்ச்சியடைந்த, நிறுவனமயமாக்கப்பட்ட நிரந்தரமான குழுக்களை) அனுமதிக்காத ஒரு சூழல் உருவாகப் பாடுபட்டது.

அமைப்பாக்கப்பட்ட குழுக்கள் உருவாவது குறுங் குழுவாதத்திற்கு இட்டுச் செல்லும் என்பது அடிப்படை உண்மையாகும். குழுக்களைச் சார்ந்து இருப்பவர்கள், குழுக்களின் ஒற்றுமையையும், வழியையும் கட்சியை விட மேலானதாகப் போற்றுகின்ற நிலைமைக்கு இது விரைவில் கொண்டுபோய் விடுகிறது. சில விதி விலக்கான நிலைமைகளில், கட்சியின் தலைமை சந்தர்ப்பவாதச் சக்திகளால் கைப்பற்றப்பட்டு எதிர்ப்புரட்சி வழியை நடைமுறைப்படுத்த அவர்கள் முயலலாம். அந்தச் சமயங்களில் கட்சியின் தலைமையை உடனடியாக, வெறுமனே விட்டுக்கொடுத்துவிட்டு புதிய கட்சி கட்ட முயலுதல் சரியான வழி அன்று சந்தர்ப்பவாத வழியையும், தலைமையையும் போராடித் தோல்வியடையச் செய்யவும், கட்சியை மீண்டும் புரட்சிகர அடிப்படைகளில் நிறுவவும் ஒரு புரட்சிகரக் குழுவை அமைப்பது அப்பொழுது அவசியமாகிறது. ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு இந்தப் போராட்டம் ஏதாவது ஒரு வழியில் முடிவுக்கு வந்தாக வேண்டும். ஒன்று புரட்சிகர வழி வெற்றி பெற்று கட்சி மீண்டும் புரட்சிகர வழியில் அமைக்கப்பட வேண்டும். அல்லது சந்தர்ப்பவாதத் தலைமையும், வழியும் முழுவெற்றி அடைந்திருக்கும். அப்படி ஆகிவிட்டால், அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று தத்துவம், அரசியல் அமைப்பு முறை ஆகிய அனைத்திலும் மார்க்சீய-லெனினீய மாவோயிசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய புரட்சிகரமான கட்சியைக் கட்டுவது அவசியமாகும்.

25. இந்தியாவின் தேசிய இனப்பிரச்சினை மிகச் சிக்கலானதும், கவனமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றும் ஆகும் எனினும், லெனினியப் புரிதலிலிருந்து சிஆர்சி வழி தேசிய இனப்பிரச்சினையில் விலகிச் செல்கிறது என்பதைத் தெளிவாகக் கூறமுடியும். ஏகாதிபத்திய கால கட்டத்தில் தேசிய இனப்பிரச்சினை

பாட்டாளிவர்க்கப் புரட்சியின் ஒரு பகுதியாகும் என்பதே லெனினியப் புரிதல். ஒடுக்கப்பட்ட தேசங்களின் சுயநிர்ணய உரிமையை உயர்த்திப்பிடிப்பதே லெனினது திசைவழி. ஆயினும் குறிப்பாக ஒரே அரசின் கீழ் இருக்கும் தேசங்களில் ஒன்றுபட்ட புரட்சிகரப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதும், தேசிய இனங்களின் சமத்துவத்தின் (மற்றும் சுயநிர்ணய உரிமைகளின்) அடிப்படையில் முடிந்த அளவு விரிந்து பரந்த பிரதேசத்தில் ஒன்றுபட்ட, புரட்சிகரமான ஒரே அரசை நிறுவ முயலுதலும் அவசியம் என்பதும் லெனினது திசைவழியே. ஆனால் சிஆர்சி ஆவணமோ, அந்தச் சூழல்களில், சுயநிர்ணய உரிமையை உயர்த்திப் பிடிப்பதையும் தாண்டிச்சென்று உண்மையில் பிரிவினையை ஊக்குவிக்கிறது. ஒவ்வொரு ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் தனித்தனியான புரட்சிகர இயக்கங்களை, தனித்தனியான புதிய ஜனநாயகப் புரட்சிகளை வலியுறுத்துகின்ற அளவுக்குச் சென்று விட்டது. அத்தகைய ஒரு கட்சியை உண்மையாகவே நடைமுறைப்படுத்தினால் விளைவு என்ன ஆகும்? ஒட்டு மொத்தமான புதிய ஜனநாயகப் புரட்சியில் முன்னோடிப் பங்கு வகிப்பதற்காக, பல்வேறு தேசங்களின் ஒன்றுபட்ட, ஒரே கட்சியின் முன்னோடிப் பணியினால் ஒன்று சேர்க்கப்படக்கூடிய ஒன்று சேர்க்கப்படவேண்டிய இந்தியநாடு தேசிய இன அடிப்படையில் சிதறுண்டு போகும் ஒவ்வொரு தனித் தேசங்களுக்குள்ளும் உள்ள பாட்டாளிவர்க்கம் அல்லாத சக்திகளுக்கும் அவற்றின் திட்டங்களுக்கும் பின்செல்வதாக ஆகிவிடும். மீண்டும் இங்கே நாம், சிஆர்சி ஆவணம் பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் நிலைபாடுகள், கொள்கைகள் அனைத்தையும் கைவிட்டு குட்டி முதலாளித்துவ நிலை எடுப்பதைக் காண்கிறோம். இந்த விஷயத்தில், இது இந்திய நாட்டிற்குள் உள்ள ஒடுக்கப்பட்ட தேசங்களின் முதலாளித்துவ (மற்ற சுரண்டும் வர்க்க) சக்திகளுக்கு வால்பிடிப்பதாக ஆகிறது● ●



"மிகவும் தர்க்க ரீதியாகவும், சிறப்பான படைப்பாகவும் வெளிவந்துள்ள பாப் அவேக்கியானின் இப்புத்தகம் ஜனநாயகக் கருத்தின் அடிப்படைகளை வெளிப்படுத்துகிறது. மேலும், ஆதாரப்பூர்வமான உண்மைகளுடன் மறுக்கமுடியாத, எழுச்சி யூட்டும் முற்போக்கு வாதத்துடன் தன் கருத்தை முன்வைத்துள் ளார். அரசியல் முடிவுகளில் எப்போதும் சுருங்கிப் போகாத, நிரூபிக்கப்பட்ட தத்துவம் மற்றும் வரலாற்று எதிர் விளைவு களே இது. Can't we do better than that? மார்க்சிய சிந்தனை வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தை இப்புத்தகம் அடையும்."

—ரேமண்ட் லோட்டா

முற்போக்கு கலை மையம் வெளியீடு